MCAS
Darul Arqam

# புதிய முஸ்லிம்களின் வழிகாட்டி புத்தகம்

## சிங்கப்பூர் முஸ்லிம் சமூகத்தைப் பற்றிய புரிதல்

# MUSLIM CONVERTS' GUIDEBOOK

*Understanding the Singapore Muslim Community*

Muslim Converts' Accociation of Singapore
Darul Arqam Singapore
32 Onan Road, The Galaxy, Singapore 424484
+65 63488344 +65 64406724
www.mcas.sg info1@mcas.sg

# MCAS தலைவரின் முன்னுரை

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹ்.
மிக்க அருளாளனும், மிக்க கருணையாளனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்.

**புதிய முஸ்லிம்களின் வழிகாட்டி புத்தகம் - சிங்கப்பூர் முஸ்லிம் சமூகத்தைப் பற்றிய புரிதல்**, சிங்கப்பூரில் வசிக்கும் அனைத்து புதிய முஸ்லிம்களுக்கும் இஸ்லாமிய வழிமுறைகள் பற்றிய புரிதலை மேம்படுத்த சிறந்த ஆதாரத்தை வழங்குகிறது.

இஸ்லாத்தில் உள்ள நமது புதிய சகோதர சகோதரிகள் ஓரிறை நம்பிக்கைக்கான சாட்சியம் (ஷஹாதாஹ்) கூறி ஒரு முஸ்லிமாக தங்கள் வாழ்வைத் தொடங்கியபின் அவர்களின் அன்றாட செயல்களை வழிகாட்டுவதே இப்புத்தகத்தின் நோக்கமாகும்.

சிங்கப்பூரில் புதிய முஸ்லிம்களுக்கு உதவும் அமைப்பாக, அவர்கள் தங்கள் அன்றாட வாழ்வில் இஸ்லாமிய நெறிமுறைகளை எளிதாக அறிவதற்கு ஓர் அங்கீகரிக்கப்பட்ட ஆதாரம் தேவை என்பதை உணர்கின்றோம். அதற்கு ஏதுவாக இந்த வழிகாட்டி புத்தகம் தகவல்கள் மட்டுமின்றி குறிப்புகள் மற்றும் விளக்கப்படங்களுடன் எளிதான முறையில் தொகுக்கப்பட்டுள்ளது.

இஸ்லாமிய சமய மன்றம் (MUIS) மற்றும் தாருல் அர்காம் என்று அழைக்கப்படும் சிங்கப்பூர் புதிய முஸ்லிம்களின் சங்கம் (MCAS) இணைந்து தொகுத்து வடிவமைத்து உருவாக்கப்பட்டது இந்த புதிய முஸ்லிம்களின் வழிகாட்டி புத்தகம்.

இன் ஷா அல்லாஹ், இப்புத்தகம் அனைத்துப் புதிய முஸ்லிம்களுக்கும் MCAS-ல் வழங்கப்படும்.
புதிய முஸ்லிம்கள் தங்கள் வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் இஸ்லாமிய நெறிமுறைகள் பற்றி அறிவதற்கு ஒரு துணையாக இந்த வழிகாட்டி புத்தகம் இருக்கும் என்று நம்புகிறோம்.

“அல்லாஹ் ஒருவருக்கு நன்மையை நாடினால்,அவனுக்கு தீனைப் பற்றிய புரிதலை வழங்குகிறான்."-புகாரி மற்றும் முஸ்லிம்-ல் பதியப்பட்டுள்ள ஹதீத்.

இந்த வழிகாட்டி புத்தகம் சிறப்பான முறையில் வெளிவர உதவிய மார்க்க அறிஞர்கள் அனைவருக்கும் என் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். வபில்லாஹிதௌஃபிக் வல்ஹிதாயா வஸ்ஸலாமுஅலைக்கும்

வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹ்

**முஹம்மது இம்ரான் குணா**
**தலைவர்,** MCAS (தாருல் அர்காம் சிங்கப்பூர்), ஜூன்-2019

புதிய முஸ்லிம்-களின் வழிகாட்டி புத்தகம்
சிங்கப்பூர் முஸ்லிம் சமூகத்தைப் பற்றிய புரிதல்
ISBN: 978-981-14-1682-8

இஸ்லாமிய சமய மன்றம் (MUIS) மற்றும் தாருல் அர்காம் என்று அழைக்கப்படும் சிங்கப்பூர் புதிய முஸ்லிம்களின் சங்கம் (MCAS) இணைந்து தொகுத்து வடிவமைத்து உருவாக்கப்பட்டது இந்த புதிய முஸ்லிம்களின் வழிகாட்டி புத்தகம்.

காப்புரிமை © 2019 சிங்கப்பூர் புதிய முஸ்லிம்களின் சங்கம் (MCAS)
(தாருல் அர்காம் சிங்கப்பூர்).
முதல் வெளியீடு 2019 (1000 பிரதிகள்)
மறுபதிப்பு 2020.

இப்புத்தகத்தின் அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. புத்தகத்தின் எந்தப் பகுதியையும் சிங்கப்பூர் புதிய முஸ்லிம்கள் சங்கத்தின் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி மீண்டும் உருவாக்கவோ, மீட்டெடுக்கும் அமைப்பில் சேமித்து வைக்கவோ அல்லது எந்த வடிவத்திலும், மின்னணு, இயந்திர, நகல், பதிவு செய்தல் கூடாது.

சிங்கப்பூரில் அச்சிடப்பட்டது

Tamil Edition - First Print in 2024 (500 copies).
ISBN: 978-981-9414-29-1

# பொருளடக்கம்


பாகம் 1: புதிய முஸ்லிமாக வாழ்வைத் தொடங்குதல் 1

பாகம் 2: பன்முக சமூகத்தில் முஸ்லிமாக வாழ்வது 9

பாகம் 3: இஸ்லாமிய சட்ட திட்டங்களின் அறிமுகம் 17

பாகம் 4: சிங்கப்பூரில் உள்ள இஸ்லாமிய அமைப்புகள் 27

பாகம் 5: சிங்கப்பூர் ஷரிஆ நீதிமன்றம் 39

பாகம் 6: இஸ்லாமிய மார்க்கத்தில் திருமணம் 49

பாகம் 7: முஸ்லிம் மற்றும் குடும்பம் 63

பாகம் 8: முஸ்லிம் மற்றும் செல்வம் 77

பாகம் 9: செல்வத்தைப் பகிர்தல் 93

பாகம் 10: இஸ்லாமிய உணவுப்பழக்கம் 103

பாகம் 11: இஸ்லாமிய ஆடைமுறை 113

பாகம் 12: பள்ளிவாசல்களின் செயல்பாடுகள் 121

பாகம் 13: இஸ்லாம் மற்றும் கலாச்சாரம் 133

பாகம் 14: முஸ்லிம் கடைபிடிக்க வேண்டிய ஒழுக்கங்கள் 141

பாகம் 15: மார்க்க ஞானத்தை நாடுதல் 151

உச்சரிப்பு மற்றும் ஒலிபெயர்ப்பு 160

சொற்களஞ்சியம் 163

பாகம்-1

# புதிய முஸ்லிமாக வாழ்வைத் தொடங்குதல்



## முஸ்லிமாக இருப்பதன் அருட்கொடைகள்

அல்லாஹ் ஒருவருக்கு வழங்கக்கூடிய மிகப்பெரிய அருட்கொடைகளில் ஒன்று முஸ்லிமாக இருப்பதே. ஒருவர் இஸ்லாத்தைத் தழுவும் போது, அவர் தனது சொந்த விருப்பத்தினாலோ, அறிவுத்திறனினாலோ, ஞானத்தினாலோ அல்ல. மாறாக, ஈமானை ஏற்கும்படி அவனது இதயத்தை வழிநடத்தியவன் அல்லாஹ் ஒருவனே. அல்லாஹ் யாருக்கு இந்த பாக்கியத்தை வழங்க விரும்புகிறானோ அவர்களைத் தேர்ந்தெடுக்கிறான். குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்:

يَمُنُّونَ عَلَيْكَ أَنْ أَسْلَمُوا ۖ قُل لَّا تَمُنُّوا عَلَيَّ إِسْلَامَكُم ۖ
بَلِ اللَّهُ يَمُنُّ عَلَيْكُمْ أَنْ هَدَاكُمْ لِلْإِيمَانِ إِن كُنتُمْ صَادِقِينَ ﴿١٧﴾

“அவர்கள் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவியதால், உமக்கு உபகாரம் செய்து விட்டதாகக் கருதுகிறார்கள்; “நீங்கள் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவியதால் எனக்கு உபகாரம் செய்து விட்டதாகக் கருதாதீர்கள்; எனினும், நீங்கள் உண்மையாளர்களாக இருப்பின் ஈமானின் நேர் வழியில் உங்களைச் சேர்த்ததனால் அல்லாஹ் தான் உங்கள் மீது உபகாரம் செய்திருக்கிறான்" என்று (நபியே!) நீர் கூறுவீராக." (திருக்குர்ஆன் 49:17)

வல்லமை மிக்க அல்லாஹ்வின் ஒவ்வொரு படைப்பிலும் ஒவ்வொரு நிகழ்விலும் நோக்கத்திலும் அர்த்தம் இருக்கிறது. அப்படியானால் மனித இருப்பின் நோக்கம் என்ன? நம் காலம் முடியும் வரை இந்த தற்காலிக உலகில் இருப்பது மட்டுமா?



நம்மைப் படைத்தவனே திருக்குர்ஆனில் “இந்த உலகில் நாம் இருப்பதன் நோக்கம் அவனை வணங்குவதே" என்று இதற்கு பதிலளித்துள்ளான்.

وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنسَ
إِلَّا لِيَعْبُدُونِ ﴿٥٦﴾

“இன்னும், ஜின்களையும், மனிதர்களையும் அவர்கள் என்னை வணங்குவதற்காகவேயன்றி நான் படைக்கவில்லை."(திருக்குர்ஆன் 51:56)

அல்லாஹ்வால் அங்கீகரிக்கப்பட்ட மார்க்கமான இஸ்லாம் மூலமாக மட்டுமே இந்த நோக்கத்தை நிறைவேற்ற முடியும். எனவே, ஒரு முஸ்லிமாக இருப்பதன் மூலம், இவ்வுலகில் அல்லாஹ்வின் அடியானாக அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு நாம் முனைகின்றோம்.நமது நடத்தை, ஆரோக்கியம், செல்வம் என அனைத்திலும் நன்மைக்காக பாடுபட வேண்டும் என்று இஸ்லாம் நமக்குக் கற்றுத் தருகிறது. நாம் மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும், சுற்றுச்சூழலுக்கும் நீதமாக இருக்க வேண்டும் என்று இஸ்லாம் கட்டளையிடுகிறது. இறைவனுடனான நமது தொடர்பையும், மனிதர்களுடனான நமது உறவுகளையும் சீராக்குவதற்கும், நாம் செய்யும் எல்லாவற்றிலும் சிறந்து விளங்குவதற்கும் கற்றுக்கொடுக்கப்படுகிறோம். இவ்வகையில், இஸ்லாம் ஒரு மதம் மட்டுமல்ல, வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய குறிப்பிட்ட விதிகள் மற்றும் கொள்கைகளை உள்ளடக்கிய ஒரு வாழ்க்கை முறையாகும். இது இறையியல் கோட்பாடுகளுக்கு அப்பால் சென்று நமது அன்றாட செயல்களில் பிரதிபலிக்கிறது. திருக்குர்ஆனில் இஸ்லாத்தின் முழுமை பற்றி அல்லாஹ் குறிப்பிடுகிறான்:“

الْيَوْمَ أَكْمَلْتُ لَكُمْ دِينَكُمْ وَأَتْمَمْتُ عَلَيْكُمْ
نِعْمَتِي وَرَضِيتُ لَكُمُ الْإِسْلَامَ دِينًا ۚ فَمَنِ
اضْطُرَّ فِي مَخْمَصَةٍ غَيْرَ مُتَجَانِفٍ لِّإِثْمٍ ۙ فَإِنَّ
اللَّهَ غَفُورٌ رَّحِيمٌ ﴿٣﴾

“இன்றைய தினம் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை பரிபூர்ணமாக்கி விட்டேன்; மேலும் நான் உங்கள் மீது என் அருட்கொடையைப் பூர்த்தியாக்கி விட்டேன்; இன்னும் உங்களுக்காக நான் இஸ்லாம் மார்க்கத்தையே தேர்ந்தெடுத்துள்ளேன்; ஆனால் உங்களில் எவரேனும் பாவம் செய்யும் நாட்டமின்றி, பசிக் கொடுமையினால் நிர்ப்பந்திக்கப்பட்டு விட்டால் – நிச்சயமாக அல்லாஹ் மிகவும் மன்னிப்பவனாகவும், கருணை மிக்கோனாகவும் இருக்கின்றான்." (திருக்குர்ஆன் 5:3)

## இஸ்லாம்: அனைவருக்குமான ஒரு மார்க்கம்

இஸ்லாத்தின் பல தனித்துவங்களில் ஒன்று, அது அனைவருக்கும், எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் பொருத்தமான ஒரு மார்க்கம்.நபிகள் நாயகம் (ஸல்) அனைத்து மக்களுக்கும் அவர்களின் இனம், நிறம், மொழி மற்றும் கலாச்சாரத்தைப் பொருட்படுத்தாமல் ஒரு தூதராக இருந்தார்.

وَمَا أَرْسَلْنَاكَ إِلَّا رَحْمَةً لِّلْعَالَمِينَ ﴿١٠٧﴾

“(நபியே!) நாம் உம்மை அகிலத்தாருக்கு எல்லாம் ரஹ்மத்தாக – ஓர் அருட் கொடையாகவேயன்றி அனுப்பவில்லை” (திருக்குர்ஆன் 21:107)

இஸ்லாம் மக்களை எவ்விதத்திலும் பாகுபடுத்தவில்லை.மாறாக, இஸ்லாம் பன்முகத்தன்மையையும் பலதரப்பட்ட கலாச்சாரத்தையும் கொண்டாடுகிறது. திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான்:

يَا أَيُّهَا النَّاسُ إِنَّا خَلَقْنَاكُم مِّن ذَكَرٍ وَأُنثَىٰ وَجَعَلْنَاكُمْ شُعُوبًا وَقَبَائِلَ لِتَعَارَفُوا ۚ إِنَّ أَكْرَمَكُمْ عِندَ اللَّهِ أَتْقَاكُمْ ۚ إِنَّ اللَّهَ عَلِيمٌ خَبِيرٌ ﴿١٣﴾

“மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம்; நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம்; (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன்.” (திருக்குர்ஆன் 49:13)

இஸ்லாமிய நெறிமுறைகளுக்கு எதிராக செல்லாத வரையில், முஸ்லிம்கள் தங்கள் கலாச்சாரங்களையும் பாரம்பரியங்களையும் கைவிட வேண்டும் என்று ஒருபோதும் இஸ்லாம் கோரவில்லை. உலகெங்கிலும் உள்ள முஸ்லிம்கள் இஸ்லாமிய கோட்பாடுகளைக் கைவிடாமல் தங்கள் கலாச்சாரங்களை ஒருங்கிணைப்பது மிகவும் சுவாரஸ்யமானது.



## புதிய முஸ்லிம்களின் வாழ்வியல் நிதர்சனம்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவின் மக்களை இஸ்லாத்திற்கு அழைக்க தனி ஒருவராக ஆரம்பித்த பணிக்கு ஒன்றன் பின் ஒன்றாக மக்கள் பதிலளித்து இஸ்லாத்தை ஏற்றனர். பின்னர், இஸ்லாம் மற்ற நாடுகளுக்கும் பரவி அதிகமான மக்கள் மார்க்கத்தை ஏற்றனர். அவர்கள் ஒன்றிணைந்து குடும்பங்களைக் கட்டியெழுப்ப, அதனைத் தொடர்ந்து பல நூற்றாண்டுகளாக முஸ்லிம்களின் தலைமுறைகள் உருவாயின. இன்று, உலகளவில் 1.8 பில்லியனுக்கும் அதிகமான மக்கள் இஸ்லாத்தை ஏற்று உலகின் முக்கிய சமயங்களில் ஒன்றாக உள்ளது.

ஆரம்பகால முஸ்லிம்கள் பெரும்பாலும் கிறிஸ்தவம்,யூத மதம் மற்றும் பிற மதங்களிலிருந்து மாறியவர்கள் என்பதையும், இன்றும் கூட பலர் இஸ்லாத்திற்கு புதியவர்கள் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள ஒரு சமூகத்தில், புதிய முஸ்லிம்கள் தங்கள் வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்வதிலுள்ள சவால்களையும் போராட்டங்களையும் எளிதாக கையாள முடியும்.

அவர்களின் போராட்டங்கள் நிதர்சனமானவை. இஸ்லாத்தைத் தழுவும் பலர், சரியான ஆதரவும் வழிகாட்டுதலும் இல்லாததால் தனிமைப்படுத்தப்பட்டதாக உணர்ந்து, தாங்கள் ஏற்ற புதிய சமயத்தைத் துறக்கின்றனர்.

அவர்கள் முஸ்லிம்களின் வாழ்க்கைமுறை மற்றும் நடைமுறைகளைப் பழகிக்கொள்வது மட்டுமல்லாமல், இஸ்லாமிய சமூகத்தின்



பாரம்பரியங்கள் மற்றும் முக்கிய பழக்கவழக்கங்களை அவர்கள் அறிந்திருக்க வேண்டும், இது அவர்கள் அதுவரைப் பின்பற்றிய கலாச்சாரத்திலிருந்து மிகவும் மாறுபட்டு இருக்கலாம்.

உதாரணமாக, இஸ்லாத்தை ஏற்கும் முன் அவர்கள் விரும்பிய குறிப்பிட்ட உணவோ பானமோ இஸ்லாத்தில் தடைசெய்யப்பட்டு இருந்தால் அது அவர்களுக்கு சிரமமாக இருக்கும். இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்ட உணவுகள் (ஹலால்) வேறு கலாச்சாரத்தில் இருந்து வந்த புதிய முஸ்லிம்களுக்கு பழக்கமில்லாத உணவாக இருந்தால், அதுவும் அவர்களுக்கு சவாலாக அமையும்.

மேலும், புதிய முஸ்லிம்களுக்கு இஸ்லாமிய வாழ்க்கை முறையிலுள்ள ஆடைக் கோட்பாடுகளைப் பின்பற்றுவது சிரமமாக இருக்கக்கூடும். அது வரையில் மறைக்காத உடலின் சில பாகங்களை மறைத்து ஆடை உடுத்துவது, அதிலும் குறிப்பாக கோடை காலங்கள் மற்றும் வெப்பவானிலை கொண்ட நாடுகளில், அவர்களுக்கு மிகவும் சவாலாக இருக்கும். இதனை எளிதாக்க புதிய முஸ்லிம்களுக்கு மனரீதியாக ஆதரவளிப்பதும் வழிகாட்டுவதும் மிகவும் அத்தியாவசமாகிறது.

பொதுவாக ஒருவர் தனது சமயத்தை மாற்றும்போது அவரது குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் எளிதில் ஏற்றுக்கொள்ளாதது மட்டுமல்ல அவர்களின் அன்புக்குரியவர்களால் அந்நியப்படுத்தப்படும் சூழ்நிலையும் உருவாகும். அதுபோன்ற சந்தர்ப்பங்களில் புதிய முஸ்லிம்களுக்கு சக இஸ்லாமிய சகோதர அல்லது சகோதரிக்கு தேவையான அன்பையும் ஆதரவையும் வழங்க முன்வர வேண்டும். அதுவும் அவர்கள் இஸ்லாத்தை ஏற்ற முதல் சில ஆண்டுகளில் அவர்களுக்கு மனரீதியான ஆதரவளிப்பது இன்றியமையாததாகிறது.

ஓரிறை நம்பிக்கையின் சாட்சியம் (ஷஹாதா) கூறுவது மற்றும் இஸ்லாத்தைத் தனது மார்க்கமாக அறிவிப்பதையும் தாண்டி இஸ்லாம் அதன் சுய கொள்கைகள் மற்றும் ஒழுங்குமுறைகளைக் கொண்ட ஒரு விரிவான வாழ்க்கை முறையாகும். புதிய முஸ்லிம்கள் இஸ்லாத்தின்

அடிப்படைகளைக் கற்றுக் கொள்ளவதில் காலதாமதம் ஆகும் என்பதை உணர்ந்து பொறுமையாக இருப்பது மிகவும் அவசியம்.

இன்றைய உலகில் முஸ்லிம்கள் பலவிதமான விமர்சனங்களுக்கும் கண்காணிப்புகளுக்கும் உட்படுத்தப்படுவது நாம் மறுக்க முடியாத நிதர்சனம். இஸ்லாம் மீது எழும் விமர்சனங்கள் பல முஸ்லிம்களின், குறிப்பாக முஸ்லிம்கள் பெரும்பான்மை அல்லாத சில நாடுகளில் வாழும் மக்களின் வாழ்க்கையைப் பாதித்துள்ளது. அத்தகைய அனுபவத்திற்குப் பழக்கமில்லாத புதிய முஸ்லிம்களுக்கு இது மனஅழுத்தத்தைத் தரும். அதனைக் கையாளவும் அவர்கள் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.

புதிய முஸ்லிம்கள் தன் வாழ்க்கையில் பல போராட்டங்களை எதிர்கொள்ள வேண்டிய சூழல் வரும். இச்சூழலில் இஸ்லாமிய சமூகம் அவர்கள் சிறந்த முஸ்லிமாக இருக்க கற்றுக்கொள்வதற்கு தேவையான ஆதரவும் துணையும் வழங்குவது தார்மீக கடமையாகும். மேலும் இஸ்லாமிய சமூகம் புதிய முஸ்லிம்களின் கலாசார பின்னணி குறித்த வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல், அவர்களைத் திறந்த மனதுடன் வரவேற்று அவர்களின் வாழ்க்கையில் அவர்களது புதிய பயணத்திற்கு உதவ வேண்டும். அதே சமயம், புதிய முஸ்லிம்களிடம் இருந்தும் புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்ளலாம், அது இஸ்லாமியர்களுக்கு அவர்களின் இறைநம்பிக்கையை அதிகரிக்கவும் வலுப்படுத்தவும் உதவக்கூடும்.

## சுருக்கம்

- இஸ்லாத்தின் மூலம் இவ்வுலகில் அல்லாஹ்வை வணங்கும் நோக்கத்தை நாம் நிறைவேற்றலாம்.
- இஸ்லாம் என்பது, ஒருவர் இஸ்லாமிய சமயத்தில் பிறந்ததால் இஸ்லாம் கிடைத்திருந்தாலும் அல்லது இஸ்லாத்தை ஏற்றவராக இருந்தாலும் , அவர் மீது அல்லாஹ் அருளிய மிகப்பெரிய அருட்கொடையாகும்.
- புதிய முஸ்லிம்கள் தங்கள் புதிய இஸ்லாமிய வாழ்க்கை முறைக்கு பழகிக்கொள்வதில் சிக்கலை எதிர்கொள்ளும் அதே நேரத்தில் இஸ்லாமிய சமூகத்தின் முக்கிய கலாச்சாரத்திற்கும் தங்களைப் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும்.
- புதிய முஸ்லிம்களின் கலாசாரப் பின்னணி எதுவாக இருந்தாலும், முஸ்லிம் சமூகம் தங்கள் புதிய சகோதர சகோதரிகளை வரவேற்று ஆதரவையும் வழிகாட்டுதலையும் வழங்குவது முக்கியம்.

பாகம்-2

# பன்முக சமூகத்தில் முஸ்லிமாக வாழ்வது



## இஸ்லாத்தில் பன்முகத்தன்மை

மனிதர்களில் உட்பட அல்லாஹ்வின் அனைத்து படைப்புகளிலும் பன்முகத்தன்மையைக் கொண்டாடும் மார்க்கம் இஸ்லாம் என்பது மறுக்க முடியாத உண்மை. அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

أَلَمْ تَرَ أَنَّ اللَّهَ أَنزَلَ مِنَ السَّمَاءِ مَاءً فَأَخْرَجْنَا بِهِ ثَمَرَاتٍ مُّخْتَلِفًا أَلْوَانُهَا ۚ وَمِنَ الْجِبَالِ جُدَدٌ
بِيضٌ وَحُمْرٌ مُّخْتَلِفٌ أَلْوَانُهَا وَغَرَابِيبُ سُودٌ ﴿٢٧﴾ وَمِنَ النَّاسِ وَالدَّوَابِّ وَالْأَنْعَامِ
مُخْتَلِفٌ أَلْوَانُهُ كَذَٰلِكَ ۗ إِنَّمَا يَخْشَى اللَّهَ مِنْ عِبَادِهِ الْعُلَمَاءُ ۗ إِنَّ اللَّهَ عَزِيزٌ غَفُورٌ ﴿٢٨﴾

“நிச்சயமாக அல்லாஹ் வானத்திலிருந்து மழையை இறக்குவதை நீர் பார்க்கவில்லையா? பின்னர் நாமே அதனைக் கொண்டு பல விதமான நிறங்களுடைய கனிகளை வெளியாக்கினோம். மலைகளிலிருந்து வெண்மையானதும், சிவந்ததும், தன் நிறங்கள் பற்பல விதமானவையான பாதைகளும் சுத்தக் கரிய நிறமுடையவும் உள்ளன. இவ்வாறே மனிதர்களிலும், ஊர்வனவற்றிலும், கால் நடைகளிலும், பல நிறங்கள் இருக்கின்றன; நிச்சயமாக அல்லாஹ்வின் அடியார்களில் அவனுக்கு அஞ்சுவோரெல்லாம் - ஆலிம்கள் (அறிஞர்கள்) தாம். நிச்சயமாக அல்லாஹ் யாவரையும் மிகைத்தவன்; மிக மன்னிப்பவன்“ (திருக்குர்ஆன்35:27-28)

وَلَوْ شَاءَ رَبُّكَ لَجَعَلَ النَّاسَ أُمَّةً وَاحِدَةً ۖ وَلَا يَزَالُونَ مُخْتَلِفِينَ ﴿١١٨﴾ إِلَّا مَن رَّحِمَ رَبُّكَ ۚ
وَلِذَٰلِكَ خَلَقَهُمْ ۗ وَتَمَّتْ كَلِمَةُ رَبِّكَ لَأَمْلَأَنَّ جَهَنَّمَ مِنَ الْجِنَّةِ وَالنَّاسِ أَجْمَعِينَ ﴿١١٩﴾



“உம் இறைவன் நாடியிருந்தால் மனிதர்கள் அனைவரையும் ஒரே சமுதாயத்தவராக ஆக்கியிருப்பான்; (அவன் அப்படி ஆக்கவில்லை.) எனவே, அவர்கள் எப்போதும் பேதப்பட்டுக் கொண்டே இருப்பார்கள். (அவர்களில்) உம்முடைய இறைவன் அருள் புரிந்தவர்களைத் தவிர; இதற்காகவே அவர்களைப் படைத்திருக்கிறான்; “நிச்சயமாக நான் ஜின்கள், மனிதர்கள் ஆகிய யாவரைக்கொண்டும் நரகத்தை நிரப்புவேன்" என்ற உம் இறைவனுடைய வாக்கும் பூர்த்தியாகிவிடும். (திருக்குர்ஆன் 11:118-119)

இவ்வுலகில் பல்வேறு கலாச்சாரங்கள் மற்றும் நம்பிக்கைகளைப் பின்பற்றும் மக்கள் எப்போதும் இருப்பார்கள் என்பதற்கு மேலே உள்ள வசனங்கள் சான்றாக நிற்கின்றன. எனவே, ஒருவரோடு ஒருவர் இணக்கமாக வாழவும், ஒருவருக்கொருவர் வேறுபாடுகளை மதித்து கூடி வாழவும் கற்றுக்கொள்வது மிக முக்கியம்.[1]

இஸ்லாமிய மார்க்கம் மனித இனத்தின் பன்முகத்தன்மையை மற்றும் அனைத்து சமயங்களின் பன்முகத்தன்மையை அங்கீகரிக்கிறது. ஆனால் மற்ற மதங்களின் நடைமுறையை நாம் பின்பற்ற வேண்டும் என்பதல்ல இதன் அர்த்தம், மாறாக அவர்களின் கருத்துக்களை நாம் இழிவுபடுத்தவோ அல்லது அவமதிக்கவோ கூடாது என்பதே இதன் பொருள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனைத்து சமயத்தினருடனும் நல்ல உறவைப் பேணி வந்தார். அவரைத் தினமும் வசைப்பாடி வந்த இஸ்லாத்தை ஏற்காத ஒருவர் நோய்வாய்ப்பட்டபோது, நபி (ஸல்) அவர்கள் அந்த வயதான பெண்மணியைச் சந்தித்து உதவி செய்தார். மற்றவர் யாராக இருந்தாலும் அவருக்கு நன்மை செய்யும் மனிதனாக இருக்க வேண்டும் என்பதே இஸ்லாம் நமக்கு கற்றுக்கொடுக்கும் அடிப்படையாகும்.

## மத்ஹப்-களிடையே உள்ள வேறுபாடுகள்

இறையியல் மற்றும் மார்க்கத்தின் கொள்கைகளை மக்களுக்கு நெறிப்படுத்த இஸ்லாத்தில் மத்ஹப் எனப்படும் சிந்தனைக் கோட்பாடுகள் சில உள்ளன.. அவற்றுக்கிடையே கருத்தின் ஆதாரத்தின் அடிப்படையில் வேறுபாடுகள் உள்ளனவே தவிர மார்க்கத்தின் அடிப்படையிலல்ல.

எனவே, முஸ்லிம்கள் விவாதங்களில் ஈடுபடாமல், ஒருவரையொருவர் தவறாக வழிநடத்துவதாகக் குற்றம் சாட்டாமல் இந்த வேறுபாடுகளுக்கு சகிப்புத்தன்மையைக் காட்டுவது அவசியம்.

[1] முஃப்தியின் அலுவலகத்தின் சமகால இர்ஷாத் தொடர் (இஸ்லாமிய சமய மன்றம் [MUIS], 2018)

# சிங்கப்பூர் முஸ்லிம்கள் எதிர்க்கொள்ளும் சவால்கள்

சிங்கப்பூர் போன்ற பன்முக கலாச்சார மக்கள் வாழும் நாட்டில் முஸ்லிம்கள், மாற்று சமூகத்தினரிடம் அன்றாடம் தொடர்பு கொள்கின்றனர். அவர்களின் கொண்டாட்டங்கள், விழாக்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் போன்றவற்றிலும் கூட அவர்களுடன் தொடர்பு கொள்ளும் சூழல் ஏற்படும்.

## மாற்று சமயத்தினரை அவர்களின் பண்டிகைகளுக்கு வாழ்த்துதல்

பல முஸ்லிம்கள் பொதுவாக கேட்பது முஸ்லிமல்லாதவர்களின் சமய கொண்டாட்டங்களில் வாழ்த்துவது இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளதா என்பதே. இந்த விவாதத்தில் மார்க்க அறிஞர்களிடையே எப்பொழுதும் மாறுபட்ட கருத்துகள் உள்ளன என்பது நிதர்சனம். சிங்கப்பூரின் பன்முக கலாச்சார சூழலில், முஸ்லிமல்லாதவர்களின் சமய கொண்டாட்டங்களை மகிமைப்படுத்தும் நோக்கமின்றி, மற்றவர்களின் ஆனந்தத்தில் நமது மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதற்காக வாழ்த்துவது அனுமதிக்கப்படுகிறது.



## மாற்று சமய வழிபாட்டுத் தலங்களுக்குள் நுழைவது, சமய நிகழ்வுகளில் கலந்து கொள்வது

ஒரு முஸ்லிம் தனது மார்க்க நம்பிக்கையை எப்பொழுதும் பாதுகாக்க வேண்டும். மாற்று சமய வழிபாட்டு சடங்குளில் பங்கேற்காமல் அவர்களைப் பற்றி அறிந்துகொள்ளும் எண்ணத்துடன் ஒரு முஸ்லிம் பிற சமயத்தினரின் வழிபாட்டுத்தலங்களுக்குள் நுழைவதற்கோ அல்லது அவர்களின் மத நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்கோ தடையில்லை. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சிறந்த தோழர் உமர் (ரலி) அவர்கள் ஜெருசலேம் பைத்துல் மக்திஸில் இருந்தபொழுது அவர் தேவாலயம் சென்று பார்வையிட்டதை நாம் உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம்.



## மாற்று சமயத்தினரின் திருமண விழாக்களில் கலந்துகொள்வது

மாற்று சமூக மக்களின் திருமண விழாக்களில் கலந்துகொள்வதற்கு எந்த தடையும் இல்லை. இரண்டு நபர்கள் திருமண பந்தந்தால் ஐக்கியமாவதை கொண்டாடவும், உற்றார் உறவினர்களுடன் நல்ல உறவைப் பேணவும் முஸ்லிம்கள் கலந்து கொள்ளலாம்.

இஸ்லாமிய கோட்பாடுகளுக்கு மாற்றான சடங்குகளில் முஸ்லிம் பங்கேற்க கூடாது என்பது நாம் அறிந்ததே. அதேவேளையில் சிங்கப்பூரில் அனைத்து சமூக மக்களும் மற்ற சமூக கலாச்சாரங்கள் மற்றும் நம்பிக்கைகளுக்கு மதிப்பளித்து ஒற்றுமையாக வாழ்வதென்பது பொதுவான ஒன்றாகும்.



## மாற்று சமூகம் பெரும்பான்மையான நாட்டில் முஸ்லிமாக வாழ்வது

நாம் பன்முகத்தன்மைக் கொண்ட சூழலில் வாழ்கின்றோம் எனும் யதார்த்தத்தை உணர்வதே இன்று வெற்றிகரமான வாழ்க்கை வாழ்வதன் ஒரு முக்கிய பகுதியாகும்.

மாற்று சமூகம் பெரும்பான்மையாக இருக்கும் நாட்டில் வாழும் முஸ்லிம்கள் தங்களின் சமய சம்பிரதாயங்களையும் தங்களது தேசிய அர்ப்பணிப்பையும் செலுத்துவது சவாலானது. இஸ்லாமிய நம்பிக்கைகளையையும் அதன் கொள்கைகளையும் நாம் கடைப்பிடிக்கக் கடமைப்பட்டிருந்தாலும், சக இஸ்லாமியர்களிடம் மட்டுமல்ல, மற்ற சமூகத்தைச் சார்ந்தவர்களிடமும் நாம் செயல்களிலும், பேச்சிலும் கண்ணியத்தையும் நாகரிகத்தையும் கடைப்பிடிப்பது அவசியமாகும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நமக்கு கற்றுத்தந்த மார்க்க சிறப்புகளைப் பின்பற்றி நற்காரியங்களின் மூலம் மனிதகுலத்திற்கு எத்திவைப்பது நமது தார்மீக கடமையாகும். ஒரு சமூகம் சிறம்பட்டு செழிக்க சமூக நல்லிணக்கம், பாதுகாப்பு, நாட்டின் வளர்ச்சி மற்றும் இஸ்திரத்தன்மைக்கு பங்களிப்பது போன்ற மனித குலத்திற்கான பொறுப்புகளை அறிந்து செயல்படுத்தவேண்டும்.

இஸ்லாமிய மார்க்கம் நமக்கு உத்வேகத்துடன் மனிதகுலத்தின் வளர்ச்சிக்காக பாடுபடவே வலியுறுத்துகிறது. கண்மணி நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்:

*“மக்களுக்கு நன்மையளிக்கும் செயல்களைச் செய்பவர்களே சிறந்த மனிதர்கள்”* (தபராணி அவர்களால் குறிப்பிடப்பட்டுள்ளது)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையில் மக்கா மற்றும் மதீனா சமூகங்களில் உள்ள முஸ்லிம் அல்லாதவர்கள் உட்பட அனைவருடனும் எவ்வாறு இணக்கமாக நடந்து கொண்டார் என்பதற்கு பல உதாரணங்கள் உள்ளன. எனவே, முஸ்லிமல்லாதவர்களுடன் இணைந்து வாழும் நாம், இஸ்லாத்தின் நேர்மறையான கொள்கைக் கோட்பாடுகளைப் பின்பற்றவும், பரப்பவும் முயல வேண்டும், இதனால் மக்கள் இஸ்லாத்தின் சிறப்பை அறிவதோடு மட்டுமல்லாமல் போற்றவும் செய்வார்கள்.

## சிங்கப்பூரின் பன்முக கலாச்சாரம்

இஸ்லாமியர்கள் பெரும்பான்மையாக இல்லாத நாட்டில் வாழ்வது சிலருக்கு கவலையளிக்கலாம். ஆனால் இதர மாற்று சமூக பெரும்பான்மையினர் நாட்டில் வாழும் முஸ்லிம்களுக்கு எளிதில் கிடைக்கப்பெறாத பல வசதிகள் சிங்கப்பூரில் உள்ள முஸ்லிம்களுக்கு அல்லாஹ் அருளியுள்ளான்.

நாடு முழுவதும் காணப்படும் ஏராளமான மசூதிகளே அதற்கு ஓர் உதாரணம். சிங்கப்பூரில் உள்ள அனைத்து மசூதிகளும் நன்கு பராமரிக்கப்பட்டு, முறையாக நிர்வகிக்கப்பட்டு, சமூகத்திற்கு பல பயனுள்ள நிகழ்ச்சிகள் மற்றும் நிகழ்வுகளை நடத்துகின்றன. மேலும், பொது மற்றும் தனியார் கட்டிடங்களில் முஸ்லிம்கள் தொழுவதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

நாட்டில் முஸ்லிம்கள் சிறுபான்மையினராகக் கருதப்பட்டாலும், ஹலால் உணவுகள் பரவலாக கிடைக்கப்பெறுவது மற்றொரு உதாரணம். இங்கு சில மாற்று சமூகத்தினரின் உணவகங்கள் மற்றும் உணவுக்கூடங்களில் கூட ஹலால் உணவு கிடைக்கப்பெறுகின்றது.

## சிங்கப்பூரில் சர்வ-சமய உரையாடல்கள்

சிங்கப்பூர் ஒரு சிறிய நாடாக இருந்தாலும், உலகில் மிகவும் மத வேறுபாடுள்ள நாடுகளில் ஒன்றாகும். இது கலப்பு கலாச்சாரம், மொழி மற்றும் சமயம் ஆகியவற்றின் கலவையாக உள்ளது. எனவே அனைத்து சமூகத்தாரின் இடையே அமைதியும் நல்லிணக்கமும் மிக முக்கியமானது. மேலும், மத மற்றும் இன நல்லிணக்கம் சிங்கப்பூரின் வளர்ச்சி மற்றும் வெற்றிக்கு பின்னால் உள்ள முக்கிய காரணிகளில் ஒன்றாக கருதப்படுகிறது.

குடிமக்கள் மற்றும் சமூகத் தலைவர்களின் கடின உழைப்பும் ஒத்துழைப்பும் இல்லாமல் இந்த நல்லிணக்கத்தை அடைய முடியாது.



பல்வேறு கலாச்சாரங்கள் மற்றும் பின்னணியில் உள்ள மக்களிடையே சமூக ஒற்றுமையை பேணுவதற்கு தொடர்ச்சியான முயற்சி தேவை.

அமைதி மற்றும் நல்லிணக்கத்தை அடைவதற்காக பல்வேறு நம்பிக்கைகளைக் கொண்ட மக்களிடையே இணக்கமான உறவுகளை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டு சிங்கப்பூரில் பல சர்வ-சமய உரையாடல்களும் முயற்சிகளும் நடந்துள்ளன. சமூகத்தின் அனைத்து மட்டங்களில் இருக்கும் மக்கள் ஒருவரையொருவர் அறிந்து கொள்ளவும், பொதுவான நிலையைக் கண்டறியவும், பொது நலனுக்காக ஒன்றாக வேலை செய்யவும் ஒன்று கூடுவர்.

- **சர்வ-சமய அமைப்பு**: Inter-Religious Organisation (ஐஆர்ஓ)

மிகவும் மரியாதைக்குரிய முஸ்லிம் அறிஞரும் சமூகத் தலைவருமான மௌலானா அப்துல் அலீம் சித்தீக் அவர்களே சமயங்களுக்கு இடையிலான உரையாடல்களை எளிதாக்குவதற்கான ஆரம்பகால முயற்சிகளை ஆரம்பித்தவர். அவரே சமயங்களுக்கிடையேயான அமைப்பான (ஐஆர்ஓ) நிறுவுவதற்கு முன்னோடியாக இருந்தார்.

அரசு சாரா அமைப்பான ஐஆர்ஓ சிங்கப்பூரில் 10 வெவ்வேறு சமயங்களின் பிரதிநிதிகளைக் கொண்டுள்ளது. அவர்கள் அனைத்து தரப்பிலான மக்களிடையே இணக்கமான உறவுகளை வளர்ப்பதற்கும் அமைதியை மேம்படுத்துவதற்கும் ஒன்றாக வேலை செய்கிறார்கள். இஸ்லாம் மற்றும் மற்ற சமூகத்தினருடனான சமய உரையாடல்களை

எளிதாக்க உதவும் ஒரு தளமாக ஐஆர்ஓ செயல்படுகின்றது.

- **நல்லிணக்க மையம்**

மஸ்ஜித் அன்-நஹ்தாஹ் பள்ளிவாசலில் நிறுவப்பட்டுள்ள நல்லிணக்க மையமும் சமயங்களுக்கு இடையே இணக்கமான உறவுகளைப் பேணுகின்றது. சிங்கப்பூரின் பன்முக சமுதாயத்தினரிடையே இஸ்லாம் மற்றும் முஸ்லிம்கள் பற்றிய புரிதலை சிறப்பான முறையில் மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. ஐஆர்ஓ-வால் தொடங்கப்பட்ட நல்ல பணியை மேம்படுத்தவும் தொடரவும் நல்லிணக்க மையம் சிறப்பாகச் செய்துள்ளது. சர்வ-சமயங்களுக்கு இடையே நல்லிணக்க ஒத்துழைப்பைப் பராமரிப்பதில் இந்த மையம் மிகவும் தீவிரமாக செயல்படுகின்றது.

## சிங்கப்பூர் முஸ்லிம்-மின் தனித்துவம் THE SINGAPORE MUSLIM IDENTITY(SMI)

சிங்கப்பூரில் உள்ள முஸ்லிம்கள், நாட்டின் மதச்சார்பற்ற சமூகச் சூழலுக்குத் தகவமைத்துக் கொண்டு தங்கள் சமயத்தைப் பின்பற்றுவது முக்கியம். சிங்கப்பூரில் வாழும் முஸ்லிம்கள் உலகின் மற்ற முஸ்லிம் சமூகங்களின் மார்க்க வழிகளை மாதிரிகளாக ஏற்றுக்கொள்வது பொருத்தமாகாது. இதைக் கருத்தில் கொண்டு, சிங்கப்பூரில் வாழும் முஸ்லிம்களின் பின்பற்ற வேண்டிய 10 பண்புகளை மூயிஸ் வகுத்துள்ளது.[2]

01 சமூகம் மற்றும் வாழ்வியல் சூழல் மாறினாலும் அதற்கு ஏற்றவாறு இஸ்லாமியக் கொள்கைகளை வலுவாகப் பற்றிக் கொள்வது

02 நவீனமாக்கப்பட்ட சமுதாயத்தின் சவால்களுக்கு மேல் தார்மீக ரீதியாகவும் மார்க்க ரீதியாகவும் தளராமல் இருப்பது

03 நவீனமயமாக்கல் வளர்ச்சியைத் தாண்டி மார்க்கத்தைப் பின்பற்றி விருத்தியடைவது

04 இஸ்லாமிய நாகரிகம் மற்றும் வரலாற்றைப் பறைசாற்றுவதுடன் தற்காலத்தின் சவால்களை நன்கு புரிந்துக்கொள்வது

05 முன்மாதிரியாகவும் உத்வேகமளிப்பவராகவும் இருப்பது

06 சிறந்த முஸ்லிம்கள் சிறந்த குடிமக்களும் கூட என்று உணர்வது

07 சமூகம் மற்றும் மதச்சார்பற்ற சமூகத்திற்கு பங்களிப்பது

08 நல்லிணக்க கொள்கைகள் ஊக்குவித்து அனைவரையும் அரவணைத்து நடப்பது

09 சமூகத்தின் பன்மைத்துவம் மார்க்கத்தின் கோட்பாடுகளுக்கு முரண்படாமல் நடைமுறைப்படுத்துவது

10 மற்ற நாகரிகங்களைப் பாராட்டுவதுடன், மற்ற சமூகங்களுடன் கலந்து கற்பதிலும் நம்பிக்கைக் கொள்வது

சிங்கப்பூரின் பன்முக சமூகத்திற்கு ஏற்ப இஸ்லாமிய மார்க்க வாழ்க்கையின் முற்போக்கான, தகவமைத்துக்கொள்ளக்கூடிய நடைமுறையை SMI ஊக்குவிக்கிறது. சிங்கப்பூர் முஸ்லிம் சமூகம் இந்தப் பண்புகளைத் தழுவும் என்று நம்பப்படுகிறது.

---

[2] மூலம்: 19நவம்பர்2018 https://www.muis.gov.sg/-/media/Files/OOM/Resources/Risalah-eng-lr.pdf

## சுருக்கம்

- இஸ்லாத்தில் பன்முகத்தன்மை எப்பொழுதும் கொண்டாடப்பட்டு வருகிறது, மேலும் பலதரப்பட்ட மற்றும் சகிப்புத்தன்மையுள்ள சமூகத்தில் வாழ்வதில் பல அருட்கொடைகள் உள்ளன. பல்வேறு இனம் மற்றும் கலாச்சார பின்னணி கொண்ட மக்களிடம் சகிப்புத்தன்மை மற்றும் அன்பைக் கொண்ட நபி (ஸல்) அவர்களே இதற்கு மிகப்பெரிய உதாரணம்.
- மாற்று சமய மக்கள் பெரும்பான்மையான நாட்டில் உள்ள முஸ்லிம்கள் என்ற வகையில், நம்மைச் சுற்றியுள்ள சமூகங்களுக்கு நற்செயல்கள் மூலம் நமது மார்க்கத்தின் சிறப்பை மற்றவர்களுக்கு உணர்த்துவது நமது தார்மீக கடமையாகும். மார்க்கத்தின் உறுதியான கொள்கைககளைப் பின்பற்றி பரப்ப முயல்வது, மக்கள் இஸ்லாத்தை நன்றாகப் புரிந்துகொள்ள வழிவகுக்கும்.
- பன்முக கலாச்சார சமூகத்தில் இணக்கமாக வாழ்வதற்கும் ஒற்றுமை மற்றும் அமைதி நிறைந்த சமூகத்தை உருவாக்குவதற்கும் கலாச்சார விழிப்புணர்வுடன் திட்டமிடப்பட்ட முயற்சிகள் அவசியம்.
- சிங்கப்பூர் முஸ்லிம் தனித்துவக் கோட்பாடுகளை (SMI) மூயிஸ் வரையதுள்ளது, இது பன்முக சமூக மக்கள் வாழும் சிங்கப்பூரில் வாழும் ஒரு முஸ்லிம் ஏற்றுக்கொள்ள வேண்டிய பண்புகளை எடுத்துக்காட்டுகிறது. சிங்கப்பூரின் சூழலுக்கு ஏற்ற இஸ்லாத்தின் முற்போக்கான நடைமுறையை நோக்கி முஸ்லிம்களை வழிநடத்த இந்தப் பண்புக்கூறுகள் உதவுகின்றன.

பாகம்-3

# இஸ்லாமிய கோட்பாடுகளின் அறிமுகம்



# இஸ்லாமிய கோட்பாடுகள்

பெரும்பாலும் இஸ்லாத்தை 'ஹலால்' அல்லது 'ஹராம்' எனும் சொற்களுடன் மட்டும் வரையறுத்து மக்கள் தங்களை அறியாமல் இஸ்லாத்தின் சிறப்பினை சுருக்குகின்றனர். அனுமதிக்கப்பட்டது (ஹலால்) அல்லது அனுமதிக்கப்படாதது (ஹராம்) என்று எதன் அடிப்படையில் வரையறுக்கப்படுகிறது அதன் நோக்கம் என்ன என்று நாம் எப்போதாவது சிந்தித்துள்ளோமா? இஸ்லாத்தில் உள்ள அனைத்தையும் இத்தகைய கடுமையான இரட்டைக் கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டுமா?

அல்லாஹ் இந்த உலக வாழ்வில் நமக்கு எது அனுமதிக்கப்பட்டது எது அனுமதிக்கப்படாதது என்பதை விவரிப்பதன் மூலம் நம்மை வழிநடத்துகிறான் என்று முஸ்லிம்களால் நம்பப்படுகின்றது. நம்மையும் அகிலங்கள் அனைத்தையும் படைத்த அல்லாஹ், நமது தனிப்பட்ட மற்றும் சமூக வாழ்க்கையைச் சீரமைப்பதற்காக 'விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை' வகுத்துக் கொடுத்துள்ளான். எல்லாவற்றிற்கும் மேலாக, இந்த உலகம் ஒரு தற்காலிக வசிப்பிடமாகும். நாம் பொறுமையுடன் அல்லாஹ்வின் கட்டளைகளின்படி வாழ்ந்தால், நம்மைப் படைத்தவனாக நியாயமான முறையில் நமது நற்செயல்களுக்கும் நாம் சந்திக்கும் இன்னல்களுக்கும் அவன் வெகுமதி அளிப்பான்.

மார்க்கத்தில் அனுமதிக்கப்படுவது எது அனுமதிக்கப்படாதது எது என்பது இரண்டு முக்கிய மூலாதாரங்களைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகின்றது:

### - அல்லாஹ்வின் புனித நூல்

திருக்குர்ஆன் என்பது முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்ட அல்லாஹ்வின் புனித நூலாகும். மனிதர்களுக்கான வழிகாட்டுதல்கள் இம்மை மறுமையின் இயல்புகள் பற்றிய கோட்பாடுகள் மற்றும் விளக்கங்கள் இதில் உள்ளன.

- **சுன்னாஹ்**
  **- நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டுதல்கள்**



பேச்சுவழக்கில் ஹதீஸ் என்றும் அறியப்படும் சுன்னாஹ்-வில், அண்ணல் நபி (ஸல்) அவர்களின் கூற்றுகள், செயல்கள் மற்றும் போதனைகள் ஆகியவை அடங்கும்.

குர்ஆன் மற்றும் சுன்னாஹ்விலிருந்து நேரடி ஆதாரம் இல்லாத நிலையில், மார்க்க அறிஞர்களின் தர்க்கம் பரிசீலிக்கப்படும், இது 'ஒருமித்த கருத்து' (இஜ்மா') என்று அழைக்கப்படும். மேலும், ஒருமித்த பகுத்தறிவு தர்க்க ஞானம் (கியாஸ்) மற்றும் பிற முறைகள் உள்ளன, ஆனால் அவை இந்தப் புத்தகத்தில் விவாதிக்கப்படாது.

## அங்கீகரிக்கப்பட்ட ஹதீத் நூல்கள்

ஒன்பது பிரசித்திபெற்ற ஹதீத் உள்ளன: ஸஹீஹ் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம், ஜமி'அத்-திர்மிதி, சுனான் அபு தாவூத், சுனான் இப்ன் மாஜாஹ், சுனான் அன்-நாஸா'இ, முஸ்னத் அஹ்மத், முவத்தா' மாலிக் மற்றும் சுனான்அத்-தாரிமி.

மார்க்க வழிகாட்டுதல்களுக்காக மற்ற அங்கீகரிக்கப்பட்ட நூல்களுடன் இந்நூல்களும் அறிஞர்களால் குறிப்புகளாகப் பயன்படுத்தப்படுகின்றன.

# இஸ்லாமிய கோட்பாடுகளின் ஐந்து பிரிவுகள்

இஸ்லாமிய சட்ட வல்லுநர்கள் கோட்பாடுகளை ஐந்து வகைகளாகப் பிரித்துள்ளனர், அவை கீழே விவரிக்கப்பட்டுள்ளன. பருவ வயதை அடைந்தவர்களும், அறிவுத்திறன் கொண்டவர்களும் தங்கள் ஒவ்வொரு செயலுக்கும், சொல்லுக்கும், எண்ணத்திற்கும் பொறுப்பாளிகளாவர்.

01

## கட்டாயமானவை *(வாஜிப்)*

வாஜிப் செயல்கள் முஸ்லிம்கள் மீது கடமையாகும். அவற்றைச் செய்வதால் வெகுமதியும், விட்டுவிடுவதால் பாவமும் கிடைக்கும். ஐந்து நேரத் தொழுகைகளை நிறைவேற்றுவது, கட்டாய தானம் (ஜகாத்) கொடுப்பது மற்றும் நமது பெற்றோரை மரியாதையுடன் நடத்துவது போன்றவை உதாரணங்களாகும்.

02

## பரிந்துரைக்கப்படுபடவை *(சுன்னாஹ்)*

சுன்னாஹ் செயல்கள் கட்டாயமற்றவை ஆனால் பரிந்துரைக்கப்படுபவை. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கலாச்சார செயல்களை நாம் மார்க்கத்தின் கோட்பாடுகளுக்கு மூலாதாரமாக கருதக்கூடாது. இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள் இந்த சுன்னாஹ் வகை செயல்களை பரிந்துக்கப்படும் செயல்கள் என வகைப்படுத்தியுள்ளனர் – அதாவது சுன்னத் செயல்கள் செய்தால் வெகுமதி உண்டு ஆனால் செய்வது கட்டாயம் இல்லை. அதாவது, அவற்றை விட்டுவிடுவது குற்றமாகாது. உதாரணமாக கடமையான ஐவேளைத் தொழுகைகள் கட்டாயம் ஆனால் 'நவாஃபில்' எனப்படும் கூடுதல் தொழுகைகள் கட்டாயமல்ல. அதே போன்று, 'ஜகாத்' எனப்படும் நன்கொடை வழங்குதல் கட்டாயம் ஆனால் சதகாஹ் எனப்படும் நன்கொடை வழங்குதல் கட்டாயமல்ல.

03

## அனுமதிக்கப்பட்டவை *(முபாஹ்)*

முபாஹ் செயல்கள் என்பது அனுமதிக்கப்பட்ட செயல்கள், அவற்றைச் செய்வதால் பலன் கிடைக்காது, விட்டுவிடுவது குற்றமும் ஆகாது. தடைசெய்யும் ஆதாரங்களோ தாக்கங்களோ இல்லாத பட்சத்தில் வாழ்க்கையின் பெரும்பாலான செயல்கள் முபாஹ் வகையே. உதாரணமாக, உண்ணுதல், பருகுதல், பயணம் செய்தல், வியாபாரம் செய்தல் போன்றவை முபாஹ் வகைச் செயல்களே.

04

## பரிந்துரைக்கப்படாதவை *(மக்ரூஹ்)*

மக்ரூஹ் செயல்கள் பரிந்துரைக்கப்படாதவை. அவற்றைச் செய்வது குற்றமல்ல, ஆனால் அவற்றைச் செய்யாமல் விட்டு விலகி இருந்தால் வெகுமதி கிடைக்கும். உதாரணமாக, இடது கையால் சாப்பிடுவதும் குடிப்பதும், வலது காலால் கழிவறைக்குள் நுழைவதும், தொழுகைக்கு முன் துர்நாற்றம் வீசும் உணவை உட்கொள்வதும் அடங்கும்.

05

## தடைசெய்யப்பட்டவை (ஹராம்)

ஹராம் செயல்கள் கட்டாய தடை செய்யப்பட்டவை. அவற்றைச் செய்வதால் பாவமும், விட்டுவிடுவதால் பலனும் கிடைக்கும். திருட்டு, விபச்சாரம், போதைப்பொருள் உட்கொள்வது மற்றும் கொலை ஆகியவை இதற்கு எடுத்துக்காட்டுகள்.

## ஐந்து வகையை அடிப்படையாகக் கொண்ட செயல்கள்

ஐந்து வகைகளின்படி வகைப்படுத்தப்பட்ட செயல்களின் சில எடுத்துக்காட்டுகள் கீழே தொகுக்கப்பட்டுள்ளன:

### வாஜிப்

- தினசரி ஐவேளைத் தொழுகை
- ரமழான் நோன்புகள்
- ஜகாத் (கட்டாய நன்கொடை)
- ஹஜ் (உடல்பலம் மற்றும் நிதிநிறைவு உள்ளவர்களுக்கு)

### சுன்னாஹ்

- கூடுதல் தொழுகைகள்
- சதகாஹ் வழங்குதல்
- திங்கள் மற்றும் வியாழன் நோன்பு நோற்றல்
- இஸ்லாமிய மாதத்தின் 13,14,15 தேதிகளில் நோன்பு நோற்றல்

### முபாஹ்

- பூங்காவில் நடைப்பயிற்சி மேற்கொள்ளுதல்
- விளையாடுவது
- புத்தகம் படிப்பது

### மக்ரூஹ்

- இடது கையால் உண்பது
- வலது காலை முதலில் வைத்து கழிவறைக்குள் நுழைவது
- காலைத் தொழுகைக்குப் பின் உடனே உறங்குவது

### ஹராம்

- கொலை
- விபச்சாரம்
- திருட்டு/ கொள்ளை
- போதை வஸ்துகளை உட்கொள்ளுதல்
- சூதாட்டம்

ஒரு சமூகத்தின் தூண்களைப் புரிந்துகொள்வதில் முக்கிய பங்கு வகிக்கும் இவை 'ஐந்து தேவைகள்' (அல்-குல்லியா அல்-காம்ஸ்) என்று அழைக்கப்படுகின்றது. சமூக வாழ்வின் ஐந்து முக்கியத் தேவைகளைப் பாதுகாப்பதற்காக வரையறுக்கப்பட்டுள்ளன.

## முபாஹ் செயல்களின் மூலம் நன்மைகள் பெறுதல்

முபாஹ் செயல்களை வழிபாட்டு நோக்கத்துடன் செய்தால் நன்மைகள் கிடைக்கும். உதாரணமாக, ஒருவர் தொழுகையை நிறைவேற்றுவதற்கான தேகவலிமையை அடையும் நோக்கத்துடன் சாப்பிட்டாலோ, அல்லது அல்லாஹ்வின் பாதையில் சமூகத்திற்கு சேவை செய்ய ஒருவர் தன்னை வலுப்படுத்த பயிற்சி செய்தாலோ, அந்த முபாஹ் செயல் அவருக்கு நன்மை அளிக்கும்.

இதற்கு நேர்மாறாக, முபாஹை அதிகமாகச் செய்தால் அல்லது அது ஒரு நபருக்கு ஏதேனும் தீங்கு விளைவித்தால் அது ஹராமாக மாறும். உதாரணமாக, சாப்பிடுவது முபாஹ் ஆகும், ஆனால் தொழுகையை வசதியாக நிறைவேற்ற முடியாத அளவுக்கு அதைச் செய்தால், அது மக்ருஹ் ஆகிவிடும்.

மற்றொரு உதாரணம் பால் குடிப்பது, இது முபாஹ். இருப்பினும், பால் ஒரு நபருக்கு தீங்கு விளைவிப்பதாக (அதாவது அவர்களுக்கு கடுமையான ஒவ்வாமை எதிர்வினைகள் ஏற்படுவதாக) இருந்தால், இந்த காரணத்திற்காக பால் குடிப்பது அவர்களுக்கு ஹராம் ஆகும்.



# ஐந்து தேவைகள்

அல்-மகாசித் அஷ்-ஷரிய்யா எனப்படும் ‘ஷரிஆவின் குறிக்கோள்கள்’ அடிப்படையில் ஐந்து தேவைகள் (அல்-குல்லியா அல்-காம்ஸ்) முஸ்லிம்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். அமைதி மற்றும் ஒழுக்கமான தனிப்பட்ட மற்றும் சமூக வாழ்க்கையை அடைய இந்த இஸ்லாமிய கோட்பாடுகள் உதவுகின்றன.

## 1. மார்க்கத்தைப் பாதுகாப்பது

சமுதாயத்தை ஒன்றிணைப்பதில் சமயம் முக்கிய பங்கு வகிக்கிறது. அதுவே மற்ற உயிரினங்களில் இருந்து மனிதர்களை தனித்துவமாக வேறுபடுத்துகின்றது. இது மனிதர்களை ஓர் உயரிய நோக்கமான தனது படைப்பாளனுடன் இணைக்கின்றது.

வழிபாட்டுத் தலங்களை அழிப்பது ஹராம் ஆகும், உதாரணமாக, மனிதர்கள் தங்கள் மார்க்கத்தைப் பின்பற்றுவதில் இருந்தும் இறை வழிபாட்டு செயல்களில் ஈடுபவத்தில் இருந்தும் தடைகளை ஏற்படுத்துகின்றது.



## 2. உயிர்களைப் பாதுகாத்தல்(Nafs)

இஸ்லாத்தில் உயிர் புனிதமானது. எனவே, ஒருவரைக் கொல்வது, தற்கொலைச் செய்து கொள்வது அல்லது மனித உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் செயல்களைச் செய்வது அனுமதிக்கப்படாது. திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான்:

... وَلَا تَقْتُلُوا النَّفْسَ الَّتِي حَرَّمَ اللَّهُ إِلَّا بِالْحَقِّ
ذَٰلِكُمْ وَصَّاكُم بِهِ لَعَلَّكُمْ تَعْقِلُونَ ﴿١٥١﴾

“அல்லாஹ் தடுத்துள்ள எந்த ஓர் ஆத்மாவையும் நியாயமானதற்கு அல்லாமல் - கொலை செய்யாதீர்கள் - இவற்றை நீங்கள் உணர்ந்து கொள்வதற்காக (இறைவன்) உங்களுக்கு (இவ்வாறு) போதிக்கின்றான்” (திருக்குர்ஆன் 6:151)

உணவுக்காகவோ அல்லது ஆபத்தில் இருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவோ போன்ற சரியான காரணமின்றி விலங்குகளைக் கொல்வது தடைசெய்யப்பட்டுள்ளது.





### 3. அறிவாற்றலைப் பாதுகாப்பது ('அக்ல்)

அறிவாற்றால் என்பது மனித குலத்திற்கு இறைவனிடம் இருந்து கிடைத்த ஓர் அருட்கொடை, அதன் திறனுக்கு ஏற்றவாறு பயன்படுத்த வேண்டும். இது மனிதர்களை சரி மற்றும் தவறு ஆகியவற்றை வேறுபடுத்தி அறிய உதவுகின்றது. மேலும் பகுத்தறிவுடன் முடிவு செய்யவும் வழிகாட்டுகிறது. இதனால், மனித அறிவுக்கு தீங்கு விளைவிப்பதால், போதை வஸ்துக்களைப் பயன்படுத்துவதில் இருந்து தடை விதிக்கப்பட்டுள்ளது. ஒரு நபர் மது போன்ற போதை பானங்களைப் பருகும் போது, அவர் தனது மன கட்டுப்பாட்டை இழக்கின்றார். மேலும் மோசமான செயல்கள் மீதும் நாட்டம் ஏற்படலாம். திருக்குர்ஆனில் அல்லாஹ் குறிப்பிடுகிறான்:

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا إِنَّمَا الْخَمْرُ وَالْمَيْسِرُ وَالْأَنصَابُ وَالْأَزْلَامُ رِجْسٌ مِّنْ عَمَلِ
الشَّيْطَانِ فَاجْتَنِبُوهُ لَعَلَّكُمْ تُفْلِحُونَ ﴿٩٠﴾

"ஈமான் கொண்டோரே! மதுபானமும், சூதாட்டமும், கற்சிலைகளை வழிபடுதலும், அம்புகள் எறிந்து குறி கேட்பதும், ஷைத்தானின் அருவருக்கத்தக்க செயல்களிலுள்ளவையாகும்; ஆகவே நீங்கள் இவற்றைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் – அதனால் நீங்கள் வெற்றியடைவீர்கள்". (திருக்குர்ஆன் 5:90)

### 4. சந்ததிகளைப் பாதுகாப்பது (நஸப்)

சந்ததி என்பது மனித குலத்தைத் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. சந்ததியினரின் தொடர்ச்சியைப் பாதுகாப்பது மட்டுமல்ல, சரியான வழிகாட்டுதலின் மூலம் சந்ததியினரை எதிர்மறையான தாக்கங்களில் இருந்து பாதுகாப்பதும் முக்கியம் – இது சந்ததியினரை நோக்கமுள்ள மனிதர்களாக வளர வழிவகைச் செய்யும்.

திருமண பந்தமின்றி பிறக்கும் குழந்தைக்கு முறையான தந்தை இல்லாததால் விபச்சாரம் ஹராமான சந்ததியினரை உருவாக்குகின்றது. அதே சமயம், மனிதனின் கண்ணியத்தையும் பாதிக்கிறது



### 5. செல்வத்தைப் பேணுவது (Mal)

செல்வம் என்பது மனிதர்களின் உடைமையில் ஒன்றாகும். இஸ்லாம் உடைமைகளில் உரிமையைப் பொறுத்துகிறது, அதாவது எந்த ஒரு குறிப்பிட்ட உடைமை அல்லது செல்வத்தைப் பெறுவதற்கான செயல்முறை சட்டப்பூர்வமாக இருக்க வேண்டும். இது திருக்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளது:

وَلَا تَأْكُلُوا أَمْوَالَكُم بَيْنَكُم بِالْبَاطِلِ وَتُدْلُوا بِهَا إِلَى الْحُكَّامِ
لِتَأْكُلُوا فَرِيقًا مِّنْ أَمْوَالِ النَّاسِ بِالْإِثْمِ وَأَنتُمْ تَعْلَمُونَ ﴿١٨٨﴾

“அன்றியும், உங்களுக்கிடையில் ஒருவர் மற்றவரின் பொருளைத் தவறான முறையில் சாப்பிடாதீர்கள்; மேலும், நீங்கள் அறிந்து கொண்டே பிற மக்களின் பொருள்களிலிருந்து(எந்த) ஒரு பகுதியையும், அநியாயமாகத் தின்பதற்காக அதிகாரிகளிடம் (இலஞ்சம் கொடுக்க) நெருங்காதீர்கள்..” (திருக்குர்ஆன் 2:188)

மற்றொருவரின் சொத்தைப் பறிக்கும் தவறான முறையான திருடுதல், ஏமாற்றுதல், அபகரித்தல், சூதாட்டம் மற்றும் லஞ்சம் போன்ற பல செயல்கள் ஹராம் என்பது தெளிவாகின்றது.



இந்த விளக்கங்களின் மூலம் இஸ்லாமிய கோட்பாடுகள் ஷரிஆவின் கொள்கைகளால் நிர்வகிக்கப்படுகின்றன என்பது விளங்குகிறது. அனுமதிக்கப்படுவதும் அனுமதிக்கப்படாததும் எதன் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது என்பதையும் இலகுவாக அறிந்துகொள்ள முடிகின்றது.

ஒரு குறிப்பிட்ட செயலின் அனுமதி மற்றும் அதன் பின்னணியில் உள்ள காரணத்தைப் பற்றி இன்னும் தெளிவான புரிதலைப் பெற, சிங்கப்பூரில் உள்ள அசாதிசா என்றழைக்கப்படும் மார்க்க அறிஞர்களுடன் உரையாட பரிந்துரைக்கப்படுகிறது.

## மனிதனின் சிந்தனைத் திறனின் எல்லைகள்

மார்க்க ஞானத்தைப் பெற மனிதனின் அறிவாற்றல் மிகவும் திறன் வாய்ந்ததாக இருந்தாலும் அது ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இஸ்லாத்தில் ஒரு செயலோ பொருளோ ஏன் தடைசெய்யப்பட்டுள்ளது என்பதைத் துல்லியமாக அறிவதில் சவால்கள் இருக்கலாம்.

எனவே, மனித மனதின் வரம்புகளை நாம் ஒப்புக்கொள்வதும், அல்லாஹ்வின் உயர்ந்த ஞானத்தையும் முழுமையான அறிவையும் ஒப்புக்கொள்வதும் முக்கியம். மேலும், ‘இஸ்லாம்’ என்பது அல்லாஹ்வின் விருப்பத்திற்கும் சக்திக்கும் அடிபணிவதைக் குறிக்கிறது. அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு அடிபணிந்தும் அவன் தடை செய்வததிலிருந்து விலகி இருக்கவும் எல்லாம் வல்ல அல்லாஹ்-விடம் பிரார்த்திப்போம்.

## சுருக்கம்

- இஸ்லாத்தின் கோட்பாடுகள் திருக்குர்ஆன் மற்றும் சுன்னாவிலிருந்து நபி (ஸல்) அவர்களின் மரபுகள்) பெறப்பட்டவை
- இஸ்லாத்தில் ஐந்து முக்கிய கோட்பாட்டு வகைகள் உள்ளன: வாஜிப் (கட்டாயம்), சுன்னாஹ் (பரிந்துரைக்கப்பட்டது), முபாஹ் (நடுநிலையாக அனுமதிக்கப்படுகிறது), மக்ருஹ் (ஊக்கமளிக்கப்பட்டது), மற்றும் ஹராம் (தடைசெய்யப்பட்டது).
- இஸ்லாத்தின் கோட்பாடுகள் பொதுவாக ஐந்து தேவைகளைப் பாதுகாக்க உதவுகின்றன (அல்-குல்லியா அல்-காம்ஸ்): சமயம், அறிவு, வாழ்க்கை, சந்ததி மற்றும் செல்வம்.

# பாகம்-4

# சிங்கப்பூரில் உள்ள இஸ்லாமிய அமைப்புகள்



## இஸ்லாமிய சமய மன்றம்களின் முக்கியத்துவம்

பன்முக சமூகத்தைக் கொண்டதும் உலகின் தலைச்சிறந்த நாடுகளில் ஒன்றாக நிலைத்து நிற்க தொடர்ந்து உழைத்து வருவதுமான சிங்கப்பூர் நாட்டில் உள்ள முஸ்லிம்கள் உட்பட அனைத்து சமூகத்தினரும் ஒற்றுமையாக பாடுபடுவதுடன் வளரும் சுற்றுச்சூழலுக்கு ஏற்ப தங்களைத் தகவமைத்துக்கொள்வது மிகவும் முக்கியமாகும்.

உலகளாவிய சகாப்தத்தை நோக்கி நாம் நகரும் பொழுது சமூகங்கள் மேலும் பன்முகத்தன்மை அடைவதால் பலதரப்பட்ட சவால்கள் மற்றும் இன்னல்களை எதிர்கொள்ள நேர்வது இன்றியமையாதது. அத்தகைய சவால்களைச் சமாளித்து சமூகத்தின் ஒற்றுமைக்கு சரியாக வழிநடத்தி உதவிட ஓர் அமைப்பு தேவையாகின்றது. குறிப்பாக மதச்சார்பற்ற சிங்கப்பூர் நாட்டில் இஸ்லாத்தைப் பற்றிய தெளிவான சிந்தனைகளை எத்தி வைக்கவும் சிறந்த புரிதலைப் பரப்பவும், முஸ்லிம்கள் மற்றும் மாற்று சமய சகோதரர்களுடன் சமூக ஒற்றுமையை ஏற்படுத்தவும் அத்தகைய அமைப்பு அத்தியாவசியமாகின்றது.

இஸ்லாத்தில் தங்களை இணைத்துக்கொண்ட புதிய முஸ்லிம்களுக்கு வழிகாட்டி உதவுவது உட்பட முஸ்லிம் சமூகத்தை வழிநடத்துவதும், இடர்பாடுகளை எளிதாக்குவதும் இஸ்லாமிய அமைப்புகளின் சீரிய பணிகளில் ஒன்று.

இஸ்லாமிய சமய மன்றம் (மூயிஸ்), சிங்கப்பூர் புதிய முஸ்லிம்களின் சங்கம் (தாருல் அர்காம்) மற்றும் முழுநேர மார்க்க பள்ளிகள் (மத்ரஸாக்கள்) போன்ற இஸ்லாமிய அமைப்புகள் தீவிரமாக செயல்பட்டுவருகின்றன. இந்த பாகத்தில், சிங்கப்பூரின் முஸ்லிம் சமுதாயத்தில் உள்ள பல்வேறு அமைப்புகளைப் பற்றி சற்று ஆராய்வோம்.

## இஸ்லாமிய சமய மன்றம் (மூயிஸ்)

நமது பன்முகத்தன்மை வாய்ந்த சமூகத்தில் முஸ்லிம் சமூகம் மட்டுமல்லாமல் அனைத்து சமயங்களின் நீதமான பங்களிப்பின் தாக்கத்தை அரசாங்கம் அங்கீகரித்து ஆதரிக்கிறது. இஸ்லாமிய சமய மன்றம் என்றும் அழைக்கப்படும் மஜ்லிஸ் உகாமா இஸ்லாம் சிங்கபுரா (மூயிஸ்) நாட்டின் அனைத்து முஸ்லிம் விவகாரங்களையும் மேற்பார்வையிடும் முக்கிய அமைப்பாகும்.

முஸ்லிம் நிர்வாகச் சட்டம் (AMLA) 1968 இல் நடைமுறைக்கு வந்தபோது மூயிஸ் ஒரு சட்டப்பூர்வ அமைப்பாக நிறுவப்பட்டது. சிங்கப்பூர் கலாச்சாரம், தொடர்பு மற்றும் இளையர்துறை அமைச்சகத்தின் (MCCY) சட்ட வாரியமாக செயல்பட்டு வரும் மூயிஸ் இஸ்லாம் தொடர்பான விஷயங்களில் சிங்கப்பூர் அதிபருக்கு ஆலோசனை வழங்கும்.

சிங்கப்பூரின் குடியரசு தலைவரால் நியமிக்கப்படும் உறுப்பினர்களைக் கொண்ட சபையால் மூயிஸ் வழிநடத்தப்பட்டு வருகின்றது. மார்க்க வழிமுறைகளை நெறிப்படுத்துவதும் சிங்கப்பூர் முஸ்லிம் அடையாளத்தை வரையறைப்பதும் மூயிஸ்-இன் பிரதான பணியாகும்.[3]

### MCCY

**கலாச்சாரம், தகவல் தொடர்பு மற்றும் இளையர்துறை அமைச்சகம் (MCCY) சிங்கப்பூரர்களை கலை மற்றும் விளையாட்டுகள் மூலம் ஊக்கப்படுத்தவும், சமூக உறவுகளை வலுப்படுத்தவும், இயலாத மக்களுக்கு உதவுவதற்கும் முயல்கிறது.**

## மூயிஸ் சபை

**மூவிஸ் சபை என்பது கொள்கைகள் மற்றும் செயல் திட்டங்களை உருவாக்குவதற்கு இறுதி முடிவெடுக்கும் ஆற்றல் வாய்ந்த அமைப்பாகும். இந்த சபையின் தலைவர் (சிங்கப்பூர் முஃப்தி), தலைமை நிர்வாகி மற்றும் உறுப்பினர்கள் முஸ்லிம் அமைப்புகளால் பரிந்துரைக்கப்பட்டு முஸ்லிம் விவகாரங்களுக்கான அமைச்சரால் நியமிக்கப்படுகிறார்கள்.**



[3] மூலாதாரம் 19 நவம்பர்2018 https://www.muis.gov.sg/About-MUIS/History

## மூயிஸ்-இன் பொறுப்புகள் மற்றும் செயல்பாடுகள்

முஸ்லிம் சமுதாயத்தின் சிறப்பான முன்னேற்றத்திற்காக மற்ற முஸ்லிம் அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றுவதற்கு அப்பால் சமூகத்தின் மார்க்க பணிகள் மற்றும் கல்விப் பணிகளில் மூயிஸ்-இன் பங்கு அளப்பறியது.

### மார்க்கம்

**ஹஜ் மேலாண்மை**

சிங்கப்பூரில் ஹஜ் யாத்திரை செல்வதை நிர்வகிப்பதற்கு மூயிஸ் பொறுப்பாகும். ஹஜ் யாத்ரீகர்கள் அல்லது எதிர்காலத்தில் ஹஜ் செல்ல விரும்பும் யாத்ரீகர்களுக்கு சரியான மற்றும் சிறப்பான செயல்முறைகள் இருப்பதை உறுதி செய்வதும் மூயிஸ் பொறுப்பாகும்.

**ஹலால் சான்றிதழ்**

சிங்கப்பூரில் ஹலால் சான்றிதழை ஒழுங்குபடுத்தும் அதிகாரம் படைத்த அமைப்பு எனும் வகையில், சிங்கப்பூரின் உணவு நிறுவனங்கள் மற்றும் உணவுப் பொருட்களின் ஹலால் சான்றிதழுக்கும் மூயிஸ் பொறுப்பாகும் தன்னிடம் வரும் ஒவ்வொரு ஹலால் சான்றிதழுக்கான விண்ணப்பங்களையும் நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகளுக்குள் வழிகாட்டுதல்களின் அடிப்படையில் பின்பற்றப்படுகின்றதா என்று ஆராய்ந்து மூயிஸ் மதிப்பிடுகிறது.

**நன்கொடைகள் (வகா:ஃப்) மேலாண்மை**

வகா:ஃப் தொடர்பான அனைத்தையும் மூயிஸ் நிர்வகிக்கிறது. மேலும் வகா:ஃப் சொத்துக்களை விற்பனை செய்வதற்கும் மேம்படுத்துவதற்கும் மூயிஸ்-கு அதிகாரம் உள்ளது.

**ஜகாத் பகிர்ந்தளித்தல்**

ஜகாத் திரட்டுதலுக்கும் ஏழைகளுக்கு மீண்டும் விநியோகம் செய்வதலுக்கும் மூயிஸ் அமைப்பே பொறுப்பாகும். மேலும், ரமழான் மாத வெகுமதி மற்றும் ஆண்டு இறுதி மானியம் போன்ற மானியங்கள் மூலம் தேவைப்படுபவர்களுக்கு மூயிஸ் நிதி உதவியும் வழங்குகிறது.

### கல்வி

**மார்க்க கல்வி**

சிங்கப்பூரில் உள்ள அனைத்து மதரஸாக்கள் மற்றும் இஸ்லாமியக் கல்வியின் நிர்வாகத்திற்கு மூயிஸ் அமைப்பே பொறுப்பாகும். அதன் திட்டமிடல் மூலம், சிங்கப்பூரின் இஸ்லாமியக் கல்வி துறையானது பல்வேறு நிலைகளில் உள்ள இஸ்லாமியக் கல்வி கற்பவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதை உறுதி செய்கிறது.

## சமூகம்

### பள்ளிவாசல் கட்டிடம்

சிங்கப்பூரில் பள்ளிவாசல்களின் கட்டுமானங்களையும் சமூகத்தில் இஸ்லாத்தைப் பற்றிய புரிதலை மேம்படுத்துவதும் மூயிஸ் ஏற்றுக்கொண்டுள்ள பணிகளில் ஒன்றாகும். மூயிஸ்-ன் கட்டுப்பாட்டுக்குள் வரும் "பள்ளிவாசல்களின் கட்டுமானம் மற்றும் மெண்டகி நிதி (MUIS) எனும் நிதித் திட்டத்தைக் கொண்டு புதிய மசூதிகளைக் கட்டுவது பழையவற்றை மேம்படுத்துவது, மேலும் மார்க்க கல்வி பயிற்றுவிப்பது போன்றவை மேற்கொள்ளப்படுகின்றது.

### பருவகால நிகழ்ச்சிகள்

இஸ்லாமிய சமூகத்திற்குள் மக்களின் ஒருங்கிணைப்பை ஊக்குவிக்க பருவகால திட்டங்கள் மூயிஸ்-ஆல் நடத்தபடுகின்றது. உதாரணமாக, ரமழான் மாதத்தில், பள்ளிவாசல்களில் இஃப்த்தார் விருந்தில், பல்வேறு தரப்பிலான இஸ்லாமியர்கள் மற்றும் மாற்று சமூகத்தவரும் கூட கலந்துக்கொள்ளும் வகையில் ஏற்பாடு செய்யப்படுகின்றது.

### சர்வ-சமய குழுக்கள்

சிங்கப்பூரில் சமய நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்காக பள்ளிவாசல்களின் தலைவர்கள் க்ராஸ் ரூட் அமைப்புகள், குடிமக்கள் ஆலோசனைக் குழுக்கள் (சிசிசி) மற்றும் சர்வ-சமய நம்பிக்கைக் குழுக்கள் (ஐஆர்சிசி) ஆகியவற்றுடன் இணைந்து பணியாற்றுகின்றனர்.

## மூயிஸ்-இன் செயல்பாடுகளில் குறிப்பிட்ட சில:

* இஸ்லாம் மற்றும் முஸ்லிம்கள் தொடர்பான விஷயங்களில் சிங்கப்பூர் அதிபருக்கு ஆலோசனை வழங்குதல்

* ஹஜ் பயண மேலாண்மை, ஹலால் சான்றிதழ் உட்பட சிங்கப்பூரில் இஸ்லாம் மற்றும் முஸ்லிம்கள் தொடர்பான விஷயங்களை நிர்வகித்தல்

* சட்ட திட்டங்களுக்கு உட்பட்ட அறக்கட்டளையின் கீழ் அனைத்து முஸ்லிம் நன்கொடைகள் மற்றும் நிதிகளை நிர்வகித்தல்

* சமய மேம்பாட்டிற்காக ஜகாத் ஃபித்ரா மற்றும் பிற நிதி பங்களிப்புகளைச் சேகரித்து AMLA-வின் படி முஸ்லிம்களின் நலனுக்காக நிர்வகித்தல்

* சிங்கப்பூரில் உள்ள அனைத்து பள்ளிவாசல்கள் மற்றும் சமயம் சார்ந்த கற்பித்தல் நிலையங்களை நிர்வகிப்பது

* மஜ்லிஸ் (MUIS)-க்கு வழங்கப்பட்டுள்ள AMLA மற்றும் சட்டத்திற்குட்பட்ட மற்ற செயப்பாடுகளை நிறைவேற்றுதல்

[4] 19 நவம்பர் 2018 https://sso.agc.gov.sg/Act/AMLA1966




## ஃபத்வா என்பது என்ன?

ஃபத்வா, அல்லது இஸ்லாமிய சட்டத் தீர்ப்பு, என்பது ஒரு இஸ்லாமிய சமயத் தலைவரால் வழங்கப்பட்ட சட்டக் கருத்து அல்லது ஆணையாகும். சிங்கப்பூரில், மூயிஸ்-இன் கீழ் உள்ள முஃப்தியின் அலுவலகம், ஃபத்வா குழுவின் செயலகமாக செயல்படுகிறது. சமூகத்தில் நிலவும் அழுத்தமான பிரச்சினைகளைக் கையாள்வதில் முஸ்லிம்களுக்கு இலகுவாக இருக்கும் ஃபத்வாக்களை இக்குழுவின் பொறுப்பாகும்.

சில சந்தர்ப்பங்களில், ஃபத்வாக்கள் பற்றிய விவாதத்திற்கு நிபுணர்கள் அழைக்கப்படலாம். உதாரணமாக, ஃபத்வா கமிட்டி, தங்கள் நிபுணத்துவத்தைக் கொண்டு பங்களிக்க விஞ்ஞானிகள் மற்றும் வழக்கறிஞர்களை அழைத்தது, இது ஃபத்வா முடிவெடுக்கும் செயல்முறையை இலகுவாக்க பெரிதும் உதவியது.[5]

சிங்கப்பூரில், பல்வேறு விஷயங்களில் ஃபத்வா கொடுக்கப்படுகிறது. இஸ்லாமிய நம்பிக்கை (அகிதா), எடுத்துக்காட்டாக, பொய்யான மதக் குழுக்களின் போதனைகளைப் பற்றி முஸ்லிம்களை எச்சரிக்க ஃபத்வாக்கள் உள்ளன. நிதி மற்றும் நிலம் தொடர்பான மற்றும் மத்திய வருங்கால வைப்பு நிதி (CPF)[6] தொடர்பான விஷயங்களைத் தீர்க்க ஃபத்வாக்கள் உள்ளன. உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்கான காத்திருப்பு நேரத்தைக் குறைக்க வேண்டிய அவசியம் மற்றும் குறைமாத குழந்தைகளைக் காப்பாற்ற சிங்கப்பூரில் பால் வங்கியை அமைக்க வேண்டிய அவசியம் போன்ற குறிப்பிட்ட தேசிய பிரச்சினைகளுக்காகவும் ஃபத்வாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

---

[5] 23 அக்டோபர் 2018 https://www.muis.gov.sg/officeofthemufti/Fatwa

[6] CPF (மத்திய வருங்கால வைப்பு நிதி) என்பது முதலாளிகள் மற்றும் ஊழியர்களின் பங்களிப்புகளால் நிதியளிக்கப்படும் ஒரு கட்டாய சமூகப் பாதுகாப்பு சேமிப்புத் திட்டமாகும், மேலும் இது சிங்கப்பூரின் சமூகப் பாதுகாப்பு அமைப்பின் முக்கிய தூணாகும், இது நமது ஓய்வூதியம், வீடு மற்றும் சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவுகிறது.




## சிங்கப்பூரின் ஃபத்வா மற்ற நாடுகளிலுருந்து எவ்வாறு மாறுபடுகின்றது?

சிங்கப்பூர் மற்றும் பிற நாடுகளில் வழங்கப்பட்ட ஃபத்வாக்களை ஆய்வு செய்யும் போது, தீர்ப்புகளில் வேறுபாடுகள் இருப்பதைக் காணலாம். இந்த வேறுபாடுகள், குறிப்பாக, ஃபத்வா வழங்கப்படும் நாட்டின் சூழலில் உள்ள வேறுபாடுகளே காரணமாகும். காலம், இடம், சூழல், நடைமுறைகள், அறிவியல் மற்றும் பொது ஏற்றுக்கொள்ளல் போன்ற சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப தீர்ப்புகள் மாறும் என்ற சட்டப்பூர்வ கோட்பாட்டின் அடிப்படையில் இது அமைந்துள்ளது.

எந்த இரண்டு சமூகங்களும் ஒரே மாதிரியான பிரச்சினைகளை எதிர்கொள்வதில்லை என்பதால், மற்ற நாடுகளில் உள்ள ஃபத்வா தீர்ப்புகளுடன் ஒப்பிடாமல் முஸ்லிம்கள் தங்கள் சொந்த நாட்டில் உள்ள ஃபத்வா தீர்ப்புகளைப் பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். உலகப் பிரஜைகள் தாங்கள் வாழும் நாட்டின் ஆட்சியை எவ்வாறு மதிக்க வேண்டுமோ அதேபோன்று, நாட்டின் அங்கீகரிக்கப்பட்ட இஸ்லாமிய அமைப்புகள் வழங்கும் இஸ்லாமிய அறிவுரைகளையும் வழிகாட்டல்களையும் முஸ்லிம்கள் மதிக்க வேண்டும்.

# சிங்கப்பூர் புதிய முஸ்லிம்களின் சங்கம்

## (DARUL ARQAM SINGAPORE)

புதிய முஸ்லிம்களின் நலன் மற்றும் சமய வழிகாட்டுதல்களை வழங்குவதன் மூலம் அவர்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்துடன் 1979 ஆம் ஆண்டு சிங்கப்பூர் புதிய முஸ்லிம்களின் சங்கம் (MCAS) உருவாக்கப்பட்டது. அன்றிலிருந்து புதிய முஸ்லிம்கள் ஒன்றிணைந்து, சமூகத்திற்குள் சகோதர, சமய மற்றும் சமூக உறவுகளை வளர்க்கும் இடமாக MCAS மாறியுள்ளது.

### MCAS -ல் வழங்கும் சேவைகள்

MCAS உள்ளூர்வாசிகள், வெளிநாட்டினர், புதிய முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிம் அல்லாதவர்கள் என அனைவரும் – இஸ்லாத்தைத் தழுவுவதற்கும் ஆங்கிலத்தில் இஸ்லாத்தைப் பற்றி மேலும் அறியவும் ஓர் ஆகச்சிறந்த இடமாகும். இது கற்றல், கலந்துரையாடல் மற்றும் ஆன்மீக முன்னேற்றத்திற்கு உகந்த ஒரு துடிப்பான சூழலை வழங்குகிறது.

### MCAS பணிகள் பின்வருமாறு:[7]

* மார்க்க வழிகாட்டுதல் மற்றும் உறுப்பினர்களுக்கு தேவையான உதவிகளை வழங்குதல்;
* மார்க்கம் தொடர்பான இலக்கியம் மற்றும் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தல், இஸ்லாமிய கட்டுரைகள் மற்றும் இலக்கியங்களை வெளியிடுதல்;
* சமூக நலச்சேவைகளில் ஈடுபடுதல், புதிய முஸ்லிம்களுக்கான அடையாள அட்டை வழங்குதல், சுன்னத் அறுவை சிகிச்சை மற்றும் தேசிய அடையாள அட்டையில் முஸ்லிம் பெயர் சேர்ப்பது போன்றவற்றிக்கான கட்டணங்களைத் திரும்ப செலுத்துதல்; மற்றும்
* சிங்கப்பூரில் வசிக்கும் அனைத்து புதிய முஸ்லிம்களின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவது.

### இஸ்லாத்தை அறிவோம்
### Knowing Islam Session (KIS)

புதிய முஸ்லிம்கள் மார்க்கத்தை எளிதாக அறியவும், கற்கவும் MCAS-ல் இஸ்லாத்தை அறிவோம் (KIS) எனும் வகுப்புகள் நடைபெறுகின்றது, இதில் பங்கேற்க எவ்வித முன்பதிவும் தேவையில்லை. இந்த வகுப்பில் இறைவனின் ஏகத்துவம், நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் முந்தைய நபிமார்கள் மற்றும் புழக்கத்தில் உள்ள மார்க்கம் தொடர்பான வார்த்தைகள் ஆகியவை கற்றுக்கொடுக்கப்படுகின்றது.

### இஸ்லாம் பற்றிய தொடக்க நிலை வகுப்புகள்
### Beginners' Course on Islam (BCI)

மேலே குறிப்பிட்டுள்ள KIS-இல் கலந்துகொண்ட பின்னர், இஸ்லாமிய நம்பிக்கை முறைகள் மற்றும் முஸ்லிமின் வாழ்க்கையின் சாராம்சத்தை உள்ளடக்கிய இஸ்லாம் பற்றிய தொடக்க நிலை வகுப்பில் (BCI) கலந்து கொள்ளலாம். புதிய முஸ்லிம்கள் இஸ்லாத்தில் உள்ள முக்கிய நடைமுறைகள் மற்றும் அந்த நடைமுறைகளுக்குப் பின்னால் உள்ள காரணங்கள் ஆகியவற்றைப் பற்றிய அடிப்படைகளைக் கற்கும் வகையில் MCAS பல வகுப்புகளை நடத்துகின்றது. இவ்வகுப்புகளுக்கான பதிவு பொதுவாக வகுப்பு தொடங்குவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு திறக்கப்படும்.

### MCAS நண்பர்கள்

MCAS-இன் நண்பர்கள் திட்டமானது (Befriending Scheme) இஸ்லாத்தைத் தழுவ ஆர்வமுள்ளவர்களுக்கு உதவியளிக்கின்றது. புதிய முஸ்லிம்கள் செயற்பாடுகள், திட்டங்கள் மற்றும் சமூக பங்களிப்புகள் மூலம் சமூகத்துடன் ஒரு முஸ்லிமாக இணைவதற்கு உதவுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

---

[7] 19 நவம்பர் 2018 http://www.darul-arqam.org.sg/corporate/




## உங்களுக்கு தெரியுமா?

‘தாருல் அர்காம் சிங்கப்பூர்" என்றும் அழைக்கப்படும் MCAS, மக்காவில் முஹம்மது நபி (ஸல்) அவர்களது நபித்துவத்தின் முதல் மூன்று ஆண்டுகளில் மார்க்கத்தை ஏற்ற அர்காம் அல்லது அபூ அப்துல்லா அர்காம் பின் அபி அல்-அர்காம் என்பவரை கௌரவிக்கும் பொருட்டு அவரது பெயர் சூட்டப்பட்டுள்ளது. அவர் இஸ்லாத்தை அனைவருக்கும் கற்பிக்கவும், ஓரிறைக் கொள்கையைப் பரப்பவும் தன் வீட்டைப் பயன்படுத்த அனுமதித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.








## சிங்கப்பூரில் இஸ்லாமிய கல்வி

சிங்கப்பூரில் உள்ள பெரும்பாலான முஸ்லிம் குடும்பங்களில் இஸ்லாத்தைக் கற்றுக்கொள்வதென்பது கடமையாகக் கருத்தப்படுகின்றது. இங்கே சிங்கப்பூரில், கீழே தொகுக்கப்பட்டுள்ள ஆறு மதரஸாக்கள் எனப்படும் முழுநேர தனியார் இஸ்லாமிய கல்வி நிறுவனங்கள் உள்ளன, அவை ஆரம்ப நிலை முதல் பல்கலைக்கழகத்திற்கு முந்தைய மேல்நிலை வரை வழக்கமான உலக கல்வியுடன் மார்க்க கல்வியையும் வழங்குகின்றன. மத்ரஸா அல்-அரபியா அல்-இஸ்லாமியா, மத்ரஸா அல்-மாரிஃப் அல்-இஸ்லாமியா, மத்ரஸா அல்ஜுனித் அல்-இஸ்லாமியா, மதரஸா அல்சகோஃப் அல்-அரபியா, மதரஸா இர்ஷாத் ஜுஹ்ரி அல்-இஸ்லாமியா மற்றும் மத்ரஸா வாக் தஞ்சோங் அல்-இஸ்.

பொதுவாக, மதரஸாக்களில் உள்ள மதச்சார்பற்ற பாடங்கள் மற்றும் பாடத்திட்டங்கள் சிங்கப்பூரில் உள்ள வேறு மற்ற தேசியப் பள்ளிகளில் உள்ளதைப் போலவே இருக்கும். மற்ற மதச்சார்பற்ற பள்ளிகளில் உள்ள மாணவர்களைப் போலவே, முழுநேர மதரஸா மாணவர்களும் தங்கள் ஆரம்பநிலை, இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வியின் முடிவில் PSLE, 'O' நிலை மற்றும் 'A' நிலை போன்ற தேசிய தேர்வுகளிலும் பங்கேற்கலாம்.

மதரஸாக்களில் சமயம் தொடர்பான பாடங்கள் உட்பட பாடத்திட்டங்கள் அனைத்தும் மூயிஸ்-ஆல் நிர்ணயிக்கப்படுகின்றது. மதரஸா இர்ஷாத் ஜுஹ்ரி அல்-இஸ்லாமியா ஆரம்பப்பள்ளியில் சமயம் தொடர்பான பாடங்கள் ஆங்கிலத்தில் கற்பிக்கப்படும், மற்ற மதரஸாக்களில் அரபிய மொழி அல்லது மலாய் மொழியில் கற்பிக்கப்படும்.

## பகுதி நேர மதரஸாக்கள்/ இஸ்லாமிய கல்வி நிறுவனங்கள்

முழுநேர மதரஸாக்களைத் தவிர, முஸ்லிம்கள் இஸ்லாமியக் கல்வி நிலையங்கள் வழங்கும் பகுதி நேர வகுப்புகளிலும் சேரலாம்.

சிங்கப்பூரில் பெர்காஸ், முஹம்மதியா, பெர்தொஸ், அல்-ஜுஹ்ரி மற்றும் MCAS போன்ற தலைச்சிறந்த அமைப்புகள் உட்பட 27-கும் மேற்பட்ட பகுதி நேர மதரஸாக்களுக்கு பகுதி நேர இஸ்லாமியக் கல்வியை வழங்கும் நிலையங்கள் உள்ளன.

பகுதி நேர இஸ்லாமியக் கல்வியின் தரம் முழு நேர கல்வி பிரிவை விட சற்றும் குறையாமல் உள்ளது. மேலும் குறிப்பாக aLIVE (Learning Islamic Values Everyday) மற்றும் ADIL (Adult Islamic Learning) போன்ற வகுப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டதற்கு பெரும் வரவேற்புள்ளது.





## கூட்டு மதரஸா முறை THE JOINT MADRASAH SYSTEM (JMS)

மதரஸாக்களின் கல்வி சமகாலத்திற்கு ஏற்றதாக இருப்பதை உறுதிசெய்யவும், மாணவர்களுக்கு முற்போக்கான கல்வி அனுபவத்தை வழங்கவும், மூயிஸ் தங்கள் பாடத்திட்டங்களின் தரம் குறையாமல் மதரஸா கல்வியைத் தொடர்ந்து வலுப்படுத்துவதற்கான முயற்சிகளையும் எடுத்துவருகின்றது.

உதாரணமாக, கூட்டு மதரஸா அமைப்பு (Joint Madrasah System - JMS) செயல்படுத்தப்பட்டு, மதரஸா கல்வியின் தரத்தை மேலும் மேம்படுத்தும் வகையில் மதரஸா இர்ஷாத் ஜூஹ்ரி, மதரஸா அல்ஜுனிட் மற்றும் மத்ரஸா அல்-அரேபியா ஆகிய மூன்று மதரஸாக்களும் சமூக நலனுக்கான பங்களிப்புடன் கூடிய பாடத்திட்டத்தினை வலியுறுத்துகின்றன. நவீன சிங்கப்பூர் சமூக சூழலில் தங்கள் சமய நம்பிக்கையை வெற்றிகரமாகப் பயன்படுத்தக்கூடிய முற்போக்கான புதிய தலைமுறையை உருவாக்க JMS உதவும்.

## இஸ்லாமிய சமூகத்தில் மார்க்க கல்விமுறையின் பங்கு

சிங்கப்பூரில் முழுநேர மற்றும் பகுதிநேர இஸ்லாமியக் கல்வி நிறுவனங்கள், சிங்கப்பூர் முஸ்லிம்கள் தங்களின் சமூகம் மற்றும் மார்க்க கண்ணோட்டங்களில் தெளிவுற கற்கவும், ஆராயவும் ஊக்குவிப்பதாக அமைக்கப்பட்டுள்ளது. நன்கு கட்டமைக்கப்பட்ட இஸ்லாமியக் கல்வி முறையானது சமூகத்தை உள்ளடக்கி ஆழமான கருத்துகளுக்கு தெளிவான புரிதலுடன் இருக்க உதவுகிறது. இது அறிவார்ந்த முஸ்லிம்களின் சமூகம் உருவாக வழிவகுக்கும்.

சமூகத்தின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாதது கல்வி. இங்குள்ள மதரஸாக்களை முஸ்லிம் சமூகத்தின் ஒரு அங்கமாக ஆக்குவதன் மூலம் சிங்கப்பூரில் உள்ள முஸ்லிம்கள் தங்கள் எதிர்கால சந்ததியினருக்கு ஆக்கபூர்வமான இஸ்லாமிய நெறிகளைத் தொடர்ந்து வழங்க முடியும். அவர்களும் சமூக நலன் மற்றும் முன்னேற்றத்தில் பெரும் பங்காற்றக்கூடும்.

## சுருக்கம்

- சிங்கப்பூர் முஸ்லிம் சமூகத்தைப் பரந்த பன்முக சமூகத்துடன் எளிதாக ஒருங்கிணைப்பது சிங்கப்பூரில் உள்ள இஸ்லாமிய அமைப்புகளின் குறிப்பிடத்தக்க முக்கிய பணியாகும்.
- முஸ்லிம்கள் தொடர்பான சமயம், சமூகம் மற்றும் கல்வி ஆகிய துறைகளை மூயிஸ் மேற்பார்வையிட்டு ஒழுங்குபடுத்தும். ஹஜ் மேலாண்மை, ஹலால் சான்றிதழ், வகாஃப் மேலாண்மை, ஜகாத் வசூல், சிங்கப்பூரில் மசூதி கட்டிடங்கள், சிங்கப்பூரில் உள்ள மதரஸாக்கள் மற்றும் இஸ்லாமிய கல்வி நிறுவனங்களின் நிர்வாக மேலாண்மை உள்ளிட்டவைகளையும் மூயிஸ் நிர்வகிக்கும்.
- ஃபத்வாக்கள் சமூகத்தில் நிலவும் முக்கிய பிரச்சினைகளை முஸ்லிம்கள் எளிதாக கையாள உதவும். முஸ்லிம்கள் தாங்கள் வாழும் நாட்டில் மார்க்க அறிஞர்களால் அறிவிக்கப்பட்ட ஃபத்வாக்களைப் பின்பற்ற வேண்டும், ஏனெனில் ஃபத்வாக்கள் அவர்கள் வாழும் நாட்டின் தனித்துவமான சூழல், சூழ்நிலைகள் மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவற்றைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகின்றது.
- புதிய முஸ்லிகள் அமைப்பு என்பது புதிதாக மார்க்கத்தை ஏற்றவர்களின் நலனைக் கவனிக்கும் ஒரு அமைப்பாகும். இது சிங்கப்பூரில் வசிக்கும் அனைத்து புதிய முஸ்லிம்களின் நலனைப் பிரதிநிதித்துவப்படுத்துவதோடு முஸ்லிம் சமூகத்தின் புதிய உறுப்பினராக அவர்கள் எதிர்கொள்ளக்கூடிய சவால்களுக்கு மார்க்கரீதியான வழிகாட்டுதலையும் வழங்குகிறது.
- சிங்கப்பூரில் மதரஸாக்கள் எனப்படும் ஆறு முழுநேர தனியார் இஸ்லாமிய கல்வி நிறுவனங்கள் உள்ளன. முழுநேர மதரஸாக்களைத் தவிர, பகுதி நேர இஸ்லாமிய கல்வி நிறுவனங்கள் மற்றும் குறுகிய/ நீண்ட கால மார்க்க படிப்புகளை வழங்கும் கல்வி நிறுவனங்களில் இணைவதற்கும் சிங்கப்பூர் முஸ்லிம்களுக்கு வாய்ப்பு உள்ளது.

## பாகம்-5

# சிங்கப்பூர் ஷரிஆ மன்றம்



## இஸ்லாமிய சட்டம்

சுமார் 1400 ஆண்டுகளுக்கு முன்பு வெளிப்படுத்தப்பட்ட இஸ்லாமிய மார்க்கம் இடம், பொருள் மற்றும் காலம் கடந்து மனிதகுலத்திற்கு பொருந்தும் வகையிலான முழுமையான வாழ்க்கை முறையை உள்ளடக்கியுள்ளது. அல்லாஹ்விடமிருந்து வந்த இறைவெளிப்படு மற்றும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனைகள் ஒன்றிணைந்து, எந்தவொரு கலாச்சாரம் மற்றும் பண்பாட்டு எல்லைக்குட்படாமல் பூலோகவாசிகளின் அன்றாட வாழ்வில் நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்ற சட்ட நெறிமுறைகளையும் கொண்டுள்ளது. மார்க்கத்தைப் பின்பற்றும் முஸ்லிம்களாகிய நாம், மனித இனத்தை உள்ளடக்கிய இப்பிரபஞ்சத்தைப் படைத்தவன் அல்லாஹ் ஒருவனே என்று நம்புகிறோம். எனவே, நம் வாழ்க்கையை மேம்படுத்த மிகவும் பொருத்தமான அமைப்புகளைப் பற்றி நன்கு அறிந்த படைப்பாளனைத் தவிர வேறு யாரும் இல்லை. திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ளபடி:

أَلَا يَعْلَمُ مَنْ خَلَقَ وَهُوَ اللَّطِيفُ الْخَبِيرُ ﴿١٤﴾

“(அனைத்தையும்) படைத்தவன் அறிய மாட்டானா? அவன் நுணுக்கமாக கவனிப்பவன்; யாவற்றையும் நன்கு தெரிந்தவன்.” – திருக்குர்'ஆன் (67:14)

## இஸ்லாத்தில் ஷரிஆ

ஷரிஆ எனும் வார்த்தையின் அர்த்தம் ‘நீர்ப்பாசனம் செய்யும் இடத்திற்கு செல்லும் பாதை. அதாவது, இம்மையிலும் மறுமையிலும் வழிகாட்டுதலைப் பெறுவதற்கு ஓரிறை நம்பிக்கையாளர் பின்பற்றி நடக்க வேண்டிய நேரான பாதை. ஷரிஆ என்பது இஸ்லாத்தின் நியமிக்கப்பட்ட சட்டமாக வரையறுக்கப்படுகிறது, இது இம்மையிலும் மறுமையிலும் மனிதர்கள் பின்பற்றி நடக்க வேண்டிய இறைக்கட்டளைகள், வழிகாட்டல்கள், கொள்கைகளை மற்றும் விலகி இருக்க வேண்டிய செயல்கள் ஆகியவைகளை உள்ளடக்கியது.

ஷரிஆ சட்டங்கள் பின்வருபவற்றை முதன்மை ஆதாரங்களாகக் கொண்டுள்ளன:

* திருக்குர்'ஆன்
* சுன்னாஹ் எனப்படும் முஹம்மது நபி(ஸல்) அவர்களின் வார்த்தைகள் மற்றும் முன்மாதிரியான நடத்தை

ஷரிஆ எனும் வார்த்தைத் திருக்குர்ஆனில் பின்வரும் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது:

ثُمَّ جَعَلْنَاكَ عَلَىٰ شَرِيعَةٍ مِّنَ الْأَمْرِ فَاتَّبِعْهَا
وَلَا تَتَّبِعْ أَهْوَاءَ الَّذِينَ لَا يَعْلَمُونَ ﴿١٨﴾

“இதன் பின்னர் உம்மை ஷரீ அத்தில் (மார்க்கத்தில்) ஒரு நேரான வழியில் நாம் ஆக்கியுள்ளோம். ஆகவே நீர் அதனையே பின்பற்றுவீராக; அன்றியும், அறியாமல் இருக்கின்றார்களே அவர்களின் விருப்பங்களைப் பின்பற்றாதீர்.”
– திருக்குர்'ஆன் (45:18)

இஸ்லாம் சமத்துவக் கொள்கையையே வலியுறுத்துகிறது. இஸ்லாமிய சட்டத்தின் பார்வையில் அனைத்து மனிதர்களும் சமம் திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறினான்:

يَا أَيُّهَا النَّاسُ إِنَّا خَلَقْنَاكُم مِّن ذَكَرٍ
وَأُنثَىٰ وَجَعَلْنَاكُمْ شُعُوبًا وَقَبَائِلَ
لِتَعَارَفُوا ۚ إِنَّ أَكْرَمَكُمْ عِندَ اللَّهِ أَتْقَاكُمْ ۚ
إِنَّ اللَّهَ عَلِيمٌ خَبِيرٌ ﴿١٣﴾

மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம்; நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம்; (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன். – திருக்குர்'ஆன் (49:13)

தனிப்பட்ட மற்றும் சமூக பிரச்சனைகளுக்கான தீர்வுகள் உட்பட சீரிய கொள்கைகளையும் சிறந்த நோக்கங்களையும் உள்ளடக்கியது ஷரிஆ.

மக்களுக்கு சமுதாயத்திலும் தனிப்பட்ட வாழ்விலும் ஏற்பட்ட குழப்பங்களால் தீங்கு விளையாமல் பாதுகாப்பதும் நன்மை பயக்கும் படியான வழிகாட்டுதல் வழங்குவதும் ஷரிஆவின் முதன்மை நோக்கமாகும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எப்பொழுதும் சகிப்புத்தன்மையையும் கருணையையும் கடைப்பிடித்தார். திருக்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளபடி:

وَمَا أَرْسَلْنَاكَ إِلَّا رَحْمَةً لِّلْعَالَمِينَ ﴿١٠٧﴾

“(நபியே!) நாம் உம்மை அகிலத்தாருக்கு எல்லாம் ரஹ்மத்தாக – ஓர் அருட் கொடையாகவேயன்றி அனுப்பவில்லை“– திருக்குர்'ஆன் (21:107)

وَمَا أَرْسَلْنَاكَ إِلَّا كَافَّةً لِّلنَّاسِ بَشِيرًا وَنَذِيرًا
وَلَٰكِنَّ أَكْثَرَ النَّاسِ لَا يَعْلَمُونَ ﴿٢٨﴾

“இன்னும், (நபியே!) நாம் உம்மை மனித குலம் முழுமைக்கும் நன்மாராயங் கூறுபவராகவும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவுமே யன்றி (வேறெவ்வாரும்) அனுப்பவில்லை; ஆனால் மனிதர்களில் பெரும்பாலோர் (இதை) அறியமாட்டார்கள்.“– திருக்குர்'ஆன் (34:28)

திருக்குர்ஆனின் இந்த வசனத்திலிருந்து நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரது காலத்து மக்களுக்கு மட்டும் அல்லாமல் மனிதகுலம் அனைவருக்கும் இஸ்லாத்தின் செய்தியை எத்தி வைப்பதற்காக அனுப்பப்பட்டவர் என்பது தெளிவாகின்றது.

## ஷரிஆ மன்றம் நிறுவப்பட்டது

முஸ்லிம்கள் சிறுபான்மையினராக இருக்கும் பல்சமய மக்கள் வாழும் சிங்கப்பூர் நாட்டில் ஷரிஆ மன்றம் நிறுவப்பட்டதன் மூலம் சிறப்பு சட்டங்கள் பயன்படுத்தப்படும் சட்ட பன்மைத்துவத்திற்கு

சிங்கப்பூர் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக திகழ்கின்றது. சிங்கப்பூரில் 1966-ஆம் முஸ்லிம் நிர்வாகச் சட்டம் (AMLA[8]) இயற்றப்பட்டு முஸ்லிம்களின் திருமணம், விவாகரத்து, மற்றும் வாரிசுரிமை தொடர்பாக அனைத்தும் நிர்வகிக்கப்படுகிறது.

முஸ்லிம் குடும்ப குடும்பச் சட்டத்தை நிர்வகிக்கவும் திருமண வாழ்வில் ஏற்படும் பிரச்சனைகளுக்கும் விவாகரத்து வழக்குகளை நிர்வகிக்கவும் ஷரிஆ மன்றம் அதிகாரம் பெற்றுள்ளது.






[8] AMLA பற்றிய கூடுதல் விவரங்களுக்கு பாகம் 4: சிங்கப்பூரில் உள்ள இஸ்லாமிய அமைப்புகள் பகுதியைக் காணவும்.

## நோக்கம்

மக்களுக்கு நம்பிக்கையளிக்கும் நம்பகமான, நியாயமான மற்றும் ஆற்றல்மிக்க நீதிமன்றம்.

## குறிக்கோள்

* திருமண உறவுகளைப் பாதுகாப்பது.
* விவாகரத்துகளை சுமுகமாக தீர்ப்பது.
* நியாயமான தீர்வுகளை வழங்குவது.

## தத்துவம்

விவாகரத்து செய்யும் தரப்பினருக்கு இடையே தீர்வு காணும் அமைப்பாக ஷரிஆ மன்றம் உள்ளது. இது தொடர்பாக, நீதிக்காக உழைப்பதும், அதன் முன் உள்ள வழக்குகளை நியாயமாகவும், திறம்பட நிர்வகிப்பதும் ஷரிஆ மன்றத்தின் தத்துவமாக மாறியுள்ளது. திருக்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது:

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا كُونُوا قَوَّامِينَ بِالْقِسْطِ
شُهَدَاءَ لِلَّهِ وَلَوْ عَلَىٰ أَنفُسِكُمْ أَوِ الْوَالِدَيْنِ
وَالْأَقْرَبِينَ ۚ إِن يَكُنْ غَنِيًّا أَوْ فَقِيرًا فَاللَّهُ
أَوْلَىٰ بِهِمَا ۖ فَلَا تَتَّبِعُوا الْهَوَىٰ أَن تَعْدِلُوا ۚ
وَإِن تَلْوُوا أَوْ تُعْرِضُوا فَإِنَّ اللَّهَ كَانَ بِمَا
تَعْمَلُونَ خَبِيرًا ﴿١٣٥﴾

“முஃமின்களே! நீங்கள் நீதியின்மீது நிலைத்திருப்பவர்களாகவும், உங்களுக்கோ அல்லது (உங்கள்) பெற்றோருக்கோ அல்லது நெருங்கிய உறவினருக்கோ விரோதமாக இருப்பினும் அல்லாஹ்வுக்காகவே சாட்சி கூறுபவர்களாகவும் இருங்கள்; (நீங்கள் யாருக்காக சாட்சியம் கூறுகிறீர்களோ) அவர்கள் செல்வந்தர்களாக இருந்தாலும் ஏழைகளாக இருந்தாலும் (உண்மையான சாட்சியம் கூறுங்கள்); ஏனெனில் அல்லாஹ் அவ்விருவரையும் காப்பதற்கு அருகதையுடையவன்; எனவே நியாயம் வழங்குவதில் மன இச்சையைப் பின்பற்றி விடாதீர்கள்; மேலும் நீங்கள் மாற்றிக் கூறினாலும் அல்லது (சாட்சி கூறுவதைப்) புறக்கணித்தாலும், நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்வதையெல்லாம் நன்கு அறிந்தவனாகவே இருக்கின்றான்."– திருக்குர்'ஆன் (4:135)

## புதிய முஸ்லிமான நான் வித்தியாசமாக நடத்தப்படுவேனா?

தங்களுக்கு ஷரிஆ மன்றம் அநீதி இழைத்துவிடுமோ என்று புதிய முஸ்லிம்களுக்கு பொதுவாக அச்சம் உள்ளது. ஷரிஆ மன்றத்தின் நோக்கம் மற்றும் குறிக்கோளின் படி அனைவருக்கும் சமமான மற்றும் நீதமான உரிமைகள் வழங்கப்படும்.

# ஷரிஆ மன்றம் கையாளும் வழக்குகள்

வழக்கில் தொடர்புடைய அனைத்து தரப்பினரும் முஸ்லிம்களாக இருந்தாலோ அல்லது முஸ்லிம் சட்டத்தின் கீழ் கட்சிகள் திருமணம் செய்திருந்தாலோ மட்டுமே வழக்கைக் கையாளும் அதிகாரம் ஷரிஆ மன்றத்திற்கு உள்ளது. இரு தரப்பினரும் சிங்கப்பூரில் நிரந்தர குடியிருப்பாளர்களாகவோ அல்லது சிங்கப்பூரில் நீண்ட காலமாக குடியிருந்தாலோ ஷரிஆ மன்றம் அதன் அதிகார வரம்பு செயல்படுத்தப்படலாம்.[9]

ஷரிஆ மன்றம் கையாளும் அனைத்து வழக்குகளிலும் இஸ்லாமிய சட்டத்தைப் பயன்படுத்துகிறது. எவ்வாறாயினும், அதன் அதிகார வரம்புகளுக்கு உட்பட்ட பகுதிகள் பின்வருமாரு: திருமணம், விவாகரத்துகள், திருமணத்தின் செல்லுபடியாகும் நிலை, சொத்துக்களை மாற்றுதல் அல்லது பிரித்தல், குழந்தைகளின் பாதுகாப்பு, ஆண்கள் தரவேண்டிய வரதட்சணை (மஹர்), திருமணச் செலவுகள், பராமரிப்பு மற்றும் ஆறுதல் செலவினம் (முத்'ஆ).

## திருமண ஆலோசனைத் திட்டம்

திருமணங்களைக் காப்பாற்றும் முயற்சியில், ஷரிஆ மன்றம் விவாகரத்து பெற விரும்பும் தம்பதிகளுக்கு நியமிக்கப்பட்ட ஆலோசனை நிறுவனத்தில் திருமண ஆலோசனை பெறுவது காட்டாயமாகும்.

தம்பதிகள் தங்கள் திருமணத்தைப் பற்றி விவாதிக்கவும், அவர்களின் திருமணத்தின் எதிர்காலம் குறித்து முடிவுகளை எடுக்கவும் இந்த திட்டம் கட்டாயமாகும். ஆலோசனை அமர்வில் மார்க்க அறிஞரின் உதவிகளையும் அவர்கள் கோரலாம்.



9 மேலும் அறிய பார்க்கவும் 'முஸ்லிம் சட்ட நிர்வாகம்" பகுதி-25 (AMLA).



- ### மத்தியஸ்தம்

கருத்து வேறுபாடுகளைத் தீர்ப்பதில் அமைதியான முறையில் சுமூகமான தீர்வைக் காண இஸ்லாம் கட்டளையிடுகிறது. அத்தகைய இணக்கமான தீர்விற்கு விவாகரத்து உள்ளிட்ட அனைத்திலும் ஷரிஆ மன்றத்தின் உதவியை நாடி அவர்களின் துணையோடு மத்தியஸ்தம் காண முயல்வது கட்டாயமாகும். ஒருவேளை விவாகரத்து பெற எத்தனிக்கும் தம்பதிகளிடம் பரஸ்பர முடிவு ஏற்பட்டால், விவாகரத்து நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அதே நாளில் கூட விசாரிக்கப்படலாம்.

இருதரப்பினரிடையே உடன்பாட்டுக்கு வர முடியாத நிலையிலோ அல்லது ஒரு தரப்பினர் விவாகரத்து செய்ய விரும்பவில்லை என்றாலோ, கணவன் மனைவியிடையே ஆலோசனை வழங்க மார்க்க அறிஞரை நியமிக்கலாம். இது ஹகம் என்றழைக்கப்படும். நியமிக்கப்பட்ட நடுவர், முடிந்தவரை நல்லிணக்கத்தை ஏற்படுத்த முயற்சிப்பார் அல்லது இணக்கமான விவாகரத்துக்கு உதவுவார். சமரசம் சாத்தியமில்லாத பட்சத்தில், விவாகரத்து வழங்கப்பட வேண்டுமா என நடுவர்கள் நீதிமன்றத்தில் அறிக்கை அளிப்பார்கள். இந்த நடுவர் நடைமுறை பின்வரும் குர்ஆன் வசனத்திலிருந்து பெறப்பட்டது:

وَإِنْ خِفْتُمْ شِقَاقَ بَيْنِهِمَا فَابْعَثُوا حَكَمًا مِّنْ أَهْلِهِ
وَحَكَمًا مِّنْ أَهْلِهَا إِن يُرِيدَا إِصْلَاحًا يُوَفِّقِ اللَّهُ
بَيْنَهُمَا ۗ إِنَّ اللَّهَ كَانَ عَلِيمًا خَبِيرًا ﴿٣٥﴾

“(கணவன்-மனைவி ஆகிய) அவ்விருவரிடையே (பிணக்குண்டாகி) பிரிவினை ஏற்பட்டுவிடும் என்று நீங்கள் அஞ்சினால் கணவனின் உறவினர்களிலிருந்து ஒருவரையும் மனைவியின் உறவினர்களிலிருந்து ஒருவரையும் மத்தியஸ்தர்களாக ஏற்படுத்துங்கள்; அவ்விருவரும் சமாதானத்தை விரும்பினால், அல்லாஹ் அவ்விருவரிடையே ஒற்றுமை ஏற்படும் படி செய்துவிடுவான் - நிச்சயமாக அல்லாஹ் நன்கு அறிபவனாகவும், நன்குணர்கிறவனாகவும் இருக்கின்றான். - திருக்குர்'ஆன் (4:35)

- ## வாரிசு சான்றிதழ் வழங்குதல்

சிங்கப்பூரில் வாரிசு சான்றிதழ் வழங்க அதிகாரம் பெற்ற ஒரே நிறுவனம் ஷரிஆ மன்றம் ஆகும். முஸ்லிம் சிங்கப்பூரர்கள் எவரேனும் உயில் எழுதாமல் இயற்கை எய்தினால், அவரது சொத்து இஸ்லாமிய சட்டத்தின்படி பிரித்தளிக்கப்படுகிறது.[10]

இறைவனடி சேர்ந்தவரின் சொத்துக்கு உரிமையுள்ள பயனாளிகள் பற்றி மேலும் அறிய விரும்பும் முஸ்லிம்கள், www.syariahcourt.gov.sg என்ற ஷரிஆ மன்றத்தின் இணையதளத்தில் 'விசாரணைக் கணக்கீட்டு' மூலம் அறியலாம். வாரிசுச் சான்றிதழுக்கான விண்ணப்பம் ஷரிஆ மன்றத்தின் இணையதளத்தில் இலகுவாக விண்ணப்பிக்கலாம்.

## ஷரிஆ மன்றத்தின் உத்தரவை அமல்படுத்துதல்

ஷரிஆ மன்றம் பொதுவாக அதன் உத்தரவுகளைத் தானாக அமல்படுத்த முற்படுவதில்லை. வழக்கில் சம்மந்தப்பட்ட இருவரில் ஒருவர் உத்தரவை நிறைவேற்ற தவறினால், மற்றவர் ஷரிஆ மன்றதிடம் "பிரதிநிதி அதிகாரங்கள் மூலம் உத்தரவைச் செயல்படுத்த விண்ணப்பிக்கலாம். பராமரிப்பு செலவினங்கள் (இத்தா அல்லது முத்'ஆ), சொத்து போன்றவற்றில் ஷரிஆ மன்றத்தின் உத்தரவுகளை மீறப்படும் பொழுது, அவை குடும்ப நீதிமன்றத்தின் மூலம் அமல்படுத்தப்படும்.

10 மேலும் அறிய பார்க்கவும் 'முஸ்லிம் சட்ட நிர்வாகம்" பகுதி-112 (AMLA)




## ஷரிஆ மன்றத்தின் தீர்ப்பில் எனக்கு உடன்பாடு இல்லையென்றால் என்ன செய்வது?

ஷரிஆ மன்றத்தின் தீர்ப்பில் உடன்பாடு இல்லையென்றால், உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் மேல்முறையீட்டு வாரியத்தில் முறையீடு செய்யலாம். ஷரிஆ மன்றம் மற்றும் முஸ்லிம் திருமணப் பதிவேட்டின் தீர்ப்புகளுக்கு எதிரான மேல்முறையீட்டு மனுக்களை மேல்முறையீட்டு வாரியத்தில் விசாரிக்கிறப்படும். இது மூயிஸ்-இன் ஆலோசனையின் பேரில் சிங்கப்பூர் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்ட மாவட்ட நீதிபதிகள், வழக்கறிஞர்கள், சட்ட மற்றும் மத அறிஞர்கள் என மொத்தம் 23 பேர் கொண்ட குழுவைக் கொண்டுள்ளது. மேல்முறையீட்டு வாரியம் அமைக்கப்பட்டுள்ள முகவரி: இஸ்லாமிய சமய மன்றம் (மூயிஸ்), சிங்கப்பூர் இஸ்லாமிய மையம், 273 பிராடெல் சாலை, சிங்கப்பூர் 579702.

## பொதுத்தகவல்

www.syariahcourt.gov.sg

Family Link @ Lengkok Bahru,
8, Lengkok Bahru, #03-01,
Singapore 159052

63548371

MCCY_Syariah@mccy.gov.sg

**திங்கள் முதல் வியாழன் வரை**
காலை 8.30 - மதியம் 1.00
மதியம் 2.00 - மாலை 5.00

**வெள்ளி**
காலை 8.30 - மதியம் 1.00
மதியம் 2.00 - மாலை 4.30

குறிப்பு: ஷரிஆ மன்றத்தின் ஊழியர்கள் சட்ட ஆலோசனை வழங்கவோ ஆவணங்களைப் பூர்த்தி செய்யவோ அனுமதியில்லை. எனவே, சட்ட ஆலோசனையைப் பெற விரும்பினால், இலவச சட்ட நிலையத்தையோ சட்ட உதவிப் பணியகத்தையோ அணுகலாம் அல்லது தனியார் வழக்கறிஞருடன் கலந்தாலோசிக்கலாம்.

## சுருக்கம்

- ஷரிஆ விரிவானது மற்றும் வாழ்வின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியது. முஸ்லிம்கள் கடைப்பிடிக்கவும் வாழவும் இது ஒரு வழிகாட்டியாக விளங்குகிறது.
- மனிதர்களைப் படைத்த அல்லாஹ்வின் அனைத்துக் கட்டளைகளையும் முஸ்லிம்கள் நம்பிக்கையுடன் கடைப்பிடிக்க வேண்டும்
- நமது நலன்களைப் பாதுகாத்து, தீங்குகளைத் தடுத்து, நீதியை நிலைநாட்டுவதன் மூலம் மனிதர்களுக்கு நன்மை செய்வதே ஷரிஆ-வின் நோக்கமாகும்
- சிங்கப்பூரில் உள்ள முஸ்லிம்களுக்கான முஸ்லிம் குடும்பச் சட்டத்தை ஷரிஆ மன்றம் நிர்வகிக்கிறது.
- இஸ்லாமிய சட்டத்தின்படி இறந்த நபரின் சொத்துக்களை பகிர்ந்தளிக்க வாரிசுச் சான்றிதழை வழங்குவதற்கு அதிகாரம் பெற்ற ஒரே நிறுவனம் ஷரிஆ மன்றம் மட்டுமே.

# பாகம்-6

# இஸ்லாத்தில் திருமணம்



## இஸ்லாத்தில் திருமணத்தின் நோக்கம்

திருமணம் மிகவும் ஊக்குவிக்கப்படும் நபிகள் நாயகத்தின் மரபுகளில் ஒன்றாகும். ஒரு ஆணும் பெண்ணும் - தம்பதியினராக ஒருவருக்கொருவர் அன்பையும் பாசத்தையும் வெளிப்படுத்தி, ஆரோக்கியமான குடும்பத்தை உருவாக்க இதுவே சரியான வழிமுறையாகும்.

அன்பு, கருணை மற்றும் அமைதியை இஸ்லாம் திருமணத்தின் அடித்தளமாக வலியுறுத்துகிறது, அல்லாஹ் திருக்குர்ஆனில் குறிப்பிட்டுள்ளபடி:

وَمِنْ آيَاتِهِ أَنْ خَلَقَ لَكُم مِّنْ أَنفُسِكُمْ أَزْوَاجًا لِّتَسْكُنُوا إِلَيْهَا وَجَعَلَ بَيْنَكُم مَّوَدَّةً وَرَحْمَةً ۚ إِنَّ فِي ذَٰلِكَ لَآيَاتٍ لِّقَوْمٍ يَتَفَكَّرُونَ ﴿٢١﴾

"இன்னும், நீங்கள் அவர்களிடம் ஆறுதல் பெறுதற்குரிய (உங்கள்) மனைவியரை உங்களிலிருந்தே உங்களுக்காக அவன் படைத்திருப்பதும்; உங்களுக்கிடையே உவப்பையும், கிருபையையும் உண்டாக்கியிருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும்; சிந்தித்து உணரக்கூடிய சமூகத்திற்கு நிச்சயமாக, இதில் (பல) அத்தாட்சிகள் இருக்கின்றன." - (திருக்குர்ஆன் : 30:21)

இஸ்லாத்தில், எதிர் பாலினத்தவருடன் அன்பு, இரக்கம் மற்றும் ஆறுதல் ஆகியவை திருமணத்தின் மூலம் மட்டுமே அடைய முடியும். விபச்சாரம் (ஜினா) அல்லது அதற்கு வழிவகுக்கும் செயல்களின் மூலம் காதல் வெளிப்படக்கூடாது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். திருக்குர்ஆனில் அல்லாஹ் இதைத் தடைசெய்துள்ளான்:

وَلَا تَقْرَبُوا الزِّنَىٰ ۖ إِنَّهُ كَانَ فَاحِشَةً وَسَاءَ سَبِيلًا ﴿٣٢﴾

"நீங்கள் விபச்சாரத்தை நெருங்காதீர்கள்; நிச்சயமாக அது மானக்கேடானதாகும். மேலும், (வேறு கேடுகளின் பக்கம் இழுத்துச் செல்லும்) தீய வழியாகவும் இருக்கின்றது." - (திருக்குர்ஆன் : 17:32)

விபச்சாரத்திற்கு அருகில் செல்வது என்பது, உடலுறவில் ஈடுபடுவது, அடிக்கடி தனியாகச் சந்திப்பது, தேவையில்லாமல் அடிக்கடி தொடர்புகொள்வது போன்ற விபச்சாரத்திற்கு அருகில் வரும் எந்தச் செயலையும் செய்வதாகும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு ஹதீஸில் எச்சரித்தபடி, இவை அனைத்தும் திருமணத்திற்கு முன் தவிர்க்கப்பட வேண்டும்:

“எந்த ஆணும் ஒரு பெண்ணுடன் தனியாக இருந்தால், அவர்களில் மூன்றாமவனாக ஷைத்தான் இருப்பான்.” (திர்மிதி-யில் குறிப்பிடப்பட்டுள்ளது)

ஒருவரையொருவர் தெரிந்துகொள்ள விரும்பும் தம்பதிகள் தங்களின் நம்பிக்கைக்குரிய குடும்ப உறுப்பினர்களின் முன்னிலையில் உரையாட அறிவுறுத்தப்படுகிறது.

## திருமணத்தின் பின்னால் உள்ள ஞானம்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

“ஒருவர் திருமணம் செய்து கொண்டால், அவர் தனது மார்க்கத்தின் பாதியைக் கடைபிடித்துவிட்டார், எனவே அவர் அடுத்த பாதியைப் பொறுத்தவரை அல்லாஹ்வுக்கு அஞ்சட்டும்.”

(திர்மிதியில் குறிப்பிடப்பட்டுள்ளது)

மேலே உள்ள ஹதீஸ் ஒரு நபர் திருமணம் செய்து கொண்டு தனது மார்க்கத்தின் பாதியை முடித்ததாகக் கருதப்படுகிறார் என்பதை ஆராய்ந்து அறியும் வகையில் உள்ளது. எளிமையாகச் சொல்வதென்றால், திருமணமான ஒருவர் இஸ்லாத்தில் பெரும் பாவமாகக் கருதப்படும் விபச்சாரத்தின் பாவத்திலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்கிறார். மேலும், விபச்சாரம் போன்ற பாவங்களிலிருந்து தன்னைப் பாதுகாப்பவர்களுக்கு அல்லாஹ் மறுமையில் சொர்க்கத்தை உத்தரவாதம் செய்கிறான். அல்லாஹ்வின் தூதர் நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள்:

“யாரை அல்லாஹ் தன் தாடைகளுக்கு இடையிலுள்ள (நாக்கு) தீமையிலிருந்தும், கால்களுக்கு இடையிலுள்ள (அவரது அந்தரங்க உறுப்பு) தீமையிலிருந்தும் காப்பாற்றுகிறானோ அவர் சுவர்க்கத்தில் நுழைவார்.” (திர்மிதியில் குறிப்பிடப்பட்டுள்ளது)

கணவன் மனைவிக்கு இடையேயான உறவு என்பதைக் கடந்து ஏராளமான சமூக, தார்மீக மற்றும் உளவியல் ஞானம் கொண்ட திருமணம் மார்க்கத்தில் முக்கியத்துவம் கொடுத்து ஊக்குவிக்கப்படுகின்றது

.

### சமூக காரணங்கள்

- **நன்மக்களுடன் சமூகத்தை விரிவுபடுத்துதல்**

ஆரோக்கியமான சமூகத்திற்கு பங்களித்து நேர்மறையாக வடிவமைக்க உதவும் எதிர்கால சந்ததியை விரிவுப்படுத்தி மேன்மக்களாகவும் சிறந்தவர்களாவும் வளர்க்க மார்க்கம் வலியுறுத்துகின்றது. நமது கண்மணி நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

“அன்பான மற்றும் வளமானவர்களைத் திருமணம் செய்து கொள்ளுங்கள், ஏனென்றால் மற்ற சமுதாயங்களுக்கு முன் உங்களின் அதிக எண்ணிக்கையில் நான் பெருமைப்படுவேன்“ (அன்-நஸா'இ-யில் குறிப்பிடப்பட்டுள்ளது)

- **குடும்ப உறவுகளை விரிவுபடுத்துதல்**

திருமணம் என்பது இரண்டு நபர்கள் மட்டுமல்லாமல் இரண்டு குடும்பங்களுக்கு இடையேயான சங்கமம். இந்த சங்கத்தில் புதிய குடும்ப உறவுகள் உருவாகின்றன. நல்லிணக்கமான நமது சமூகத்தில் மாற்று இனம் மற்றும் சமயங்களுக்கிடையே திருமணம் நிகழும் பொழுது வேறுபட்ட பின்னணி உள்ள மக்களின் பிணைப்புகள் உருவாகின்றன. இதன் மூலம் மேலும் நல்லிணக்கம் உருவாகி பல்வேறு கலாச்சார மக்களிடையே சிறந்த புரிதலையும் வளர்க்கிறது.

### உளவியல் காரணங்கள்

- **மேம்பட்ட மன ஆரோக்கியம்**

திருமணத்தின் மூலம் கட்டமைக்கப்பட்ட தோழமை மற்றும் நேர்மறையான தொடர்பு ஒரு நபரின் வாழ்வில் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தும். துணையாளர் தரும் ஆதரவின் காரணமாக தனிமை உணர்வுகளில் இருந்தும் மன வேதனைகளில் இருந்தும் விடுபட்டு பாதுகாப்பு உணர்வு கிடைக்கும்.



• **மன அமைதி**

திருமணம் ஒருவருக்கு மன அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை அடைய உதவுகிறது. திருமண வாழ்வில் சவால்கள் இல்லாமல் இல்லை, ஆனால் திருக்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, மற்றொரு நபருடன் சரியான முறையில் உறவை உருவாக்குவது அந்த நபருக்கு ஒருவித மன அமைதியை அடைய உதவும்:

وَمِنْ آيَاتِهِ أَنْ خَلَقَ لَكُم مِّنْ أَنفُسِكُمْ أَزْوَاجًا لِّتَسْكُنُوا إِلَيْهَا وَجَعَلَ بَيْنَكُم مَّوَدَّةً
وَرَحْمَةً ۚ إِنَّ فِي ذَٰلِكَ لَآيَاتٍ لِّقَوْمٍ يَتَفَكَّرُونَ ﴿٢١﴾

"இன்னும், நீங்கள் அவர்களிடம் ஆறுதல் பெறுதற்குரிய (உங்கள்) மனைவியரை உங்களிலிருந்தே உங்களுக்காக அவன் படைத்திருப்பதும்; அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும்." – (திருக்குர்ஆன் 30:21)

ஒரு திருமண உறவில் தேவைப்படும் நேரங்களில் ஒருவரையொருவர் ஆதரித்து எப்பொழுதும் குடும்பத்தில் ஒருவருக்கொருவர் முகமன் கூறி அன்பைப் பரிமாறி வாழவேண்டும். இத்தகைய தோழமை வாழ்க்கைத் துணைவர்களிடையே ஒருவருக்கொருவர் ஆறுதலாக இருக்கும்.

திருக்குர்ஆனின் பின்வரும் வசனத்தில் ஒருவர் தனக்கு அன்பும் மன அமைதியும் அளிக்கக்கூடிய மனைவி மற்றும் சந்ததியினர் வேண்டி செய்யக்கூடிய பிரார்த்தனை உள்ளது:

## ஒழுக்கம்

وَالَّذِينَ يَقُولُونَ رَبَّنَا هَبْ لَنَا مِنْ أَزْوَاجِنَا وَذُرِّيَّاتِنَا قُرَّةَ أَعْيُنٍ وَاجْعَلْنَا لِلْمُتَّقِينَ إِمَامًا ﴿٧٤﴾

"எங்கள் இறைவா! எங்கள் மனைவியரிடமும், எங்கள் சந்ததியரிடமும் இருந்து எங்களுக்குக் கண்களின் குளிர்ச்சியை அளிப்பாயாக! இன்னும் பயபக்தியுடையவர்களுக்கு எங்களை இமாமாக (வழிகாட்டியாக) ஆக்கியருள்வாயாக!"

-(திருக்குர்ஆன் 25:74)

- **ஒழுக்க சீர்கேட்டைத் தடுக்கும்**

விபச்சாரத்தின் (ஜினா) ஒழுக்க சீர்கேட்டிலிருந்து ஒழுக்கமான சமூகம் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் வழிகளில் திருமணம் ஒன்றாகும். ஒரு ஜோடி திருமண உறவுக்குள் இல்லாமல் தொடர்பில் இருந்தால் அது ஒரு கட்டத்தில் ஜினாவில் முடியும் அபாயம் உள்ளது.

சலனங்களைத் தங்களால் கட்டுப்படுத்த இயலும் என்று ஒருவர் கூறினாலும் அது தீங்கு விளைவிற்கும் பாவங்களுக்கு வழிவகுக்கும் என்பதால் இஸ்லாம் அத்தகைய சூழலைத் தடைசெய்கிறது.



# இஸ்லாமிய சட்டப்படி திருமணத்திற்கான நிபந்தனைகள்

இஸ்லாமிய சட்டத்தின்படி, திருமணம் செய்து கொள்வதற்கு ஆண் பெண் இருபாலருக்கும் இரண்டு நிபந்தனைகள் உள்ளன. இது திருமணத்தின் அடிப்படை ஸ்திரத்தன்மையை வலுவாக்கவும் திருமணத்திற்குப் பின் உருவாகக் கூடிய முரண்பாடுகளைத் தடுக்கவும் இயலும்.

- **முஸ்லிம்**

  இஸ்லாமிய சட்டத்தின் கீழ் மணமக்கள் இருவரும் முஸ்லிமாக இருக்க வேண்டும்.

- **சுயநினைவுடையவராகவும் ('ஆகில்) பருவமடைந்தவராகவும் (பாலிக்) இருக்க வேண்டும்**

  மணமக்கள் மனநலம் குன்றியவர்களாகவோ சுயநினைவற்ற நிலையிலோ இருக்கக் கூடாது. மேலும் பருவ வயதை அடைந்தவர்களாகவும் இருக்க வேண்டும்.

## ஒரு முஸ்லிம் மாற்று சமயத்தவரை மணம் செய்ய விரும்பினால்?

ஒரு முஸ்லிம் மாற்று சமயத்தவரை மணம் செய்ய விரும்பினால் அதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து அவருடன் உரையாடி, முழு மனதுடன் இஸ்லாத்தைத் தழுவுகின்றாரா என்பதை அறிய வேண்டும். மார்க்கத்தில் ஒரு முஸ்லிம் கட்டாயமாக மற்றொரு முஸ்லிமை மட்டுமே மணம் புரிய வேண்டும். ஒரு குடும்பத்தினரின் சமய நம்பிக்கைகள், கொள்கைகள் மற்றும் பழக்கவழக்கங்களின் அடிப்படையில் திருமண வாழ்வு கட்டமைக்கப்படும் என்பதால் இது முக்கிய காரணமாகும். திருமணத்திற்காக மட்டும் அல்லாமல் மனப்பூர்வமாக ஒருவர் மார்க்கத்தைத் தழுவினால் மட்டுமே அவர்களின் எதிர்கால மண வாழ்வு சிறக்க முடியும்.

# திருமணத்தின் தூண்கள்

ஒரு வழிபாட்டுச் செயல் (இபாதாஹ்) ஏற்றுக்கொள்ளும் வகையில் இருக்க அது முழுமையான முறையில் இருப்பதே அதன் தூணாகும். இதனை அரபி மொழியில் அர்கன் என்பர். திருமணத்திலும் ஐந்து தூண்கள் உள்ளன.

*குறிப்பு: பின்வரும் விளக்கங்கள் ஷாஃபி மத்ஹப் அடிப்படையில் அமைந்தவை. மற்ற மதாஹிப் (ஹனஃபி, மாலிகி, ஹன்பலி) விளக்கங்களுக்கு மார்க்க அறிஞர்களை (அசாதிசா) நாடலாம்.*

01

### வாய்மொழி ஒப்பந்தம்

இது பாதுகாவலர் (வலி) அல்லது நீதிபதி அல்லது திருமண நிகழ்வுகளை (காதி) மற்றும் மணமகன் ஆகியோருக்கு இடையே மணமகளைத் வாழ்க்கைத் துணையாக ஏற்றுக்கொள்ளும் வாய்மொழி ஒப்பந்த பரிமாற்றம் ஆகும். மணமகள் அந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வார்.

ஒப்பந்த பரிமாற்றத்தின் உதாரணம் (இஜாப் மற்றும் கபூல்)
வலி/காதி: நான் உன்னை, (பெண்ணின் பெயர்) அவர்களுக்கு திருமணம் செய்து வைக்கின்றேன்.
மணமகன்: (பெண்ணின் பெயர்) அவர்களைத் திருமணம் செய்ய நான் ஏற்றுக்கொள்கிறேன்.

02
/
03

## மணமக்கள்

இது திருமணம் செய்ய ஒப்புக்கொண்ட மணமக்களைக் குறிக்கிறது. மணமகனும், மணமகளும் திருமணத்திற்குத் தகுதி பெற்றவர்களாக இருக்க வேண்டும் (அதாவது முஸ்லிமாக, சுயநினைவுடையவர்களாகவும், பருவமடைந்தவர்களாகவும் இருக்க

04

## வளி

வளி என்பது திருமணத்திற்கு முன் மணமகளுக்கு பொறுப்பான ஆண் பாதுகாவலர். மணமகன் கணவனின் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற் கும்,திருமணத்திற்குப் பிறகு மணமகளை கவனித்துக்கொள்வதற்கும் சரியான குணாதிசயங்களைக் கொண்டிருப்பதை உறுதி செய்வது வளியின் கடமை.

வளியாக பொறுப்பேற்க தகுதியானவர்கள்:

i. மணமகளின் தந்தை,
ii. அவளுடைய தந்தைவழி தாத்தா,,
iii. அவளுடைய மகன்,
iv. அவளுடைய ஒருதாய் சகோதரர்,
v. அவளுடைய ஒருதாய் சகோதரனின் மகன்,
vi. அவளுடைய தந்தைவழி மாமா, அல்லது
vii. அவளுடைய மாமன் மகன்.

வளி என்பவர்:

i. முஸ்லிமாக இருக்க வேண்டும்
ii. சுயநினைவுள்ளவராக இருக்க வேண்டும்
iii. பருவமடைந்தவராக இருக்க வேண்டும்

வளியாக பொறுப்பேற்க தகுதியானவர்களின் வரிசைப்படி வளியாகும் பண்புகள் முதலில் யாருக்கு பொருந்துகின்றதோ அவர் வளியாகலாம். வரிசையில் மீதமுள்ளவர்களின் பண்புகளை பொருத்த தேவையில்லை. அவர்களில் யாருக்கும் பொருந்தவில்லை என்றால் காதியே வளி-யாக பொறுப்பேற்பார்.

திருமணம் நடைபெற வளி சம்மதம் தெரிவிக்க வேண்டும். முஸ்லிம் திருமணப் பதிவேட்டில் (ROMM) பதிவு செய்யும் போது மணமகளுடன் அவரும் வருவார்.

05

## இரண்டு சாட்சியங்கள்

இந்த இரண்டு சாட்சிகளுக்கும் கீழ்வரும் நிபந்தனைகள் பூர்த்தியாக வேண்டும்:

i. முஸ்லிமாக இருக்க வேண்டும்
ii. பருவமடைந்தவராக இருக்க வேண்டும்
iii. நேர்மையானவர்களாக இருக்க வேண்டும்

## சிங்கப்பூரில் திருமண நடைமுறைகள்

சிங்கப்பூரில் முஸ்லிம் திருமணங்களின் பதிவேடு (ROMM[3]) நிறுவனம் திருமணங்களை நிர்வகித்து இயக்குகின்றது

திருமணம் செய்து கொள்ள இருக்கும் முஸ்லிம் மணமக்களின் நிகழ்வரிசை பின்வருமாறு:

1. தம்பதியினர் முன் திருமண வகுப்பில் கலந்து கொள்வது (பரிந்துரைக்கப்படுகிறது).
2. திருமணத்திற்கு மூன்று அல்லது அதற்கும் குறைவான மாத காலத்திற்கு முன், தம்பதியினர் ROMM-இல் உள்ள மார்க்க அறிஞரிடம் நேர்காணலில் கலந்து கொள்கிறார்கள்
3. தம்பதிகள் தங்கள் திருமணத்திற்கான தேதியை முடிவு செய்கிறார்கள் / முன்மொழிகிறார்கள்.
4. அந்தத் தேதியின் அடிப்படையில், ROMM இணையதளம் மூலம் காதி-யிடம் தம்பதியினர் முன்பதிவு செய்கிறார்கள்.
5. குறிப்பிடத்தக்க சில முக்கியமானவை:
   - **மஹ்ர்**: மணமகனிடமிருந்து மணமகளுக்கு ஒரு கட்டாயமாக கொடுக்க வேண்டிய பணம்/ பரிசு. (வழக்கமாக $100, ஆனால் அந்தத் தொகைக்கு வரம்பிடப்படவில்லை.)
   - **தேவையான ஆவணங்கள்**: தேசிய பதிவு அடையாள அட்டை (NRIC), புதிய முஸ்லிம்களுக்காக MUIS வழங்கிய அடையாள அட்டை போன்றவை.

## இஸ்லாத்தில் துணையைத் தேர்ந்தெடுப்பதற்கான வழிகாட்டி

திருமணத்திற்காக சரியான துணையைத் தேர்ந்தெடுப்பது என்பது அனைவருக்கும் உள்ள சந்தேகம். வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்க நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வழங்கிய வழிகாட்டுதல்கள் அனைத்தும் மார்க்கத்தில் உள்ளடங்கியுள்ளது. பின்வரும் ஹதீஸ்களில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகிறார்:

"பெண்களை நான்கு காரணங்களுக்காக திருமணம் செய்து கொள்ளலாம்: அவளுடைய அழகுக்காக, அவளுடைய செல்வத்திற்காக, அவளுடைய வம்சாவளி சிறப்பு, அவளுடைய மார்க்கத்திற்காக. மார்க்கப்பற்று உள்ளவரை தேர்ந்தெடுங்கள்; அதுவே உங்களுக்கு பாதுகாப்பாக இருக்கும்."

(புகாரி-யில் குறிப்பிடப்பட்டுள்ளது)

மற்றொரு ஹதீஸில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்:

"உங்களைத் திருப்தியளிக்கும் வகையில் மார்க்கப்பற்று நிறைந்த ஒருவர் வந்தால் (உங்கள் மகளை அவருக்கு மணம் செய்துவைக்க முன்மொழிந்து) அவருக்கு அவளைத் திருமணம் செய்துவையுங்கள். இல்லையெனில், நிலத்தில் ஃபித்னாவும், பரவலான ஊழலும் காணப்படும்."

(இப்ன்-மஜாஹ் -வில் குறிப்பிடப்பட்டுள்ளது)

இந்த ஹதீஸ்கள் மூலம், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் நல்ல மார்க்கப்பற்று உள்ள ஒருவரை தேர்வாகக் குறிப்பிடுகிறார், ஏனெனில் மார்க்கப்பற்று என்பதே மிகவும் உறுதியான, நீடித்த மற்றும் தொலைநோக்கு பண்பாகும். இது வாழ்க்கைக் கொள்கைகள், முன்னுரிமைகள் மற்றும் வாழ்க்கையைப் பற்றிய கண்ணோட்டத்தைப் பற்றியது. நம் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுப்பது என்பது தம்பதியராக எடுக்கும் முடிவுகள், குழந்தைகளின் வளர்ப்பு போன்ற பலவற்றைப் பாதிக்கும்.

---

[12] 8 நவம்பர் 2018 https://www.romm.gov.sg/about_marriage/romm_marriage_process.asp.

## பெற்றோரின் விருப்பத்திற்கு எதிராக திருமணம் செய்து கொள்ளலாமா?

இஸ்லாத்தில், பெற்றோரின் சமயத்தைப் பொருட்படுத்தாமல், பெற்றோரை மரியாதையுடனும் கருணையுடனும் நடத்துவது கட்டாய கடமையாகும். ஆனால் பெற்றோருக்கு மரியாதை கொடுப்பது எல்லா நிகழ்வுகளிலும் அவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பதல்ல அர்த்தம், குறிப்பாக ஒரு செயல் நிதர்சனமானது மற்றும் நல்லது என்று நம்பினால். திருமணத்திற்காக ஒருவர் விருப்பத்துடன் இஸ்லாத்தைத் தழுவ முடிவு செய்து, நீதமான ஒரு முஸ்லிம் வாழ்க்கைத்துணையைத் தேர்ந்தெடுத்திருந்தால், அது பெற்றோரின் விருப்பத்திற்கு மாறாக இருந்தாலும் அவர்/அவள் திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்படுகிறது. ROMM இலிருந்து காதியை நாடி இது தொடர்பாக ஆலோசிக்கலாம்.

அதுபோன்ற சந்தர்ப்பங்களில், தங்கள் பெற்றோரை மென்மையுடனும் இரக்கத்துடனும் நடத்த வேண்டும் என்று மார்க்கம் எதிர்பார்க்கின்றது, அவர்கள் அதே மென்மையுடன் நம்மை நடத்தவிட்டாலும் கூட.அவர்களிடம் நேர்மறையாகவும் அன்பாகவும் நடந்து கொண்டு, அவர்களின் இதயங்கள் அல்லாஹ்வால் மென்மையாக்கப்படும் என்ற நம்பிக்கைக் கொள்ளவேண்டும்.



# கணவன் மற்றும் மனைவியின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள்

திருமண உறவில் கணவன் மனைவி இருவருக்கும் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் உள்ளன. குடும்பத்தை ஆரோக்கியமாக பராமரிக்க இந்த உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டும் மற்றும் பொறுப்புகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

## மனைவியின் பொறுப்புகள்:

1. **கணவனை அன்பாக நடத்த வேண்டும்**

   ஒரு முஸ்லிம் பெண் தன் மணாளனுடன் கண்ணியமாக நடந்து, அவருக்கு எந்தத் தீங்கும் செய்யாமல் அவருடன் அன்பான முறையில் நடந்துகொள்ள கடமைப்பட்டிருக்கிறாள்.

2. **கணவனின் உடல் மற்றும் உணர்வுரீதியான தேவைகளை நிறைவேற்ற வேண்டும்**

   கணவனின் உடல் மற்றும் உணர்ச்சித் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய பொறுப்பு மனைவிக்கு உண்டு, உடல் நெருக்கம் (இஸ்லாத்தில் தடை செய்யப்படாத எந்த வகையிலும்) முதல் கடினமான காலங்களில் அவருக்கு ஆதரவாக இருப்பது வரை கணவனுக்கு துணையாக இருக்க வேண்டும்.

3. **குடும்பத்தின் நிதியை நிர்வகிக்க உதவுதல்**

   குடும்பத்தின் நிதியை திட்டமிடவும் நிர்வகிகவும் கணவன் மனைவி இருவரும் சமமான பொறுப்பைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். குடும்பத்தின் தேவைகள் குறித்து மனைவி கணவரிடம் தெரிவித்து இஸ்லாமிய வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப நிதி முடிவுகளை எடுக்க வேண்டும்.

4. **கணவனின் கண்ணியம் காக்க வேண்டும்**

   கணவன் தனது மனைவியின் கண்ணியத்தைக் காப்பாற்றுவது போலவே, மனைவியும் கணவனின் குறைகளையும் குறைகளையும் மற்றவர்களிடம் மறைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.





## கணவனின் பொறுப்புகள்:

1. **குடும்பத்திற்கு நிதி வழங்க வேண்டும்**

   உணவு, உடை, தங்குவதற்கான இடம், மருத்துவத் தேவைகள் மற்றும் பலவற்றை உள்ளடக்கிய குடும்ப வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளை இது உறுதி செய்கிறது.

2. **மனைவியிடம் அன்பாக நடந்து கொள்ள வேண்டும்**

   ஒரு முஸ்லிம் ஆண் தனது மனைவியுடன் கண்ணியமாக நடந்துகொள்வதன் மூலமும், அவளுக்கு உடல் மற்றும் மனரீதியாக எந்தத் தீங்கும் செய்யாமல் இருக்க வேண்டும். தேவையான போது வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை வழங்குதல் மற்றும் அவளுக்கு உதவி தேவைப்படும் எந்த வேலையிலும் அவளுக்கு உதவுதல் ஆகியவை இதில் அடங்கும். வீட்டு வேலைகள் பெண்களின் பொறுப்பு மட்டுமல்ல தம்பதியினரிடையே பகிரப்பட வேண்டிய பொறுப்பு என்பதை முஸ்லிம் ஆண்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

3. **மனைவியின் உடல் மற்றும் உணர்ச்சி தேவைகளைப் பூர்த்தி செய்தல்**

   இஸ்லாத்தில் தடை செய்யப்படாத வகையிலுள்ள மனைவியின் உடல் மற்றும் உணர்ச்சித் தேவைகளை நிறைவேற்றுவது முதல் கடினமான காலங்களில் அவளுக்கு துணையாக இருப்பது வரை கணவனுக்கு பொறுப்பு உள்ளது.

4. **குடும்பத்தின் நிதியை நிர்வகிக்க உதவுதல்**

   குடும்பத்தின் தேவைகள் குறித்து கணவன் மனைவியுடன் விவாதித்து, இஸ்லாமிய வழிகாட்டுதலின்படி நிதி முடிவுகளை எடுக்க வேண்டும். குடும்பத்திற்கு எந்த வகையான செலவினங்கள் அவசியமாகவும் பயனுள்ளதாகவும் இருக்கும் என்பதை ஒன்றாகத் திட்டமிட்டு முடிவெடுப்பது மற்றும் அனுமதிக்கப்படாத செலவினங்களைத் தவிர்ப்பதும் அடங்கும்.

   உதாரணமாக கல்வி கற்கவும் வேலைவாய்ப்பு திறன்களை மேம்படுத்தவும் பயணம் செய்வதற்கும் உண்டாகும் செலவுகள் அனுமதிக்கப்பட்ட (முபாஹ்) செலவுகளாகும். சூதாட்டம், மது உள்ளிட்ட இஸ்லாத்தில் தடைசெய்யப்பட்ட (ஹராம்) செயல்களுக்கு உண்டாகும் செலவுகள் அனுமதிக்கப்படாத (ஹராம்) செலவுகளாகும்.

5. **மனைவியின் கண்ணியத்தைப் பேணுவது**

   கணவன் தன் மனைவியின் கண்ணியத்தைக் காக்க வேண்டும், அவளுடைய குறைகளையோ அல்லது அவளது பழக்கவழக்கங்களையோ மற்றவர்களிடம் தெரிவிக்காமல் இருக்க வேண்டும். இது இஸ்லாத்தில் கண்டிப்பாக தடை செய்யப்பட்டுள்ளது.

## திருமணத்தில் உள்ள சிக்கல்களைத் தீர்ப்பதற்கான வழிகள்

அனைத்து உறவுகளும் எப்பொழுதும் சரியாக இருப்பது இல்லை. உறவுகளில் சில நேரங்களில் மோதல்கள் உருவாகும் சூழல் கூட ஏற்படலாம். திருமண உறவில் மட்டுமல்லாமல் எந்த உறவிலும் இத்தகைய சங்கடங்கள் ஏற்படும் என்பதை மறுக்க இயலாது.

திருமண வாழ்வின் சிக்கல்களைத் தீர்க்க பல வழிகள் இருந்தாலும், சிக்கல்களைச் சமாளிக்க சிறந்த வழி, பொறுமை (சப்ர்), கருணை மற்றும் மற்ற தரப்பினரிடம் மரியாதையுடன் அணுகுவதே என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். திருக்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, பொறுமையாளர்களுக்கு எப்போதும் அல்லாஹ் வெகுமதி அளிக்கிறான்:

قُلْ يَـٰعِبَادِ ٱلَّذِينَ ءَامَنُوا۟ ٱتَّقُوا۟ رَبَّكُمْ ۚ لِلَّذِينَ أَحْسَنُوا۟ فِى هَـٰذِهِ ٱلدُّنْيَا حَسَنَةٌ ۗ وَأَرْضُ ٱللَّهِ
وَٰسِعَةٌ ۗ إِنَّمَا يُوَفَّى ٱلصَّـٰبِرُونَ أَجْرَهُم بِغَيْرِ حِسَابٍ ﴿١٠﴾

(நபியே!) நீர் கூறும்: "ஈமான் கொண்ட நல்லடியார்களே! உங்களுடைய இறைவனுக்கு பயபக்தியாக இருங்கள்; இவ்வுலகில் அழகாய் நன்மை செய்தோருக்கு அழகிய நன்மையே கிடைக்கும் - அல்லாஹ்வுடைய பூமி விசாலமானது; பொறுமையுள்ளவர்கள் தங்கள் கூலியை நிச்சயமாகக் கணக்கின்றிப் பெறுவார்கள்."

(திருக்குர்ஆன் 39:10)

* முதலில், தம்பதியினர் தாங்களாகவே ஒரு தீர்வை எட்ட முடியுமா என்பதைப் பற்றி விவாதிக்க வேண்டும். அதற்கு அவர்கள் ஒருவருக்கொருவர் நாகரீகமாகப் பேசுவது மட்டுமல்லாமல் ஒருவர் பேசுவதை மற்றவர் கவனமாகக் கேட்க வேண்டும்.
* அதில் தம்பதிகள் ஒரு இணக்கமான தீர்வை எட்டத் தவறினால், திருமண ஆலோசகராக அவர்கள் மூன்றாம் தரப்பினரை அணுகலாம்.
* தம்பதியினர் தங்கள் இருவரின் குடும்பத்திலிருந்தும் சிக்கல்களை அறிந்து நல்ல தீர்வை முன்மொழியக் கூடிய ஒரு பிரதிநிதியை தேர்வு செய்யலாம். மார்க்கப்பற்று மிக்க ஒரு நீதமான பிரதிநிதியை அவர்கள் அழைக்க வேண்டும் என்பதை தம்பதியினர் கவனத்தில் கொள்ள வேண்டும். இதைப்பின்பற்றினால் விவாதம் ஒரு தரப்பாக இல்லாமல் தீர்வு எட்டும் நோக்கத்தை நோக்கி இருக்கும்.



## விவாகரத்திற்கான நிபந்தனைகள்

விவாகரத்து மூலம் தங்கள் திருமணத்தை முறித்துக் கொள்ளும் விருப்பத்தை இஸ்லாம் அனுமதித்துள்ள நிலையில், விவாகரத்து மிகவும் விரும்பத்தகாத தேர்வாகும். விவாகரத்து பெறுவது என்பது திருமணத்தைக் காப்பாற்றும் அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்து விட்ட நிலையில் கடைசி முடிவாக இருக்க வேண்டும். விவாகரத்து செய்வதென்பது விரும்பத்தகாத செயல் என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பின்வரும் ஹதீஸில் குறிப்பிட்டுள்ளார்:

சில சந்தர்ப்பங்களில் விவாகரத்து மட்டுமே தீர்வாக இருக்கலாம். உதாரணமாக, கணவனோ/ மனைவியோ தங்களுக்கு பாதகமான தீங்கு ஏற்படுத்தும் சூழலில் இருந்து வெளியேற வேண்டுமென்றால் விவாகரத்து அவசியமாகின்றது. எந்த விதமான தீங்குகளிலிருந்தும் உயிரைப் பாதுகாப்பதில் இஸ்லாம் அதிக முன்னுரிமை அளிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

"அல்லாஹ்விடம் அனுமதிக்கப்பட்ட விஷயங்களில் மிகவும் வெறுக்கப்படுவது விவாகரத்து ஆகும்."
(இப்ன்-மஜாஹ் -வில் குறிப்பிடப்பட்டுள்ளது)

திருமண சிக்கல்களுக்கு முறையான உதவி மற்றும் ஆலோசனையைப் பெற விரும்பும் தம்பதிகளுக்கு பின்வரும் சில உதவி எண்கள் உள்ளன:

The National Domestic Violence Hotline
1-800-799-7233

Petra Counselling
9100 0423

AMP Marriage Counselling Programme
6416 3960 / 6416 3961

APKIM
6295 1011

**சுருக்கம்**

- திருமணம் என்பது இஸ்லாத்தில் பரிந்துரைக்கப்படும் ஒரு நடைமுறையாகும்.
- திருமணம் எனும் பந்தத்திற்கு பின்னால் குடும்ப உறவுகளை விரிவுபடுத்துதல் மற்றும் மன அமைதி அடைதல் போன்ற பல்வேறு சமூக மற்றும் உளவியல் சார்ந்த தார்மீக காரணங்கள் உள்ளன.
- திருமணத்தில் முறையாக திருமணம் செய்து கொள்வதற்கான நிபந்தனைகளிலிருந்து அதன் நோக்கம் பூர்த்தி அடையும் வரையிலான அனைத்திற்கும் தெளிவான வழிகாட்டுதல்கள் உள்ளன.
- முஸ்லிம்கள் தங்கள் துணையை அவர்கள் பின்பற்றும் மார்க்கத்தைக் கொண்டு கவனமாகத் தேர்ந்தெடுக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள்.
- கணவன் மற்றும் மனைவி இருவருக்கும் ஆரோக்கியமான குடும்பத்தை உருவாக்குவதற்காக திருமண வாழ்வில் பொறுப்புகள் உள்ளன.
- விவாகரத்து இஸ்லாத்தில் மிகவும் விரும்பத்தக்க செயலல்ல என்றாலும் மண உறவில் ஏற்படும் சிக்கல்களுக்கு தீர்வு எட்ட முடியாத நிலையில் இரு தரப்பினருக்கும் தீங்கு விளைவிக்கும் சூழ்நிலை தவிர்க்க முடியாததாக நிரூபிக்கப்படும்போது கடைசி முடிவாக விவாகரத்து உள்ளது. தம்பதிகள் விவாகரத்து செய்ய முடிவு செய்வதற்கு முன் ஆலோசனைக்கு செல்லவும் பரிந்துரைக்கப்படுகின்றது.

பாகம்-7

# முஸ்லிம் மற்றும் குடும்பம்



# இஸ்லாத்தில் குடும்பத்தின் முக்கியத்துவம்

இவ்வுலக வாழ்வில் குடும்பத்திற்கு முக்கிய பங்குள்ளது. இஸ்லாத்தில் மட்டுமல்லாமல் அனைத்து சமயங்களிலும் இரத்த பந்தம் இல்லாத நிலையிலும் குடும்பம் உயர்வான நிலையில் கருதப்படுகின்றது. நம் உற்றார் உறவினருடன் இணக்கமாக வாழ்ந்து வந்தால், நாம் துன்பப்படும் கஷ்டகாலங்களில் நமக்கு உற்ற துணையாகவும் மனதிற்கு ஆதரவளிப்பதாகவும் அமையும்.

உறவுகளைப் பேணுவது இஸ்லாத்தில் மிக முக்கியமாகும். கீழ்வரும் ஹதீஸில், நமது உறவினர்களுடன் உறவுகளைத் துண்டித்துக் கொள்வதற்கு எதிராகவும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நம்மை எச்சரித்துள்ளார்:

"எவர் ஒருவர் உறவுகளை முறித்துக்கொள்கிறாரோ அவர் சுவர்க்கத்தில் நுழைய மாட்டார்."
(புகாரியில் குறிப்பிடப்பட்டுள்ளது)

குடும்பங்களே நமது சமூக கட்டமைப்பின் அடிப்படையாக உள்ளன. அடுத்த தலைமுறை முஸ்லிம் தலைவர்களை உருவாக்குவதற்கு குடும்ப சூழல் முதன்மையாக இருப்பதால் இஸ்லாம் குடும்ப வாழ்வியல் முறைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கின்றது. இதன் மூலம் சிறந்த பண்புகள் கொண்ட இளைய தலைமுறையை வளர்க்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.



குடும்பத்தின் பொறுப்புகள் பெற்றோர்களுக்கு மட்டுமல்லாமல் ஒவ்வொரு குடும்ப உறுப்பினருக்கும் சமமாக உள்ளதை கவனத்தில் கொள்ளவேண்டும். ஒவ்வொருவரும் மற்றவர்களிடத்தில் அன்புடனும் மரியாதையுடனும் நடந்துக் கொள்ளவேண்டும். பின்வரும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளபடி:

"நிச்சயமாக! ஒவ்வொருவரும் பாதுகாவலராவர் மற்றும் தனது கடமைகளுக்கு பொறுப்பாளிகளுமாவர்: இமாம் (ஆட்சியாளர்) மக்களின் பாதுகாவலர் மற்றும் அவரது குடிமக்களுக்குப் பொறுப்பு; ஒரு ஆண் தனது குடும்பத்தின் பாதுகாவலன் மற்றும் அவனது இல்ல மக்களுக்கு பொறுப்பு; ஒரு பெண் தன் கணவனின் வீடு மற்றும் அவனது குழந்தைகளின் பாதுகாவலராகவும் அவர்களுக்குப் பொறுப்பாளராகவும் இருக்கிறாள்; ஒரு மனிதனின் அடிமை அவனுடைய எஜமானின் சொத்துக்களுக்கு பாதுகாவலனாகவும் அதற்குப் பொறுப்பானவனாகவும் உள்ளான். நிச்சயமாக, உங்களில் ஒவ்வொருவரும் அவரவர் கடமைகளுக்குப் பாதுகாவலராகவும் பொறுப்பாளிகளாகவும் உள்ளீர்கள்." (புகாரியில் குறிப்பிடப்பட்டுள்ளது)

## பெற்றோர் மற்றும் குழந்தைகளின் உரிமைகள்

ஒவ்வொரு குடும்ப உறுப்பினருக்கும் அவர்கள் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகள் இருந்தாலும், அமைதியையும் அன்பையும் பறைசாற்றும் இஸ்லாம், தனிமனிதர்களாக அவர்களின் உரிமைகளைக் குறிப்பிட்டு விளக்குவதன் மூலம் அதைப் பின்பற்றுபவர்களின் கண்ணியத்தைப் பாதுகாக்கிறது. சிறியவர் முதல் பெரியவர் வரை ஒருவர் மற்றவரின் உரிமைகளை மதித்து நடப்பதன் மூலம் குடும்பத்தில் அன்பையும் பிணைப்பையும் பேண முடியும்.

## பெற்றோர்களின் உரிமைகள்

நமக்காக தங்கள் வாழ்வில் எண்ணற்ற தியாகங்களைச் சகித்துக் கொண்டவர்கள் நம் பெற்றோர்கள். நாம் பிறப்பதற்கு முன்பிருந்தே, நம் பெற்றோர்கள் பல சவால்களைக் கடந்து, நாம் சிறந்த முறையில் வளரவும் வாழவும் ஆரோக்கியமான சூழலை ஏற்படுத்த போராடுபவர்கள் நம் பெற்றோர்கள். இதனால் பெற்றோர்கள் இஸ்லாத்தில் உயர்ந்த அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளனர். அவர்கள் ஒரே சமய நம்பிக்கையைப் பகிர்ந்து கொள்ளாவிட்டாலும் கூட, நமது பெற்றோருக்கு நாம் மிகுந்த மரியாதையளிக்க வேண்டும் என்பது திருகுர்ஆனின் பின்வரும் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது:

"அவனையன்றி (வேறு எவரையும்) நீங்கள்

وَقَضَىٰ رَبُّكَ أَلَّا تَعْبُدُوا إِلَّا إِيَّاهُ وَبِالْوَالِدَيْنِ إِحْسَانًا ۚ إِمَّا يَبْلُغَنَّ عِندَكَ الْكِبَرَ أَحَدُهُمَا أَوْ كِلَاهُمَا فَلَا تَقُل لَّهُمَا أُفٍّ وَلَا تَنْهَرْهُمَا وَقُل لَّهُمَا قَوْلًا كَرِيمًا ﴿٢٣﴾ وَاخْفِضْ لَهُمَا جَنَاحَ الذُّلِّ مِنَ الرَّحْمَةِ وَقُل رَّبِّ ارْحَمْهُمَا كَمَا رَبَّيَانِي صَغِيرًا ﴿٢٤﴾

வணங்கலாகாது என்றும், பெற்றோருக்கு நன்மை செய்யவேண்டும் என்றும் உம்முடைய இறைவன் விதித்திருக்கின்றான்; அவ்விருவரில் ஒருவரோ அல்லது அவர்கள் இருவருமோ உம்மிடத்தில் முதுமை அடைந்து விட்டால், அவர்களை "உஃப்" (சீ) என்று கூட சொல்ல வேண்டாம் – அவ்விருவரையும் (உம்மிடத்திலிருந்து) விரட்ட வேண்டாம் – இன்னும் அவ்விருவரிடமும் கனிவான கண்ணியமான பேச்சையே பேசுவீராக! இன்னும், இரக்கம் கொண்டு பணிவு என்னும் இறக்கையை அவ்விருவருக்காகவும் நீங்கள் தாழ்த்துவீராக; மேலும், "என் இறைவனே! நான் சிறு பிள்ளையாக இருந்த போது, என்னை(ப்பரிவோடு) அவ்விருவரும் வளர்த்தது போல், நீயும் அவர்களிருவருக்கும் கிருபை செய்வாயாக!" என்று கூறிப் பிரார்த்திப்பீராக!"

(திருக்குர்ஆன் 17:23-24)



மாற்று சமயத்தைப் பின்பற்றும் பெற்றோருக்கும்



அதே மரியாதை அளிக்க வேண்டும். இதைப் பின்வரும் ஹதீஸில் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் வலியுறுத்துகிறார்:

அஸ்மா' (ரழி) அவர்கள் கூறினார் குரைஷ் பழங்குடியினரின் உடன்படிக்கையின் போது இஸ்லாத்தை வெறுக்கும் என் தாயார் என்னிடம் கருணை நாடி வந்தார். நான் நபிகள் அவர்களிடம், 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே, என் தாயார் ஒரு காஃபிராக இஸ்லாத்தை வெறுக்கும் நிலையில் இருக்கிறார். நான் அவரிடம் கருணைக் காட்டலாமா?" என்று வினவினேன், அதற்கு அவர் 'ஆம், அவருக்கு கருணைக் காட்டலாம்" என்றார்.

(அபு தாவூத்-இல் குறிப்பிடப்பட்டுள்ளது)

## குழந்தைகளின் உரிமைகள்

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளிடம் அன்பும் அரவணைப்பும் காட்ட வேண்டும். ஒரு தந்தை மற்றும் கணவன் என்ற முறையில் தனது குடும்பத்தின் மீதான பொறுப்புகளை நீதமான முறையில் சிறப்பாக நிறைவேற்றிய நமது அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஒரு சிறந்த உதாரணம். நபிகள் (ஸல்) அவர்கள் ஒரு ஹதீஸில் குறிப்பிட்டார்:

"விசுவாசிகளில் பரிபூரண இறை நம்பிக்கையுள்ளவர், நடத்தையில் சிறந்தவராகவும், தனது குடும்பத்தினரிடம் மிகவும் அன்பாகவும் இருப்பவர்.". (திர்மிதி-இல் குறிப்பிடப்பட்டுள்ளது)

ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கும் மற்றொரு ஹதீஸில், நபி (ஸல்) அவர்கள் ஒருவரின் குழந்தைகளிடம் கருணை மற்றும் பாசத்தை வெளிப்படுத்துவதன் முக்கியத்தைப் பற்றி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

சில நாடோடிகள் நபிகள் (ஸல்) அவர்களிடம் வினவினார்கள் 'நீங்கள் உங்கள் குழந்தைகளுக்கு முத்தமிடுவீர்களா?' என்று. அதற்கு நபி (ஸல்) அவர்கள் 'ஆம்' என கூறினார்கள். நாடோடிகள் கூறினார்கள் 'நாங்கள் எங்கள் குழந்தைகளுக்கு முத்தமிடுவதில்லை' என்று. அதற்கு நபி (ஸல்) அவர்கள் 'உங்கள் இதயங்களில் இருந்து இரக்கத்தைப் பறித்திருந்தால் என்னால் உதவ இயலாது' என்று பதிலளித்தார்கள். (புகாரி மற்றும் முஸ்லிம்-இல் குறிப்பிடப்பட்டுள்ளது)

பெற்றோர் எப்பொழுதும் தங்கள் சந்ததியினரிடம் மென்மையும் அன்பையும் வெளிப்படுத்தி அவர்கள் வளரும் பொழுது பின்பற்ற வேண்டிய நல்ல பழக்கவழக்கங்களையும் பண்புகளையும் கற்றுத்தருவதன் மூலம் நல்ல முன்மாதிரியாக இருக்க வேண்டும்.

முஸ்லிம் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு சிறந்த கல்வியை, அதிலும் குறிப்பாக இஸ்லாமிய ஞானத்தை, வழங்குவதற்கு கடமைப்பட்டுள்ளனர்.

## மாற்று சமய பெற்றோர்களுக்கு இஸ்லாம் பின்பற்றும் மகன்/மகள் ஆற்ற வேண்டிய கடமைகள்

நமது முஸ்லிம் பெற்றோருக்கு சேவை செய்வதும் மரியாதை காட்டுவதும் இஸ்லாம் போதிக்கும் கடமைகளில் ஒன்றாகும். இஸ்லாத்திற்கு எதிரான விஷயங்களை நம் மீது திணிக்காத வரை, முஸ்லிமல்லாத பெற்றோரைக் கொண்டவர்களுக்கும் இது பொருந்தும். பெற்றோர்களுக்கு மட்டுமல்ல நம்மை விட வயதில் மூத்தவர்களுக்கும் மரியாதை அளிப்பது கடமையாகும். திருகுர்ஆனில் அல்லாஹ் குறிப்பிடுகின்றான்:

وَوَصَّيْنَا الْإِنسَانَ بِوَالِدَيْهِ حَمَلَتْهُ أُمُّهُ وَهْنًا عَلَىٰ وَهْنٍ وَفِصَالُهُ فِي عَامَيْنِ أَنِ اشْكُرْ لِي وَلِوَالِدَيْكَ إِلَيَّ الْمَصِيرُ ﴿١٤﴾ وَإِن جَاهَدَاكَ عَلَىٰ أَن تُشْرِكَ بِي مَا لَيْسَ لَكَ بِهِ عِلْمٌ فَلَا تُطِعْهُمَا ۖ وَصَاحِبْهُمَا فِي الدُّنْيَا مَعْرُوفًا ۖ وَاتَّبِعْ سَبِيلَ مَنْ أَنَابَ إِلَيَّ ۚ ثُمَّ إِلَيَّ مَرْجِعُكُمْ فَأُنَبِّئُكُم بِمَا كُنتُمْ تَعْمَلُونَ ﴿١٥﴾

“நாம் மனிதனுக்கு தன் பெற்றோா் (இருவருக்கும் நலம் செய்ய வேண்டியது) பற்றி வஸிய்யத்துச் செய்(து போதித்)தோம்; அவனுடைய தாய் பலஹீனத்தின் மேல் பலஹீனம் கொண்டவளாக (கா்ப்பத்தில்) அவனை சுமந்தாள்; இன்னும் அவனுக்குப் பால் குடி மறத்த(லி)ல் இரண்டு வருடங்கள் ஆகின்றன; ஆகவே “நீ எனக்கும் உன் பெற்றோா்க்கும் நன்றி செலுத்துவாயாக; என்னிடமே உன்னுடைய மீளுதல் இருக்கிறது.ஆனால், நீ எது பற்றி அறிவு (ஆதாரம்) பெற்றவனாக இல்லையோ அதனை எனக்கு இணை வைக்குமாறு உன்னை அவ்விருவரும் வற்புறுத்தினால் அப்போது நீ அவ்விருவருக்கும் வழிபட வேண்டாம்; ஆனால் இவ்வுலக வாழ்க்கையில் அவ்விருவருடனும் அழகிய முறையில் உறவு வைத்துக் கொள்; (யாவற்றிலும்) என்னையே நோக்கி நிற்போரின் வழியையே நீ பின்பற்றுவாயாக – பின்னா் உங்கள் (அனைவருடைய) மீளுதலும் என்னிடமேயாகும்; நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீா்கள் என்பதை (அப்போது) நான் உங்களுக்கு அறிவிப்பேன்."
(திருக்குா்ஆன் 31:14-15)



மேலே உள்ள திருகுா்ஆனின் வசனத்திலிருந்து, பெற்றோா்கள் தங்களை இஸ்லாத்திலிருந்து நம்மைத் திசைதிருப்பக்கூடிய விஷயங்களைச் செய்யுமாறு வற்புறுத்தாதவரையில் பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்குச் சேவை செய்து அவா்களின் தேவைகளைப் பூா்த்தி செய்வது கடமையாகும். நமது அன்பினாலும் கருணையினாலும் அவா்கள் இஸ்லாத்தின்பால் ஈா்க்கப்படவும் வாய்ப்புள்ளது.

இருப்பினும், வலுக்கட்டாயமாக அவ்வாறு செய்யக்கூடாது என்பதை நினைவில் கொள்ள வேண்டும், ஏனெனில் அது அவா்களை வருத்தப்படுத்தலாம் மற்றும் குடும்பத்தில் மோதல்கள் ஏற்படலாம். மாறாக, உண்மையான வழிகாட்டுதல் (ஹிதாயா) அல்லாஹ்விடமிருந்து மட்டுமே வர முடியும் என்றும், அவனால் மட்டுமே ஒரு மனிதனை மாற்ற முடியும் என்றும் நாம் நம்ப வேண்டும்.

لَا إِكْرَاهَ فِي الدِّينِ

“மாா்க்கத்தை ஏற்று கொள்வதில் எந்த நிா்ப்பந்தமும் செய்யக் கூடாது..."
(திருக்குா்ஆன் 2:256)

## முஸ்லிம் அல்லாத பெற்றோரின் மரணத்தைக் கையாள்வது

மாற்று சமய பெற்றோரின் மரணத்தின் பொழுது அவர்களின் இறுதி சடங்கில் அவர்கள் பின்பற்றிய சமயத்தின்படி ஏற்பாடுகள் செய்வது பிள்ளைகளின் பொறுப்பாகும். அப்துர்ரஹ்மான் இப்னு அபி லைலா (ரழி) அவர்கள் வெளிப்படுத்திய பின்வரும் ஹதீஸில் கூறப்பட்டுள்ளபடி, நமது நபிகள் நாயகம் (ஸல்) காலத்தில் நபியவர்கள் முஸ்லிமல்லாதவரின் இறுதிச் சடங்கிற்கு மரியாதை செய்துள்ளார்:

சஹ்ல் பின் ஹுனைஃப் (ரழி) மற்றும் கைஸ் பின் சஅத் (ரழி) ஆகியோர் அல்-காதிஸியா நகரில் அமர்ந்திருந்தனர். அந்த மண்ணில் வசிப்பவர்களில் (முஸ்லிம்களின் பாதுகாப்பில் இருந்த) இஸ்லாத்தைப் பின்பற்றாத ஒருவரின் இறுதி ஊர்வலம் சென்றது. அப்பொழுது அவர்கள் எழுந்து நின்றனர். அப்பொழுது அது மார்க்க நம்பிக்கையில்லாத ஒருவரது என்று அவர்களிடம் கூறப்பட்டது.

அதற்கு அவர்கள் கூறினார்கள், “ஓர் இறுதி ஊர்வலம் அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு முன்னால் சென்ற பொழுது அவர் எழுந்து நின்றார். இது ஒரு யூதரின் சவப்பெட்டி என்று அவரிடம் கூறப்பட்டபோது, ‘அது ஓர் உயிர் (ஆன்மா) இல்லையா?" என்று அவர் கூறினார்". (புகாரி-யில் குறிப்பிடப்பட்டுள்ளது)

இமாம் ஷாஃபியின் கருத்துப்படி, அடக்கச் சடங்குகளுக்குத் தேவைப்பட்டால் ஒரு முஸ்லிம் ஒரு முஸ்லிமல்லாத ஒருவரைக் கழுவி, துணியால் துடைத்து, புதைக்கலாம்.

# மஹ்ரம் மற்றும் மஹ்ரம் அல்லாதோர்

மஹ்ரம் என்பது ஒருவர் திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்படாத அல்லது அவர்களின் முன்னிலையில் ஒருவரின் 'அவ்ராஹ்'-வை[13] மறைக்கப்பட வேண்டிய ஒரு நபர். மஹ்ரம் வரையறைக்குள் வருபவர் இரத்த சொந்தம் அல்லது திருமணத்தின் மூலம் உருவான உறவாக இருக்கலாம். மஹ்ரம் அல்லாதவர் எனப்படுபவர் பல நிபந்தனைகளை[14] பூர்த்தி செய்தபின் திருமணம் செய்து கொள்ளக்கூடிய ஒருவர்.



## பெண்களுக்கான மஹ்ரம் குறித்த விளக்கப்படம்




13 அவ்ராஹ் பற்றிய விளக்கத்திற்காக 'முஸ்லிம் உடைகள்' பாகத்தைப் (11) பார்க்கவும்

14 மேலும் விளக்கத்திற்காக 'இஸ்லாத்தில் திருமணம்' பாகத்தைப் (6) பார்க்கவும்

## உங்கள் மஹ்ரம்கள் யார்?

மஹ்ரம் என்பதை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்: நிரந்தர மஹ்ரம் (மஹ்ரம் மு'அபாத்) மற்றும் தற்காலிக மஹ்ரம் (மஹ்ரம் மு'அக்கத்).

## நிரந்தர மஹ்ரம்கள்

நிரந்தர மஹ்ரம்கள் (மஹ்ரம் மு'அபாத்) இரத்த உறவின் காரணமாக நீங்கள் திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்படாத உறவினர்கள். இவர்களில் பெற்றோர், உடன்பிறந்தவர்கள், சந்ததியினர் (குழந்தைகள், பேரக்குழந்தைகள் மற்றும் பலர்), முன்னோர்கள் (தாத்தா, பாட்டி, பாட்டன், பூட்டி மற்றும் பலர்), அத்துடன் தாய்வழி மற்றும் தந்தைவழி மாமன்கள் உள்ளிட்டோர் அடங்குவர்.

நிரந்தர மஹ்ரம்களின் மற்றொரு வகை செவிலித்தாய் (ராதா'ஆ) மூலம் மஹ்ரம் ஆகும். இதன் மூலம் ஒருவர் இரத்தத்துடன் தொடர்புடையவர்கள் அல்ல என்றாலும் அதே பெண்ணால் தாய்ப்பால் ஊட்டப்பட்ட பிறகு மஹ்ரம் ஆகிறார். சில நிபந்தனைகளின் கீழ் ஒரு பெண் தான் பெற்றெடுக்காத குழந்தைக்கு ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு தாய்ப்பால் கொடுக்கும்போது, இரத்தத்தால் மஹ்ரம் ஆகின்றவர்களின் அதே தடைகள் பொருந்தும்.

### ஆண்களுக்கான மஹ்ரம் குறித்த விளக்கப்படம்



## தற்காலிக மஹ்ரம்கள்

தற்காலிக மஹ்ரம்கள் (மஹ்ரம் முஅக்கத்) என்பது சில நிபந்தனைகளின் அடிப்படையில் மஹ்ரம் அல்லது மஹ்ரம் அல்லாத நிலை மாறுபவர்கள். இந்த வகையான மஹ்ரம்களுக்கு ஒரு நேரடி உதாரணம் திருமணத்தின் மூலம் மஹ்ரம் ஆகின்றவர்கள். இதன் மூலம் ஒருவர் திருமணம் (நிக்காஹ்) நடந்த பிறகு மஹ்ரமாக மாறுகிறார். ஒருவரது துணையுடன் இணைந்தவுடன், அவரது/அவளது மஹ்ரத்தில் மனைவியின் தாய் (மாமியார்) மற்றும் மூதாதையர்கள், அத்துடன் (பல நிபந்தனைகளின் கீழ்) முந்தைய திருமணத்திலிருந்து துணைவியின் குழந்தைகள் மற்றும் அவர்களது சந்ததியினர் ஆகியோர் அடங்குவர்.

எனவே, திருமணத்தின் மூலம் மஹ்ரமாக மாறியவர்களை ஒருவர் திருமணம் செய்வது மார்க்க விதிமுறைகளுக்கு எதிரானது. தங்கள் துணையின் எதிர் பாலினத்தைச் சேர்ந்த உடன்பிறப்புகள் மஹ்ரம் அல்லாதவர்களாகவே இருப்பார்கள் என்பதையும், அவர்களின் முன் தங்கள் அவ்ராஹ்-வை மறைக்க வேண்டும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.





## இனங்களுக்கு இடையிலான கலப்பு திருமணங்கள்

இஸ்லாம் அனைத்து வகையான இனவெறி மற்றும் தவறான அபிப்பிராயங்களுக்கும் எதிரான மார்க்கமாகும். வெவ்வேறு பின்னணியில் உள்ளவர்களுக்கிடையேயான திருமணங்கள் போற்றி பாராட்டப்படுகின்றது. அனைத்து மனிதர்களும் சமம் என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நமக்கு நினைவூட்டுகிறார்:

"மக்களே! உங்கள் இறைவன் ஒருவனே; உங்கள் தந்தை ஆதாம் ஒருவரே; அறிந்து கொள்ளுங்கள்: எந்த ஓர் அரபிக்கும் ஓர் அரபி அல்லாதவரை விடவோ, எந்த ஓர் அரபி அல்லாதவருக்கும் ஓர் அரபியை விடவோ எந்த மேன்மையும் சிறப்பும் இல்லை. எந்த ஒரு வெள்ளையருக்கும் ஒரு கருப்பரை விடவோ, எந்த கருப்பருக்கும் ஒரு வெள்ளையரை விடவோ எந்த மேன்மையும் சிறப்பும் இல்லை. இறையச்சம் மட்டுமே ஒருவரின் மேன்மையை நிர்ணயிக்கும். நான் இறைச்செய்தியை எத்தி வைக்கவில்லையா?"

(அஹ்மத்-இல் பதியப்பட்டுள்ளது)

புதிய முஸ்லிம்கள் வேறு கலாச்சார பின்னணி கொண்ட நபரை மணம் செய்து கொள்ளலாம். மாற்று இனங்கள் மற்றும் கலாச்சாரங்கள் இடையேயான திருமணங்கள் அரிதாக இல்லாவிட்டாலும், அதில் சில சவால்கள் இருப்பதை மறுக்கமுடியாது, அதிலும் குறிப்பாக அவர்கள் திருமணம் செய்து கொள்ளும் குடும்பத்தின் கலாச்சாரத்தில் உள்ள மரபுகள் மற்றும் பழக்கவழக்கங்களைப் பற்றி ஆரம்பத்தில் முழுமையாக அறிந்திருக்கவில்லை என்றால்.

தங்கள் துணைவரின் கலாச்சார பழக்கவழக்கங்களை அறிந்திருந்தால் குடும்பத்தில் ஏற்படும் மோதல்களைக் கையாள முடியும். குடும்பங்களில் அமைதியையும் நல்லிணக்கத்தையும் பேணுவதற்கு ஒருவர் மனதில் கொள்ள வேண்டிய சில விஷயங்கள் பின்வருமாறு:

01

## திறந்த மனதுடனும் புரிதலுடன் இருக்க வேண்டும்

மாற்று கலாச்சார தம்பதிகளிடையே பழக்கமில்லாத வாழ்க்கைமுறை மாற்றங்களால் ஏற்படும் சவால்களை எளிதாக சமாளிக்க ஒருவருக்கொருவர் பேச்சுவார்த்தை மூலம் முயல வேண்டும். வேறுபாடுகளைப் பொறுத்துக்கொள்வதை விட திறந்த மனதுடன் பேசி சமரசம் செய்வதற்கான வழிகளைக் காண வேண்டும். சில சூழல்களில் எதிர்வினையாற்றுவது போல தோன்றினாலும் இது போன்று பேச்சுவார்த்தை மூலம் தீர்வைக் கண்டால் அது தம்பதிகள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு இடையே வலுவான புரிதல் மற்றும் பிணைப்புகளை வளர்க்க உதவும்.

உறவுகளைப் பேணுவதற்கு இஸ்லாம் வலியுறுத்துகின்றது. ஏதேனும் தவறான புரிதலோ மனஸ்தாபங்களோ ஏற்பட்டால் நாம் பொறுமை கடைபிடிப்பது அவசியம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். நமது அருமை நபி (ஸல்) அவர்கள் ஒருமுறை கூறினார்:

"உங்கள் உறவைப் பேணுவதற்கு உங்கள் பரம்பரையைப் பற்றி போதுமான அளவு அறிந்து கொள்ளுங்கள். மேலும் நிச்சயமாக உறவுகளைப் பேணுவது உறவினர்களிடையே பாசத்தையும் செல்வங்களையும் அதிகரித்து ஆயுட்காலத்தையும் அதிகரிக்கிறது".- (திர்மிதி 1979)

02

## மரியாதையுடனும் அன்புடனும் இருங்கள்

அல்லாஹ்வின் தூதர் அருமை நபி (ஸல்) கூறினார்:

"சுவர்க்கவாசிகள் மூன்று வகையானவர்களாக இருப்பார்கள்: முதலாவது நேர்மையான ஆட்சியாளர், இரண்டாவது தனது உறவினர்களிடம் கருணை காட்டுபவர், மற்றும் மூன்றாவது பெரிய குடும்பத்தை கொண்ட மார்க்கப்பற்று கொண்டு யாசகம் செய்வதைத் தவிர்ப்பவர்".முஸ்லிம்-இல் குறிப்பிடப்பட்டுள்ளது

இரக்க குணம் என்பது வாழ்வின் அனைத்து நிலைகளிலும் நிலைக்க வேண்டிய ஒரு பண்பாகும். நமது குணாதிசியத்திற்கு ஒத்திசைக்காதவர்களுடன் நாம் விலகி இருந்த தருணங்கள் இருக்கக்கூடும். நமது குணாதிசியத்திற்கு பொருந்தாமல் இருந்தாலும் நம் குடும்பத்தாரிடமும் வாழ்கைத் துணைவருடனும் பொறுமையாகவும் அமைதியாகவும் இருக்க கற்றுக்கொள்ள வேண்டும். இந்த பாகத்தில் முன்னர் குறிப்பிட்டது போல், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உறவை முறித்துக் கொள்வதற்கு எதிராக எச்சரித்துள்ளார். எனவே, வலுவான பிணைப்புகளைப் பாதுகாக்க நம்மால் முடிந்த அனைத்தையும் செய்வது நமது கடமையாகும்.

03

## நல்ல நோக்கத்துடன் திருமணத்திற்கு திட்டமிடல்

இரண்டு தனிநபர்கள் மற்றும் குடும்பங்களின் சங்கமம் என்பதைத் தவிர, திருமணம் என்பது அல்லாஹ்வை வணங்குவதற்கும் அவனிடம் ஏராளமான நற்கூலிகளைப் பெறுவதற்கும் ஒரு வாய்ப்பாகும். எனவே, திருமண பயணத்தை மேற்கொள்வதற்கு முன், நமது நோக்கங்களைத் தெளிவாக்கிக் கொள்வது முக்கியம். நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு ஹதீஸில் குறிப்பிடுகிறார்:

"ஒரு மனிதன் தனது குடும்பத்திற்காக (அல்லாஹ்விடமிருந்து வெகுமதியைப் பெற வேண்டும் என்ற நோக்கத்துடன்) குடும்பத்திற்காக செலவழித்தால், அது அவனுக்கு (உறுதிசெய்யும்) நற்கூலியாகும்". (புகாரி 55)

குடும்பத்திற்காக நாம் செய்யும் எல்லாவற்றிலும், நமது நோக்கங்கள் தூய்மையானவை என்பதை நாம் உறுதி செய்ய வேண்டும். அல்லாஹ்வுக்காகக் காரியங்களைச் செய்வது என்பது நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் உண்மையானது மற்றும் நேர்மையானது என்று அர்த்தம். எனவே, அல்லாஹ்வைத் திருப்திப்படுத்துவது மட்டுமல்லாமல், நம்மைச் சுற்றியுள்ளவர்களையும் மகிழ்விப்போம்.

?

இஸ்லாம் அல்லாத பண்டிகைகளை முன்பு போல நான் கொண்டாடலாமா?

ஹலால் அல்லாத உணவு மற்றும் பானங்களை நாம் உட்கொள்ளாத வரையிலும் தவ்ஹீத்-திற்கு எதிரான செயல்களில் ஈடுபடாத வரையிலும், குடும்பத்தை ஒன்றிணைக்கும் எந்தவொரு ஒன்றுகூடலையும் கொண்டாட்டங்களையும் இஸ்லாம் தடை செய்யவில்லை. உண்மையில், இஸ்லாம் முஸ்லிம்களை ஒரே நம்பிக்கையைப் பகிர்ந்து கொண்டாலும் இல்லாவிட்டாலும் ஒரு குடும்பத்தின் பிணைப்பை அதிகரிக்கும் கொண்டாட்டங்களை ஊக்குவிக்கிறது.

## சுருக்கம்

* நமது குடும்பத்துடன் வலுவான உறவைப் பேணுவது இஸ்லாத்தில் முக்கியமானது. உறவுகளைத் துண்டிப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.
* பெற்றோரை மரியாதையுடனும் அன்புடனும் நடத்துவது இஸ்லாத்தின் முதன்மையான கடமைகளில் ஒன்றாகும். பெற்றோர்கள், வேறுபட்ட நம்பிக்கை கொண்டவர்களுக்கு கூட, நமது மார்க்கத்தில் உயர்ந்த அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.
* குடும்பத்தில் பெற்றோர் மற்றும் குழந்தைகள் இருவருக்கும் தனிப்பட்ட உரிமைகள் உள்ளன. இதில் நன்முறையில் மதிக்கப்படுவதும் நடத்தப்படுவதும் உள்ளடங்கியுள்ளன.
* இஸ்லாம் மாற்று சமயத்தைப் பின்பற்றுபவர்களை வேறுபடுத்துவதில்லை. எனவே, முஸ்லிமல்லாத பெற்றோருக்கு மகன்கள் மற்றும் மகள்களின் கடமைகள் முஸ்லிம் பெற்றோருடன் இருப்பவர்களின் கடமைகளிலிருந்து வேறுபட்டவை அல்ல.
* பேச்சுவார்த்தை, இரக்ககுணம் மற்றும் நல்ல புரிதல் ஆகியவை குடும்பங்களுக்கு இடையே நல்லிணக்கத்தைப் பேணுவதற்கான முக்கிய அம்சங்களாகும்.

பாகம்-8

# முஸ்லிம் மற்றும் செல்வம்



# இஸ்லாத்தில் வாழ்வாதாரம் பற்றிய கருத்து

வாழ்வாதாரம் இஸ்லாத்தில் ரிஸ்க் (rizq) என்று குறிப்பிடப்படுகிறது. அல்லாஹ் மனித குலத்தைப் படைத்தபோது, இவ்வுலகில் நாம் இருக்கும் வரையிலான காலத்திற்கு நமக்கு உணவாக இருக்கும் ரிஸ்க்கை நமக்காக ஒதுக்கினான். அவன் பூமியையும் அதில் உள்ள அனைத்தையும், கால்நடைகள் மற்றும் தாவரங்கள் போன்ற உயிருள்ள மற்றும் கருவிகள் மற்றும் மூலப்பொருட்கள் உயிரற்ற பொருட்கள் என இருவகைப்படுத்தியுள்ளான்.

பூமியிலிருந்தும் அதன் வளங்களிலிருந்தும் நாம் பயனடைவதற்கான வழிமுறைகளையும் அல்லாஹ் நமக்கு வழங்கியுள்ளான்.மேலும், அவன் பூமியின் மீது மழையைப் பொழியச் செய்தான், அதிலிருந்து மரங்களையும் தாவரங்களையும் முளைக்கச் செய்தான். நாம் எங்கிருந்தாலும், அல்லாஹ் நமக்காகத் தீர்மானித்த ரிஸ்க் நமக்கு வழங்கப்படும்.

### ரிஸ்க் நம் வாழ்வின் ஒரு பகுதியாகும்

ரிஸ்க் என்பது பொருட்செல்வத்திற்குள் மட்டும் மட்டுப்படுத்தாமல், நமக்குத் தேவையான வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியது. விளக்கமாக கூறினால் உடல் ஆரோக்கியம் ஒரு ரிஸ்க், குழந்தைகள் ஒரு ரிஸ்க், ஒரு நல்ல துணை ஒரு ரிஸ்க், கணவனுக்கு ஒரு அர்ப்பணிப்புள்ள மனைவி ஒரு ரிஸ்க், அதே போல் மனைவிக்கு அர்ப்பணிப்புள்ள கணவன் ஒரு ரிஸ்க், பெற்றோர் இருப்பது ஒரு ரிஸ்க், மார்க்க நம்பிக்கை/ஈமான் ஒரு ரிஸ்க், மேலும் ஒரு நல்ல செயலைச் செய்ய முடிவதும் ஒரு வகையான ரிஸ்க் ஆகும். பொதுவாக மக்கள் நினைப்பதை விட ரிஸ்க்கின் கட்டமைப்பு அதிகம் என்பதை நாம் அறிய வேண்டும்.

இறைநம்பிக்கையாளர் (முஃமின்) நம்ப வேண்டிய மிக முக்கியமான விஷயங்களில் ஒன்று,

அல்லாஹ் ஒருவன் மட்டுமே வாழ்வாதாரத்தை வழங்குபவன் (அர்-ரஸ்ஸாக் - Ar-Razzaq).

அவனே அனைத்து படைப்புகளையும் உருவாக்கி அவற்றின் வாழ்வாரத்திற்கான வழியையும் வகுத்துள்ளான். திருகுர்ஆனில் அல்லாஹ் கூறியுள்ளான்:

وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنسَ إِلَّا لِيَعْبُدُونِ ﴿٥٦﴾ مَا أُرِيدُ مِنْهُم مِّن رِّزْقٍ وَمَا أُرِيدُ أَن يُطْعِمُونِ ﴿٥٧﴾ إِنَّ ٱللَّهَ هُوَ ٱلرَّزَّاقُ ذُو ٱلْقُوَّةِ ٱلْمَتِينُ ﴿٥٨﴾

“இன்னும், ஜின்களையும், மனிதர்களையும் அவர்கள் என்னை வணங்குவதற்காகவேயன்றி நான் படைக்கவில்லை. அவர்களிடமிருந்து எந்த பொருளையும் நான் விரும்பவில்லை. எனக்கு அவர்கள் உணவு அளிக்க வேண்டுமென்றும் நான் விரும்பவில்லை.நிச்சயமாக அல்லாஹ்தான் உணவு அளித்துக் கொண்டிருப்பவன்; பலம் மிக்கவன்; உறுதியானவன்”. (திருக்குர்ஆன் 51:56-58)

அல்லாஹ் அடியார்களை ரிஸ்க் தேடுவதற்கு பாடுபடுமாறு வலியுறுத்துகிறான். அவன் திருகுர்ஆனில் கூறுகிறாரன்:

هُوَ الَّذِي جَعَلَ لَكُمُ الْأَرْضَ ذَلُولًا فَامْشُوا فِي مَنَاكِبِهَا وَكُلُوا مِن رِّزْقِهِ ۖ وَإِلَيْهِ النُّشُورُ ﴿١٥﴾

“அவனே உங்களுக்கு இப்பூமியை (நீங்கள் வாழ்வதற்கு) வசதியாக ஆக்கினான்; ஆகவே, அதன் பல மருங்குகளிலும், நடந்து அவனுடைய உணவிலிருந்து புசியுங்கள்; இன்னும் அவனிடமே (யாவரும்) உயிர்த்தெழவேண்டியிருக்கிறது”.

(திருக்குர்ஆன் 67:15)



கணிக்க இயலாத அளவிற்கு முழுமையான, விரிவான மற்றும் இணையற்ற மார்க்கமான இஸ்லாத்தை அளித்ததன் மூலம் அல்லாஹ் மனித குலத்தைக் கௌரவித்துள்ளான். மக்கள் கண்ணியமாக வாழ இஸ்லாத்தை முழுமையாக வாழ்வில் நடைமுறைப்படுத்தினால் போதுமானதாக அல்லாஹ் படைத்துள்ளான். அதனை அடைய வேண்டும் என்றால் இஸ்லாமிய மார்க்கம் வழிவகுக்கும் வழிமுறைகள் முதலில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

அடக்குமுறைக்கும் சுரண்டலுக்கும் இடமளிக்காமல், பரஸ்பர மரியாதையின் அடிப்படையில், ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தின் மூலம் மட்டுமே இத்தகைய வழிமுறைகளை அடைய முடியும்.

இந்த அத்தியாயத்தில் விளக்கப்பட இருக்கும் தர்மத்தின் (ஜகாத்) குறிக்கோள்களில் ஒன்று எந்தவொரு தனிநபரின் வருவாயின் வளர்ச்சியும் சமூகநீதியின் சமநிலையைச் சீர்குலைக்காமல் இருப்பதை உறுதி செய்வதோடு ஒவ்வொரு தனிமனிதனும் தன்னிறைவுக்கான திறன் அடைய வழிவகை அளிப்பதாகும்.

மாற்று சமய பழங்குடியினர் மற்றும் மற்ற நகரங்களில் வசித்த மக்களை இஸ்லாத்திற்கு அழைப்பதற்காக கண்மணி நாயகம் (ஸல்) அவர்கள் தம் தோழர்களை அனுப்பியபோது, அவர்களிடம் கூறினார்:

“வணங்கப்படுவதற்கு அல்லாஹ்வைத் தவிர வேறு யாருக்கும் உரிமை இல்லை என்றும், நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) என்றும் சாட்சியமளிக்க மக்களை அழைக்கவும், அவர்கள் உங்களுக்குக் கீழ்ப்படிந்தால், ஒவ்வொரு நாளும் இரவும் (இருபத்தி நான்கு மணிநேரத்தில்) ஐந்து தொழுகைகளை அல்லாஹ் அவர்களுக்குக் கட்டாயமாக்கியுள்ளான் என்பதை அவர்களுக்குக் கற்பிக்கவும்), அவர்கள் உங்களுக்குக் கீழ்ப்படிந்தால், அவர்களுடைய சொத்துக்களிலிருந்து ஜகாத் கொடுப்பதை அல்லாஹ் அவர்களுக்குக் கடமையாக்கியுள்ளான் என்றும், அது அவர்களில் உள்ள செல்வந்தர்களிடமிருந்து எடுக்கப்பட்டு ஏழைகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் அவர்களுக்கு விளக்குங்கள்”. (புகாரி-யில் குறிப்பிடப்பட்டுள்ளது)

# ஜகாத்தின் விளக்கம் மற்றும் நோக்கம்

'தானம்" என்பதற்கு இணையான இஸ்லாமிய சொற்கூறு ஜகாத் ஆகும். சொற்களஞ்சியத்தில், ஜகாத் என்ற சொல் தூய்மைப்படுத்துதல், வளர்ச்சி மற்றும் அருட்கொடை ஆகியவற்றைக் குறிக்கிறது. இஸ்லாமிய சட்டத்தில், ஒருவரின் பொருட்செல்வத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதியை வகுக்கப்பட்ட நிபந்தனைகளுக்குள் பொருந்தக்கூடிய ஏழைகளுக்கு விநியோகிப்பதாகும்.

திருகுர்ஆனில் அல்லாஹ் கூறியுள்ளான்:

خُذْ مِنْ أَمْوَالِهِمْ صَدَقَةً تُطَهِّرُهُمْ وَتُزَكِّيهِم بِهَا وَصَلِّ عَلَيْهِمْ ۖ إِنَّ صَلَاتَكَ سَكَنٌ لَّهُمْ ۗ وَاللَّهُ سَمِيعٌ عَلِيمٌ ﴿١٠٣﴾

“(நபியே!) அவர்களுடைய செல்வத்திலிருந்து தர்மத்திற்கானதை எடுத்துக் கொண்டு, அதனால் அவர்களை உள்ளும் புறமும் தூய்மையாக்குவீராக, இன்னும் அவர்களுக்காகப் பிரார்த்தனை செய்வீராக; நிச்சயமாக உம்முடைய பிரார்த்தனை அவர்களுக்கு (சாந்தியும்), ஆறுதலும் அளிக்கும்; அல்லாஹ் (யாவற்றையும்) செவியுறுவோனாகவும், அறிபவனாகவும் இருக்கின்றான்."

(திருக்குர்ஆன் 9:103)

ஜகாத் இஸ்லாத்தின் ஐந்து தூண்களில் ஒன்றாகும். திருகுர்ஆனில் பல ஆயத்துகளில் தினசரி தொழுகை (ஸலாஹ்) நிலைநிறுத்த கட்டளையிடுவதுடன் ஜகாத்-ஐயும் நிறைவேற்றுங்கள் என்று அல்லாஹ் குறிப்பிடுகின்றான்.

وَأَقِيمُوا الصَّلَاةَ وَآتُوا الزَّكَاةَ وَأَطِيعُوا الرَّسُولَ لَعَلَّكُمْ تُرْحَمُونَ ﴿٥٦﴾

“(முஃமின்களே!) நீங்கள் கிருபை செய்யப்படும் பொருட்டு, நீங்கள் தொழுகையை நிலை நிறுத்துங்கள்; இன்னும் ஜகாத்தைக் கொடுங்கள்; மேலும், (அல்லாஹ்வின்) தூதருக்குக் கீழ்படியுங்கள்"

(திருக்குர்ஆன் 24:56)

வழக்கமான நன்கொடையுடன் இணைக்காமல் ஜகாத்-ஐ ஒரு தனிக்கடமையாக கருத வேண்டும். மேலும் ஒரு நபரின் செல்வம் ஒரு வருடம் முழுவதும் குறிப்பிட்ட ஒரு தொகைக்கு மேல் இருக்கும் பட்சத்தில் மட்டுமே அது அவருக்கு கடமையாகும்.



# ஜகாத் வகைகள்

- **ஜகாத் பித்ராஹ் (Zakat Fitrah)**

  ஜகாத் ஃபித்ரா என்பது ஈத் உல்-பித்ர் தொழுகைக்கு முன் ரமழானில் செலுத்தப்பட வேண்டிய கடமையாகும். இந்த ஜகாத் பொதுவாக குடும்பத் தலைவரால் அவர் மற்றும் அவரைச் சார்ந்தவர்களின் சார்பாக செலுத்தப்படுகிறது. ஜகாத் ஃபித்ராவிற்கு ஒருவர் செலுத்த வேண்டிய தொகை அந்த நபர் வசிக்கும் சமூகத்தின் பிரதான உணவின் 2.3கிலோ அல்லது அதற்கு சமமான விலையாக நிர்ணயிக்கப்படுகின்றது.



- **செல்வத்தின் மீதான ஜகாத் (Zakat on Wealth)**

  செல்வத்தின் மீதான ஜகாத் என்பது ஒரு நபர் தனது செல்வம் சில நிபந்தனைகளை பூர்த்தி செய்தவுடன் செலுத்த வேண்டிய கடமையாகும். செல்வத்தின் வகையைப் பொறுத்து அதன் மதிப்பில் குறிப்பிட்ட சதவிகிதத்தை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படும் இந்த ஜகாத் செல்வத்தின் உரிமையாளரால் செலுத்தப்பட வேண்டும்.



# ஜகாத்-இன் நன்மைகள்

இறைவனால் விதிக்கப்பட்ட இஸ்லாமியச் சட்டமான ஜகாத் சரியாகச் செயல்படுத்தப்பட்டால், சமூகஅளவிலும் மற்றும் உலகளாவிய அளவிலும் மனிதகுலத்திற்கு எப்பொழுதும் நன்மையைத் தரும்.

**01**

ஜகாத் செலுத்துவது மனிதனின் இதயத்தை சுயநலம் மற்றும் பேராசையிலிருந்து தூய்மைப்படுத்த உதவுகிறது, ஏனெனில் மனிதர்கள் பொருள் செல்வத்தை விரும்புவதற்கும் உலக உடைமைகளுடன் ஆசை வைப்பவர்களுமாக உள்ளனர். திருகுர்ஆனில் கூறப்பட்டுள்ளது:

خُذْ مِنْ أَمْوَالِهِمْ صَدَقَةً تُطَهِّرُهُمْ وَتُزَكِّيهِم ... ﴿١٠٣﴾

"அவர்களை நீர் சுத்தப்படுத்தி அவர்களின் அகங்களைத் தூய்மையாக்கி வைப்பீராக! திருக்குர்ஆன் 9:103)

**02**

ஜகாத் முறையை நடைமுறைப்படுத்தி ஒருவருக்கொருவர் உதவுவதன் மூலம் சமூகத்தின் உறுப்பினர்களிடையே நல்லுறவை உருவாக்குகிறது. இது சமூகத்தை மார்க்க நம்பிக்கைக் கொண்ட விசுவாசிகளின் நல்லிணக்க சூழலை வளர்க்கிறது. மேலும், இதன் மூலமாக கடுமையான நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் மக்கள் வேதனை மற்றும் விரக்தியில் தங்கள் தேவைகளை நிறைவேற்ற சட்டவிரோத வழியை நாடுவதில் இருந்தும் பாதுகாக்கப்படுகிறனர்.

**03**

ஜகாதை அல்லாஹ்வை வழிப்படும் முறைகளில் ஒன்றாக இஸ்லாம் உயர்த்துகின்றது. நாம் ஜகாத் செலுத்தும் போது, நமது செல்வங்கள் அனைத்தும் அல்லாஹ்வின் அருட்கொடை என்பதை நாம் உணர்வதோடு அவன் நமக்கு செய்த கிருபைக்காகவும் அவனுக்கு நன்றி செலுத்துகிறோம்.

وَإِذْ تَأَذَّنَ رَبُّكُمْ لَئِن شَكَرْتُمْ لَأَزِيدَنَّكُمْ ۖ وَلَئِن كَفَرْتُمْ إِنَّ عَذَابِي لَشَدِيدٌ ﴿٧﴾

"(இதற்காக எனக்கு) நீங்கள் நன்றி செலுத்தினால், உங்களுக்கு நிச்சயமாக நான் (என்னருளை) அதிகமாக்குவேன்; (அவ்வாறில்லாது) நீங்கள் மாறு செய்தீர்களானால் நிச்சயமாக என்னுடைய வேதனை மிகக் கடுமையானதாக இருக்கும்" என்று உங்களுக்கு இறைவன் அறிக்கை இட்டதையும் (நினைவு கூறுங்கள்). (திருக்குர்ஆன் 14:7)

**04**

ஜகாத் செலுத்துவது ஒருவருடைய செல்வத்திற்கு அருட்கொடையாகும்

قُلْ إِنَّ رَبِّي يَبْسُطُ الرِّزْقَ لِمَن يَشَاءُ مِنْ عِبَادِهِ وَيَقْدِرُ لَهُ ۚ وَمَا أَنفَقْتُم مِّن شَيْءٍ فَهُوَ يُخْلِفُهُ ۖ وَهُوَ خَيْرُ الرَّازِقِينَ ﴿٣٩﴾

"நிச்சயமாக என் இறைவன் தன் அடியார்களில் யாருக்கு நாடுகிறானோ, அவருக்கு செல்வத்தை விசாலப்படுத்துவான்; இன்னும் தான் நாடியோருக்கு சுருக்கியும் விடுகிறான்; ஆகவே நீங்கள் எந்தப் பொருளை (அல்லாஹ்வின் பாதையில்) செலவு செய்த போதிலும், அவன் அதற்குப் பிரதிபலன் அளிக்கிறான்; மேலும், அவன் கொடையாளிகள் அனைவரிலும் மிகவும் மேலானவன்" என்று (நபியே!) நீர் கூறும். (திருக்குர்ஆன் 34:39)

05

ஜகாத் கொடுப்பதன் மூலம் மற்றவர்களுக்கு குறிப்பாக உதவி தேவைப்படுபவர்களுக்கு அதிகமாக உதவும் பண்பு அதிகரிக்கின்றது.

الَّذِينَ يُنفِقُونَ فِي السَّرَّاءِ وَالضَّرَّاءِ وَالْكَاظِمِينَ الْغَيْظَ وَالْعَافِينَ عَنِ النَّاسِ ۗ وَاللَّهُ يُحِبُّ الْمُحْسِنِينَ ﴿١٣٤﴾

“(பயபக்தியுடையோர் எத்தகையோர் என்றால்,) அவர்கள் இன்பமான (செல்வ) நிலையிலும், துன்பமான (ஏழ்மை) நிலையிலும் (இறைவனின் பாதையில்) செலவிடுவார்கள்; தவிர கோபத்தை அடக்கி கொள்வார்கள்; மனிதர்(கள் செய்யும் பிழை)களை மன்னிப்போராய் இருப்பார்கள்; (இவ்வாறு அழகாக) நன்மை செய்வோரையே அல்லாஹ் நேசிக்கின்றான் (திருக்குர்ஆன் 3:134)

06

பிறரிடம் கருணைக் காட்டுவது என்பது ஒவ்வொரு முஸ்லிமும் பின்பற்ற வேண்டிய பண்பு. இயல்பிலேயே மனிதன் தன் செல்வத்தின் மீது கஞ்சத்தனமாக நடந்து கொள்கிறான்.

قُل لَّوْ أَنتُمْ تَمْلِكُونَ خَزَائِنَ رَحْمَةِ رَبِّي إِذًا لَّأَمْسَكْتُمْ خَشْيَةَ الْإِنفَاقِ ۚ وَكَانَ الْإِنسَانُ قَتُورًا ﴿١٠٠﴾

“என்னுடைய இறைவனின் (ரஹ்மத்து என்னும்) அருள் பொக்கிஷங்களை நீங்கள் சொந்தப்படுத்திக் கொண்டு இருப்பீர்களானாலும், அவை செலவாகி விடுமோ என்ற பயத்தினால், நீங்கள் (அவற்றைத்) தடுத்துக்கொள்வீர்கள் - மேலும், மனிதன் உலோபியாகவே இருக்கின்றான்” என்று (நபியே!) நீர் கூறும். (திருக்குர்ஆன் 17:100)

07

நமது செல்வத்தின் ஒரு பகுதி ஏழைகளுக்குச் சொந்தமானது என்று ஜகாத் சட்டம் கூறுகிறது. எனவே, ஜகாத்தை செலுத்துவதன் மூலம், உண்மையில் நமக்கு உரிமையில்லாத பங்கிலிருந்து நமது செல்வத்தைத் தூய்மைப்படுத்துகின்றோம். ஜகாத் செலுத்தாமல் இருந்தால் இஸ்லாத்தின் பார்வையில் ஒருவருக்கு சொந்தமான செல்வம் அவரிடமிருந்து பதுக்கப்படுகின்றது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்:

“உங்கள் செல்வத்திற்கு ஜகாத் கொடுத்தால் அதன் தீமையை நீக்கி விட்டீர்கள் (இப்னு குஸைமா குறிப்பிட்டுள்ளார்)

மேலுள்ள ஹதீஸில் கூறப்படும் “தீமை” என்பது ஜகாத் கொடுக்காமல் இருப்பவர்களுக்கு ஏற்படும் பேரழிவைக் குறிக்கின்றது.

08

ஜகாத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நாட்டுக்கு பொருளாதார நன்மையும் கிடைக்கும். சிறிய எண்ணிக்கையிலான மக்கள் நாட்டின் பெரும்பான்மையான செல்வத்தை வைத்திருக்கும் பொழுது சமூகத்திற்கு தீங்கு விளைவிக்கும் என்பதற்கு சரித்திரங்களே சாட்சி. பணக்காரர்களுக்குச் சொந்தமான செல்வத்தின் ஒரு பகுதி பதுக்கப்படாமல் ஜகாத் மூலம் ஏழைகளுக்கு பகிர்ந்தளிக்கும் பொழுது செல்வப் பங்கீட்டில் உள்ள இந்த ஏற்றத்தாழ்வைக் கணிசமாக தணிக்க உதவுகிறது. இதன் விளைவாக நாட்டின் பெருவாரியான பொருளாதாரம் தேக்க நிலைக்குத் தள்ளப்படாமல் தடுக்கப்படுகின்றது.

مَّا أَفَاءَ اللَّهُ عَلَىٰ رَسُولِهِ مِنْ أَهْلِ الْقُرَىٰ فَلِلَّهِ وَلِلرَّسُولِ وَلِذِي الْقُرْبَىٰ وَالْيَتَامَىٰ وَالْمَسَاكِينِ وَابْنِ السَّبِيلِ كَيْ لَا يَكُونَ دُولَةً بَيْنَ الْأَغْنِيَاءِ مِنكُمْ ۚ وَمَا آتَاكُمُ الرَّسُولُ فَخُذُوهُ وَمَا نَهَاكُمْ عَنْهُ فَانتَهُوا ۚ وَاتَّقُوا اللَّهَ ۖ إِنَّ اللَّهَ شَدِيدُ الْعِقَابِ ﴿٧﴾

“அவ்வூராரிடமிருந்தவற்றில் அல்லாஹ் தன் தூதருக்கு (மீட்டுக்) கொடுத்தவை, அல்லாஹ்வுக்கும் (அவன்) தூதருக்கும், உறவினர்களுக்கும், அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், வழிப்போக்கருக்குமாகும்; மேலும், உங்களிலுள்ள செல்வந்தர்களுக்குள்ளேயே (செல்வம்) சுற்றிக் கொண்டிருக்காமல் இருப்பதற்காக (இவ்வாறு பங்கிட்டுக் கொடுக்கக் கட்டளையிடப் பட்டுள்ளது); மேலும், (நம்) தூதர் உங்களுக்கு எதைக் கொடுக்கின்றாரோ அதை எடுத்துக் கொள்ளுங்கள்; இன்னும், எதை விட்டும் உங்களை விலக்குகின்றாரோ அதை விட்டும் விலகிக் கொள்ளுங்கள்; மேலும், அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் வேதனை செய்வதில் மிகக் கடினமானவன் (திருக்குர்ஆன் 59:7)

09

ஜகாத் வறியோர்களையும் ஏழைகளையும் பாதுகாக்க உதவுகிறது. சமூகத்தில் உடல் ரீதியாகவோ மனரீதியாகவோ குறைந்த திறன் கொண்டவர்கள் வருமானம் ஈட்ட முடியாத இக்கட்டான நிலையில் இருப்பர். அவர்களுக்கு ஜகாத் பணத்தில் இருந்து வழங்கப்படக்கூடிய ஒரு குறிப்பிட்ட அளவு உதவி கிடைக்கும் பொழுது அவர்கள் வாழ்வதற்கு யாசகம் செய்யும் அவலநிலைக்கு தள்ளப்படமாட்டார்கள்.

## நாம் எப்போது ஜகாத் கொடுக்க வேண்டும்?

ஒரு முஸ்லிம் தன்னிடம் ஒரு ஹிஜ்ரத் ஆண்டு அல்லது 355 நாட்களுக்கு (ஹவுல்) நிஸாப் அளவைக் (ஒரு செல்வத்தின் மீது ஜகாத் வழங்க வேண்டியதைத் தீர்மானிக்கும் குறைந்தபட்சத் தொகை) கொண்ட பொருட்செல்வமோ அல்லது பணசெல்வமோ வைத்திருந்தால் அதன் மீது ஜகாத் கொடுப்பது அவர் மீது கடமையாகின்றது. ஜகாத் தரவேண்டிய செல்வத்தின் வகையைப் பொறுத்து அதன் நிசாப் மற்றும் ஜகாத்துக்கான விகிதம் மாறுபடும்.

## ஜகாத் கடமையாகும் செல்வத்தின் வகைகள்

அனைத்து வகையான பொருட்செல்வத்தின் மீதும் ஜகாத் கொடுக்க வேண்டிய கட்டாயமில்லை. அல்லாஹ் திருகுர்ஆனில் ஜகாத் செலுத்த வேண்டிய செல்வத்தின் வகைகளைக் கூறியிருந்தாலும் குறிப்பாக எந்தெந்த பொருட்செல்வங்களில் ஜகாத் கடமையாகும் என்பதும் ஜகாத் எவ்வாறு கணக்கிடப்படுகிறது என்பதும் விரிவாக விளக்கவில்லை.

ஜகாத் எவ்வாறு முறைப்படுத்தப்பட வேண்டும் என்பதை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டுதல்கள் (சுன்னாஹ்) கொண்டு நபித்தோழர்களும் முன்னோடி மார்க்க அறிஞர்களும் விரிவாக்கியுள்ளனர்.

ஒரு பொருளின் மதிப்பு காலப்போக்கில் அதிகரித்து வந்தாலோ அல்லது வளர்வதற்கான சாத்தியக்கூறுகள் இருந்தாலோ அந்த பொருளின் மீது ஜகாத் வழங்குவது கட்டாயமாகின்றது. அந்த செல்வத்திற்கு விதிக்கப்படும் ஜகாத் என்பது அப்பொருளின் உரிமையாளர் பாதிக்கப்படாமல் உபரியிலிருந்து எடுக்கப்படும் ஒரு சிறிய சதவீதமாகும்.

மதிப்பு வளர்ச்சியடையாத அல்லது வளரும் திறன் இல்லாத பொருட்களின் மீது ஜகாத் வழங்க தேவையில்லை.மதிப்பு கூடாமல் உள்ள பொருட்களுக்கு ஜகாத் கடமையாக்கப்பட்டால், சில தசாப்தங்களில் மூலதனமே அழியக்கூடிய சூழல் உருவாகும். நிச்சயமாக அல்லாஹ் மார்க்கத்தில் ஜகாத்தைக் கட்டாயமாக்கியதன் நோக்கம் அதுவல்ல. ஜகாத் என்பது ஏழைகளுக்கு உதவுவதற்காக மட்டுமே தவிர பணக்காரர்களை ஏழையாக்குவதற்காக அல்ல. கண்மணி நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்:

“ஜகாத் எந்த வகையிலும் செல்வத்தைக் குறைக்காது”
(முஸ்லிம்-இல் குறிப்பிடப்பட்டுள்ளது)

உரிமையாளர்கள் வசிக்கும் வீடுகள் மற்றும் போக்குவரத்துக்கு பயன்படுத்தப்படும் விலங்குகள் போன்ற சுய பயன்பாட்டில் உள்ள பொருட்களுக்கு ஜகாத் வழங்குவதிலிருந்து விலக்களிப்பட்டுள்ளது.

## ஜகாத் காட்டாயமாக்கப்பட்டுள்ள பொருள் வகைகள்

### 1. தங்கம் மற்றும் வெள்ளி



தங்கம் மற்றும் வெள்ளி இஸ்லாமிய சட்டத்தில் மதிப்பு அதிகரிக்கும் பொருட்களாக கருதப்படுகிறது. இதில் தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்கள், கட்டிகள் மற்றும் கரண்டி வகைகள் அடங்கும். ஆனால் குறிப்பிட்ட அளவிலான பெண்கள் அணியும் தங்கம் மற்றும் வெள்ளி நகைகள் அல்லது ஆண்கள் அணியும் வெள்ளி மோதிரங்கள் மற்றும் நகைகளுக்கு ஜகாத் வழங்குவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

தங்கம் அல்லது வெள்ளியின் மதிப்பு அதன் நிசாபை அடைந்த பிறகு ஒரு ஹிஜ்ரத் ஆண்டு (ஹவுல்) கடந்துவிட்டால், 2.5% ஜகாத் செலுத்த வேண்டும். தங்கத்திற்கான நிசாப் என்பது 86 கிராம் தூய தங்கத்திற்கும் வெள்ளிக்கு நிசாப் என்பது 595 கிராம் தூய வெள்ளிக்கு சமம்.

குறைந்தபட்சம் 860 கிராம் எடையிலான அலங்காரத்திற்கு பயன்படுத்தப்படும் தங்கம் ஹவுல் கால இடைவெளியை எட்டியிருந்தால் ஜகாத் கடமையாகின்றது என்று 9 ஜூன் 2011 தேதியிட்ட ஃபத்வா கமிட்டி தேதியிட்ட ஃபத்வாவில் கூறப்பட்டுள்ளது.

நிசாப் ஒரு வருடம் முழுவதும் உரிமையாளரின் வசம் இருக்க வேண்டும் என்பது நிபந்தனை. மதிப்பு நிசாபை விட ஒரு நாளுக்குக் கீழே சரிந்து, மீண்டும் மேலே சென்றால், அந்த மதிப்பு மீண்டும் நிசாபை அடையும் நாளிலிருந்து மறுமதிப்பீடு செய்யப்படும் என்று சட்டம் குறிப்பிடுகிறது.

### தங்க நகைகளுக்கு ஜகாத் கொடுப்பது தொடர்பான ஃபத்வா

தங்க நகைகள் 860 கிராம் அடையும் பொழுது மட்டுமே நகைகளுக்கு ஜகாத் கட்டாயமாகிறது என்று ஃபத்வா கமிட்டி அறிவித்துள்ளது.

தங்கத்தின் அளவு நெறிமுறை அளவை (உருஃப்) அடைந்துவிட்டால், ஜகாத் தொகையானது தங்க நகைகளின் மொத்த எடையின் அடிப்படையில் கணக்கிடப்பட வேண்டும், மேலும் நெறிமுறை அளவை (உருஃப்) மீறும் எடையிலிருந்து மட்டும் கணக்கிடப்பட வேண்டும் என்று குழு அறிவித்துள்ளது.

முதலீட்டு நோக்கத்திற்காக வைக்கப்படும் தங்க நகைகள் 86 கிராம் நிசாப் விகிதத்தை எட்டியிருந்தால், ஜகாத் விதிக்கப்பட வேண்டும் என்றும், தங்க நகைகளின் மொத்த எடையின் அடிப்படையில் ஜகாத் கணக்கிடப்பட வேண்டும் என்றும் ஃபத்வா கமிட்டி அறிவித்துள்ளது.

## 2. பணம் / ரொக்கம்



இன்று, உலகெங்கிலும் தங்கம் மற்றும் வெள்ளி பரிமாற்றங்களைக் கடந்து காகிதம் மற்றும் நாணயங்கள் மூலம் பரிவர்த்தனைகள் பரவலாகப் பயன்பாட்டில் உள்ளது. காகித/ நாணய பணத்திற்கு ஜகாத் பொருந்துமா? இது தொடர்பாக திருகுர்ஆனிலோ அல்லது ஹதீஸிலோ நேரடி ஆணை இல்லை, அப்படியானால் அதற்கான நெறிமுறைகள் என்ன?

முந்தைய பத்தியிலுள்ள கேள்விக்கு பதில், ஆம், நாணய/ காகித பணத்திற்கும் ஜகாத் விதிகள் பொருந்தும். இதன் நெறிமுறைப்படுத்துவது குறித்து மார்க்க அறிஞர்கள் விரிவாக விவாதித்துள்ளனர்.

திருகுர்ஆனில் தெளிவான வழிகாட்டுதல்கள் இல்லையென்றாலும், தங்கம் மற்றும் வெள்ளி அல்லாத நாணய/ காகித பணத்திற்கு நிசாப், ஜகாத் செலுத்த வேண்டிய நேரத்தின் அடிப்படையில் தங்கம் அல்லது வெள்ளி சமமான மதிப்பின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது என்று அறிஞர்கள் விளக்கியுள்ளனர். தங்கத்தின் மதிப்பு வெள்ளியை விட நிலையானது என்பதால் சிலர் தங்கத்தின் அடிப்படையில் தீர்மானிப்பதை விரும்புகின்றனர்.

எடுத்துக்காட்டாக, சிங்கப்பூரில், இஸ்லாமிய சமய மன்றம் (MUIS) பணத்தின் நிசாபை தங்கத்தின் நிசாபின் அடிப்படையில் தேர்வு செய்துள்ளது. எனவே, நம்மிடம் $5000 (நிசாபை விட சற்று மேலே உள்ளது) இருந்து அது சேமிப்பில் ஹவுல் காலத்தை நிறைவு செய்திருந்தால், அதில் (2.5%) கொடுக்க வேண்டிய ஜகாத் $125 ஆக இருக்கும்.

## 3. வணிகப் பொருட்கள்/ வர்த்தக சொத்துகள்



வர்த்தக பரிவர்த்தனைகள் அனைத்தும் லாபத்தில் விற்பதற்காக ஒருவர் வாங்கும் உணவுப் பொருட்கள், உடைகள், இயந்திரங்கள், நுகர்வோர் பொருட்கள், வாடகைக்கு குத்தகை விடப்பட்ட வீட்டுமனை சொத்துக்கள் வணிகத்தில் முதலீடு செய்யப்படும் சொத்துக்கள் மற்றும் பொருட்கள் மற்றும் அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தின் மீது இஸ்லாமிய சட்டம் ஜகாத்தை விதிக்கிறது.

சந்தை விற்பனை விலை, கையில் மற்றும் வங்கியில் உள்ள மொத்த ரொக்கம் மற்றும் கோரப்படாத கடன்களின் அளவு ஆகியவற்றின் அடிப்படையில் பொருட்களின் பண மதிப்பைக் கூட்டுவதன் மூலம் வணிகத்தின் மதிப்பு தீர்மானிக்கப்படுகிறது. அதன் மொத்தமானது நிசாபை (இது தங்கத்தின் மதிப்பு) அடைந்து, ஒரு ஹவுல் இடைவெளி முழுவதும் அந்த மதிப்பிற்குக் கீழே குறையவில்லை என்றால், அந்தப் பொருட்களுக்கு 2.5% ஜகாத் விதிக்கப்படும்.

## 4. வேளாண் பொருட்கள்

விளைபொருட்களுக்கும் ஜகாத் விதிக்கப்படுவதை அல்லாஹ் கடமையாக்கியுள்ளான். உண்ணும் உணவு உட்பட தனக்குப் பயனளிக்கும் பூமியிலிருந்து உற்பத்தியாகும் அனைத்தும் அல்லாஹ்வின் முடிவில்லாத அருட்கொடைகளின் ஒரு பகுதி என்பதை மறந்துவிடக் கூடாது. அந்த அருட்கொடையே ஜகாத் கொடுக்க வேண்டிய ஒன்றாக இருப்பது இயல்பு. திருகுர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான்:

أَفَرَأَيْتُم مَّا تَحْرُثُونَ ﴿٦٣﴾ أَأَنتُمْ تَزْرَعُونَهُ أَمْ نَحْنُ الزَّارِعُونَ ﴿٦٤﴾ لَوْ نَشَاءُ لَجَعَلْنَاهُ حُطَامًا فَظَلْتُمْ تَفَكَّهُونَ ﴿٦٥﴾ إِنَّا لَمُغْرَمُونَ ﴿٦٦﴾ بَلْ نَحْنُ مَحْرُومُونَ ﴿٦٧﴾

“(இப்பூமியில்) விதைப்பதை நீங்கள் கவனித்தீர்களா? அதனை நீங்கள் முளைக்கச் செய்கின்றீர்களா? அல்லது நாம் முளைக்கச் செய்கின்றோமா? நாம் நாடினால் திட்டமாக அதனைக் கூளமாய் ஆக்கிவிடுவோம் – அப்பால் நீங்கள் ஆச்சரியப்பட்டுக் கொண்டு இருப்பீர்கள். “நிச்சயமாக நாம் கடன் பட்டவர்களாகி விட்டோம். “மேலும், (பயிர்களிலிருந்து எதுவும் பெற முடியாதவர்களாகத்) தடுக்கப்பட்டு விட்டோம். (என்றும் கூறிக் கொண்டிருப்பீர்கள்).'' (திருக்குர்ஆன் 56:63–67)

விவசாயத்திற்கான ஜகாத் என்பது கோதுமை, பார்லி, பேரீச்சம்பழம் மற்றும் திராட்சை போன்ற முக்கியமான மற்றும் நீண்ட காலத்திற்கு சேமித்து வைக்கக்கூடிய சில வகையான விளைபொருட்களுக்கு மட்டுமே செலுத்தப்படுகிறது. அவற்றை அறுவடை செய்யும் போது ஜகாத் கொடுக்கப்படுகிறது. வேளாண் பொருட்களின் நிசாப் ஐந்து வசாக் ஆகும், இது அறிஞர்களின் மதிப்பீட்டின் அடிப்படையில் தோராயமாக 650 கிலோகிராம் ஆகும். மழைநீர் மூலம் பயிர் பாசனம் செய்யப்பட்டிருந்தால், மொத்த விளைச்சலில் 10% ஜகாத் விதிக்கப்படுகிறது. இருப்பினும், பயிர் மக்கள், விலங்குகள் அல்லது இயந்திரங்கள், கைமுறை நீர்ப்பாசனம் அல்லது நீர்ப்பாசன கால்வாய்கள் போன்றவற்றால் பாசனம் செய்யப்பட்டிருந்தால், மொத்த விளைச்சலில் 5% வீதம் ஆகும்.

# மற்ற செல்வத்தின் வகைகள்

- **காப்பீட்டு திட்டத்தின் ஜகாத்**

  சேமிப்பில் உள்ள செல்வத்தை வளர்க்கும் திட்டம் (Endowment Savings) கொண்ட ஆயுட்காலம் மற்றும் ஆயுட்கால காப்பீடும் ஜகாத்துக்கு பொறுப்பாகும். சம்மந்தப்பட்ட ஆண்டிற்கான சரண்டர் மதிப்பு (Surrender Value) நிசாபை அடைந்தவுடன் ஜகாத் செலுத்தப்படும். ஏனென்றால், சரண்டர் மதிப்பு என்பது கொள்கையளவில் ஒருவர் பெறக்கூடிய மற்றும் பயன்படுத்தக்கூடிய தொகையாகும்.

- **பங்குகள் மீதான ஜகாத்**

  வர்த்தகப் பொருளாகக் கருதப்படுவதால், பங்குகளுக்கும் ஜகாத் பொருந்தும். நிதியாண்டின் இறுதியில் சொந்தமான பங்குகளின் சந்தை மதிப்பு நிசாப் இடைவெளியை எட்டினால், பங்குகளுக்கு ஜகாத் செலுத்த வேண்டும். ஜகாத் தொகையானது பங்குகளின் சந்தை மதிப்பில் 2.5% ஆக இருக்கும்.

## கால்நடைகளுக்கு ஜகாத் விதிக்கப்படுமா?

கால்நடைகளுக்கும் ஜகாத் விதிக்கப்படலாம் ஆனால் முழுமையான ஹவுல் இடைவெளி நிபந்தனை முக்கியமான ஒன்று. அந்த கால இடைவெளிக்கு முன் எதுவும் ஜகாத்திற்கு உட்பட்டது அல்ல. அடுத்த நிபந்தனை, விலங்குகள் ஆண்டு முழுவதும், இனப்பெருக்கம் அல்லது பால் கறக்கும் நோக்கத்திற்காக இயற்கையான மேய்ச்சல் நிலத்தில் மேய்ந்து வளரவேண்டும். ஆனால், விலங்குகள் இயற்கையான மேய்ச்சலுக்குப் பதிலாக செயற்கைத் தீவனத்தை சாப்பிட்டால், அந்த விலங்குகளுக்கு ஜகாத் விதிக்கப்படாது. அதே போன்று,விலங்கு போக்குவரத்து அல்லது உணவு போன்ற தனிப்பட்ட பயன்பாட்டிற்காக இருந்தால், ஜகாத் தேவையில்லை. விலங்குகளின் எண்ணிக்கை மற்றும் வகைகளுக்கு ஏற்ப கால்நடைகளுக்கான நிசாப் மற்றும் ஜகாத் விகிதம் வேறுபடும். உதாரணமாக, ஆடுகளுக்கு நிஸாப் குறைந்தபட்சம் நாற்பது ஆகும், அதற்கு ஜகாத் ஒரு ஆடு. மறுபக்கம் பசுக்களுக்கு நிஸாப் குறைந்தபட்சம் முப்பது, அதற்கு ஜகாத் ஒரு மாடு.



## ஜகாத் பெற தகுதியானவர்கள்



ஜகாத் என்பது நமது விருப்பப்படி யாருக்கும் கொடுக்கப்படும் தன்னார்வத் தர்மம் அல்ல. ஜகாத் நிதிகளை நீதமான முறையில் சேகரிப்பது எவ்வளவு முக்கியமானதோ அதை விட அதனை சரியான பயனாளிகளிடம் முறையாக விநியோகிப்பது ம் மிக முக்கியமானதாகும். ஜகாத் செல்வத்திலிருந்து பெறுவதற்கு திருகுர்ஆனில் அல்லாஹ்வால் தீர்மானிக்கப்பட்ட மக்கள் எட்டு வகையினராவர். அல்லாஹ் திருகுர்ஆனில் கட்டளையிட்டுள்ளான்:

إِنَّمَا الصَّدَقَاتُ لِلْفُقَرَاءِ وَالْمَسَاكِينِ وَالْعَامِلِينَ عَلَيْهَا وَالْمُؤَلَّفَةِ قُلُوبُهُمْ وَفِي الرِّقَابِ وَالْغَارِمِينَ وَفِي سَبِيلِ اللَّهِ وَابْنِ السَّبِيلِ ۖ فَرِيضَةً مِّنَ اللَّهِ ۗ وَاللَّهُ عَلِيمٌ حَكِيمٌ ﴿٦٠﴾

"(ஜகாத் என்னும்) தானங்கள் தரித்திரர்களுக்கும், ஏழைகளுக்கும், தானத்தை வசூல் செய்யும் ஊழியர்களுக்கும், இஸ்லாத்தின் பால் அவர்கள் உள்ளங்கள் ஈர்க்கப்படுவதற்காகவும், அடிமைகளை விடுதலை செய்வதற்காகவும், கடன் பட்டிருப்பவர்களுக்கும், அல்லாஹ்வின் பாதையில் (போர் புரிவோருக்கும்), வழிப்போக்கர்களுக்குமே உரியவை. (இது) அல்லாஹ் விதித்த கடமையாகும் – அல்லாஹ் (யாவும்) அறிபவன், மிக்க ஞானமுடையோன்."

(திருக்குர்ஆன் 9:60)

**01**

### ஏழைகள் (ஃபகீர்)

ஏழைகள் என்பது தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய போதுமான அளவு இல்லாதவர்கள். அவர்களிடம் ஒருவேளை சொத்துக்கள் அல்லது வருமானம் இருந்தாலும் அவர்களின் அடிப்படைத் தேவைகள் மற்றும் வாழ்வாதாரத்தை ஈடுகட்ட குறைந்தபட்சம் தேவையை விட மிக குறைவாக வசதி கொண்டவர்கள். தெளிவாக கூறினால், ஒருவருக்கு $10 தேவைப்பட்டாலும், அவர் $3 மட்டுமே வைத்திருந்தால் அல்லது சம்பாதித்தால், அந்த நபர் ஏழையாகக் கருதப்படுவார்.

**02**

### தேவையுள்ளவர்கள் (மிஸ்கீன்)

ஏழைகள் மற்றும் தேவையுள்ளவர்கள் ஒரே வகையில் இருந்தாலும் இரண்டுக்கும் இடையே வேறுபாடு இருப்பதாக அறிஞர்கள் கருதுகின்றனர். செல்வம் மற்றும் வருமானம் இருந்தும் அவை தேவைக்கு குறைவாக உள்ளவரே தேவையுள்ளவர். ஒரு உதாரணம் என்னவென்றால், அவரது வாழ்வாதாரத்திற்கு $10 தேவைப்படுகிறது, ஆனால் அவர் $8 மட்டுமே சம்பாதிக்கிறார், பின்னர் இந்த நபர் "தேவையுள்ளவர்" வகையின் கீழ் வருகிறார்.

**03**

### ஜகாத் நிர்வகிப்பவர்கள் (அமில் ஜகாத்)

ஜகாத் வசூலித்து விநியோகிக்க பணியமர்த்தப்பட்டவர்கள் திரட்டப்பட்ட நிதியில் ஒரு பகுதியைப் பெற தகுதியுடையவர்கள். சேகரித்தல், கணக்கு சரிபார்த்தல், விநியோகித்தல் போன்ற ஜகாத் நிர்வாகத்தில் ஈடுபடும் வேறு எந்த வேலையாக இருந்தாலும், அவர்கள் செய்யும் ஊழியத்திற்கான ஊதியமாக அவர்களின் பங்கு கருதப்படுகிறது.

04

### இஸ்லாத்தின் பால் இணக்கம் கொண்டுள்ளவர்கள் (முஅல்லஃப்)

புதிய முஸ்லிம்கள் மற்றும் மார்க்கத்தை ஏற்காவிட்டாலும் தங்களின் இதயங்களில் இஸ்லாத்தின் மீது இணக்கம் கொண்டவர்கள் இந்த வகையில் வருவர். தாருல் அர்காம் சிங்கப்பூர் போன்ற நிதியை விநியோகிக்கும் அமைப்புகளால் தீர்மானிக்கப்படும் ஒரு பகுதி அவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் வழங்கப்படுகிறது. முஅல்லஃபுக்கான நிதியும் மார்க்கத்தின் போதனைகளைப் பிரச்சாரம் செய்வதற்காக பொருட்களை அச்சிடுவதற்கு அனுப்பப்படுகிறது, அவை இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன.

05

### அடிமைகள் (ரிகாப்)

ஜகாத் நிதியின் ஒரு பகுதி அடிமைகளுக்கு அவர்களின் சுதந்திரத்தை வாங்குவதற்கும், சிறைபிடிக்கப்பட்டவர்களின் விடுதலைக்காக மீட்கும் தொகையை செலுத்துவதற்கும் பணம் தேவைப்படும் அடிமைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. நவீன காலதத்தில், இவ்வகை ரிகாபின் பயனாளிகளின் (அஸ்னாஃப்) என்பவர்கள் அறியாமையின் ஆபத்திலிருந்து மனதை விடுவிக்க முயலபவர்கள் என அர்த்தம்கொள்ளப்படுகின்றது. எனவே, சிங்கப்பூரில், இந்தக் குழுவிற்கு விநியோகிக்கப்படும் ஜகாத் நிதியானது, உயர் கல்வியைத் தொடர்பவர்களுக்கு நிதி, கல்வி உதவித்தொகை வழங்கப் பயன்படுத்தப்படலாம்.

06

### பெரும் கடனில் உள்ளவர்கள் (கரிமின்)

தனிப்பட்ட அல்லது பொது நலன்கள் காரணமாக, அவர்களால் சொந்தமாகச் செலுத்த முடியாத அளவுக்கு அதிகமான கடனில் உள்ள மக்களுக்கு உதவவும் ஜகாத் நிதி பயன்படுத்தப்படுகிறது. எனினும், அவர்கள் தங்கள் கடனை அடைக்க போதுமான செல்வம் இருந்தால், ஜகாத் பெறுவதற்கு அவர்கள் தகுதி பெற மாட்டார்கள். அவர்களுக்கு போதுமான செல்வம் இல்லை, ஆனால் அவர்கள் சம்பாதித்ததில் இருந்து காலப்போக்கில் கடன்களை செலுத்த முடிந்தாலும் அவர்கள் ஜகாத்திற்கு தகுதியுடையவர்களாவர், ஏனெனில் அவர்கள் கடனை செலுத்துவதற்கு கணிசமான காலம் எடுக்கும்.

07

### மார்க்கத்தின் பாதையில் போராடுபவர்கள் (ஃபிஸபிலில்லாஹ்)

அல்லாஹ்வின் பாதையில் நீதமான முறையில் போராடும் மக்களுக்கும் ஜகாத் நிதியில் பங்கு உண்டு. இது காலங்காலமாக அல்லாஹ்வுக்காகப் போராடுபவர்களைக் குறிக்கும், ஆனால் ஊதியம் பெறும் தேசிய பாதுகாப்பு வீரர்களை அல்ல. மார்க்க அறிஞர்கள் இந்த வகைக்கு பல நலன்களையும் உள்ளடக்கி ஒரு பரந்த விளக்கத்தை வழங்கியுள்ளனர், அதன் மூலம் "ஃபி சபீலில்லாஹ்" என்ற வாக்கியத்திற்கு பொதுவான விளக்கங்களும் கூறப்பட்டுள்ளன. மேலும் மசூதிகளை பழுதுபார்ப்பது, மருத்துவமனைகளை கட்டுவது மற்றும் இஸ்லாத்திற்காக சமயப்பரப்பாளர் வேலை செய்வது (தா'வா) போன்ற மார்க்கம் மற்றும் அரசு நிர்வாகம் தொடர்புடைய முஸ்லிம்களின் மற்றும் பொது நலன்களையும் உள்ளடக்கியவைகளுக்கும் இவ்வகை ஜகாத் வழங்கப்படும்.

08

### வழிப்போக்கர் (இப்னு சபில்)

வழிப்போக்கர்கள் சில நேரங்களில் தங்கள் சொந்த செல்வத்திலிருந்து துண்டிக்கப்பட்டு நிதி உதவி தேவைப்படும் பயணிகளாக இருப்பர். அவர்களுக்கு ஜகாத் நிதி மூலம் உதவி வழங்க உரிமை உண்டு.

## சுருக்கம்

* இஸ்லாம் மார்க்கமாக மட்டுமல்லாமல் நமது வாழ்க்கை முறையாகவே உள்ளது. பணம் மற்றும் செல்வத்தை எவ்வாறு கையாள்வது உட்பட நம் வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன.
* இவ்வுலகில் உள்ள ஒவ்வொரு மனிதனின் ரிஸ்க் (Rizq) அல்லாஹ்வால் தீர்மானிக்கப்பட்டது
* செல்வத்தால் வறியவர்கள் மற்றும் செழித்தவர்கள் இடையிலுள்ள சமூக மற்றும் பொருளாதார வேறுபாடுகளுக்கு மார்க்கம் தீர்வை வழங்கியுள்ளது.
* ஜகாத் என்பது ஒரு முஸ்லிம் நிறைவேற்ற வேண்டிய கட்டாய கடமைகளில் ஒன்றாகும். திருகுர்ஆனில் கடைமையான தினசரி தொழுகைகளைக் குறிப்பிட்ட உடனேயே பல வரிகளில் ஜகாத் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் பல ஹதீஸில்களிலும் ஜகாத் தரவேண்டிய அவசியம் குறிப்பிடப்பட்டுள்ளது.
* ஒரு முஸ்லிம் தனது ஜகாத்திற்கு எப்போது மற்றும் எவ்வளவு செலுத்த வேண்டும் என்பதைத் தீர்மானிக்க இஸ்லாமிய சட்டம் வழிமுறைகளையும் நிபந்தனைகளையும் நெறிப்படுத்தியுள்ளது.
* மார்க்கத்தில் ஜகாத் நிதியை ஏழைகள் மற்றும் கடனில் உள்ளவர்கள் உட்பட எட்டு வெவ்வேறு வகை மக்களுக்கு வழங்க நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

பாகம்-9

# செல்வத்தை விநியோகித்தல்



## இஸ்லாமிய வாரிசுரிமைச்சட்டம் (ஃபராயிழ்)

**நீதமான மனிதனாகவும், எல்லாம் வல்ல இறைவனுக்கும் உண்மையான அடியனாகவும் இவ்வுலக வாழ்வை எவ்வாறு வாழ வேண்டும் என்பதற்கான முழுமையான மார்க்கமாக இஸ்லாத்தை அல்லாஹ் நமக்கு அருளியுள்ளான். நமக்கு வழங்கப்பட்ட சட்டங்கள் நமது அன்றாட வாழ்வை வழிநடத்தும் வழிகாட்டியாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் நமது தனிப்பட்ட வாழ்விலும் சமூகத்தின் உறுப்பினர்களாகவும் சிறப்பான வாழ்க்கையை வாழ முடியும். இஸ்லாத்தின் சட்டங்கள் மக்களின் பொருட்செல்வம் மற்றும் உலக உடைமைகளை உள்ளடக்கி செல்வத்தை எவ்வாறு சட்டப்பூர்வ வழிகளில் அடைவது என்பது தொடங்கி அடைந்த செல்வதை எவ்வாறு கையாள்வது என்பது வரை நமது வாழ்வின் பல்வேறு அம்சங்களையும் விவரித்து நாம் ஞானத்துடன் செயல்படுத்த உதவுகின்றன.**

திருகுர்ஆனின் இறைவெளிப்பாடுகளில் அருளப்பட்ட பலவற்றில் ஒன்று வாரிசுரிமை.

இஸ்லாமிய சட்டத்தில் வாரிசுரிமைத் தொடர்பான சட்டங்கள் ஃபராயிழ் என்று குறிப்பிடப்படுகிறது. திருகுர்ஆனில் வாரிசுரிமையைக் கையாளும் பல வசனங்களில் குறிப்பாக மூன்று வசனங்கள் பங்குகள் எவ்வாறு பகிரப்படவேண்டும் என்பதை விரிவாக விவரிக்கின்றன.

திருகுர்ஆனில் அல்லாஹ் குறிப்பிடுகிறான்:

لِّلرِّجَالِ نَصِيبٌ مِّمَّا تَرَكَ الْوَالِدَانِ وَالْأَقْرَبُونَ وَلِلنِّسَاءِ نَصِيبٌ مِّمَّا تَرَكَ الْوَالِدَانِ وَالْأَقْرَبُونَ مِمَّا قَلَّ مِنْهُ أَوْ كَثُرَ ۚ نَصِيبًا مَّفْرُوضًا ﴿٧﴾

“பெற்றோரோ, நெருங்கிய உறவினர்களோ விட்டுச் சென்ற (சொத்)தில் ஆண்களுக்கு பாகமுண்டு; அவ்வாறே பெற்றோரோ, நெருங்கிய உறவினரோ விட்டுச் சென்ற (சொத்)தில் பெண்களுக்கும் பாகமுண்டு – (அதிலிருந்துள்ள சொத்து) குறைவாக இருந்தாலும் சரி, அதிகமாக இருந்தாலும் சரியே; (இது அல்லாஹ்வினால்) விதிக்கப்பட்ட பாகமாகும்” (திருக்குர்ஆன் 4:7)

## இஸ்லாமிய வாரிசுரிமை மூலம் அநீதிதமான வழக்கங்கள் ஒழிந்தன

இறைவெளிப்பாடுகள் மூலம் திருக்குர்ஆன் அருளப்படுவதற்கு முன் சமூகங்களில் பொதுவாக ஆண் வாரிசுகளுக்கு மட்டுமே சொத்தில் உரிமையுள்ளதாக கடைப்பிடிக்கப்பட்டது. இறைவெளிப்பாடுகள் மூலம் பெண் வாரிசுகளுக்கும் உரிமையுள்ளது என மேம்படுத்தி அந்த காலகட்டத்தில் சமூக நடைமுறையில் இருந்த நியாயமற்ற முறையை ஒழித்தது.

இஸ்லாமிய மார்கத்தில் மரணமடைந்தவரின் வீட்டுமனையில் அவரது மனைவி மற்றும் அவரது பெண் உறவினர்களுக்கும் உரிமை அளித்தது. இது இஸ்லாத்திற்கு முன் அரேபிய தீபகற்பத்தில் புழக்கத்தில் இருந்த அநீதமான நடைமுறைக்கு எதிரானதாகும். இதன் மூலம் இஸ்லாம் பெண்களின் நிலையை உயர்த்தி அவர்களின் சமூக மற்றும் பொருளாதார நலன்களைப் பாதுகாத்தது. இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டம் மார்க்கத்தின் முக்கிய தத்துவமாகக் கருதப்படும் "குடும்பம்" எனும் கட்டமைப்புடன் ஒருங்கிணைந்து முழுமையடைகின்றது.



## வாரிசுரிமைச் சட்டத்தின் (ஃபராயிழ்) சிறப்புகள்

இஸ்லாமிய மார்க்கத்தில் வாரிசுரிமைச் சட்டம் (ஃபராயிழ்) முக்கியமான கொள்கையாகும். அதனை திருக்குர்ஆன் வாரிசுகளின் பங்குகளை மிக துல்லியமாகவும் விரிவாகவும் விவரிப்பதைக் கொண்டே நமக்கு தெளிவாகின்றது. இஸ்லாமிய கல்வியில் வாரிசுரிமைக் கல்வி (ஃபராயிழ்) மிக முக்கியமான ஒன்று என்பதை பல அறிஞர்கள் ஒப்புக்கொள்கிறார்கள்.

இஸ்லாத்தில் பொருளாதாரம் தொடர்பான சட்டங்கள் நியாயமாகவும் நீதமாகவும் இருப்பதை உறுதி செய்வதன் மூலம் இஸ்லாமிய சட்டவியல் பொருளாதாரத்திற்கு முக்கியத்துவம் அளிப்பது தெளிவாகின்றது. ஒரு மனிதர் மரணமடையும் பொழுது அவர் விட்டுச் சென்ற செல்வத்தினை நீதமான மறு-விநியோகத்தை உறுதிசெய்ய இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டம் மிகுந்த நுண்ணறிவோடு திட்டமிடப்பட்ட ஒன்றாகும். இஸ்லாத்தில் வாரிசுரிமைச் சட்டம் இயற்றப்பட்டதற்குப் பின்னால் நிறைய ஞானம் நிறைந்த பல காரணங்கள் இருந்தாலும் ஒரு சில காரணங்கள் பின் வருமாறு;

01

### ஒருவர் தன் குடும்பத்தின் மீது கொண்டுள்ள அன்பைத் திருப்திப்படுத்துதல்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு ஹதீஸில் குறிப்பிட்டுள்ளார்:

“தங்கள் குடும்பங்களுக்கு சிறந்தவர்களே உங்களில் சிறந்தவர்கள், நான் என் குடும்பத்திற்கு உங்களில் சிறந்தவன்.” (திர்மிதியில் குறிப்பிடப்பட்டுள்ளது)

மனிதன் தனது சந்ததியினருக்கான தனது அன்பை வெளிப்படுத்தும் பல வழிகளில், அவனது குடும்பத்திற்காக செலவழிப்பதும், அவன் இறந்த பிறகும் அவர்கள் நன்கு கவனித்துக் கொள்ளப்படுவதை உறுதி செய்வதாகும். மனிதன் கஷ்டப்பட்டு உழைத்துச் சம்பாதிப்பது தனக்கு மட்டுமின்றி, தனது மரணத்திற்குப் பின்னர் தனது சந்ததிகள், உற்றார், உறவினர் போன்றவர்களுக்காகவும்தான். ஒரு மனிதர் ஈட்டிய சொத்து அவரது மரணத்திற்குப் பின்னர் உரியவர்களுக்குக் கிடைக்காமல் போய் உரிமையற்றவர்கள் அபகரித்து விடக்கூடாது என்பதனை இஸ்லாம் உறுதிசெய்கின்றது.

02

### சமூகத்தில் பெண்களின் நிலையை மேம்படுத்துதல்

இஸ்லாத்தில், பெண்களுக்கும் சொத்துரிமை வழங்கப்படுகின்றது.. இது அல்லாஹ்வால் விதிக்கப்பட்ட சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள உரிமையாகும், எனவே அது மறுக்கப்படக்கூடாத ஒன்றாகும். திருகுர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளபடி:

وَلَهُنَّ مِثْلُ الَّذِي عَلَيْهِنَّ بِالْمَعْرُوفِ ۚ وَلِلرِّجَالِ عَلَيْهِنَّ دَرَجَةٌ ۗ وَاللَّهُ عَزِيزٌ حَكِيمٌ ﴿٢٢٨﴾

“... நீதமான முறையில் பெண்களுக்கும் உரிமையுண்டு; ஆயினும் ஆண்களுக்கு அவர்கள்மீது ஒருபடி உயர்வுண்டு; மேலும் அல்லாஹ் வல்லமையும்; ஞானமும் மிக்கோனாக இருக்கின்றான்.” (திருக்குர்ஆன் 2:228)



03

## குடும்ப கட்டமைப்பில் சமூக நலன் இருப்பதை உறுதி செய்தல்

ஒரு வலுவான வாரிசுரிமையுடன், இறந்தவர்களின் குடும்பங்களுக்கு மனைகளை நீதமாகப் பகிர்வதன் மூலம் நிறைவேற்றப்படுகின்றது. குடும்பத்தலைவரின் மறைவிற்கு பிறகு குடும்பங்களின் நிதி நிலையைப் பாதுகாக்க இது உதவுகிறது.

04

## நீதமான பொருளாதாரத்தை நிறுவுதல்

இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டம் மூலம் சமூக-பொருளாதாரம் சீரான முறையில் அமைவது உறுதி செய்யப்படுகின்றது. இஸ்லாம் தனிநபர் தன் சொத்துக்கள் குறித்து கொண்டுள்ள உணர்வுகளை மதித்து அவரது குடும்பம் மற்றும் உறவினர்களுக்கு அவரது சொத்தின் வாரிசுரிமையை வழங்குகிறது. ஒரு நபரின் சொத்துக்களைத் தெளிவாகவும் துல்லியமாகவும் பகிர்வதன் மூலம் சொத்துக்களைப் பிரிப்பதில் ஏற்படக்கூடிய சவால்கள் தடுக்கப்படுகின்றது.



## மரணமடைந்தவரின் வீட்டுமனை எவ்வாறு கையாளப்படும்?

ஒருவரின் மரணத்திற்குப் பிறகு அவரது சொத்துக்களைப் பகிர பல வழிகள் உள்ளன. மனைப் பகிர்தலில் முன்கூட்டியே திட்டமிடப்படவில்லை என்றால் ஃபராயிழ் திட்டத்தின் அடிப்படை நெறிமுறைகள் மூலம் பகிர்ந்தளிக்கப்படும்.

இஸ்லாமிய சட்டத்தின்படி, மரணமடைந்தவரின் சொத்து என்பது, 'அவர் விட்டுச் செல்லும் நிலம், வீடு போன்ற அசையாச் சொத்துக்கள் மற்றும் பணம், தங்கம், வெள்ளி மற்றும் வாகனங்கள் போன்ற அசையும் சொத்துக்கள் என வரையறுக்கப்பட்டுள்ளது.

## வாரிசுரிமைச் சட்டம்

இஸ்லாமிய சட்டத்தின்படி, ஒருவர் மரணிக்கும் பொழுது, அவருடைய சொத்தின் (முன்னுரிமையின் அடிப்படையில் பட்டியலிடப்பட்ட) நான்கு உரிமைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்:

### 1. இறுதிச் சடங்கு மற்றும் அடக்கத்திற்கு செலவழித்தல்

இறந்தவருக்கு செல்வம் இல்லை என்றால், இறந்தவரின் சார்பாக குடும்ப உறுப்பினர்கள் மற்றும் முஸ்லிம் சமூக மக்கள் சேர்ந்து செலவுகளை ஈடுகட்ட கடமைப்பட்டுள்ளனர். இது ஃபர்ழ் கிஃபாயா (Fard Kifayah) என்று அழைக்கப்படுகிறது.



### 2. இறந்தவரின் கடனை அடைத்தல்

இதில் மக்களுக்கு அவர் அளிக்க வேண்டிய கடன்களும் அல்லாஹ்விற்காக செலுத்த வேண்டிய வழங்கப்படாத ஜகாத், ஃபித்யாஹ் போன்ற கடன்களும் அடங்கும்.,



### 3. இறந்தவரின் உயிலை நிறைவேற்றுதல்

ஒருவர் தனது சொத்தின் மூன்றில் ஒரு பங்கை அவர் யாருக்கு வேண்டுமானாலும் ஒதுக்கி உயில் எழுதலாம்.



## 4. எஞ்சிய மனையை ஷரிஆவின்படி உரிமையுள்ள வாரிசுகளுக்குப் பகிர்ந்தளித்தல்

பகிர்ந்தளிக்கும் முன் மனையில் உரிமையுள்ள வாரிசுகளை தீர்மானிக்க வேண்டும். இஸ்லாத்தில் வாரிசுகள் மூன்று வகையில் வகுக்கப்பட்டுள்ளனர்:



### (i) முதல் நிலை வாரிசுகள் (அஷாபுல் ஃபுருத்)

மரணமடைந்தவரின் முதல் நிலை வாரிசுகளுக்கு சேர வேண்டிய குறிப்பிட்ட பங்கை ஒதுக்கிய பிறகே அடுத்த நிலை வாரிசுகளுக்கு பகிரப்பட வேண்டும்.

உதாரணம்: குழந்தைகள் இல்லாத அஹ்மத் மற்றும் மர்யம் தம்பதியரில் $100,000 சொத்து மதிப்புள்ள கணவன் அஹ்மத் காலமானால், அவரது மனைவி மர்யம் தனக்கு நியாயமாக சேர வேண்டிய ¼ தொகையான $25,000 பெற உரிமையுள்ளவராகின்றார்.

முதல் நிலை வாரிசுகள் கீழே தொகுக்குப்பட்டுள்ளன:

* அப்பா
* அம்மா
* கணவன்
* மனைவி
* மகள்
* உடன்பிறந்த சகோதரி
* உடன்பிறந்த சகோதரர்

### (ii) அடுத்த நிலை வாரிசுகள் (அசபாஹ்)

முதல் நிலை வாரிசுகளுக்கு பகிர்ந்த பிறகு எஞ்சியுள்ள சொத்தை அடுத்த நிலை வாரிசுகளுக்கு பகிர வேண்டும். சில விதிகளின் கீழ் முதல் நிலை வாரிசுகள் இரண்டாம் நிலையில் கருதப்பட வாய்ப்புண்டு.

உதாரணம்: மரணமடைந்தவருக்கு மகன் இருக்கும் பட்சத்தில் முதல் நிலை வாரிசாக இருக்கும் மரணமடைந்தவரின் மகள் இரண்டாம் நிலையில் கருதப்படுவார். ஃபராயிழ் விதிகளின்படி மகளின் பங்கு மகனின் பங்கில் பாதியாகும்.

அடுத்த நிலை வாரிசுகள் கீழே தொகுக்குப்பட்டுள்ளன:

* மகன்
* மகள்*
* மகன் வழி பேரன்
* மகன் வழி பேத்தி*
* அப்பா
* தாத்தா
* உடன் பிறந்த சகோதரன்
* உடன் பிறந்த சகோதரி*
* உடன் பிறந்த சகோதரனின் மகன்
* தந்தை வழி மாமா
* தந்தை வழி மாமாவின் வாரிசுகள்

*இரண்டாம் நிலை வாரிசாக்கப்படும் பொழுது

### (iii) அரசாங்க கருவூலம் (பைத்துல் மால்)

பைத்துல் மால் அல்லது அரசாங்க கருவூலம் என்பது மூயிஸ்-ஆல் நிர்வகிக்கப்படும் முஸ்லிம் அறக்கட்டளை நிதி அமைப்பாகும். வாரிசுகளும் இன்றி தனக்கு வேண்டியவர்களுக்கு உயில் எழுதாமலும் மரணிக்கும் ஒருவரின் சொத்துக்கள் பைத்துல் மாலுக்கு நன்கொடையாக எழுதப்படும்.

## வாரிசுரிமை வழங்குவதில் ஏற்படும் இடையூறுகள்

ஒருவர் தனது வாரிசுரிமையைப் பெறுவதில் தடை ஏற்படுத்தும் சாத்தியக்கூறுகள் பின்வருமாறு:

### • கொலை செய்தல்

ஒருவர் மற்றொரு மனிதனைக் கொன்றால், கொலை செய்தவர் கொலை செய்யப்பட்டவரின் வாரிசாகும் உரிமையை சட்டப்படி இழந்து விடுகின்றார். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்:

"கொலை செய்தவர் (அவர் கொன்ற நபரின்) வாரிசாக முடியாது." (இப்னு மாஜா-வில் குறிப்பிடப்பட்டுள்ளது)

### • சமயம் சார்ந்த வேறுபாடுகள்

இஸ்லாமிய மார்க்கத்தில் முஸ்லிம் மற்றும் மாற்று சமயத்தினர் இடையே வாரிசுரிமை பரிமாற்றங்கள் கிடையாது.கண்மனி நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்:

"முஸ்லிம் மற்றும் மாற்றுசமயத்தவர் இருவரில் ஒருவர் மற்றவரின் வாரிசாக முடியாது." (புகாரி-யில் குறிப்பிடப்பட்டுள்ளது)

### நமது செல்வத்தை மாற்று சமயம் சார்ந்த நமது குடும்பத்தார்க்கு பகிர்ந்தளிக்கலாமா?

ஒரு முஸ்லிம் மாற்று சமயத்தினருடன் சொத்துரிமைப் பரிமாற்றங்களுக்கு மார்க்கம் அனுமதிக்கவில்லை. ஆனால், ஒரு முஸ்லிம் தனது செல்வத்தின் ஒரு பகுதியை மாற்று சமயத்தைப் பின்பற்றும் உறவினருக்கு கொடுக்க முடியாது என்றும் அர்த்தமல்ல.

பிப்ரவரி 14, 2006 அன்று வழங்கப்பட்ட ஃபத்வாவின் அடிப்படையில், ஒரு முஸ்லிம் தனது சொத்துக்களில் மூன்றில் ஒரு பகுதியைப் பின்வருபவர்களுக்கு உயில் எழுதலாம்: 1) ஃபராயிழ் விதிகளின் படி உரிமையில்லாத நபர்கள் மற்றும் 2) மாற்று சமயத்தைச் சேர்ந்த குடும்ப உறுப்பினர்கள்.

## இஸ்லாமிய முறையில் உயில் எழுதுதல்

ஒரு நபருக்கு கணிசமான அளவிற்கு செல்வம் இருந்தால், அவர் தனது மரணத்திற்கு பிறகு அந்த செல்வதை எவ்வாறு யாருக்கு பகிர வேண்டும் என்பதைத் தெளிவாக உயில் எழுத மார்க்கம் பரிந்துரைக்கின்றது. அதிலும் குறிப்பாக அவர் தனது செல்வம் ஒரு குறிப்பிட்ட வழியில் பயன்படுத்தபட வேண்டும் என்றோ ஒரு குறிப்பிட்ட தொண்டு நிறுவனத்திற்கு கொடுக்கப்பட வேண்டும் என்றோ விரும்பினால் உயில் எழுதுவது முக்கியத்துவம் பெறுகின்றது. உதாரணமாக, அவர் தனது வாரிசுகளில் இல்லாத நபர்களுக்கு கொடுக்க விரும்பினால் அவர் தனது உயிலில் அதனைக் குறிப்பிட்டு பெயரிட வேண்டும்.

உயில் எழுதுவதில் பின்வரும் விதிகளைப் பின்பற்ற வேண்டும்:

* ஒரு முஸ்லிம் எழுதும் உயிலுக்கு உயிலின் பயனாளிகள் அல்லாத இரண்டு ஆண்கள் சாட்சியாக இருக்க வேண்டும். உயில் எழுதுபவர் 21 வயதுடையவராகவும் முழு உணர்வுடனும் இருக்க வேண்டும்.
* பிறருக்கு வழங்கக்கூடிய சொத்தின் மதிப்பு மொத்த செல்வத்தின் மூன்றில் ஒரு பங்கினை விட அதிகமாக இருக்கக்கூடாது.
* உயிலின் பயனாளிகள் எவரும் வாரிசுகளாக இருக்கக்கூடாது, அவர்கள் ஏற்கனவே தங்கள் பங்குகளை ஃபராயிதில் இருந்து பெறுவார்கள்.

ஒரு உயில் அதனைக் காலாவதியாக்கும் மற்றொரு உயில் எழுதப்படும் வரை அது செல்லுபடியாகும். வழக்கறிஞர் முன்னிலையில் உயில் எழுதப்பட்டு அதற்கு சட்ட முத்திரையுடன் அங்கீகாரம் இருந்தால் அது உயிலுக்கு மேலும் வலுசேர்க்கும் [15]




15 நீங்கள் அங்கீகரிக்கப்பட்ட சட்ட ஆவணமாக உயில் எழுத விரும்பினால் உருவாக்க சட்ட ஆலோசனையைப் பெறவும்.

## சுருக்கம்

- இஸ்லாமிய சட்டம் வாரிசுரிமைகள் உட்பட பெரும்பாலான சமூக வழக்கங்களை உள்ளடக்கியது.
- அரேபிய தீபகற்பத்தில் முன்பு வழக்கத்தில் இருந்த அநீதிதமான வாரிசுரிமை முறைக்குப் பதிலாக இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டம் வந்தது.
- முதன் முதலாக இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டமே இறந்தவரின் உறவினர்களுக்கு சேரவேண்டிய நியாயமான பங்குகளை வழங்கியது.
- நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது தோழர்களை வாரிசுரிமைச் சட்டத்தை அறிந்திருக்குமாறு ஊக்குவித்தார்.
- ஒரு முஸ்லிம் தனது சொத்தின் ஒரு பகுதியை மாற்று சமய உறவினர்கள் உட்பட தான் விரும்புகின்றவர்களுக்கு பகிர்ந்தளிக்க உயில் எழுதலாம்.

பாகம்-10

# இஸ்லாமிய உணவு வழக்கம்




## இஸ்லாத்தில் ஹலால் என்பது என்ன?

நமது உணவுப்பழக்கங்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட விதிகள் உட்பட மார்க்கத்தில் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திற்கும் வழிகாட்டுதல்கள் உள்ளன. திருகுர்ஆனில் அல்லாஹ் குறிப்பிடுவது போல், அனுமதிக்கப்பட்ட ஹலாலானதை மட்டுமே உட்கொள்வது இஸ்லாமிய மார்க்கத்தில் முக்கியமான நற்பண்பு:

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا كُلُوا مِن طَيِّبَاتِ مَا رَزَقْنَاكُمْ... ﴿١٧٢﴾

"நம்பிக்கையாளர்களே! நாம் உங்களுக்கு அளித்துள்ளவற்றில் தூய்மையானவற்றையே உண்ணுங்கள்..." (திருக்குர்ஆன் 2:172)

நாம் உட்கொள்வதற்கு அனுமதிப்பட்ட உணவு "ஹலால்" என்றும் தடைசெய்யப்பட்ட உணவு "ஹராம்" என்றும் குறிக்கப்படுகின்றது. இவ்வுலகில் கிடைக்கப்பெறும் உணவு ஹலாலுக்கு மாற்றாக குறிப்பிடப்படாதவரையில் அது ஹலால் என்றே கருதப்படும். பன்றி இறைச்சி, மது மற்றும் இஸ்லாமிய விதிகளின்படி பலி கொடுக்கப்படாத/ தயாரிக்கப்படாத இறைச்சி போன்ற உணவு மற்றும் பானங்கள் ஹராம் எனக் கருதப்படுகின்றது. திருகுர்ஆனில் ஹராம் உணவுகள் பற்றி கூறப்பட்டுள்ளன:

إِنَّمَا حَرَّمَ عَلَيْكُمُ الْمَيْتَةَ وَالدَّمَ وَلَحْمَ الْخِنزِيرِ وَمَا أُهِلَّ بِهِ لِغَيْرِ اللَّهِ... ﴿١٧٣﴾

"தானாகவே செத்ததும், இரத்தமும், பன்றியின் மாமிசமும், அல்லாஹ் அல்லாதவற்றிற்கு அர்பணிக்கப்பட்டது ஆகியவைகளைத்தான் உங்கள் மீது ஹராமாக ஆக்கியிருக்கிறான்; ஆனால் எவரேனும் பாவம் செய்யாத நிலையில் – வரம்பு மீறாமல் (இவற்றை உண்ண) நிர்ப்பந்திக்கப்பட்டால் அவர் மீது குற்றமில்லை; நிச்சயமாக அல்லாஹ் கருணைமிக்கோனும், மன்னிப்பவனுமாக இருக்கின்றான்." (திருக்குர்ஆன் 2:173)

இஸ்லாமிய மார்க்கத்தில் உணவு மற்றும் பானங்கள் மூன்று வகைகளாக வகைப்படுத்தப்படுகின்றன:

**அனுமதிக்கப்பட்டது**
***(ஹலால்)***

அரபி வார்த்தையான ஹலால் என்பதற்கு அனுமதிக்கப்பட்டது என்று அர்த்தம். இந்த வகையின் உணவுகள் மற்றும் பானங்கள் நாம் உட்கொள்ள உகுந்ததாகும். திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸ்களில் தடைசெய்யப்பட்டவை என்று தெளிவாகக் கூறப்படாத பெரும்பாலான உணவு மற்றும் பானங்கள் ஹலாலாகக் கருதப்படுகின்றன.

**அனுமதிப்படாதவை**
***(ஹராம்)***

நாம் உட்கொள்வதற்கு தடைசெய்யப்பட்ட ஹலால் அல்லாத உணவுகள் ஹராம் என்று கருதப்படுகின்றன. இறந்த விலங்குகள், பன்றி இறைச்சி, போதைப்பொருள் மற்றும் மதுபானங்கள் போன்ற ஹராம் உணவு மற்றும் பானங்கள் பொதுவாக நம் உடல் நலத்திற்கு தீங்கு விளைவிக்கக்கூடியவை.

**நிச்சயமில்லாதவை**
***(ஷுப்ஹா)***

ஹலால் அல்லது ஹராம் என்று தெளிவாகாத உணவுப்பதார்த்தங்கள் ஷுப்ஹா என வகைப்படுத்தப்படுகின்றன. அதற்கு சந்தேகத்திற்குரியது என்று அர்த்தம். தாவரங்கள் அல்லது விலங்குகளில் இருந்து பெறப்படும் லெசிதின் அதற்கு சிறந்த உதாரணம். தாவரங்களில் இருந்து பெறப்படும் லெசிதின் ஹலால். பன்றி அல்லது மார்க்க விதிகளின்படி வெட்டப்படாத விலங்குகளில் இருந்து பெறப்படும் லெசிதின் ஹராம்.

இதைப் பற்றி நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பின்வரும் ஹதீஸில் குறிப்பிட்டுள்ளார்கள்:

"அனுமதிக்கப்பட்டதும் அனுமதிக்கப்படாததும் தெளிவாக உள்ளது. அதற்கு இடையில் உள்ளவை தெளிவற்று சந்தேகத்திற்குரியவை. மக்களுக்கு சில நேரம் அனுமதிக்கப்படுவதா அனுமதிக்கப்படாததா என்று விளங்காமல் இருக்கலாம். எவர் தனது மார்க்கப்பற்றைக் காக்க விரும்புகின்றாரோ, அவர் அதனை விட்டு விலகி விடுவார். எவர் அதனைத் தவிர்க்கவில்லையோ அவர் நிச்சயமாக தீமையைப் பற்றிக்கொண்டார்."
(திர்மிதி-யில் குறிப்பிடப்பட்டுள்ளது)



## அனைத்து ஹலால் பொருட்களும் நமக்கு நன்மை அளிக்கக்கூடியதா?

يَا أَيُّهَا النَّاسُ كُلُوا مِمَّا فِي الْأَرْضِ حَلَالًا طَيِّبًا وَلَا تَتَّبِعُوا خُطُوَاتِ الشَّيْطَانِ إِنَّهُ لَكُمْ عَدُوٌّ مُبِينٌ ﴿١٦٨﴾

"மனிதர்களே! பூமியிலுள்ள பொருட்களில், அனுமதிக்கப்பட்டவற்றையும், பரிசுத்தமானவற்றையும் உண்ணுங்கள்; ஷைத்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றாதீர்கள் – நிச்சயமாக அவன் உங்களுக்கு பகிரங்கமான பகைவனாவான்."

(திருக்குர்ஆன் 2:168)

நாம் உயிர் வாழ்வதற்கு உணவு இன்றியமையாதது என்றாலும் கிடைக்கும் அனைத்தையும் உண்ணாமல், நாம் உட்கொள்ளும் உணவால் நமது உடல்நலம் சீர்கெடாமல் கவனம் செலுத்த வேண்டும். நமது உடல் அல்லாஹ் நமக்கு அருளியுள்ள நியஃமத் (பொறுப்பு) என்பதை மனதில் கொண்டு நமது ஆராக்கியத்தைப் பேண வேண்டும். மேலுள்ள திருக்குர்ஆன் வசனத்திலிருந்து ஹலாலன் தொய்யிபன் (அனுமதிக்கப்பட்டது மட்டுமல்ல ஆரோக்கியமானதும் கூட) பொருட்களை உட்கொள்ள இஸ்லாம் முக்கியத்துவம் அளிக்கின்றது என்பது தெளிவாகின்றது. ஒரு உணவு அனுமதிக்கப்பட்டாலும் (ஹலால்), அது எப்போதும் ஆரோக்கியமானது (தொய்யிப்) என்று அர்த்தமல்ல.

## இஸ்லாத்தில் விலங்குகளை அறுக்கும் முறை

நமது உணவுக்காக விலங்குகள் அறுக்கப்படும் முறையில் மார்க்கம் அதிக கவனம் செலுத்துகிறது. எந்த ஒரு இறைச்சியும் ஹலால் ஆக வேண்டுமெனில், இஸ்லாமிய சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி அவைகளை அறுக்க வேண்டும். இந்த நிபந்தனைகளின் மூலம் விலங்குகள் அதிக வலியை உணராதவறும் நாம் உட்கொள்வதற்கு சுகாதாரமாக அமைவதை உறுதி செய்வதே நோக்கமாகும். அறுப்பதற்கான நிபந்தனைகள், விலங்குகள் மீது ஜபிஹா (zabiha) செய்வது என்றும் குறிப்பிடப்படுகின்றது, பின்வரும் பட்டியலில் அவை விவரிக்கப்பட்டுள்ளன:



**01** தெளிவான மனநலம் உள்ள பருவ வயதைக் கடந்த ஒரு முஸ்லிமால் விலங்குகள் அறுக்கப்பட வேண்டும்.

**02** விலங்குகள் அறுக்கப்படும் பொழுது அல்லாஹ்வின் திருப்பெயரைக் கூற வேண்டும்.

**03** ஹலால் முறையில் விலங்குகளை அறுக்கும் பொழுது, அந்த விலங்குகளின் கழுத்து நரம்பு குழாய்களும் மூச்சுக் குழாயும் கூர்மையான கத்தியைக் கொண்டு ஒரு சேர அறுக்க வேண்டும்.

**04** இரத்தம் முழுமையாக வெளியேற்றப்பட வேண்டும்

**05** கழுத்து நரம்பை வெட்டுவதன் மூலம் விலங்கின் மரணம் ஏற்பட வேண்டும், இதன் மூலம் குறைவான வலியையே விலங்குகள் உணரும்.

## சிங்கப்பூர் ஹலால் சான்றிதழ்




சிங்கப்பூரில் உள்ள உள்ளூர் உணவகங்கள் மற்றும் உணவுப்பொருட்கள் தயாரிக்கும் நிறுவனங்கள் தங்கள் தயாரிப்புகள் ஹலால் வழிகாட்டலைப் பின்பற்றி தயாரிக்கின்றன என்பதற்கு மூயிஸ்-யில் விண்ணப்பித்து நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஹலால் சான்றிதழ் பெறுகின்றன. சிங்கப்பூரில் ஹலால் சான்றிதழை வழங்க அங்கீகாரம் பெற்ற ஒரே அமைப்பு மூயிஸ் மட்டுமே. இதன் மூலம் முஸ்லிம்கள் தாங்கள் உண்ணும் உணவின் ஹலால் தரத்தின் கவலையை நீக்குகின்றது.

உலகின் சில நாடுகளைப் போலின்றி சிங்கப்பூரில் ஹலால் சான்றிதழ் பெற்ற உணவகங்களில் மதுபானங்கள் விற்க அனுமதியில்லை. ஹலால் சான்றிதழைப் பெறுவதற்கு அனைத்து உணவு மற்றும் பானங்களும் ஹலாலாக இருக்க வேண்டும். உணவு வகைகள் மற்றும் பானங்கள் தயாரிக்க, சமைக்க, கையாள மற்றும் சேமிப்பதற்கான பாத்திரங்கள் அனைத்தும் தூய்மையாகவும் ஹலால் முறையிலும் (அதாவது ஹலால் அல்லாத உணவு அல்லது பானங்களைக் கையாளவோ அல்லது மாற்று சமய சடங்குகளின்படி சுத்தப்படுத்தவோ பயன்படுத்தவோ கூடாது) மற்றும் ஹலால் அல்லாத எதுவும் சுற்றுசூழலை மாசுபடுத்த முடியாத நிலையிலும் இருக்க வேண்டும்.

மற்ற சில நாடுகளும் தங்களது இஸ்லாமிய அமைப்புகளைக் கொண்டு சிங்கப்பூர் போன்று ஹலால் சான்றிதழ் வழங்குகின்றன. அத்தகைய தயாரிப்புகளும் அனுமதிக்கப்பட்டதாக (ஹலாலாக) கருதப்படுகின்றன.



# ஹலால் சான்றளிக்கப்படாத உணவு மற்றும் பானங்களை உட்கொள்ளுதல்




உணவு அல்லது பானத்தின் நிலைக் குறித்து சந்தேகம் இருந்தால், அதை உட்கொள்வதைத் தவிர்ப்பது நல்லது. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) குறிப்பிட்டுள்ளார்:

"அனுமதிக்கப்பட்டதும் அனுமதிக்கப்படாததும் தெளிவாக உள்ளது. அதற்கு இடையில் உள்ளவை தெளிவற்று சந்தேகத்திற்குடையவை. மக்களுக்கு சில நேரம் அனுமதிக்கப்படுவதா அனுமதிக்கப்படாததா என்று விளங்காமல் இருக்கலாம். எவர் தனது மார்க்கப்பற்றைக் காக்க விரும்புகின்றாரோ, அவர் அதனை விட்டு விலகி விடுவார். எவர் அதனைத் தவிர்க்கவில்லையோ அவர் நிச்சயமாக தீமையைப் பற்றிக்கொண்டார். ஒரு புல்வெளியைச் சுற்றி தன் ஆடுகளை மேய்ப்பவர் அதில் சுதந்திரமாக மேய்ச்சலில் ஈடுபட வாய்ப்புள்ளது. ஒவ்வொரு அரசனுக்கும் ஒரு பாதுகாக்கப்பட வேண்டிய இடம் உள்ளது. அல்லாஹ்வின் தடைகளே நாம் பாதுகாக்கப்பட வேண்டியதாகும். நமது உடலில் ஒரு சிறிய அளவிலான சதை உள்ளது, அது சரியாக இருந்தால், உடல் முழுவதும் சரியாக இருக்கும், அது கெட்டுவிட்டால், உடல் முழுவதும் கெட்டுவிடும். அது தான் நம் இதயம்." (புகாரி மற்றும் முஸ்லிம்-இல் குறிப்பிடப்பட்டுள்ளது)



## உணவு உட்கொள்வதற்கான ஒழுக்கமுறை

அன்றாடம் உணவு வழங்கி நமக்கு வாழ்வாதாரம் (ரிஸ்க்) அளிக்கும் அல்லாஹ்விற்கு நாம் நன்றி செலுத்துவதோடு அவன் வழங்கிய உணவிற்கு மரியாதை அளிக்கவும் கடமைப்பட்டுள்ளோம். எனவே நாம் உண்ணும் பொழுதும் பருகும் பொழுதும் சிறந்த ஒழுக்க முறைகளைப் (அதப்) பின்பற்ற வேண்டும். மார்க்கம் நாம் கடைபிடிக்க வேண்டிய சில நெறிமுறைகளை வகுத்துத்தந்துள்ளது:

**01**

### உணவு அருந்தும் முன்பும் பின்னும் கைகளைக் கழுவ வேண்டும்

இஸ்லாமிய மார்க்கத்தில் தூய்மைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. உணவு உண்பதற்கு முன்னும் பின்னும் கைகளைக் கழுவுவது ஒரு சிறந்த பழக்கம் மட்டுமல்ல நல்ல சுகாதாரத்தையும் உறுதி செய்து நமது ஆரோக்கியத்தைப் பேண உதவும்.

**02**

### உண்பதற்கும் பருகுவதற்கும் முன் அல்லாஹ்வின் பெயரைக் உச்சரிக்க வேண்டும்

பின்வரும் ஹதீஸில், கண்மணி நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு சிறுவனுக்கு சிறந்த உணவுப்பழக்கங்களைக் கடைப்பிடிக்க அறிவுறுத்துவதன் மூலம் நம் அனைவருக்கும் உண்பதற்கு முன் அல்லாஹ்வின் பெயரை (பிஸ்மில்லாஹ்) குறிப்பிட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்:

"இளைஞனே! அல்லாஹ்வின் பெயரைக் கூறி, உனது வலது கையால் சாப்பிடு, மேலும், உனக்கு அருகாமையில் உள்ளதைச் சாப்பிடு. (முஸ்லிம்-இல் குறிப்பிடப்பட்டுள்ளது)

**03**

### வலது கையால் உண்ணுங்கள் மற்றும் பருகுங்கள்

ஒரு ஹதீஸில் நபிகள் (ஸல்) அவர்கள் நம்மைப் பின்வருமாறு எச்சரித்துள்ளார்கள்:

"இடது கையால் உண்ணாதீர்கள், ஏனெனில் ஷைத்தான் இடது கையால் உண்பவனாக உள்ளான்." (முஸ்லிம்-இல் குறிப்பிடப்பட்டுள்ளது)

**04**

### நமக்கு அருகாமையிலுள்ள உணவினை உண்ண வேண்டும்

நமக்கு அருகில் உள்ள உணவை உண்ணாமல் தொலைவில் உள்ளதை எடுத்து உண்பது அநாகரிகமான செயல் மட்டுமல்ல நமதருகில் அமர்ந்து மற்றவர்கள் உண்பதற்கு நாம் தற்காலிக தடங்கல் ஏற்படுத்தவும் கூடும்.

**05**

### தங்கம் மற்றும் வெள்ளி-யால் உருவான பாத்திரங்களில் உண்ண வேண்டாம்

தங்கம் மற்றும் வெள்ளிப் பாத்திரங்களைப் பயன்படுத்தி உண்பதும் பருகுவதும் ஆடம்பரத்தின் அடையாளமாகக் கருதப்படுகிறது. வீண் செலவுகளைத் தவிர்த்து தன்னடக்கத்துடன் வாழ்வது மார்க்கம் வலியுறுத்தும் சிறந்த பண்புகளில் ஒன்றாகும்.

06

## நின்றுகொண்டு உண்பதும் பருகுவதும் தவிர்ப்பது நல்லது

**இறைத்தூதர் (ஸல்) அவர்கள் நின்று கொண்டு உண்பதையும் பருகுவதையும் வன்மையாக கண்டித்துள்ளார்கள். அனஸ் (ரலி) அறிவித்த ஒரு ஹதீஸில்:**

“நின்று கொண்டு பருகுவதை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தடைச் செய்தார்கள். கதாதா (ரஹ்) (Qatadah) கூறுகிறார்கள்: நாங்கள் உண்பது பற்றிய கருத்து என்னவென்று வினவியபொழுது (ஸல்) அவர்கள் கூறியதாக கூறினார்கள்: “அதை விட மோசமானது (அதாவது மிகவும் வெறுக்கத்தக்கது”.” (முஸ்லிம்-இல் குறிப்பிடப்பட்டுள்ளது)

07

## வீண்விரயம் செய்யாதீர்கள், அதிகமாக உண்ணாதீர்கள்

உணவை வீணாக்குவது மட்டுமல்ல அதிகமாக உண்பதையும் ஒருவர் தவிர்க்க வேண்டும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பின்வரும் ஹதீஸில் குறிப்பிட்டுள்ளபடி, மிதமான வாழ்க்கை முறையை பின்பற்றவே மார்க்கம் நம்மை வழிநடத்துகின்றது:

“மனிதனின் வயிறே அவன் நிரப்பும் மோசமான பாத்திரமாகும். அவனது உடல் ஆற்றலுடன் செயல்பட தேவைப்படும் அளவிற்கு மட்டும் உண்டால் போதுமானது. அவன் அதிகமாக உண்ண விரும்பினால், வயிற்றின் மூன்றில் ஒரு பகுதியை உணவாலும், ஒரு பகுதியைப் பானத்தாலும் நிரப்பி, ஒரு பகுதியை எளிதாக சுவாசிக்க விட்டுவிட வேண்டும். (திர்மிதி-இல் குறிப்பிடப்பட்டுள்ளது)

08

## உணவைக் குறை கூறக்கூடாது, மேலும் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டும்

உணவைக் குறைகூறாமலும் வீண் விரயமாக்காமலும் உட்கொள்வதுடன் உணவு உண்டு முடித்தபின் ‘அல்ஹம்துலில்லாஹ்” என்று கூறுவது நாம் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தும் வழிகளில் ஒன்றாகும். ஒரு ஹதீஸில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

“உணவு உண்ட பின்பும் பருகிய பின்பும் தன்னைப் புகழ்ந்து நன்றி செலுத்தும் தன்னுடைய அடிமையைப் பார்த்து அல்லாஹ் திருப்தி அடைகிறான்” (முஸ்லிம்-இல் குறிப்பிடப்பட்டுள்ளது)

கண்மணி நாயகம் (ஸல்) அவர்கள் அறிவுறுத்தியபடி முஸ்லிம்கள் இந்த ஒழுக்க முறைகளைக் கடைபிடிக்க இஸ்லாம் கட்டளையிட்டுள்ளது. இதன் மூலம் வாழ்வில் நாம் ஆடம்பரத்தையும் பெருமையையும் வெளிப்படுத்துவதில் இருந்தும் உணவால் சில நேரங்களில் ஏற்படக்கூடிய நோய்களிலிருந்தும் நாம் பாதுகாக்கப்படுவோம். மேலும் இதன் மூலம் அல்லாஹ்விற்கு எப்பொழுதும் நன்றி செலுத்துபவர்களாகவும் அவனது அருட்கொடையை அருளியதற்காகவும் தொடர்ந்து அவன் சிறப்புகளை எண்ணி அவனை துதிப்பவர்களாக இருப்போம்.



## சுருக்கம்

* உணவு அல்லது பானத்தை உட்கொள்ளும் முன், அது அனுமதிக்கப்பட்டதா (ஹலால்) என்பதை உறுதி செய்ய வேண்டும். நிதர்சனமாக தெரியாதபட்சத்தில் அதை உட்கொள்வதை முற்றிலுமாக தவிர்ப்பதே சிறந்தது.
* அனுமதிக்கப்பட்ட ஹலால் மட்டுமல்லாமலும் ஆரோக்கியமானதுமான (ஹலாலன் தொய்யிபன்) உணவை உட்கொள்வது வலியுறுத்தப்படுகின்றது.
* உணவகங்களும் உணவுத்துறையில் உள்ள நிறுவனங்களும் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு இணங்கி சிங்கப்பூரில் ஹலால் சான்றிதழை வழங்குவதற்கு அங்கீகாரம் பெற்ற ஒரே அமைப்பான மூயிஸ்-இல் விண்ணப்பித்து ஹலால் சான்றிதழைப் பெறுகிறார்கள்.
* சிங்கப்பூரில் ஹலால் சான்றிதழைப் பெற்ற உணவு வகைகளுடன் ஹலால் அல்லாத பொருட்களோ மற்ற கலப்படங்களோ இருக்காது என்பதில் முஸ்லிம்கள் உறுதியாக இருக்கலாம்.
* இஸ்லாம் வலியுறுத்தும் ஒழுக்கநெறிகளைப் பின்பற்றுவதன் மூலம் நமக்கு உணவை வழங்கியதற்காக அவனுக்கு நன்றி செலுத்துவதுமட்டுமல்லாமல் நமது ஆரோக்கியத்தையும் சுகாதாரமான சுற்றுசூழலையும் பேணமுடியும்.

பாகம்-11

# இஸ்லாமிய ஆடைமுறை



## இஸ்லாத்தில் அடக்கத்துடன் கூடிய ஆடைமுறை

மனிதர்கள் நாகரீக வாழ்வியல் முறையைக் அறிந்த பின் அவர்கள் அணியும் ஆடை காலநிலை சூழலில் இருந்து பாதுகாப்பது மட்டுமின்றி உடலின் அந்தரங்க பாகங்களை மறைத்து தங்கள் கண்ணியத்தைக் காக்க வேண்டும் என்பதை அறிந்து கொண்டார்கள். இஸ்லாமிய மார்க்கம் ஆடைக்கு முக்கியத்துவம் அளிப்பதற்கு அதை விட முக்கிய காரணங்கள் உண்டு.

இஸ்லாமிய மார்க்கத்தில் உடலின் அந்தரங்க பாகங்கள் ‘ஔரா (‘AURAH)" என்று குறிப்பிடப்படுகின்றன. மற்றவர்களின் பார்வையில் இருந்து தங்கள் ‘ஔரா-வை மறைப்பதன் மூலம் ஒருவரின் கண்ணியம் பாதுகாக்கப்படுகின்றது. இதன் காரணமாகவே அல்லாஹ் மனிதர்களின் ‘ஔரா-வை வெளிப்படுத்தும்படியான ஆடைகளைத் தடை செய்துள்ளான்.

கீழேயுள்ள திருகுர்ஆனின் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, ஒருவருடைய ‘ஔரா-வை மறைப்பதும் அல்லாஹ் நமக்கு அருளியுள்ள அருட்கொடைகளை நினைவுகூருவதற்கான ஒரு வாய்ப்பாகத்தான் கருதப்படுகின்றது.

وَاللَّهُ جَعَلَ لَكُم مِّمَّا خَلَقَ ظِلَالًا وَجَعَلَ لَكُم مِّنَ الْجِبَالِ أَكْنَانًا وَجَعَلَ لَكُمْ سَرَابِيلَ
تَقِيكُمُ الْحَرَّ وَسَرَابِيلَ تَقِيكُم بَأْسَكُمْ ۚ كَذَٰلِكَ يُتِمُّ نِعْمَتَهُ عَلَيْكُمْ لَعَلَّكُمْ تُسْلِمُونَ ﴿٨١﴾

“இன்னும் அல்லாஹ் தான் படைத்துள்ளவற்றிலிருந்து உங்களுக்கு நிழல்களையும் ஏற்படுத்தினான்; மலைகளிலிருந்து உங்களுக்கு(த் தங்குமிடங்களாக) குகைகளையும் ஏற்படுத்தினான்; இன்னும் வெப்பத்திலிருந்து உங்களைப் பாதுகாக்கக்கூடிய சட்டைகளையும் உங்களுடைய போரில் உங்களை பாதுகாக்கக்கூடிய கவசங்களையும் உங்களுக்காக அமைத்தான்; நீங்கள் (அவனுக்கு) முற்றிலும் வழிப்பட்டு நடப்பதற்காக, இவ்வாறு தன் அருட்கொடையை உங்களுக்குப் பூர்த்தியாக்கினான்." (திருக்குர்ஆன் 16:81)

இஸ்லாமிய மார்க்கம் ஆடைகள் உடுத்துவதற்கு சில வழிமுறைகளை நமக்கு வகுத்துள்ளது. அந்த வழிமுறைகளை மீறாத வரையில் அனைத்து விதமான ஆடைகளும் அனுமதிக்கப்படுகின்றன. மார்க்கத்தில் குறிப்பிட்ட ஆடைகளை மட்டுமே அணிய வேண்டுமென்கிற கட்டாயம் இல்லை, ஆனால் மார்க்கத்தின் வழிகாட்டுதல்களின்படி தொடர்ந்து அடக்கமாக உடை அணிவதை ஒருவர் வழக்கமாக்கினால், அது அவரது அணுகுமுறையிலும் இறைநம்பிக்கையிலும் நல்ல முறையில் மாற்றங்கள் உருவாகும். திருகுர்ஆனில் அல்லாஹ் குறிப்பிட்டுள்ளான்:

يَا بَنِي آدَمَ قَدْ أَنزَلْنَا عَلَيْكُمْ لِبَاسًا يُوَارِي سَوْآتِكُمْ وَرِيشًا ۖ وَلِبَاسُ التَّقْوَىٰ ذَٰلِكَ خَيْرٌ ۚ ذَٰلِكَ مِنْ آيَاتِ اللَّهِ لَعَلَّهُمْ يَذَّكَّرُونَ ﴿٢٦﴾

“ஆதமுடைய வாரிசுகளே! நிச்சயமாக, நாம் உங்களுக்கு உங்களுடைய மானத்தை மறைக்கவும், உங்களுக்கு அலங்காரமாகவும், ஆடையை அளித்துள்ளோம். ஆயினும் தக்வா (பயபக்தி) எனும் ஆடையே (அதைவிட) மேலானது. இது அல்லாஹ்வுடைய (அருட்கொடையின்) அடையாளங்களில் (ஒன்றாக) உள்ளதாகும் – (இதைக் கொண்டு) நல்லுணர்வு பெறுவார்களாக.” (திருக்குர்ஆன் 7:26)

ஒருவரின் இறைநம்பிக்கையின் வெளிப்பாடாக அவர் அணியும் ஆடைகள் கருதப்படுகின்றன. மறுபுறம், பண்புடன் ஆடைகளை அணிவதன் மூலம் அவரது இறைநம்பிக்கை மேலும் வலுப்படும் என்பதிலும் மாற்றுக் கருத்து இல்லை.





## நாணம் பேண நெறிமுறைகள் (‘ஔரா)

ஆண்களுக்கும் பெண்களுக்கும் ‘ஔரா என்பதன் வரையறை வேறுபட்டாலும் அவை நாணம் மற்றும் ஒழுக்கத்தின் ஒரே கோட்பாடுகளை அடிப்படையாக கொண்டுள்ளன.

## ஆண்களுக்கான ஆடை நெறிமுறைகள்

ஆண்களின் ‘ஔரா அவர்களின் தொப்புளிலிருந்து முழங்கால் வரை இருந்தாலும், பொதுவாக ஆண்கள் முழங்கால் வரை மட்டுமே அணிபவர்கள் என்றோ அல்லது தங்கள் மார்பை மறைக்காமல் அணிகின்றார்கள் என்றோ அர்த்தமல்ல என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

## பெண்களுக்கான ஆடை நெறிமுறைகள்

பெண்களின் ‘ஔரா என்பது அவர்களின் கணவர், உறவினர்கள் மற்றும் அந்நியர்கள் முன்பு வேறுபடும்.

பெண்கள் தாங்கள் உறவினர் அல்லாதவர்கள் (மஹ்ரம் அல்லாதவர்கள்) முன்பு அவர்களின் கைகள் மற்றும் முகத்தைத் தவிர உடலின் அனைத்து பாகங்களையும் மறைக்க வேண்டும்.

திருமணம் செய்யக்கூடாத உறவினர்கள் (மஹ்ரம்) முன்பு முடி மற்றும் கழுத்து உட்பட தலை, கைகள் மற்றும் முழங்கால்களுக்கு கீழ் வெளிப்படுத்தலாம். தங்கள் கணவரின் முன்பு தனிமையில் தங்கள் ‘ஔரா-வை முழுமையாக வெளிப்படுத்தலாம்.

وَقُل لِّلْمُؤْمِنَاتِ يَغْضُضْنَ مِنْ أَبْصَارِهِنَّ وَيَحْفَظْنَ فُرُوجَهُنَّ وَلَا يُبْدِينَ زِينَتَهُنَّ إِلَّا مَا
ظَهَرَ مِنْهَا ۖ وَلْيَضْرِبْنَ بِخُمُرِهِنَّ عَلَىٰ جُيُوبِهِنَّ ۖ وَلَا يُبْدِينَ زِينَتَهُنَّ إِلَّا لِبُعُولَتِهِنَّ أَوْ آبَائِهِنَّ أَوْ
آبَاءِ بُعُولَتِهِنَّ أَوْ أَبْنَائِهِنَّ أَوْ أَبْنَاءِ بُعُولَتِهِنَّ أَوْ إِخْوَانِهِنَّ أَوْ بَنِي إِخْوَانِهِنَّ أَوْ بَنِي أَخَوَاتِهِنَّ أَوْ
نِسَائِهِنَّ أَوْ مَا مَلَكَتْ أَيْمَانُهُنَّ أَوِ التَّابِعِينَ غَيْرِ أُولِي الْإِرْبَةِ مِنَ الرِّجَالِ أَوِ الطِّفْلِ الَّذِينَ
لَمْ يَظْهَرُوا عَلَىٰ عَوْرَاتِ النِّسَاءِ ۖ وَلَا يَضْرِبْنَ بِأَرْجُلِهِنَّ لِيُعْلَمَ مَا يُخْفِينَ مِن زِينَتِهِنَّ ۚ وَتُوبُوا
إِلَى اللَّهِ جَمِيعًا أَيُّهَ الْمُؤْمِنُونَ لَعَلَّكُمْ تُفْلِحُونَ ﴿٣١﴾

"இன்னும்; மு.்மினான பெண்களுக்கும் நீர் கூறுவீராக: அவர்கள் தங்கள் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும்; தங்கள் வெட்கத் தலங்களைப் பேணிக்காத்துக் கொள்ள வேண்டும்; தங்கள் அழகலங்காரத்தை அதினின்று (சாதாரணமாக வெளியில்) தெரியக் கூடியதைத் தவிர (வேறு எதையும்) வெளிக் காட்டலாகாது; இன்னும் தங்கள் முன்றானைகளால் அவர்கள் தங்கள் மார்புகளை மறைத்துக் கொள்ள வேண்டும்; மேலும், (மு.்மினான பெண்கள்) தம் கணவர்கள், அல்லது தம் தந்தையர்கள், அல்லது தம் கணவர்களின் தந்தையர்கள் அல்லது தம் புதல்வர்கள் அல்லது தம் கணவர்களின் புதல்வர்கள், அல்லது தம் சகோதரர்கள் அல்லது தம் சகோதரர்களின் புதல்வர்கள், அல்லது தம் சகோதரிகளின் புதல்வர்கள், அல்லது தங்கள் பெண்கள், அல்லது தம் வலக்கரங்கள் சொந்தமாக்கிக் கொண்டவர்கள், அல்லது ஆடவர்களில் தம்மை அண்டி வாழும் (பெண்களை விரும்ப முடியாத அளவு வயதானவர்கள்) பெண்களின் மறைவான அங்கங்களைப் பற்றி அறிந்து கொள்ளாத சிறுவர்கள் ஆகிய இவர்களைத் தவிர, (வேறு ஆண்களுக்குத்) தங்களுடைய அழகலங்காரத்தை வெளிப்படுத்தக் கூடாது; மேலும், தாங்கள் மறைத்து வைக்கும் அழகலங்காரத்திலிருந்து வெளிப்படுமாறு தங்கள் கால்களை (பூமியில்) தட்டி நடக்க வேண்டாம்; மேலும், மு.்மின்களே! (இதில் உங்களிடம் ஏதேனும் தவறு நேரிட்டிருப்பின்,) நீங்கள் தவ்பா செய்து (பிழை பொறுக்கத் தேடி), நீங்கள் வெற்றி பெறும் பொருட்டு, நீங்கள் அனைவரும் அல்லாஹ்வின் பக்கம் திரும்புங்கள்." (திருக்குர்ஆன் 24:31)



மேலே உள்ள திருக்குர்ஆன் வசனத்தில் கூறியது போல், பெண்களின் தலைமுடி, காது மற்றும் கழுத்தை மறைக்கும் படி தலைக்கு முக்காடு (ஹிஜாப்) அணிவது அல்லாஹ்வின் கட்டளை என்பது தெளிவாகின்றது.

சில பகுதிகளில் வாழும் முஸ்லிம் பெண்கள், நிகாப் (Niqab) எனப்படும் கண்களை மட்டும் வெளிப்படுத்தும் வகையிலான இருண்ட துணியால் தங்களை மறைத்துக்கொள்வார்கள். பொதுவாக இது அப்பகுதியின் கலாச்சார வழக்கங்கள் மட்டுமே. சில சமயங்களில் பெண்கள் தன்னடக்கத்தைக் கடைப்பிடித்து கண்ணியம் காக்க விரும்பியும் நிகாப் அணிவார்கள், அது அவர்களுக்கு கட்டாயமில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் தனிமையில், தங்கள் கணவர்களின் முன்னிலையில், பெண்கள் தங்கள் 'ஔரா-வை விலக்கி தங்களை முழுமையாக வெளிப்படுத்த அனுமதிக்கப்படுகிறார்கள்.

## பருவமடைந்த பிறகு பெண்கள் தங்கள் 'ஔரா-வை மறைக்க வேண்டும் என்று தெரியுமா?

பெண்கள் பருவமடைந்தவுடன், கீழே விவரிக்கப்பட்டுள்ள ஒரு ஹதீஸில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, அவர்களின் 'ஔரா-வை மறைக்க வேண்டும் என்பது அவர்களின் மீது கடமையாகின்றது:

قَالَ يَعْقُوبُ ابْنُ دُرَيْكٍ - عَنْ عَائِشَةَ، رضى الله عنها أَنَّ أَسْمَاءَ بِنْتَ أَبِي بَكْرٍ، دَخَلَتْ عَلَى رَسُولِ اللَّهِ صلى الله عليه وسلم وَعَلَيْهَا ثِيَابٌ رِقَاقٌ فَأَعْرَضَ عَنْهَا رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم وَقَالَ " يَا أَسْمَاءُ إِنَّ الْمَرْأَةَ إِذَا بَلَغَتِ الْمَحِيضَ لَمْ تَصْلُحْ أَنْ يُرَى مِنْهَا إِلاَّ هَذَا وَهَذَا". وَأَشَارَ إِلَى وَجْهِهِ وَكَفَّيْهِ

"அல்லாஹ்வின் தூதர் (ஸல்) முன் அபூபக்கரின் மகள் அஸ்மா மெல்லிய ஆடை அணிந்து வந்தார், அப்பொழுது (ஸல்) அவர்கள் முகத்தையும் கைகளையும் சுட்டிக்காட்டி அவரிடம் கூறினார்: "ஓ அஸ்மா, ஒரு பெண் மாதவிடாய் வயதை அடைந்தால், அவள் இதையும் இதையும் தவிர தனது உடலின் பாகங்களை வெளிப்படுத்துவது அவளுக்குப் பொருந்தாது" (அபு தாவூத்-இல் குறிப்பிடப்பட்டுள்ளது)

## மார்க்கத்தில் தடை செய்யப்பட்ட ஆடை வகைகள்

முஸ்லிம்கள் குறிப்பிட்ட ஆடைகளை அணிய மார்க்கம் வலியுறுத்தவில்லை, எனினும் சில குறிப்பிட்ட ஆடை வகைகளை அணிய தடை விதித்துள்ளது. இது ஆண் பெண் இரு பாலினருக்கும் பொருந்தும்.

01

### ஆடை மெல்லியதாகவும் இறுக்கமானதாகவும் இருக்கக்கூடாது

உடல் வடிவத்தை வெளிப்படுத்தக்கூடிய இறுக்கமான ஆடைகளோ அல்லது 'ஔரா பகுதியை வெளிப்படுத்தக்கூடிய மெல்லிய ஆடைகளோ அணிய அனுமதிக்கப்படவில்லை. ஒருவரின் கண்ணியத்தைப் பாதுகாக்கும் வகையில் இருண்ட நிற ஆடைகளை அணிவது முஸ்லிம்களுக்கு வலியுறுத்தப்படுகின்றது.

02

### தன் பாலினத்திற்கு ஏற்ற வகையில் ஆடை அணிய வேண்டும்

அல்லாஹ் ஆண்களையும் பெண்களையும் தூய்மையான மற்றும் தனித்துவமான இயல்புடன் (ஃபித்ரா) படைத்துள்ளான். இஸ்லாம் பாலினங்களுக்கு இடையிலான உயிரியல் மாறுபாடுகளைக் கொண்டு அவர்களுக்கு பிரத்யேகமான நெறிமுறைகள் வகுத்துள்ளது. ஆண்கள் பெண்களைப் போன்றோ அல்லது பெண்கள் ஆண்களைப் போன்றோ ஆடைகள் அணிவது மார்க்கத்தில் அனுமதிக்கப்படவில்லை.

03

### ஆண்கள் தூய பட்டு அல்லது தங்கத்தை அணிய கூடாது

பட்டு மற்றும் தங்கம் பொதுவாக பெண்களுடன் தொடர்புடையது. எனவே, முஸ்லிம் ஆண்கள் தூய பட்டு ஆடைகளை அணிவதோ தங்க நகைகளால் தங்களை அலங்கரிப்பதோ தடைசெய்யப்பட்டுள்ளது. பின்வரும் ஹதீஸில் நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்:

"இவை (தங்கம் மற்றும் பட்டு) என்னைப் பின்பற்றுபவர்களில் ஆண்களுக்குத் தடைசெய்யப்பட்டவை. ஆனால் பெண்களுக்கு அனுமதிக்கப்படுகின்றன. (இப்னு மாஜா-வில் குறிப்பிடப்பட்டுள்ளது)

04

### பெருமையுடனோ வஞ்சகத்துடனோ ஆடம்பரமாகவோ ஆடை அணியக்கூடாது

அல்லாஹ் முஸ்லிம்கள் அழகிய ஆடைகள் அணிவதை தடை செய்யாவிட்டாலும் ஆடம்பரமாகவும் மற்றும் வீண்விரயம் செய்யக்கூடிய வகையில் அணிவது தடைசெய்யப்பட்டுள்ளது. கண்மணி நாயகம் (ஸல்) அவர்கள் வலியுறுத்தியத்தைப் போன்று:

"உண்ணுங்கள், தர்மம் செய்யுங்கள், ஆடைகளை அணியுங்கள். ஆனால் நீங்கள் செய்யும் செயல்களுடன் ஆடம்பரமும் பெருமையும் கலக்க வேண்டாம்." (அன்-நஸா'இ -யில் குறிப்பிடப்பட்டுள்ளது)

## சுருக்கம்

- ‘ஔரா-வை மறைக்க மார்க்கம் நமக்கு கட்டளையிட்டுள்ளது
- முஸ்லிம்கள் எந்தவொரு குறிப்பிட்ட வகை ஆடை அணிய வலியுறுத்தாவிட்டாலும் இரு பாலினருக்கும் இஸ்லாத்தில் ஆடைகள் உடுத்த கடைபிடிக்க வேண்டிய வழிகாட்டுதல்கள் மற்றும் கட்டுப்பாடுகள் தெளிவாக உள்ளன.
- மெல்லிய ஆடைகள், ஆடம்பரமான ஆடைகள் மற்றும் மாற்று சமூக வழிபாடுகளைக் குறிக்கும் உருவங்களையோ எழுத்துக்களையோ கொண்ட ஆடைகள் போன்றவற்றை உடுத்த மார்க்கம் தடைசெய்துள்ளது.
- ஆடைகளை நாகரீக அடையாளமாக மட்டும் கருதாமல் முஸ்லிம்கள் தங்கள் மார்க்க அடையாளத்தைத் தனித்து காட்டும் வகையிலும் சிறந்த முறையில் சித்தரிக்கும் வகையிலும் நம்மால் இயன்ற அளவிற்கு சிறப்பான முறையில் ஆடம்பரமின்றியும் உடுத்த வேண்டும்.

பாகம்-12

# பள்ளிவாசல்களின் செயல்பாடுகள்



## பள்ளிவாசல்களின் முக்கியத்துவம்

ஒவ்வொரு சமயத்திற்கும் அதைப் பின்பற்றுபவர்களால் புனிதமானது மற்றும் தூய்மையானது என்று கருதப்படும் புனித ஸ்தலம் உண்டு. அதன் படி இஸ்லாமிய மார்க்கத்தில் பள்ளிவாசல் (மசூதி) முக்கியத்துவம் வாய்ந்த இடமாக கருதப்படுகிறது. ஒரு பகுதிக்குள் மசூதி இருப்பது முஸ்லிம்கள் கூட்டமாக தொழுவதற்கான இடமாக மட்டுமின்றி ஒன்றுபட்ட ஒரு முஸ்லிம் சமூகம் இருப்பதையும் அது அடையாளப்படுத்துகின்றது.

பள்ளிவாசல்களுக்கு சென்று ஜமாத்துடன் இணைந்து தொழுது, அங்கு நடக்கும் மார்க்க நிகழ்வுகளில் பங்கேற்று அவர்களுக்கு உதவுபவர்களுக்கு இறைவனிடத்தில் பல நன்மைகள் உண்டென்று மார்க்கம் நன்மராயம் கூறுகின்றது. பின்வரும் ஹதீஸில் ஒருவர் மார்க்கத்திற்காக ஒரு மசூதி கட்டுவதில் உதவி செய்தால், அல்லாஹ் அவருக்கு சுவர்க்கத்தில் ஒரு வீட்டைப் பரிசளிப்பான் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியதாக ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

“அல்லாஹ்வின் அருட்கொடையைப் பெரும் பொருட்டு ஒரு பள்ளிவாசலைக் கட்டுபவர், அது சிட்டுக்குருவி கூடு கட்டுவது போலவோ அல்லது அதைவிட சிறியதாகவோ இருந்தாலும் கூட, அல்லாஹ் அவருக்கு சொர்க்கத்தில் ஒரு வீட்டைக் கட்டுவார்.

(சுனான் இப்னு மாஜா-வில் குறிப்பிடப்பட்டுள்ளது)

மற்றொரு ஹதீஸில், மறுமை நாளில் அல்லாஹ்வின் பாதுகாப்பை ஏழு குழுக்கள் பெறுவர். அதில் ஒரு குழுவில் இருப்பவர்கள் அவர்களின் இதயம் பள்ளிவாசலோடு இணைத்தவர்களாக இருப்பார்கள் என்று அவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்:

அபு ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

“அல்லாஹ் ஏழு பேருக்கு நிழல் கொடுப்பான், அவனுடைய நிழலைத்



தவிர வேறு நிழல் இல்லாத நாளில்: ஒரு நேர்மையான ஆட்சியாளர்; அல்லாஹ்வின் வணக்கத்தில் வளர்ந்த இளைஞன் (அதாவது இளவயதிலிருந்தே அல்லாஹ்வை உண்மையாக வணங்கியவன்); தன் மனதை மசூதிகளுடன் இணைக்கப்பட்ட (அதாவது மசூதியில் ஜமாஅத்தில் கட்டாயத் தொழுகையைத் தொழுவது) ஒரு மனிதன்; அல்லாஹ்வுக்காக மட்டுமே சந்தித்துப் பிரியும் அல்லாஹ்வுக்காக ஒருவரையொருவர் நேசிக்கும் இரண்டு நபர்கள்; ஓர் அழகிய பெண்மணியின் அழைப்பை மறுத்து அல்லாஹ்வைக் கண்டு நான் பயப்படுகிறேன் இன்று கூறும் ஆண்; தான் வலது கை வழங்கும் தர்மங்கள் தனது இடது கை அறியாதவாறு ரகசியமாக தானம் செய்யும் ஒரு நபர்; தனிமையில் கண்ணீர் வெள்ளத்தால் மூழ்கும் அளவிற்கு அல்லாஹ்வை நினைவுகூர்ந்து அழும் ஒரு நபர். (இப்னு மாஜா-வில் குறிப்பிடப்பட்டுள்ளது)

இதன் மூலம் முஸ்லிம்கள் பள்ளிவாசல்களில் தன்னை இணைத்துக்கொண்டு சமூகத்திற்கு சேவை செய்ய வேண்டும் என்று நமக்கு தெளிவாகின்றது.

# பள்ளிவாசல்களின் செயல்பாடுகள்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில், மசூதிகள் மார்க்கப்பணிகள் மட்டுமல்லாமல் கல்வி, பொருளாதார மற்றும் அரசியல் தேவைகளுக்கு சேவை செய்யும் மையமாகவும் செயல்பட்டன. சிங்கப்பூரில் உள்ள பள்ளிவாசல்கள் முஸ்லிம் சமூகத்தின் மார்க்க தேடுதல்களை நிறைவு செய்யும் அமைப்பாக உள்ள சிங்கப்பூர் இஸ்லாமிய அமைப்பின் (மூயிஸ்) கீழ் செயல்படுகின்றன.

## வழிபாட்டு ஸ்தலமாக செயல்படுதல்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்ததும் (ஸல்) அவர்கள் செய்த முதல் செயல் மதீனாவின் புறநகர்ப் பகுதியில் உள்ள குபாவில் (Quba') ஒரு மசூதியைக் கட்டியதாகும். முஸ்லிம்கள் ஐவேளைத் தொழுகைகளை நிறைவேற்றுவதற்கும், ஆண்கள் கட்டாயமான வெள்ளிக்கிழமை (ஜூம்ஆ) தொழுகையை நிறைவேற்றுவதற்கும் கூடும் இடத்தை தயார் செய்வதே அதன் நோக்கமாக இருந்தது.

இக்காலத்தில், சிங்கப்பூரில் உள்ள பள்ளிவாசல்கள் வெள்ளிக்கிழமை (ஜும்ஆ) தொழுகை உட்பட தினசரி ஐவேளைத் தொழுகைகள் ஜமாத் தொழுகை நடத்துவதன் மூலம் ஒரு வழிபாட்டு தலமாக தங்கள் அடிப்படை செயல்பாட்டைப் பராமரிக்கின்றன. மேலும் தினசரி தொழுகைகளுக்கு அப்பால், ரமழான் மாதத்தில் தராவிஹ் தொழுகைகள், இரண்டு ஈத் தொழுகைகள் (ஈத் உல்-ஃபித்ரி மற்றும் ஈதுல் அல்ஹா போன்றவை), கிரகணத்தின் போது சுன்னத் தொழுகைகள் மற்றும் இரவு தொழுகைகள் (கியாமுல்லைல்) போன்ற பரிந்துரைக்கப்பட்ட (சுன்னத்) தொழுகைகளும் நடத்தப்படுகின்றன.

## மார்க்க கல்வி கற்கும் மையமாக செயல்படுதல்

முழுநேர மார்க்க பள்ளிகள் (மத்ரஸாக்கள்) மற்றும் தனியார் மையங்களில் நடக்கும் வாராந்திர சமய வகுப்புகள் தவிர, சிங்கப்பூரில் உள்ள பள்ளிவாசல்கள் தொழுகை அல்லாத நேரங்களில் வகுப்புகள் மற்றும் பேருரைகள் மூலம் மார்க்க கல்வியை வழங்குகின்றன. ஒவ்வொரு பள்ளிவாசல்களும் மார்க்க அறிஞர்களின் குறிப்பிட்ட வகுப்புகளின் அட்டவணை வெளியிட்டு பொதுமக்களுக்கு மார்க்க கல்வி எளிதாக கிடைக்க செய்கின்றன.

குலியா (kuliah) என்று அறியப்படும் குறுகிய மார்க்க உரைகள் தினசரி ஜமாத்



[16] Refer to Chapter 4: Islamic Organisations in Singapore for details.

தொழுகைகளுக்கு இடையில் நடத்தப்படுகின்றன. ஷரஹன் (syarahan) என்று அறியப்படும் பேருரைகள் இஸ்லாமிய நாட்காட்டியில் சில குறிப்பிடத்தக்க நிகழ்வுகளின் அடிப்படையில் நடத்தப்படும். மார்க்க வகுப்புகள் மற்றும் உரைகளை நிர்வகிப்பது பள்ளிவாசல்களின் பொறுப்பு, எனவே அவற்றைக் குறித்து மேலும் விவரங்கள் அறிய பள்ளிவாசல்களின் அலுவலகத்தை அணுகலாம்.

## சமூக மையமாக செயல்படுதல்

சிங்கப்பூரில் உள்ள பள்ளிவாசல்கள் தன்னார்வ குழு அல்லது இளைஞர் பிரிவை நிறுவி பள்ளிவாசல்களின் அருகாமையில் இருக்கும் குடியிருப்பு பகுதிகளிலுள்ள இஸ்லாமிய சமூகத்தினருக்கு மார்க்க ரீதியாகவும் நலத்திட்ட உதவிகளும் செய்து சமூகங்களை வலுப்படுத்துவதில் ஈடுபடுகின்றன. தன்னார்வ குழுக்கள் மூலம் பள்ளிவாசல் நிர்வாகத்தில் இல்லாத மக்களுக்கு பள்ளிவாசலில் நடக்கும் நிகழ்வுகளை நிர்வகிக்கும் பொறுப்பை அளிப்பதன் மூலம் அவர்களுக்கு பள்ளிவாசலில் இருந்து விலகி இருப்பதற்கான உணர்வை நீக்கி அவர்களும் உத்வேகத்துடன் இஸ்லாமிய சமூகத்தில் ஒன்றிணைய வழிவகுக்கின்றது. சிங்கப்பூரில் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், திறன் மேம்படுத்துதல் பயிற்சி போன்றவற்றை நடத்தும் "சமூக சேவை பிரிவு" தன்னார்வ குழுக்களையே சார்ந்து உள்ளது.

**பள்ளிவாசல்களில் நடைபெறும் நிகழ்வுகள்**

- குடும்பங்கள் பங்கேற்கும் நிகழ்வுகள்
- மாதாந்திரமாக திருக்குர்ஆன் ஓதி நிறைவு
- பண்டிகைக் காலங்களில் உணவு விநியோகம் செய்தல்
- ஈதுல் அல்ஹா வின் பொழுது குர்பானி விநியோகித்தல்
- மார்க்க உரைகள் நடத்துவது

மூயிஸ், பிஃபெரென்டர்ஸ் (BEFRIENDERS) மற்றும் பள்ளிவாசல்கள் இணைந்து செயல்படுத்தும் சமூக சேவை பிரிவு, உடல்நலம் மற்றும் பொருளாதாரத்தில் நலிந்த நிலையில் உள்ள முஸ்லிம்களுக்கு உதவுவதற்காக உருவாக்கப்பட்டது.

இந்த குழுவின் மூலம் நலிந்த நிலையில் உள்ள முஸ்லிம்களுக்கு நிதி உதவி, மானிய கட்டணத்துடன் கூடிய மார்க்க வகுப்புகள், பண்டிகைக்காலங்களில் உணவு வாங்குவதற்கு சீட்டுகள் போன்ற பல நல்லுதவிகள் வழங்கப்படுகின்றன. இது போன்ற சமூக சேவைப் பிரிவைக் கொண்டிருப்பதன் மூலம் சமுதாயத்தில் முஸ்லிம்களுக்கும் பள்ளிவாசல்களுக்கும் நல்லுறவைப் பேணமுடிகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.





## பள்ளிவாசல்களின் நிர்வகிக்கும் பொறுப்பு

சிங்கப்பூரில் உள்ள பள்ளிவாசல்களில் வழங்கப்படும் சேவைகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன. குறிப்பிட்ட சில பள்ளிவாசல்களில் மட்டுமே கிடைக்கக்கூடிய கூடுதல் சேவைகள் பற்றிய தகவல்களை அந்தந்த பள்ளிவாசல்களின் இணையதளங்களில் இருந்து பெறலாம்.

### ஜகாத் சேகரித்தல்

ஜகாத் என்றழைக்கப்படும் தானம் செய்தல், இஸ்லாத்தின் ஐந்து தூண்களில் மூன்றாவதாகும். ஜகாத் வழங்க வேண்டிய முஸ்லிம்கள் தங்கள் சேமிப்பின் ஒரு பகுதியை ஜகாத் சேகரிப்புக்குச் செலுத்தினால் அது சமூகத்தில் உள்ள பல குறிப்பிட்ட தேவைப்படும் குழுக்களுக்கு விநியோகிக்கப்படும்.

சிங்கப்பூரில் உள்ள அனைத்து பள்ளிவாசல்களும் ஜகாத் வசூல் மையம் அமைத்து முஸ்லிம்கள் தங்கள் பொறுப்பை நிறைவேற்றுவதற்கான வசதியை ஏற்படுத்துகின்றன. இதேபோல், அனைத்து பள்ளிவாசல்களும் ரமழான் மாதத்தின் போது வழங்க வேண்டிய ஜகாத் ஃபித்ரா சேகரிப்பு மையங்களும் அமைக்கின்றன.

### பள்ளிவாசல் கட்டிடம் மற்றும் மெண்டகி (Mendaki) நிதி (MBMF)

சிங்கப்பூரில் உள்ள பள்ளிவாசல்களுக்கு தேவையான கட்டிட பராமரிப்பு மற்றும் மேம்படுத்தும் பணிகளுக்காகவும், மார்க்க கல்வி வழங்குவதற்கும் பள்ளிவாசல் கட்டிடம் மற்றும் மெண்டகி நிதி (MBMF) மூயிஸ் அமைத்துள்ளது.

இனம் மற்றும் குடியுரிமையைக் கருத்தில் கொள்ளாமல், சிங்கப்பூரில் வாழும் அனைத்து முஸ்லிம்களும் தங்கள் ஊதியத்தின் அடிப்படையில் S$3 முதல் S$26 வரை மாதாந்திர நன்கொடையை கட்டாயமாக இந்த திட்டத்திற்கு வழங்க வேண்டும்.

## பள்ளிவாசல் கட்டிட வடிவமைப்பு மற்றும் வசதிகள்

சிங்கப்பூரில் உள்ள ஒவ்வொரு பள்ளிவாசல்களும் தனித்துவமான வெளிப்புறம் மட்டும் உள்புற கட்டிட வடிவமைப்பு கொண்டுள்ளன. மேலும், அவற்றில் உள்ள வசதிகளும் சிறப்பானவை. மூன்று முக்கிய அம்சங்கள் மட்டுமே பொதுவாக உள்ளவை:

### தொழுகைப் பகுதி (இ'திகா஁ப்)



பள்ளிவாசல்களின் மையப்பகுதியில் தரைவிரிப்பு பகுதிகளாக இ'திகா஁ப் பகுதி என்று குறிப்பிடப்படும் தொழுகை நடக்கும் இருக்கும். ஆண்/பெண் இரு பாலினருக்கும் தனித்தனி இ'திகா஁ப் பகுதிகள் இருக்கின்றன.

### வெளிப்புற தொழுகைப் பகுதிகள்



முக்கிய தொழுகை பகுதிகள் நிரம்பியிருக்கும் பட்சத்தில் பிரதான தொழுகைப் பகுதிக்கு வெளியில் தரைவிரிப்பு இல்லாத பகுதிகள் வழிபாட்டாளர்கள் தொழுவதற்கு அமைக்கப்பட்டுள்ளன. அடித்தளத்தில் இருக்கும் மகிழுந்து நிறுத்திடம் (Car Park) ஜூம்'ஆ தொழுகை, தராவீஹ் மற்றும் ஈத் தொழுகைகள் போன்ற முக்கிய நாட்களில் அதிகப்படியான கூட்டத்தின் பொழுது தொழுகை நடத்தவும், திருமணங்கள் மற்றும் ரமழான் இ஁ப்தார் நிகழ்வுகளிலும் தற்காலிகமாக பயன்படுத்தப்படும்.

### மற்ற வசதிகள்



பள்ளிவாசல்களில் மேலாண்மை அலுவலகங்கள், சிற்றுண்டி நிலையங்கள், விழா கொண்டாட்ட அறைகளும் உள்ளன. இடவசதி இருக்கும் பெரிய பள்ளிவாசல்களில் அவைக்களம் (Auditorium), வரலாற்று காட்சியகங்கள் மற்றும் நூலகங்கள் கூட இருக்கும். அன்-நஹ்தா பள்ளிவாசலில் சமய நல்லிணக்கத்தைப் பேண உருவாக்கப்பட்ட சிங்கப்பூரின் நல்லிணக்க மையம் உள்ளது. கம்போங் சிக்லாப் பள்ளிவாசலில் திருக்குர்ஆனை மனனம் செய்யும் மையமான “தாருல் குர்ஆன்" அமைக்கப்பட்டுள்ளது.

## பள்ளிவாசல் கட்டிட வடிவமைப்பு மற்றும் வசதிகளில் உண்டான மாற்றங்கள்

பல தசாப்தங்களாக மலாய் நுசந்தாரா வடிவமைப்புகளிருந்து இந்திய கட்டிடக்கலை வரையிலும், அரேபிய மற்றும் ஐரோப்பிய தாக்கங்களைப் பிரதிபலித்து உள்நாட்டு கலாச்சாரத்தை கொண்டுள்ள கட்டிடக்கலை வரையிலும் சிங்கப்பூர் பள்ளிவாசல்களின் கட்டிட வடிவமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. சிங்கப்பூரில் உள்ள பெரும்பாலான பள்ளிவாசல்களின் கட்டிடக்கலை அவைக் கட்டப்பட்ட இடத்தின் வரலாற்றுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.



தென்னிந்திய கட்டிடக்கலைத் தழுவலில் உள்ள ஜாமே சூலியா பள்ளிவாசல்



மலாய் பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்ட சுல்தான் பள்ளிவாசல் கட்டிடக்கலை



அப்துல் கஃபூர் பள்ளிவாசல் அரேபிய கட்டிடக்கலை மற்றும் ஐரோப்பிய வடிவமைப்புகளின் சாயல் கொண்டுள்ளது

தற்போதைய காலகட்டத்தில் குறைந்தபட்ச வடிவமைப்புகளைக் கொண்ட பள்ளிவாசல்கள் கட்டப்படுகின்றன. மேலும், புதிதாக கட்டப்படும் பள்ளிவாசல்கள் 24 மணி நேரமும் முஸ்லிம்கள் சென்று வணக்க வழிபாடுகளில் ஈடுபடுவதற்கு ஏதுவாக மதில் சுவர்கள் இன்றி கட்டப்படுகின்றன. இதன் மூலம் மார்க்கத்தில் பரிந்துரைக்கப்பட்ட சுன்னாஹ் தொழுகைகளை முஸ்லிம்கள் இரவு நேரங்களிலும் நிறைவேற்ற எளிதாகின்றது.

புதிதாக கட்டப்படும் பள்ளிவாசல்களில் முதியவர்களும் மாற்றுத்திறனாளிகளும் சிரமமின்றி எளிதாக பள்ளிவாசல் வந்துசெல்ல ஏதுவாக சக்கர நாற்காலி பாதை, சாய்வுதளம் மற்றும் மின்தூக்கிகள் அமைக்கப்பட்டுள்ளது. பள்ளிமாணவர்கள் தங்கள் பாடங்களைப் படிப்பதற்கு ஏதுவாக இட வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

நவீன வசதிகளைத் தாண்டி பள்ளிவாசல்கள் முஸ்லிம்களின் தேவைகளுக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளன. ரமழான் மாதத்தில் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைக் கவனித்துக்கொள்வதோடு ஜமாஅத் தொழுகையிலும் பங்கேற்கவும் உதவுகின்றன.

## பள்ளிவாசல் மற்றும் முசோல்லாஹ் இடையே உள்ள வேறுபாடுகள்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்:

“பூமி எனக்கும் (மற்றும் எனது உம்மத்தினருக்கும்) தொழுகைக்கான இடமாகவும், தயம்மம் செய்வதற்கும் (தொழுவதற்காகத் தன்னைத் தூய்மைப்படுத்திக் கொள்வதற்காக) இடமாகவும் ஆக்கப்பட்டுள்ளது. எனவே, (என் உம்மத்தினர்) எங்கு வேண்டுமானாலும் எந்நேரத்திலும் தொழலாம்."

(புகாரியில் குறிப்பிடப்பட்டுள்ளது)

சிங்கப்பூர் முழுவதுமாக 70 பள்ளிவாசல்கள் இருப்பது அல்லாஹ் நமக்கு அருளியுள்ள அருட்கொடையாகும். அது மட்டுமின்றி, சாங்கி விமான நிலையம், பல்கடை அங்காடிகள் மற்றும் தனியார் கட்டிடங்களிலும் முஸ்லிம்கள் தொழுவதற்கு அணுகக்கூடிய வகையில் பிரத்தியேகமாக அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. அதுபோன்ற அறைகள் “முசோல்லாஹ்" என்று அழைக்கப்டுகின்றன.

முசோலாஹ்வில் தொழுபவர்களின் விருப்பப்படி தினசரி ஐவேளைத் தொழுகைகளைத் தனித்தனியாகவோ கூட்டாகவோ தொழுதுகொள்ளலாம். குறைந்தபட்சமாக குறிப்பிட்ட எண்ணிக்கையிலான முஸ்லிம்கள் இருப்பது காட்டாயமாவதால் இடப்பற்றாக்குறையின் காரணமாக வெள்ளிக்கிழமை (ஜூம்ஆ) தொழுகைகள் முசோல்லாஹ்-களில் நடத்தப்படுவதில்லை.

தனியார் இடங்களில் உள்ள முசோல்லாஹ்களின் செயல்பாடுகளில் அவ்வப்போது மாற்றங்கள் செய்யப்படுவதால், முசோல்லாஹ்களின் அதிகாரப்பூர்வ எண்ணிக்கை வெளியிட இயல்வதில்லை. பெரும்பாலும், சிங்கப்பூரைச் சுற்றியுள்ள முசோலாஹ்கள் பற்றிய விவரங்களை முஸ்லிம்கள் சமூக வலைத்தளங்களில் பகிர்வது வழக்கம்.

## குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே தொழ வேண்டுமா?

**முஸ்லிம்கள் குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே தொழ வேண்டிய கட்டாயமில்லை. வெளிப்படையான அசுத்தங்கள் (நஜீஸ்) இல்லாத எந்தவொரு இடத்திலும், கிப்லாவை முன்னோக்கி நமது தொழுகை விரிப்பானை விரித்து தொழலாம்.**

தொழுகை விரிப்பான் இல்லாதபட்சத்திலும் சுத்தமான இடங்களில் விரிப்பான் இன்றி தொழுகை ஏற்றுக்கொள்ளத்தக்கதாகும். வெளிப்படையான அசுத்தங்கள் இன்றி தூசி மற்றும் கண்ணுக்கு புலப்படாதவைத் தொழுகை நடத்த ஒரு தடையாக கருதப்பட வேண்டியதில்லை. இருப்பினும், நாம் மற்றவர்களுக்கு தொந்தரவு இன்றி இருப்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.



நமது சுய பாதுகாப்பை உறுதி செய்வதோடு நடைபாதைகளைத் தடுத்துக்கொண்டோ மற்றவர்களுக்கு இடையூறு விளைவிக்கும்படியோ நாம் தொழுகை செய்வது கூடாது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## பள்ளிவாசலில் பின்பற்ற வேண்டிய ஒழுக்கம்

பள்ளிவாசலுள் செல்லும் பொழுது அடக்கத்துடனான ஆடைகள் அணிவது, நுழையும் பொழுதும் வெளியாகும் பொழுதும் ஓத வேண்டிய துஆக்கள் போன்று நாம் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள் உள்ளன.

### ஆடைமுறை



பள்ளிவாசலுக்கும் இறைவழிபாட்டில் ஈடுபெற வரும் மற்ற முஸ்லிம்களுக்கும் மதிப்பளித்து நாம் கண்ணியமான முறையில் ஆடைகளை அணிய வேண்டும்.[17]

### அனுமதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மட்டும் செல்லுதல்



இப்புத்தகத்தின் முந்தைய பகுதியில் குறிப்பிட்டதைப் போன்று, பள்ளிவாசலில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனித்தனியாக பகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. எனவே பள்ளிவாசலுக்கு வருபவர்கள் அனுமதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மட்டுமே செல்ல வேண்டும். குழந்தைகளை மாற்று பாலின பகுதிகளுக்கு கவனத்துடன் அழைத்து செல்லலாம்.

கூட்டத்தின் அளவைப் பொறுத்து சில நேரங்களில் பகுதிகளில் மாற்றங்கள் செய்யப்படலாம். பெரும்பாலும், கூட்டம் குறைவாக இருக்கும் ஐந்து கட்டாய தினசரி தொழுகைகளின் பொழுது, ஆண்கள் தொழும் பகுதியின் ஒரு பாகத்தில் திரைச்சீலைக் கட்டி பெண்கள் தொழுகை நடத்த அனுமதிக்கப்படுகின்றனர்.

## மாற்று சமூகத்தினர் பள்ளிவாசலுக்கு வருகையில் அவர்களின் அவ்ராஹ்-வை மறைக்காமல் வரலாமா?

தனது கருணை மற்றும் அருட்கொடையை அனைவருக்கும் அருளும் இறைவனின் இல்லமாக பள்ளிவாசல் கருதப்படுகின்றது. அவனது இல்லத்திற்கு வருகைத் தரும் அனைவரையும் அன்புடனும் உபசரிப்புடனும் விருந்தோம்பல் அளிக்க வேண்டும். நம்மை மேன்மையானவர்களாக கருதாமல், பணிவுடன் அவர்களிடம் சரியான முறையில் உடை அணியுமாறு வலியுறுத்தலாம்.

இறைவழிப்பாட்டிற்காக வரும் முஸ்லிம்கள் அவ்ராஹ்வை மறைப்பதில் கவனக்குறைவாக இருந்தால், அவர்களிடமும் கண்ணியமான முறையில் அவர்களைத் திருத்திக்கொள்ள கூறுவதும் நமது கடமையாகும்.

[17] மேலும் விவரங்களுக்கு பாகம்-11 இஸ்லாமிய ஆடைமுறை-யைப் பார்க்கவும்

## பள்ளிவாசலில் ஓத வேண்டிய துஆக்கள்

முஸ்லிம்கள் பள்ளிவாசலில் நுழைவதில் இருந்து வெளியேறும் வரையில் ஓத வேண்டிய துஆக்கள் பின்வருமாறு:

### பள்ளிவாசலில் நுழையும் பொழுது ஓத வேண்டிய துஆ

اللّٰهُمَّ افْتَحْ لِي أَبْوَابَ رَحْمَتِكَ

அல்லாஹும்மஃப்தஹ் லீ அப்வாப ரஹ்மதிக்

யா அல்லாஹ்! உன் கருணையின் வாசல்களை எனக்குத் திறந்திடுவாயாக!

### இஃதிகாஃப் இருப்பவர்கள் ஓத வேண்டிய துஆ

ஒரு முஸ்லிம் இறைவழிபாட்டிற்காக பள்ளிவாசலுள் இருப்பது இஃதிகாஃப் என்று அழைக்கப்படுகின்றது.

نَوَيْتُ الْإِعْتِكَافَ فِي هَذَا الْمَسْجِدِ لِلّٰهِ تَعَالَى

நவைதுல் இஃதிகாஃபா ஃபி ஹாட்ஸல் மஸ்ஜிதி லில்லாஹி தஆலாஅல்லாஹ்வுக்காக

இந்த பள்ளிவாசலில் அவனை வழிபடும் நோக்கத்துடன் இருக்கின்றேன்

### பள்ளிவாசலின் மாண்பை மதிப்பதற்கான தொழுகை *(சுன்னாஹ் தஹிய்யத்துல் மஸ்ஜித்)*

ஒரு முஸ்லிம் அல்லாஹ்வின் இல்லமாக கருதப்படும் பள்ளிவாசலினுள் நுழையும் பொழுது அதன் மாண்பை மதித்து இரண்டு ரகாஅத் தொழ வேண்டும்.

أُصَلِّي سُنَّةَ تَحِيَّةِ الْمَسْجِدِ رَكْعَتَيْنِ لِلّٰهِ تَعَالَى

அஸோல்லி சுன்னத்தத் தஹிய்யத்துல் மஸ்ஜிதி ரக்அத்தனீ லில்லாஹி தஆலா

அல்லாஹ்வுக்காக சுன்னத் தஹிய்யத்துல் மஸ்ஜித் 2 ரகாத்கள் தொழுகின்றேன்

ن ِ

### பள்ளிவாசலில் இருந்து வெளியேறும் பொழுது ஓத வேண்டிய துஆ

اللّٰهُمَّ إِنِّي أَسْأَلُكَ مِنْ فَضْلِكَ

அல்லாஹும்ம இன்னி அஸ்-அலுக்க மின் ஃபத்லிக்

யா அல்லாஹ்! நான் உன்னுடைய ரஹ்மத்தை வேண்டுகின்றேன்.

## சுருக்கம்

- சிங்கப்பூரில் பள்ளிவாசல்கள் முஸ்லிம் சமூகத்தில் முக்கிய பங்காற்றுகின்றன.
- முஸ்லிம் சமுதாயத்திற்கு மார்க்க ரீதியான உபகாரங்களைத் தாண்டி அவர்களுக்கு தேவையான கல்வி மற்றும் சமூக ரீதியான உதவிகளையும் பள்ளிவாசல்கள் செய்திடும்.
- சமூக நலனைக் கருத்தில் கொண்டு தன்னார்வ குழுக்கள் மூலமாக ஏராளமான நிகழ்ச்சிகள் ஆண்டு முழுவதும் ஏற்பாடு செய்யப்படுகின்றன.
- மாற்று சமூக மக்களும் பள்ளிவாசலினுள் கண்ணியமான ஆடைகளுடன் அனுமதிக்கப்படுகின்றனர்.

பாகம்-13

# இஸ்லாம் மற்றும் கலாச்சாரம்



# சமூக கலாச்சாரங்களைப் பற்றிய புரிதல்

**உலகில் உள்ள பல்வேறு நாடுகளில் வாழும் மக்கள் அனைவரும் அவர்களின் நாடு, இனம் மற்றும் பின்பற்றும் சமயங்களின் அடிப்படையிலான கலாச்சாரங்களைப் பின்பற்றுகின்றனர்.**

ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மக்கள் பின்பற்றும் சமூக விதிமுறைகள் மற்றும் பழக்கவழக்கங்கள் கலாச்சாரம் என்று அறியப்படுகின்றது. மிகப்பெரிய மக்கள்தொகைக் கொண்ட நாடுகளில் இருந்து சிறிய அளவிலான அலுவலகங்கள் வரை அவரவர்களின் கலாச்சாரங்கள் தனித்துவமாக இருந்தாலும், அவை அனைத்தும் ஒரு புள்ளியில் ஒன்றோடொன்று தொடர்புடவையாக இருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மக்கள் பின்பற்றும் சமூக விதிமுறைகள் மற்றும் பழக்கவழக்கங்கள் கலாச்சாரம் என்று அறியப்படுகின்றது. மிகப்பெரிய மக்கள்தொகைக் கொண்ட நாடுகளில் இருந்து சிறிய அளவிலான அலுவலகங்கள் வரை அவரவர்களின் கலாச்சாரங்கள் தனித்துவமாக இருந்தாலும், அவை அனைத்தும் ஒரு புள்ளியில் ஒன்றோடொன்று தொடர்புடவையாக இருக்கின்றன. உதாரணமாக, ஈத் உல்-ஃபித்ரியின் போது பணத்தை அன்பளிப்பாக வழங்குவது இஸ்லாத்தில் பரிந்துரைக்கப்படுவதுடன் ஆசிய கலாச்சார வழக்கங்களிலும் ஒன்றாக உள்ளது.

சிங்கப்பூர் ஒரு பண்பட்ட பன்முக கலாச்சாரங்களை உள்ளடக்கிய பன்முகத்தன்மைக் கொண்ட நாடாக அறியப்படுகின்றது. இங்கு சீன, மலாய் மற்றும் இந்திய சமூகங்கள் முதன்மையாக இருந்தாலும் இஸ்லாம், கிறிஸ்தவம், பௌத்தம், தாவோயிசம் மற்றும் இந்து சமயங்களையும் பாகுபாடின்றி அரவணைத்துள்ளது. ஒவ்வொரு சமயமும் அவற்றிக்கென்று தனியான பண்பாடுகளையும் கலாச்சாரங்களையும் கொண்டிருப்பதால், எதிர்மறையான எண்ணங்கள் ஏற்படுவதைத் தவிர்க்க அவற்றை வேறுபடுத்துவது சில நேரங்களில் தேவையாகின்றது.







## சிங்கப்பூரில் உள்ள சமயங்கள் மற்றும் கலாச்சாரங்கள்[18]

சிங்கப்பூரில், ஒரு குறிப்பிட்ட இனம் ஒரு குறிப்பிட்ட சமயத்திற்கு உரியதானது எனும் கருத்து இன்றும் பொருந்துவதாக உள்ளது. பெரும்பாலும் பௌத்தம் சீன இனத்திற்கும் இந்து சமயம் இந்திய இனத்திற்கும் சார்ந்து உள்ளது. 2010 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள்தொகை கணக்கெடுப்பில், சீனர்களில் 57 விழுக்காட்டினர் பௌத்தர்கள் என்றும் இந்தியர்களில் 59 விழுக்காட்டினர் இந்துக்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2010-ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின் படி 98% மலாய்க்காரர்கள் முஸ்லிம்களாக உள்ளனர். இதனால் இஸ்லாம் மலாய் இனத்துடன் பெரும்பாலும் இணைக்கப்படுகின்றது. மேலும், இஸ்லாமிய சமூகத்தில் பொதுவாகவே மார்க்கம் தொடர்பான உரையாடல்கள் மற்றும் பேச்சுக்கள் அனைத்தும் மலாய் மொழியில் இருப்பது குறிப்பிடத்தக்கது. 2010 ஆம் ஆண்டு நிலவரப்படி, சிங்கப்பூரில் வசிப்பவர்களில் 14 வயதிற்கு மேற்பட்டவர்களில் 15 சதவீதம் பேர் முஸ்லிம்கள்.



[18] சிங்கப்பூர் புள்ளியியல் துறை (2015). 29 அக்டோபர் 2018 தேதியில் பெறப்பட்ட மூலம்: https://www.singstat.gov.sg/-/media/files/visualising_data/infographics/ghs/highlights-of-ghs2015.PDF



சிங்கப்பூர் புத்தர் டூத் ரெலிக் கோயில் – சிங்கப்பூரில் உள்ள புத்த கோயில்கள் பெரும்பாலும் சீன இனத்துடன் இணைக்கப்படுவதன் மூலம் பெரும்பாலான பௌத்திகர்கள் சீனர்களாக உள்ளனர்.




சிங்கப்பூரில் தைப்பூசக் கொண்டாட்டம் – பெரும்பான்மையான இந்துக்கள் இந்தியர்கள் என்பதால், இந்துக்கள் பொதுவாக இந்திய இனத்துடன் இணைக்கப்படுகின்றனர்.



சிங்கப்பூர் கிறிஸ்தவர்களால் கிறிஸ்துமஸ் பண்டிகை கொண்டாடப்பட்டாலும் இந்த பண்டிகையின் போது மற்ற கலாச்சாரங்கள் மற்றும் சில பணியிடங்களில் கூட பரிசுகளைப் பரிமாறிக்கொள்ளும் வழக்கம் உள்ளது.

## இஸ்லாம் மற்றும் மலாய் இனம்

இஸ்லாமிய மார்க்கம் எந்தவொரு இனத்தையும் சாராமல் தனித்துவமான கலாச்சாரத்தைக் கொண்ட சமயமாகும். இருப்பினும், சிங்கப்பூரில் உள்ள முஸ்லிம் சமூகத்தில் மலாய் கலாச்சாரத்தின் தாக்கங்கள் அதிகம் உள்ளன.

உதாரணமாக திருமணங்கள் மற்றும் ஈத் பண்டிகை கொண்டாட்டங்களில் அத்தகைய தாக்கங்கள் இருக்கின்றன. மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பாவில் உள்ள முஸ்லிம் நாடுகள் ஈதுல்-ஃபித்ரியை சில நாட்களுக்கு மட்டுமே கொண்டாடும் அதே வேளையில், சிங்கப்பூரில் உள்ள முஸ்லிம்கள் தங்களின் உறவினர்கள், நண்பர்கள், சக பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களை சந்தித்து மகிழ்ச்சியைப் பகிர்ந்து கிட்டத்தட்ட ஒரு மாதம் கொண்டாடுகின்றனர். இது சிங்கப்பூரில் உள்ள மலாய்க்காரர்கள் தங்கள் சமுதாய மக்களுடன் உறவுகளைப் பேணுவதற்கும் வலுப்படுத்துவதற்கும் சிறப்பாக உதவுகின்றது.

முஸ்லிம் திருமணங்களில் கூட மலாய் கலாச்சாரத்தின் பல தாக்கங்களைக் காணலாம். குடும்ப உறுப்பினர்களைக் கொண்ட ஒரு பெரிய குழு மணமகனை மணமகளின் இடத்திற்கு அழைத்துச் செல்வதையும், திருமணங்களில் தாள வாத்தியங்கள் (கொம்பாங்) மற்றும் மலாய் தற்காப்பு கலைகள் (சிலாட்) நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதும் வழக்கமாக உள்ளன.

**அருமை நாயகம் (ஸல்) அவர்கள் இறுதி பேருரையில் சமத்துவத்தைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்:**

“மக்களே! உங்களது இறைவன் ஒருவனே அறிந்து கொள்ளுங்கள்: எந்த ஓர் அரபிக்கும் ஓர் அரபி அல்லாதவரை விடவோ, எந்த ஓர் அரபி அல்லாதவருக்கும் ஓர் அரபியை விடவோ எந்த மேன்மையும் சிறப்பும் இல்லை. எந்த ஒரு வெள்ளையருக்கும் ஒரு கருப்பரை விடவோ, எந்த கருப்பருக்கும் ஒரு வெள்ளையரை விடவோ எந்த மேன்மையும் சிறப்பும் இல்லை. இறையச்சம் மட்டுமே ஒருவரின் மேன்மையை நிர்ணயிக்கும். நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் உங்களில் மிகச் சிறந்தவர் உங்களில் அதிகம் இறையச்சம் உள்ளவர்தான்.”. (அஹ்மத்-இல் குறிப்பிடப்பட்டுள்ளது)

## இஸ்லாத்தை உள்ளடக்கிய வாழ்வியல் முறை

கலாச்சாரம் மற்றும் மார்க்கத்தின் இடையேயான தொடர்பை நன்கு அறிவதன் மூலம், அதனிடையே உள்ள ஒற்றுமைகளை அங்கீகரித்து சிங்கப்பூரில் உள்ள முஸ்லிம்கள் மார்க்கத்தைக் கடைப்பிடிப்பதில் இரண்டையும் உள்ளடக்கிய வாழ்வியல் முறையை முயற்சிக்க வேண்டும்.

ஒரு முஸ்லிம் மலாய், இந்தியர், அல்லது சீனர் என்பதைக் கடந்து இஸ்லாமிய நம்பிக்கைக் கூற்றான தௌஹித் மூலம் மற்ற முஸ்லிம்களுடன் இணைகின்றனர். தௌஹிதில் வலுவான புரிதலுடன் இஸ்லாத்தில் உள்ள பல்வேறு மத்ஹப் சார்ந்த வேறுபாடுகளையும் கலாச்சாரங்களில் உள்ள வேறுபாடுகளையும் எளிதில் தெளிவுபடுத்தலாம். மார்க்கத்தில் உள்ள பன்முகத்தன்மை பற்றிய புரிதலை அடைந்தவுடன், மார்க்கத்துடன் ஒன்றிணைந்த கலாச்சார வாழ்வியல் முறை சமூகத்திற்குள் எளிதில் இணைக்கப்படலாம்.

இந்த வாழ்வியல் முறையை கட்டமைப்பதன் மூலம் முஸ்லிம்கள் பல்வேறு சமூக நிகழ்வுகளைத் தழுவ முடியும்.



இஸ்லாமிய மார்க்கத்தில் தௌஹீத் மீதான நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட (ஃபத்வா / ஃபிக்ஹ்) தீர்ப்புகளில் இருக்கும் வேறுபாடுகளுக்கும் இடமளிக்க வேண்டும். இந்த வேறுபாடுகள் மார்க்க அறிஞர்களால் ஒப்புக்கொள்ளப்பட வேண்டும் என்பதைக் கவனத்தில் கொள்வது முக்கியம்.

* முஸ்லிம்கள் தங்கள் சக முஸ்லிம்களின் இனம் சார்ந்த கலாச்சார நடைமுறைகளை, அவை மார்க்கத்தின் நெறிமுறைகளுக்கு எதிர்மறையாக இல்லாத வரையில், அங்கீகரிப்பதுடன் அவற்றை ஏற்றுக்கொள்ளவும் வேண்டும். உதாரணமாக, உறவுகளை வலுப்படுத்த மார்க்கத்தில் பரிந்துரைக்கப்படுவதால், பண்டிகை காலங்களில் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உறவினர்களை சந்திக்கும் நடைமுறையை வழக்கத்தில் தொடர வேண்டும்.

* முஸ்லிம்கள் மற்றும் மாற்று சமயத்தவர்கள் இடையில் உள்ள, ஒவ்வொரு சிங்கப்பூரரையும் பிணைக்கும், பொதுவான தேசிய அடையாளத்தை முஸ்லிம்கள் அறிந்திருக்க வேண்டும். ஒரே நாட்டில் நல்லிணக்கத்துடன் வாழ்வதற்கு, ஒற்றுமையை நிலைநாட்டி வாழ்வதற்கு ஏற்ற அமைதியான சூழல் பேணப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

## இஸ்லாம் மற்றும் சிங்கப்பூர் இந்திய சமூகம்



சிங்கப்பூர் இஸ்லாமிய மக்களிடையே மலாய் கலாச்சாரத்தின் ஆதிக்கம் அதிகம் இருந்தாலும் மார்க்க வழக்கங்களில் இந்திய கலாச்சாரத்தின் குறிப்பிடத்தக்க தாக்கம் இருப்பதை மறுக்க முடியாது. அதிலும் பல பள்ளிவாசல்களின் கட்டிடக்கலையில் அதன் தாக்கம் இருப்பது குறிப்பிடத்தக்கது. சிங்கப்பூரில் உள்ள முஸ்லிம் சமூகத்தில் கணிசமான சதவிகிதத்தில் இந்திய சமூக மக்கள் ஒருங்கிணைந்துள்ளனர். அவர்கள் நாட்டின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை அளித்துள்ளனர் என்பது முந்தைய வரலாறுகளில் இருந்து அறிய முடிகின்றது.

இஸ்லாமிய மார்க்கத்தில் இனங்களைக் கொண்டு வேறுபாடு காட்டுவதில்லை என்பதுடன் அனைத்து கலாச்சாரங்களின் அனுமதிக்கப்பட்ட சாராம்சங்களை உள்ளடக்கியுள்ளது என்பது இதன் மூலம் தெளிவாகின்றது.

முக்கியமாக, சிங்கப்பூரில் உள்ள முஸ்லிம்களின் பன்முகப் பண்பாட்டுப் பண்பு, ஒருவர் மீது ஒருவர் வைத்திருக்கும் மரியாதையை வலுப்படுத்த வேண்டும். ஒவ்வொரு இன மக்களும் தங்கள் பண்பாட்டைக் காக்க நினைக்கும் அதே வேளையில், மற்ற கலாச்சாரங்களைப் பற்றியும் அறிந்து கொள்வது அவசியம். நாட்டில் நாம் கொண்டிருக்கும் பகிரப்பட்ட சமய இடங்கள், நிகழ்வுகள் மற்றும் கொண்டாட்டங்கள் பல்வேறு கலாச்சாரங்களும் இணைந்து வாழ வழிவகுக்கின்றன, இதனை நாம் சிந்தித்து ஒற்றுமையைப் பேணவேண்டும்.

## இஸ்லாம் மற்றும் மாற்று சமூக மக்களுடனான தொடர்பு [19]

மனிதகுலத்தின் பன்முகத்தன்மை என்பது ஒரு சமூக நிதர்சனம் மட்டுமல்ல அது கடவுளின் விருப்பமும் கூட. மனிதகுலத்தின் உலகளாவிய பொதுத்தன்மைக்கு மனித வாழ்வியலில் சீரான தன்மை அவசியமற்றது.

ஒரு பொதுவுடைமையைப் போற்றும் சமூகத்தின் அடையாளம், நாம் எப்படி நடத்தப்பட வேண்டும் என்று விரும்புகிறோமோ அதைப்போல் நாம் மற்றவர்களை நடத்த வேண்டும். ஒருவருக்கொருவர் அக்கறையும் மரியாதையும் கொண்ட ஒரு சமூகத்தை நமக்குள் இருக்கும் வேறுபாடுகளைத் தவிர்த்து ஒற்றுமையாக கட்டமைக்க வேண்டும்.

இஸ்லாம் மனித குலத்தின் பன்முகத்தன்மை மற்றும் சமயங்களின் பன்முகத்தன்மையை அங்கீகரிக்கிறது. ஷரிஆவின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்று மார்க்கத்தைப் பாதுகாப்பதாகும். இது இஸ்லாமிய விழுமியங்கள் மற்றும் நடைமுறைகளைப் பாதுகாப்பதோடு முஸ்லிம் அறிஞர், இப்னு ஆஷூர் அவர்களின் கருத்துப்படி மார்க்க நம்பிக்கையையும் இது பாதுகாக்கின்றது.

இஸ்லாம் மற்றவர்களை மார்க்கத்தை ஏற்கும்படி வற்புறுத்தவில்லை, மேலும் ஒவ்வொரு தனிநபருக்கும் சமய நம்பிக்கை மற்றும் வழிபாட்டு சுதந்திரத்திற்கு உரிமை உண்டு என்று வலியுறுத்துகின்றது.

பல கலாச்சார மற்றும் பல சமய சமூக விதிமுறைகளை மதித்து நிலைநிறுத்துவது அதிமுக்கியம். சமய நூல்களின் விளக்கத்தில் வேறுபாடுகள் இருக்கும் பட்சத்தில், நம் நாட்டின் நெறிமுறைகளுக்கு மிகவும் பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

மாற்று சமய நம்பிக்கைகள் அல்லது அவர்களின் நடைமுறைகளை மதிப்பது என்பது நாம் அவற்றைப் பின்பற்றுவதாக அர்த்தமில்லை. அவர்களின் கருத்துகளை நாம் இழிவுபடுத்தவோ, அவமதிக்கவோ அல்லது அவர்களின் மனம் நோகக்கூடிய செயல்கள் செய்யக்கூடாது என்பது மட்டுமே அர்த்தமாகும்.

திருகுர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்:

وَلَا تَسُبُّوا الَّذِينَ يَدْعُونَ مِن دُونِ اللَّهِ فَيَسُبُّوا اللَّهَ عَدْوًا بِغَيْرِ عِلْمٍ ۗ كَذَٰلِكَ زَيَّنَّا لِكُلِّ أُمَّةٍ عَمَلَهُمْ ثُمَّ إِلَىٰ رَبِّهِم مَّرْجِعُهُمْ فَيُنَبِّئُهُم بِمَا كَانُوا يَعْمَلُونَ ﴿١٠٨﴾ و

"அவர்கள் அழைக்கும் அல்லாஹ் அல்லாதவற்றை நீங்கள் திட்டாதீர்கள்; (அப்படித் திட்டினால்) அவர்கள் அறிவில்லாமல், வரம்பை மீறி அல்லாஹ்வைத் திட்டுவார்கள் - இவ்வாறே ஒவ்வொரு சமூகத்தாருக்கும் அவர்களுடைய செயலை நாம் அழகாக ஆக்கியுள்ளோம் - பின்பு அவர்களுடைய மீட்சி அவர்களின் இறைவனிடமே இருக்கிறது. அப்போது அவர்கள் செய்ததை அவர்களுக்கு அவன் அறிவிப்பான்." (திருக்குர்ஆன் 6:108)

[19] முஃப்தியின் அலுவலகத்தின் சமகால இர்யாத் தொடர் (இஸ்லாமிய சமய மன்றம்) 2018

**சுருக்கம்**

* இஸ்லாம் அனைத்து இன மக்களும் கடைப்பிடிக்க கூடிய சமயம்.
* சிங்கப்பூரில் இஸ்லாமியர்களின் மலாய் கலாச்சார ஆதிக்கம் காணப்படுவதற்கு மலாய் இனத்தைச் சேர்ந்த இஸ்லாமியர்களின் எண்ணிக்கை அதிகம் இருப்பதே காரணமாகும்.
* மார்க்க நெறிமுறைகளுக்கு முரண்படாத வரை, கலாச்சார வழக்கங்கள் இஸ்லாத்தில் மாற்றியமைக்கப்படலாம்.
* மார்க்கத்தில் உள்ள வேறுபாடு இஸ்லாத்தில் இணைக்கப்பட்ட வெவ்வேறு இன கலாச்சாரங்களில் மட்டுமல்லாமல் வெவ்வேறு மத்ஹப் இடையேயும் காணலாம்.
* இந்த வேறுபாடுகளைப் புரிந்து கொள்ள முற்படுகையில், தௌஹித் அடிப்படையில் முஸ்லிம்கள் இடையே உள்ள ஒற்றுமையை முதலில் ஆமோதிக்க வேண்டும்.
* இந்த வேறுபாடுகளைப் புரிந்துகொண்டு ஏற்றுக்கொள்வதன் மூலமே முஸ்லிம் சமூகம் அனைவரையும் உள்ளடக்கிய தன்மையையும் ஒற்றுமையையும் அடைய முடியும்.
* இஸ்லாம் மனித இனத்தின் பன்முகத்தன்மையை அங்கீகரித்து சமயங்களின் பன்முகத்தன்மையை ஆதரிக்கின்றது மற்றும் மார்க்கத்தை ஏற்றுக்கொள்ள மற்றவர்களை கட்டாயப்படுத்தவில்லை. ஒவ்வொரு தனிமனிதனுக்கும் சமய நம்பிக்கை மற்றும் வழிபாட்டு சுதந்திரத்திற்கு உரிமையுண்டு.

# பாகம்-14

# முஸ்லிம் கடைபிடிக்க வேண்டிய ஒழுக்கங்கள்



## இஸ்லாத்தில் நல்லொழுக்கங்களின் முக்கியத்துவம்

இஸ்லாத்தின் அழகு நமது வெளிப்புற உடல் அழகில் இல்லை. இஸ்லாத்தின் அழகு நாம் அணியும் அடக்கமான உடையிலோ அல்லது நாம் காணும் பள்ளிவாசல்களின் நுணுக்கமான வடிவமைப்பு கட்டிடக்கலையிலோ இல்லை. மாறாக, ஒழுக்கம் பற்றிய விரிவான கருத்தாக்கமான உள்மனதில் உள்ள நல்ல பண்புகளில் இருந்து உருவாவதே அதன் வசீகரம் ஆகும்.

இஸ்லாம் நமக்காக மட்டுமின்றி மற்றவர்களுக்கும் நன்மை செய்ய தூண்டும் மார்க்கமாகும். நெறிமுறைகள் மற்றும் அறநெறி பற்றிய நமது மார்க்கத்தின் பார்வை, அல்லாஹ்வுடனான நமது உறவு மற்றும் அவன் மீதான நம்பிக்கையின் கொள்கைகளுடன் ஆழமாக தொடர்புடையது. ஒரு நபர் தனக்கும் பிறருக்கும் நன்மை செய்யும் போது, அல்லாஹ்வால் எண்ணற்ற வழிகளில் அருட்கொடைகளைப் பெறுவான். கீழே உள்ளதைப் போன்ற பல்வேறு ஹதீஸ்களில் இது தெளிவாகத் தெரிகிறது:

"ஒரு முஸ்லிம் சாலையில் ஒரு முள் இருப்பதைக் கண்டு, வேறொரு முஸ்லிம் மனிதனுக்கு தீங்கு விளைவிக்காதபடி இருக்க இந்த முள்ளை நான் அகற்றுகின்றேன் என்று கூறினார். அதனால் அவர் மன்னிக்கப்பட்டார்." (புகாரி-யில் குறிப்பிடப்பட்டுள்ளது)

"ஒரு மனிதனின் நல்ல குணாதிசயத்தை விட கனமான எதுவும் தராசில் இருக்காது. உண்மையில் நல்ல பண்பு கொண்ட ஒருவர், நோன்பு மற்றும் தொழுகை மூலம் உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றவரைப் போன்ற அந்தஸ்த்தைப் பெற்றிருப்பார்." (திர்மிதி-யில் குறிப்பிடப்பட்டுள்ளது)

"ஓர் அடியான் தன் சகோதரனுக்கு உதவி செய்யும் வரை அல்லாஹ் அந்த அடியானுக்கு உதவி செய்கிறான்." ((முஸ்லிம்-இல் குறிப்பிடப்பட்டுள்ளது)

தன் சுயத்துடனும் மற்றவர்களுடனுமான ஒருவரின் நல்லிணக்க உறவு உட்பட




ஒருவரின் வாழ்க்கை முறையை பிரதிபலிக்கும் படியான அனைத்தையும் உள்ளடக்கியுள்ளது இஸ்லாமிய நல்லொழுக்க முறை. நல்ல ஒழுக்கங்கள் ஒருவரை நேர்மையானவராகவும் சிறந்த பண்புள்ளவராகவும் உருவாக்குகின்றது. மார்க்க நம்பிக்கைக்கும் நற்பண்புகளுக்கும் உள்ள நேரடித் தொடர்பை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பின்வரும் ஹதீஸ்களில் குறிப்பிட்டுள்ளார்:

“சிறந்த நற்குணம் கொண்ட ஒருவர் தனது தனது மார்க்க நம்பிக்கையில் முழுமையடைகின்றார்.” (திர்மிதி-யில் குறிப்பிடப்பட்டுள்ளது)

“நீதமான பண்பு நல்ல குணத்தில் உள்ளது.” (முஸ்லிம்-யில் குறிப்பிடப்பட்டுள்ளது)

முந்தைய ஹதீஸ்களில் இருந்து, நமது ஈமானைப் பலப்படுத்த நல்ல ஒழுக்கம் அவசியம் என்று தெளிவாகின்றது. மேலும், நேர்மையாகவும், நற்பண்பு உள்ளவராகவும் இருக்க முயல்வதென்பது ஒரு ஹதீஸில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, நல்ல ஒழுக்கத்தின் உருவகமான அல்லாஹ்வின் தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வழியைப் பின்பற்றுகிறோம் என்பதாகும்.

“நான் நற்பண்புகளை முழுமையாக்குவதற்காக அனுப்பப்பட்டுள்ளேன்.”

(புகாரி-யில் குறிப்பிடப்பட்டுள்ளது)

# உன்னத குணத்தின் முன்னுதாரணம்

وَإِنَّكَ لَعَلَىٰ خُلُقٍ عَظِيمٍ ﴿٤﴾

"மேலும், (நபியே) நிச்சயமாக நீர் மிக உயர்ந்த மகத்தான நற்குணம் உடையவராக இருக்கின்றீர்."

(திருக்குர்ஆன் 68:4)

இந்த திருக்குர்ஆன் வசனத்தில் விவரிக்கப்பட்டுள்ளபடி, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மனிதகுலத்திற்கு உன்னதமான பண்பு மற்றும் நற்குணங்களின் முன்னுதாரணமாக அனுப்பப்பட்டார்கள். நற்பண்புகளின் சாராம்சங்கள் அனைத்தும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை முறையில் (சுன்னாஹ்) எடுக்கப்பட்டுள்ளது. ஒருவர் தன் உறவினர்கள் மற்றும் அண்டை வீட்டாருடன் பழகுவது, தாவரங்கள் மற்றும் விலங்குகள் போன்ற மற்ற உயிரினங்களை கனிவுடன் நடத்துவது வரை ஒரு முஸ்லிமின் சிறந்த வாழ்க்கை முறைகள் அனைத்தும் நமது அருமை நாயகம் (ஸல்) அவர்களின் தோழர்கள் மூலம் விவரிக்கப்பட்ட ஹதீஸ்களில் தொகுக்கப்பட்டுள்ளது. முஸ்லிம்கள் பின்பற்றக்கூடிய நபிகள் நாயகத்தின் உன்னதமான பண்புகளின் சில உதாரணங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

## பணிவு

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது காலத்தில் சிறந்த குணம் கொண்டவராக இருந்தார்கள். தம்மைச் சுற்றியிருந்தவர்கள் ஓரிறை நம்பிக்கை இல்லாதவர்களாக இருந்தாலும், அவர்களிடம் கர்வமாக நடக்கவோ அவர்களை இழிவுபடுத்தவோ இல்லை. அவர்கள் எப்பொழுதும் அல்லாஹ்வின் அடியானாக மட்டுமே தன்னைக் கருதினார். சமூக சமத்துவம் மற்றும் நீதியை ஆதரிப்பவர் என்ற முறையில், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றவர்கள் அளிக்க முற்பட்ட சிறப்பு சலுகைகளை மறுத்தார். ஸல் அவர்கள் ஒரு ஹதீஸில் கூறியுள்ளார்கள்:

"ஓர் அடியான் சாப்பிடுவது போல் நான் சாப்பிடுகிறேன், ஓர் அடியான் அமர்வது போல் நான் அமர்ந்திருக்கிறேன். நிச்சயமாக நான் (அல்லாஹ்வின்) அடியான் மட்டுமே." (பைஹகி-யில் குறிப்பிடப்பட்டுள்ளது)

முஹம்மது நபி (ஸல்) அவர்களைப் போன்று நற்பண்புடனும் பணிவுடனும் இருப்பதன் மூலம் மறுமையில் நாம் சொர்க்கம் அடைய முடியும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "ஒருவர் உள்ளத்தில் ஆணவம் கடுகளவு இருந்தால் கூட அவர் சொர்க்கத்தில் நுழைய மாட்டார்."(முஸ்லிம்-இல் குறிப்பிடப்பட்டுள்ளது)

## இரக்கம்

திருக்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மனிதகுலம் அனைவருக்கும் கருணையாகவே அனுப்பப்பட்டார்.

وَمَا أَرْسَلْنَاكَ إِلَّا رَحْمَةً لِّلْعَالَمِينَ ﴿١٠٧﴾

"(நபியே!) நாம் உம்மை அகிலத்தாருக்கு எல்லாம் ரஹ்மத்தாக – ஓர் அருட் கொடையாகவேயன்றி அனுப்பவில்லை." (திருக்குர்ஆன் 21:107)



மனிதர்களுக்கு மட்டுமல்லாமல் நபி (ஸல்) அவர்கள் தாவரங்கள், விலங்குகள் மற்றும் சுற்றுச்சூழல் உட்பட அல்லாஹ்வின் பிற படைப்புகள் அனைத்திற்கும் கருணை காட்டினார்கள். இரக்கம் என்பது நமது அன்புக்குரிய நபி (ஸல்) அவர்களின் அதிதீவிரமான பண்பாகும். தனது தோழர்கள் மீது மட்டுமல்லாமல், தனக்கு தீங்கு விளைவித்த எதிரிகளின் நலனில் கூட எப்பொழுதும் அக்கறை கொண்டிருந்தார்.

தம்மைப் பின்பற்றுபவர்கள் மீது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொண்ட கவலைகளை அல்லாஹ் திருக்குர்ஆனில் குறிப்பிடுகிறான்:

لَقَدْ جَاءَكُمْ رَسُولٌ مِّنْ أَنفُسِكُمْ عَزِيزٌ عَلَيْهِ مَا عَنِتُّمْ حَرِيصٌ عَلَيْكُم بِالْمُؤْمِنِينَ رَءُوفٌ رَّحِيمٌ ﴿١٢٨﴾

"(முஃமின்களே!) நிச்சயமாக உங்களிலிருந்தே ஒரு தூதர் உங்களிடம் வந்திருக்கின்றார்; நீங்கள் துன்பத்திற்குள்ளாகி விட்டால், அது அவருக்கு மிக்க வருத்தத்தைக் கொடுக்கின்றது; அன்றி, உங்(கள் நன்மை)களையே அவர் பெரிதும் விரும்புகிறார்; இன்னும் முஃமின்கள் மீது மிக்க கருணையும் கிருபையும் உடையவராக இருக்கின்றார்." (திருக்குர்ஆன் 9:128)

## நம்பிக்கைக்குரியவர்

திருக்குர்ஆன் வசனத்தில் நபி (ஸல்) அவர்களின் நம்பகத்தன்மைக்காக அல்லாஹ் புகழ்ந்துள்ளான்:

مُطَاعٍ ثَمَّ أَمِينٍ ﴿٢١﴾ و

"(வானவர் தம்) தலைவர்; அன்றியும் நம்பிக்கைக்குரியவர்."(திருக்குர்ஆன் 81:21)

கண்மணி நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்நாளில், அவர்களுக்கு "நம்பகமானவர்" என பொருள்படும் 'அல்-அமீன்" என்று செல்லப்பெயர் சூட்டப்பட்டது. அவரை நபியாக அல்லாஹ் அறிவிக்கும் முன்னரே அவர் அரேபியர்களிடையே மிகவும் நம்பகமான மனிதராக இருந்தார். நபி (ஸல்) அவர்கள் மக்கா நகரில் வணிகர்களுடன் பணிபுரிந்தபோது, அவர்களின் நேர்மை மற்றும் கண்ணியம் காரணமாக வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நிதிகளை நிர்வகிக்க ஒப்படைக்கப்பட்டார். ஓர் உண்மையான முஸ்லிம் தனது வார்த்தைகளில் மெய்யுரைப்பவனாக இருப்பான். அவ்வாறு செய்யாவிட்டால் அவன் ஒரு நயவஞ்சகனாக மாறக்கூடும். நபிகள் நாயகம் (ஸல்) ஒரு ஹதீஸில் நம்மை எச்சரித்ததைப் போல:

"நயவஞ்சகனின் அடையாளங்கள் மூன்று: அவன் பேசும்போதெல்லாம் பொய் பேசுவான்; அவனிடம் ஏதேனும் ஒப்படைக்கப்படும் போதெல்லாம் அவன் நேர்மையற்றவன் என்பதை நிரூபிப்பான்; அவன் வாக்குறுதி அளிக்கும் போதெல்லாம் அவன் தனது வாக்குறுதியை மீறுவான்." (புகாரியில் குறிப்பிடப்பட்டுள்ளது)

## பொறுமை

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஐவர் மிகவும் உறுதியான நபிமார்களில் (உலுல் அஸ்மி) ஒருவராவார். அவர் இஸ்லாத்தை ஏற்பதற்கு மக்களை அழைக்கும் தனது மார்க்க பயணம் முழுவதும் பெரும் துன்பங்களைத் தாங்கினார்.

பல சோதனைகள் மற்றும் கடுமையான சிக்கல்களை எதிர்கொள்ள நேரிட்ட பொழுதும் நபி (ஸல்) அவர்கள் பொறுமையாகவும் உறுதியுடனும் இருந்து அல்லாஹ்வின் மீதான தனது நம்பிக்கையை நிலைநிறுத்தினார். இது அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்களால் அறிவிக்கப்பட்ட ஒரு ஹதீஸில் நிரூபிக்கப்பட்டுள்ளது:

"நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடன் நடந்து கொண்டிருந்தேன், அவர் தடிமனான எல்லையுடன் கூடிய நஜ்ரானின் மேலங்கியை அணிந்திருந்தார். ஒரு நாடோடி அவரைச் சந்தித்து, கவசத்தை மிகவும் வன்மமான முறையில் இழுத்தான், அது அல்லாஹ்வின் தூதரின் கழுத்தின் தோலில் மேலங்கியின் அடையாளங்களைப் பதிப்பதை நான் கண்டேன். மேலும் அவன் கூறினான்: 'முஹம்மதே, உங்கள் வசம் உள்ள அல்லாஹ்வின் செல்வத்திலிருந்து எனக்கு வழங்கப்பட வேண்டும் என்று கட்டளையிடுங்கள்'. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அவனது பக்கம் திரும்பி புன்னகைத்த படி அவனுக்காக பரிசுப் பொருட்கள் வழங்க கட்டளையிட்டார்"

(முஸ்லிம்-இல் குறிப்பிடப்பட்டுள்ளது)

இதுவரைக் குறிப்பிடப்பட்ட குணாதிசயங்களைத் தாண்டி, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் குணம் முஸ்லிம்களாகிய நாம் நற்பண்புகள் கற்பதற்கான ஆகச்சிறந்த அளவுகோலாகும். நாம் அவருடைய செயல்களைப் பின்பற்றும்போது, அவருடைய சுன்னாஹ்வைப் பின்பற்றுவதற்காக அல்லாஹ்விடத்தில் நற்கூலிகளைப் பெறுவது மட்டுமின்றி அல்லாஹ்விடம் நெருங்கி, ஒரு சிறந்த இஸ்லாமியராக நாம் விளங்க முடியும். திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான்:

لَّقَدْ كَانَ لَكُمْ فِي رَسُولِ اللَّهِ أُسْوَةٌ حَسَنَةٌ لِّمَن كَانَ يَرْجُو اللَّهَ وَالْيَوْمَ الْآخِرَ وَذَكَرَ اللَّهَ كَثِيرًا ﴿٢١﴾

“அல்லாஹ்வின் மீதும், இறுதி நாளின் மீதும் ஆதரவு வைத்து, அல்லாஹ்வை அதிகம் தியானிப்போருக்கு நிச்சயமாக அல்லாஹ்வின் தூதரிடம் ஓர் அழகிய முன்மாதிரி உங்களுக்கு இருக்கிறது." (திருக்குர்ஆன்

**பரிந்துரைக்கப்படும் புத்தகம்:**
**எ போர்ட்ரைட் ஒஃப் தி ப்ரோஃபட்** (A Portrait of the Prophet)




இமாம் முஹம்மது இப்னு இசா அல்-தர்மிதியின் ‘எ போர்ட்ரைட் ஒஃப் தி ப்ரோஃபட்’ (அஷ்-ஷமாயில் முஹம்மதியா) நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது தனிப்பட்ட வாழ்க்கையை எவ்வாறு கையாளுகிறார் என்பதை ஆராய்கிறது. மேலும் நபி (ஸல்) அவர்களின் பண்புகள் பற்றிய 200 க்கும் மேற்பட்ட விவரிப்புகளின் தொகுப்பைக் கொண்டுள்ளது.

## இஸ்லாத்தில் நல்லொழுக்கத்தின் அம்சங்கள்

இஸ்லாமிய மார்க்கத்தில் ஒழுக்க நெறிமுறைகள் மனித உறவுகளுடன் நாம் நடந்துகொள்வதை மட்டும் கவனம் செலுத்துவதில்லை. விலங்குகள் மற்றும் சுற்றுச்சூழல் உட்பட அல்லாஹ்வின் மற்ற படைப்புகளையும் அன்புடனும், கருணையுடனும் நடத்துவதன் முக்கியத்துவத்தையும் உள்ளடக்கியுள்ளது. இதனை கண்மணி நாயகம் (ஸல்) அவர்கள் பின்வரும் ஹதீஸில் குறிப்பிடுகிறார்:

“இரக்கமுள்ளவர்கள் மிகுந்த இரக்கமுள்ளவனால் (அல்லாஹ்வால்) கருணை காட்டப்படுவார்கள். பூமியில் உள்ளவர்களிடம் கருணை காட்டுங்கள், சுவர்கங்களின் அதிபதி உங்கள் மீது கருணை காட்டுவான்" (திர்மிதி-யில் குறிப்பிடப்பட்டுள்ளது)

### மற்றவர்களிடம் கருணைக் காட்டுவது

நம் வாழ்நாளின் பெரும்பகுதியில் மற்ற மனிதர்களுடன் தொடர்புகொள்வது இன்றியமையாததாகின்றது. ஒருவரையொருவர் அன்புடனும் மரியாதையுடனும் நடத்துவது அந்த சமூகத்தின் உறுப்பினர்களிடையே அமைதியையும் நல்லிணக்கத்தையும் காக்க உதவுகின்றது. நாம் மற்றவர்களுக்கு நன்மை செய்கின்றோமா என்பதை அறிய அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறிய பின்வரும் ஹதீஸ் உதவும்:

“உங்களில் எவரும் தனக்காக நேசிப்பதை தன் சகோதரனுக்காகவும் நேசிக்காத வரையில் அவர் (மார்க்க) நம்பிக்கையாளர் ஆகமாட்டார்." (புகாரி-யில் குறிப்பிடப்பட்டுள்ளது)

நம்மை எப்படி நடத்தப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கிறோமோ அவ்வாறே நாம் மற்றவர்களையும் நடத்த வேண்டும் என்பதை இந்த ஹதீஸிலிருந்து அறியலாம். நமது முஸ்லிம் சகாக்களுக்கு மட்டுமல்லாமல் முஸ்லிம் அல்லாதவர்கள், மாற்று இனம் மற்றும் சமயத்தார் உட்பட அனைவரையும் நாம் சமமான மரியாதையுடன் நடத்த வேண்டும். நீதமான முறையிலும் நன்மையளிக்கும் படியான செயல்களை மற்றவர்களின் சமயம், இனம் மற்றும் சமூக அந்தஸ்து என எதையும் கருதாமல் செய்ய வேண்டும். மேலும், மாற்று சமயத்தவருக்கு உதவி செய்வதை அல்லாஹ் திருக்குர்ஆனில் குறிப்பிட்டுள்ளான்:

لَّا يَنْهَاكُمُ اللَّهُ عَنِ الَّذِينَ لَمْ يُقَاتِلُوكُمْ فِي الدِّينِ وَلَمْ يُخْرِجُوكُم مِّن دِيَارِكُمْ أَن تَبَرُّوهُمْ وَتُقْسِطُوا إِلَيْهِمْ ۚ إِنَّ اللَّهَ يُحِبُّ الْمُقْسِطِينَ ﴿٨﴾

“மார்க்க (விஷய)த்தில் உங்களிடம் போரிடாமலும், உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றாமலும் இருந்தார்களே அவர்களுக்கு நீங்கள் நன்மை செய்வதையும், அவர்களுக்கு நீங்கள் நீதி செய்வதையும் அல்லாஹ் விலக்கவில்லை - நிச்சயமாக அல்லாஹ் நீதி செய்பவர்களை நேசிக்கிறான்." (திருக்குர்ஆன் 60:8)



## விலங்குகளிடம் கருணைக் காட்டுவது [20]

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தன் சகாக்களிடம் விலங்குகளை நன்றாக கவனித்துக் கொள்ள வலியுறுத்தினார், மேலும் பல ஹதீஸ்களில் விலங்குகளிடம் நல்ல முறையிலும் இரக்கத்துடனும் நடப்பவர்களுக்கு அல்லாஹ்விடமிருந்து மகத்தான நன்மாராயங்கள் உள்ளன என்று விளக்கப்பட்டுள்ளது.

கண்மணி நாயகம் (ஸல்) அவர்கள் ஒருமுறை தனது தோழர்களிடம் கூறினார்கள்: ஒரு மனிதன் கடும் வெப்பத்தில் நடந்து செல்கையில் ஒரு கிணற்றைக் கண்டதும், அதில் இறங்கி தன் தாகத்தைத் தீர்த்துக்கொண்டான். மீண்டும் மேலேறி வருகையில் அவன் தாகத்தில் தவிக்கும் ஒரு நாயைக் கண்டு, மீண்டும் கீழிறங்கி தனது காலணிகளில் நீரை நிரப்பி வந்து நாயின் தாகத்தைத் தீர்த்தான்.



அவனது இந்த செயலால் அவனது பாவங்கள் அனைத்தையும் அல்லாஹ் மன்னித்தான். அதற்கு நபி (ஸல்) அவர்களின் சகாக்கள் வினவினார்கள், "யா ரசூலுல்லாஹ், விலங்குகளுக்கு உதவுவதால் நமக்கு நன்மைகள் கிடைக்குமா?". அதற்கு நபி (ஸல்) அவர்கள் கீழ் வருமாறு பதிலளித்தார்கள்:

"ஒரு உயிரினத்திற்கு செய்யும் எந்த நன்மைக்கும் இறைவனிடத்தில் வெகுமதி கிடைக்கும்." (புகாரி-யில் குறிப்பிடப்பட்டுள்ளது)

### நாய்கள் துன்பத்தில் இருந்தால் உதவுவதற்கு நமக்கு அனுமதியுண்டா?

**இஸ்லாத்தில், நாய்கள் போன்ற விலங்குகள் மிகவும் தூய்மையற்றதாகக் கருதப்படுகின்றன. அதன் அசுத்தத்தைத் தூய்மைப்படுத்த மண் மற்றும் தண்ணீரைப் பயன்படுத்தி குறிப்பிட்ட இஸ்லாமிய சுத்திகரிப்பு முறையைப் பயன்படுத்த வேண்டும். ஆனால் முன்னர் குறிப்பிட்ட ஹதீஸில் விளக்கப்பட்டுள்ளபடி, இறக்கும் அல்லது துன்பத்தில் இருக்கும் நாயைக் காப்பாற்றும் நமது பொறுப்பை இது தடுக்கவில்லை என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.**

## சுற்றுச்சூழல் மீதான கருணை

"இன்னும், உம் இறைவன் வானவர்களை நோக்கி

وَإِذْ قَالَ رَبُّكَ لِلْمَلَائِكَةِ إِنِّي جَاعِلٌ فِي الْأَرْضِ خَلِيفَةً ... ﴿٣٠﴾

"நிச்சயமாக நான் பூமியில் ஒரு பிரதிநிதியை அமைக்கப் போகிறேன்" என்று கூறியபோது." (திருக்குர்ஆன் 2:30)

இவ்வுலகின் குடியாளர்களாக இப்பூமியையும் அதில் அடங்கியுள்ளவைகளையும் பாதுகாப்பது மனிதகுலத்தின் பொறுப்பாகும். அல்லாஹ்வினால் வழங்கப்பட்ட இவ்வுலகில் உள்ள வளங்களையும் வாழ்வாதாரங்களையும் வீணாக்காமல் இருப்பதும் இதில் அடங்கும்.

[20] அனைவருக்குமான ரமழான் (இஸ்லாமிய சமய மன்றம், 2018)

பின்வரும் ஹதீஸ்களில் கூறப்பட்டுள்ளபடி, தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல் மற்றும் அதிக மரங்களை நடுதல் போன்ற சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வழிகளை நமது நபி (ஸல்) அவர்கள் நமக்குக் கற்றுக் கொடுத்துள்ளார்கள்:

அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரலி) அறிவித்தார்: ஸா்த் (ரலி) அவர்கள் ஒழு செய்து கொண்டிருந்த பொழுது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களைக் கடந்து சென்றார்கள். அப்பொழுது நாயகம் (ஸல்) அவர்கள் ஸா்த் (ரலி) அவர்களிடம் வினவினார்கள்,

“இது என்ன ஊதாரித்தனம்?” ஸா்த், “ஒழு செய்யும் தண்ணீரில் ஆடம்பரம் உண்டா?” என்றார். அப்பொழுது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், “ஆம், நீங்கள் ஓடும் ஆற்றின் கரையில் இருந்தாலும் கூட சிக்கனம் கட்டாயம் தேவை.”

(இப்ன்-மஜாஹ்-வில் குறிப்பிடப்பட்டுள்ளது)

“ஒருவர் மரத்தை நட்டோ அல்லது விதைகளை விதைத்தோ மரத்தை வளர்த்து, பின்னர் ஒரு பறவையோ ஒரு மனிதரோ விலங்கோ அதில் இருந்து உண்டால், அந்த நபர் தானம் அளித்தவராக கருதப்படுவார்.” (புகாரி-யில் குறிப்பிடப்பட்டுள்ளது)

## நல்லொழுக்கங்களைக் கொண்டிருப்பதன் நன்மைகள்

நல்ல ஒழுக்கங்களைக் கொண்டிருப்பதன் மூலம் மற்றவர்களுக்கு ஏற்படும் நன்மைகளை விட நமக்குள் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது தெளிவாகிறது. இந்த பாகத்தில் ஏராளமான ஹதீஸ்கள் மற்றும் திருக்குர்ஆன் வசனங்கள் மூலம் முன்னர் குறிப்பிட்டது போல், அல்லாஹ் நமக்கு இம்மையிலும் மறுமையிலும் நன்மை பயக்கும் ஏராளமான நன்மாராயங்களை வாக்களித்துள்ளான்.

## நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அன்பைப் பெறுவோம்

நமது அன்பிற்குரிய கண்மணி நாயகம் (ஸல்) அவர்களின் குணாதிசயத்தைப் பின்பற்றுவதற்கு ஒரு முக்கிய காரணம் இது அவர் (ஸல்) மீது நாம் கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்தும் ஒரு வழியாகும். ‘நீ யாருடன் பழகுகிறாயோ நீயே” என்று ஒரு பழமொழி உண்டு. எனவே, நாம் நீதமானவர்களாக இருக்கவும், அல்லாஹ்வின் திருப்தியை அடையவும் விரும்பினால், அவரிடம் உள்ள பண்புகளை நாம் பெறவதோடு அவற்றை நடைமுறைப்படுத்தவும் வேண்டும்.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள், “மறுமை நாளில் எனக்கு மிகவும் விருப்பமானவர் மற்றும் எனது கூட்டத்திற்கு மிகவும் நெருக்கமானவர் பற்றி நான் உங்களுக்கு கூறட்டுமா?” அவரது சகாக்கள் அமைதியாக இருந்தார்கள், எனவே நபி (ஸல்) மூன்று முறை மீண்டும் வினவினார்கள். அவரது சகாக்கள், “ஆம், அல்லாஹ்வின் தூதரே”என்றார்கள். நபி (ஸல்) கூறினார்கள், “சிறந்த குணம் கொண்டவர்கள்” (அஹ்மத்-இல் குறிப்பிடப்பட்டுள்ளது)

## அல்லாஹ்-வின் கருணையைப் பெறுவோம்

قُلْ إِن كُنتُمْ تُحِبُّونَ اللَّهَ فَاتَّبِعُونِي يُحْبِبْكُمُ اللَّهُ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ ۗ وَاللَّهُ غَفُورٌ رَّحِيمٌ ﴿٣١﴾

“(நபியே!) நீர் கூறும்: “நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பீர்களானால், என்னைப் பின் பற்றுங்கள்; அல்லாஹ் உங்களை நேசிப்பான்; உங்கள் பாவங்களை உங்களுக்காக மன்னிப்பான்; மேலும், அல்லாஹ் மன்னிப்பவனாகவும், மிக்க கருணை உடையவனாகவும் இருக்கின்றான்.” (திருக்குர்ஆன் 3:31)

நற்பண்புகளின் மூலம் நாம் அல்லாஹ்-வைத் திருப்திப்படுத்தி அவனது அன்பையும் கருணையையும் பெறுவோம். ஒரு ஹதீஸில் குறிப்பிடப்பட்டுள்ளபடி:

“ஒரு தீய செயலை செய்தால் ஒரு நல்ல செயலால் பின்தொடருங்கள், அது அந்த தீய செயலைத் அழித்துவிடும், மேலும் மக்களிடம் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள்.” (திர்மிதி-யில் குறிப்பிடப்பட்டுள்ளது)

## சுருக்கம்

* நற்பண்புகள் மற்றும் அறநெறி பற்றிய இஸ்லாத்தின் பார்வை அல்லாஹ்வுடனான நமது உறவு மற்றும் மத நம்பிக்கைகளுடன் ஆழமாக தொடர்புடையது.
* நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பண்புகள் நமக்கு சிறந்த முன்னுதாரணமாகும், மேலும் அவர் தனது அன்றாட வாழ்க்கை முறையைப் பின்பற்றுவதற்கு நாம் ஊக்குவிக்கப்படுகிறோம்.
* இஸ்லாமியர்களுடனும், மற்ற சமூகத்தினருடனும் பழகுவதில் நல்ல பண்புகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று இஸ்லாம் நமக்குக் கற்பிக்கிறது.
* இஸ்லாத்தில் உள்ள நெறிமுறைகள் மனிதர்களுடனான நமது நடத்தைக்கு மட்டுமல்லாமல் விலங்குகள் மற்றும் சுற்றுச்சூழல் போன்ற அல்லாஹ்வின் பிற படைப்புகளுக்கும் பொருந்தும்.
* நல்ல பண்புகளைக் கொண்டிருப்பதன் மூலம் அல்லாஹ்வின் கருணையையும் நபி (ஸல்) அவர்களின் அன்பையும் பெற முடியும்.

பாகம்-15

# மார்க்க ஞானத்தை நாடுதல்



## ஞானத்தைத் தேடுவதின் முக்கியத்துவம்

அறிவைத் தேடி அதை அடைவது என்பது ஒவ்வொரு தனிமனிதனும் தங்கள் அன்றாட வாழ்வில் தொடர வேண்டிய முக்கியமான ஒன்றாகும். அது சமயம் சார்ந்த ஞானமாக இருந்தாலும் உலகம் சார்ந்த ஞானமாக இருந்தாலும், நமக்காக மட்டுமின்றி, நம்மைச் சுற்றியுள்ளவர்களின் நலனுக்காகவும் பயன்தரக்கூடிய வகையிலும் பொருந்தக்கூடிய ஞானத்தால் நம்மை சித்தப்படுத்திக்கொள்ள வாழ்நாள் முழுவதும் முயல வேண்டும். நமது கண்மணி நாயகம் (ஸல்) அவர்கள் அறிவைத் தேடுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, அதை நம்மீது கடமையாக்கியுள்ளார்:

"அறிவைத் தேடுவது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் (ஆண் மற்றும் பெண்) கடமையாகும்."

இஸ்லாம் அறிவைத் தேடி அடையும் செயலை உயர்வாக மதிக்கும் மார்க்கமாகும்.

முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு அனுப்பப்பட்ட முதல் திருக்குர்ஆன் வசனம் அவரைப் படிக்க அறிவுறுத்தியது. இது திருக்குர்ஆனில் உள்ள சூரா அல்-அலக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளது:

சிறியவர்கள் பெரியவர்கள் என்று

اقْرَأْ بِاسْمِ رَبِّكَ الَّذِي خَلَقَ ﴿١﴾ خَلَقَ
الْإِنسَانَ مِنْ عَلَقٍ ﴿٢﴾ اقْرَأْ وَرَبُّكَ
الْأَكْرَمُ ﴿٣﴾ الَّذِي عَلَّمَ بِالْقَلَمِ ﴿٤﴾
عَلَّمَ الْإِنسَانَ مَا لَمْ يَعْلَمْ ﴿٥﴾

"(யாவற்றையும்) படைத்த உம்முடைய இறைவனின் திரு நாமத்தைக் கொண்டு ஓதுவீராக. "அலக்" என்ற நிலையிலிருந்து மனிதனை படைத்தான். ஓதுவீராக: உம் இறைவன் மாபெரும் கொடையாளி. அவனே எழுது கோலைக் கொண்டு கற்றுக் கொடுத்தான். மனிதனுக்கு அவன் அறியாதவற்றையெல்லாம் கற்றுக் கொடுத்தான்." (திருக்குர்ஆன் 96:1-5)

அனைவருக்கும் அறிவைத் தேடுவது என்பது வாழ்நாள் முழுவதும் தொடர்ச்சியான ஒரு செயலாக இருக்க வேண்டும். மேலும், அறிவைத் தேடுவதன் மூலம் அல்லாஹ் நமக்கு மறுமையில் சுவர்க்கத்தில் நுழைவதை எளிதாக்குகிறான் என்று அண்ணல் நபிகள் (ஸல்) குறிப்பிட்டுள்ளார்.

"எவரொருவர் அறிவைப் பெறுவதற்கான பாதையில் செல்கிறாரோ அவருக்கு அல்லாஹ் சுவர்க்கத்திற்கான பாதையை எளிதாக்குகிறான்." (திர்மிதி-யில் குறிப்பிடப்பட்டுள்ளது)

## கற்றறிந்த முஸ்லிமின் நிலை

இஸ்லாம் ஞானத்தைப் பெறுவதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது. நன்மை பயக்கும் அறிவைத் தேடுவதற்கும் கற்றுக்கொள்வதற்கும் தொடர்ந்து முயற்சி செய்பவர்களின் நிலையை அல்லாஹ் உயர்த்துகிறான். அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கும் ஒரு ஹதீஸில், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அறிவித்துள்ளார்கள்:

"அல்லாஹ்வை நினைவு கூர்வது (திக்ர்) மற்றும் அதைச் சார்ந்த செயல்கள், ஏற்கனவே ஞானம் பெற்றவர் மற்றும் தற்பொழுது ஞானம் பெரும் முயற்சியில் இருப்பவர் தவிர இவ்வுலகம் மற்றும் இவ்வுலகில் உள்ளவை அனைத்தும் சபிக்கப்பட்டவையாக உள்ளன." (இப்னு மாஜா-வில் குறிப்பிடப்பட்டுள்ளது)

**அறிவுச் செல்வத்தையும் ஈமானையும் பெற்றவர்கள் மேன்மையானவர்களாகக் கருதப்படுவதோடு, மறுமையில் அல்லாஹ்வின் விருப்பத்தால் அவர்களின் நிலை பல மடங்கு உயர்த்தப்படும்.**

## நன்மையளிக்கும் ஞானம் பெறுவதற்கான துஆ

ஞானத்திற்கான தேடலில் அல்லாஹ்வின் வழிகாட்டுதலைப் பெற நாம் ஓத வேண்டிய துஆக்கள் உள்ளன. அருமை நாயகம் (ஸல்) அவர்கள் ஓதிய துஆக்களில் ஒன்று அனஸ் (ரலி) அவர்கள் அறிவித்த பின்வரும் ஹதீஸில் உள்ளது:

اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنْ عِلْمٍ لاَ يَنْفَعُ وَقَلْبٍ لاَ يَخْشَعُ وَدُعَاءٍ لاَ يُسْمَعُ وَنَفْسٍ لاَ تَشْبَعُ

அல்லாஹும்ம இன்னி அ'உது பிக மின் 'இல்மின் லா யன்ஃப'உ, வ கல்பின் லா யக்ஹ்ஷ 'உ, வ து'ஆஇன் லா யஸ்ம'உ, வ நஃப்சின் லா தஷ்ப'உ

(யா அல்லாஹ், எந்தப் பயனும் இல்லாத அறிவை விட்டும், பணிவு இல்லாத உள்ளத்தை விட்டும், உன்னிடத்தில் ஏற்றுக்கொள்ளப்படாத வழிபாட்டை விட்டும், திருப்தி அடையாத உள்ளத்தை விட்டும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன்.)

## அறிவைத் தேடுவதற்கான ஒழுக்கம்

அல்லாஹ்வின் திருப்தியை நாடி செய்யப்படும் மற்ற வழிபாட்டுச் செயல்களைப் போலவே,நமது நடத்தை முதற்கொண்டு நாம் மற்றவர்களிடம் நடக்கும் விதம் வரையிலான அனைத்திலும் நாம் பின்பற்ற வேண்டிய ஒழுக்க நெறிமுறைகள் (அதப்) உள்ளன.

01

### நல்ல நோக்கங்களுடன் தொடங்குதல்

இவ்வுலகில் நாம் செய்யும் மற்ற செயல்களைப் போலவே, ஞானத்தை நாடும் பயணத்தைத் தொடங்கும் முன் நாம் மற்றவர்களைக் கவர கற்றுக் கொள்கின்றோமா அல்லது அல்லாஹ்வின் திருப்தியைத் தேடுகின்றோமா என்று சரியான நோக்கத்தை நாம் மனதில் கொள்ள வேண்டும். நீதமான காரணங்களுக்காக ஞானத்தை நாடும் செயலை இஸ்லாமிய மார்க்கம் ஓர் இறைவழிபாட்டுச் செயலாக (இபாதா) கருதுகின்றது. எனவே, நமது முயற்சிகள் வீணாகாமல் இருக்க நமது நோக்கத்தைப் பற்றி தீவிரமாக சிந்தித்து முடிவெடுக்க வேண்டும். நமது அருமை நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"அல்லாஹ்வின் திருப்தியை அடையும் பொருட்டால் ஞானத்தை நாடாமல் உலக ஆதாயத்திற்காக நாடினால், மறுமை நாளில் சுவர்க்கத்தின் நறுமணத்தைக் கூட அவனால் நுகர முடியாது."

(அபு-தாவூத்-இல் குறிப்பிடப்பட்டுள்ளது)



02

### தன்னடக்கம் வேண்டும்

ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் நமக்கு போதுமான ஞானம் நம்மிடம் உள்ளதாக நமக்கு எண்ணங்கள் தோன்றுவது இயற்கையான ஒன்று தான். அதுபோன்ற நேரத்தில் அறிவைப் பெறுவதற்கும் ஞானத்தை வசப்படுத்துவதற்கும் நமது திறன் மிகவும் குறைவு மற்றும் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் விருப்பம் இன்றி அது சாத்தியமில்லை என்பதை மறந்து விடுகிறோம். எனவே, இஸ்லாமிய மார்க்கம் நம்மை ஆணவத்தை விட்டு விலகி மற்றவர்களை இழிவாகப் பார்க்காமல், மற்றவர்களின் கருத்துக்களுக்கும் இடமளித்து, மற்றவர்களின் விமர்சனங்களைச் சகித்துக்கொண்டு பணிவுடன் வாழ வலியுறுத்துகின்றது. திருக்குர்ஆனில் அல்லாஹ் குறிப்பிடுகிறான்:

وَعِبَادُ الرَّحْمَٰنِ الَّذِينَ يَمْشُونَ عَلَى الْأَرْضِ هَوْنًا وَإِذَا
خَاطَبَهُمُ الْجَاهِلُونَ قَالُوا سَلَامًا ﴿٦٣﴾

"இன்னும் அர்ரஹ்மானுடைய அடியார்கள் (யாரென்றால்) அவர்கள்தாம் பூமியில் பணிவுடன் நடப்பவர்கள்; மூடர்கள் அவர்களுடன் பேசி(வாதா)ட முற்பட்டால் "ஸலாம்" (சாந்தியுண்டாகட்டும் என்று) சொல்லி (விலகிப் போய்) விடுவார்கள்." (திருக்குர்ஆன் 25:63)

03

## சரியான மூலாதாரங்களில் இருந்து கற்க வேண்டும்

இக்கால உலகில், வலைத்தளங்களின் மூலம் ஏராளமான தகவல்கள் பரவப்படுகின்றன. அது போன்ற தகவல்களை நாம் பெறும் பொழுது, அதிலும் குறிப்பாக மார்க்கம் சார்ந்த தகவல்களை, மிகவும் எச்சரிக்கையுடன் அதன் மூலாதாரங்களை அலசி ஆராய்வது காட்டாயமாகின்றது. சிங்கப்பூரில் அங்கீகாரம் பெற்ற பல்வேறு இஸ்லாமிய கல்வி மையங்கள் உள்ளன (அவற்றில் சில இப்புத்தகத்தில் பட்டியலிடப்பட்டுள்ளன) மற்றும் மூயிஸ்-கீழ் அசாதிசா அங்கீகாரத் திட்டம் (ARS) மூலம் அங்கீகாரம் பெற்ற மார்க்க அறிஞர்கள் ஆகியோரை அணுகலாம்.

அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில், தவறான தகவல்கள் மற்றும் அதன் விளைவுகள் சிங்கப்பூரின் இஸ்லாமிய சித்தாந்தங்களால் ஏற்றுக்கொள்ள முடியாத அளவிற்கு தீவிரமானக இருக்கக்கூடும். சில வேளைகளில் அத்தகைய தகவல்கள் சமூகத்தில் நல்லிணக்கத்தை சீர்குலைக்கும்.

## சிங்கப்பூரில் நடத்தப்படும் மார்க்க வகுப்புகள்

சிங்கப்பூர் புதிய முஸ்லிம்கள் அமைப்பு (தாருல் அர்காம், சிங்கப்பூர்) என்பது பொதுக் கல்வி, சமூக நலன் மற்றும் சமூகத்தில் மார்க்க மேம்பாட்டிற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு பதிவுசெய்யப்பட்ட அமைப்பாகும். பெரும்பாலும் புதிய முஸ்லிம்கள் அல்லது இஸ்லாத்தின் அடிப்படைகளைப் பற்றி அறிய ஆர்வமுள்ளவர்களுக்கு தாருல் அர்காமில் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. அத்தகைய வகுப்புகளுக்கு உதாரணம்: இஸ்லாத்தைப் பற்றி அறிதல் (KIS) மற்றும் இஸ்லாம் பற்றிய அடிப்படைக் கல்வி (BCI)

MCAS
Darul Arqam

www.mcas.sg

@darularqamsg

darularqam.sg

### பள்ளிவாசல்கள்

சிங்கப்பூரில் உள்ள பள்ளிவாசல்கள் இஸ்லாமியர்கள் கட்டாயமான மற்றும் பரிந்துரைக்கப்பட்ட தொழுகைகள் தொழுவதற்கான இடமாக மட்டுமல்லாமல், இஸ்லாமிய சமூகத்தை அடிப்படை, நடைமுறை மற்றும் ஆழமான மார்க்க ஞானத்துடன் கூடிய இஸ்லாமிய கல்வித் திட்டங்களையும் வழங்குகிறது.

பள்ளிவாசல்களில் ஆங்கிலம், மலாய் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் பகுதி நேர வகுப்புகள், தொழுகைகளுக்கு இடையேயான குறுகிய நேர பேச்சுக்கள், கருத்தரங்குகள் மற்றும் பேருரைகள் ஆகியவை நடத்தப்படுகின்றன. அவ்வாறு நடத்தப்படும் சில குறிப்பிடத்தக்க வகுப்புகள் பின்வருமாறு:

* **அலைவ் (aLIVE)**
  அலைவ் திட்டம் 5-20 வயதானவர்களுக்கு வழங்கப்படுகிறது மற்றும் முஸ்லிம்களின் மார்க்க அறிவை மேம்படுத்துவதற்காகவும் இஸ்லாமிய விழுமியங்களை தினமும் கற்க மாணவர்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடனும் மூயிஸ்-ஆல் நிர்வகிக்கப்படுகிறது. இதில் "மார்க்க நம்பிக்கை மற்றும் அதைச் சார்ந்த நடைமுறைகள்", "நற்பண்புகள் மற்றும் வாழ்க்கைத் திறன்கள்", "சமூக மற்றும் நாகரீக இஸ்லாம்" மற்றும் "திருக்குர்ஆன் கல்வியறிவு" போன்ற பாடங்கள் நடத்தப்படுகின்றன.
* **அடில்**
  பருவமடைந்தவர்களுக்கான இஸ்லாமிய கல்வி (ADIL) என்பது வயதில் மூத்த முஸ்லிம் மாணவர்களுக்கான ஒரு திட்டமாகும். முஃப்தியின் அலுவலகத்தால் உருவாக்கப்பட்ட இத்திட்டம், நமது முஸ்லிம் பெரியவர்களின் தற்கால மார்க்கம் மற்றும் அறிவுசார் தேவைகளுக்கு பொருத்தமானதாகவும் இருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. முஸ்லிம் சமூகத்தின் பல்வேறு மார்க்க தேவைகளை பூர்த்தி செய்வதற்காக இது மலாய் மற்றும் ஆங்கிலம் இரண்டிலும் வழங்கப்படுகிறது.

## இஸ்லாமிய கல்வி வழங்கும் மையங்கள் (ISLAMIC EDUCATION CENTRES AND PROVIDERS [IECPS])

சிங்கப்பூரில் உள்ள முஸ்லிம்கள் இஸ்லாம் பற்றிய கூடுதல் அறிவைப் பெறுவதற்காக மூயிஸ்-ஆல் அங்கீகரிக்கப்பட்ட சில மையங்கள் பின்வருமாறு.

### அண்டலுஸ் சபை (Andalus Corporation)

சிங்கப்பூரில் உள்ள இஸ்லாமிய கல்வி வழங்கும் மிகப்பெரிய மையமாகும். பள்ளிவாசல்களுக்குப் பிறகு, இதுவே சிங்கப்பூர் முழுவதும் பல மையங்களைக் கொண்ட ஒரு தனியார் இஸ்லாமிய கல்வி மையமாகும். அவர்களின் பாடத்திட்டம் தேர்வு அடிப்படையிலானது, அங்கு மாணவர்கள் ஒவ்வொரு செமஸ்டர் முடிவிலும் தேர்வுகள் மூலம் சோதிக்கப்படுவார்கள். நிகழ்ச்சிகள் பெரும்பாலும் மலாய் மொழியில் நடத்தப்பட்டாலும், குறிப்பிட்ட சில மையங்களில் ஆங்கில வழியிலும் வழங்குகின்றன.

http://andalus.sg/andalus_eng/index.php

### சஃபினா நிறுவனம் (Safinah Institute)

சஃபினா நிறுவனம், சன்டெக் கன்வென்ஷன் சென்டர் மற்றும் பல்வேறு விடுதிகளின் பால்ரூம்கள் போன்ற பல்வேறு இடங்களில் இஸ்லாமிய கல்வி வழங்கும் கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகளை நடத்தும். வழக்கத்திற்கு மாறான இட அமைப்புகளில் நடத்தப்படும் கருத்தரங்கங்களுக்கு இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் அதிகம் ஈர்க்கப்படுகிறார்கள். சஃபினா நிறுவனம் தற்கால தலைப்புகளுக்கு ஏற்ற வகையில் வகுப்புகள் நடத்துகிறது. அவர்களின் வாராந்திர பாடவகுப்புகள் பங்கேற்போரின் இஸ்லாமிய அறிவை மேம்படுத்த உதவுகின்றன. அதேசமயம் அவர்களின் நடத்தும் நிகழ்ச்சிகளின் மூலம் சமூகம் எதிர்கொள்ளும் சமகாலப் பிரச்சினைகள் விவாதிக்கப்படுகின்றன.

https://safinah.sg/

@safinahinstitute

safinahinstitute

### சிம்ப்லி இஸ்லாம் (Simply Islam)

**SimplyIslam.sg என்பது கல்வி, சமூக நலத்திட்டங்கள், சமூக மேம்பாடு மற்றும் சமூக முன்னேற்றத்தை எளிதாக்கும் சேவைகளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு தனியார் அமைப்பாகும். பாரம்பரியம், கலாச்சாரம் மற்றும் முக்கிய விழுமியங்களைத் தக்கவைப்பதுடன் தற்கால சவால்களையும் இந்த மையம் சாதுர்யமாக கையாள்கின்றது. அதன் கல்விக் கிளை, இஸ்லாமிய ஆய்வுகளுக்கான அஸ்-சித்திக் மையம், வார நாட்களில் பள்ளி மற்றும் கல்லூரிக்கு செல்லும் 5 முதல் 21 வயது வரையிலான குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு வார இறுதி நாட்களில் இஸ்லாமிய வகுப்புகளை வழங்குகிறது.**

www.simplyislam.com.sg

## மற்ற நம்பத்தகுந்த கல்வி நிறுவனங்கள்

இஸ்லாம் பற்றி மேலும் அறிய விரும்பினால், ஞானத்தேடலைத் தொடங்கக்கூடிய சில நிகழ்நிலை இஸ்லாமிய கற்றல் வழி இணைப்புகள் பின்வருமாறு:

### முஃப்தி அலுவலகத்தின் அதிகாரப்பூர்வ இணையதளம்

பேருரைகள், மார்க்க வழிகாட்டுதல் மற்றும் ஃபத்வா ஆணைகள் பற்றிய தகவல்களை உள்ளடக்கியுள்ளது. அதிகாரப்பூர்வ இணையதளம்:

www.muis.gov.sg/officeofthemufti

Majlis Ugama Islam Singapura
(Islamic Religious Council of Singapore)

**muslim.sg** பிரத்தியேகமான இஸ்லாமிய பதிவுகள் மூலம் சிங்கப்பூர் முஸ்லிம்களை மார்க்க ரீதியாக மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது. மேலும் இது சிங்கப்பூர் இளைஞர்களுக்கு மின்னணு உரைகள் மற்றும் வகுப்புகள் வழங்குவதுடன் அவர்களை எளிதாக மார்க்க அறிஞர் குழுவான அசாதிசா இளையர்கள் குழுவுடன் (Asatizah Youth Network [AYN]) இணைக்கின்றது.

muslim.sg

MuslimSG

### அசாதிசா இளையர்கள் குழு (The *Asatizah* Youth Network)

Muslim SG -இன் அங்கமான இக்குழு மின்னணு ஊடகங்களில் தேர்ச்சி பெற்ற மற்றும் சிறந்த முறையில் ஆலோசனைகள் வழங்கக்கூடிய ஆற்றல்மிக்க மார்க்க அறிஞர்களை இணைக்கின்றது. அவர்கள் புதுவிதமான மற்றும் தற்காலத்திற்கு பொருந்தும் வகையிலான காணொளிகள் பதிவேற்றம் செய்கின்றனர்.

Muslim SG

Muslim.SG

## சுருக்கம்

- நன்மை பயக்கும் அனைத்து வகையான ஞானமும் முக்கியமானது, மேலும் அதனை அடைய நாம் தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டிய ஒன்றாகும். தொடர்ந்து ஞானம் பெற எத்தனிப்போரின் நிலையை அல்லாஹ் உயர்த்துகிறான் என்பதை அறிகின்றோம்.
- கற்பதற்கான நோக்கம், பணிவான நடத்தை மற்றும் கற்றறிந்த ஆசிரியர்கள் மற்றும் நம்பத்தகுந்த மூலாதாரங்களில் இருந்து கற்றுக்கொள்வது போன்ற ஒழுக்கங்களைப் பின்பற்ற வேண்டும். ஞானத்தைத் தேடும்போது நாம் கேட்கவேண்டிய துஆக்களும் உள்ளன.
- சிங்கப்பூரில் பல்வேறு கல்வி நிலையங்கள் மற்றும் மொழி முதற்கொண்டு அவரவர் வயதிற்கேற்ற ஞானத்தேடல் வரை மார்க்க கல்வியைப் பூர்த்தி செய்யும் பல வகுப்புகளும் இணையதளங்களும் உள்ளன.

# உச்சரிப்பு மற்றும் ஒலிபெயர்ப்பு

## உச்சரிப்பு

அரபு மொழியில் உரையில் தோன்றும் பல பெயர்கள் மற்றும் சொற்கள் தமிழ் எழுத்துக்களில் ஒலிபெயர்க்கப்பட்டுள்ளன. ஒரு மொழியின் ஒலிகளை மற்றொரு மொழியின் எழுத்துக்களுடன் மாற்றி எழுதுவது, மெய் அல்லது உயிரெழுத்துக்களின் முரண்பாடு ஏற்படும் என்பதால் சாத்தியப்படாது.

எனவே ஒலிபெயர்ப்பு வார்த்தைகள் தோராயமான ஒலிகளைக்கொண்டே இருக்கும். மொழியை வழக்கமாக பேசுபவரோ அல்லது ஆசிரியரோ கூறும் பொழுது அரபு ஒலிகளைப் பற்றிய தெளிவு கிடைக்கும். மேலும் அதுவே முக்கிய ஆதாரமாகவும் இருக்கும்.

**உரையின் முக்கிய பகுதியில், பல பொதுவான அரபு சொற்கள் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன. இருப்பினும், அரபு வரிகளை மனனம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டால், அதற்கு ஏதுவாக சொல் அசைகளாக பிரிக்கப்பட்டுள்ளன.**

அரபு வார்த்தை அதை தொடர்ந்து வரும் வார்த்தையுடன் இணைந்து வரும் இடங்களில் அத்தகைய வார்த்தைகள் சிறிதளவு மாற்றியமைக்கப்பட்டிருக்கும். பெரும்பாலும், அத்தகைய கலவையின் உச்சரிக்கப்படும் வடிவம் எழுதப்பட்ட வடிவத்திலிருந்து வேறுபடும்.

கீழுள்ள இரண்டு அட்டவணைகள் மெய் மற்றும் உயிரெழுத்துக்களின் உச்சரிப்பு மற்றும் ஒலிபெயர்ப்புக்கான முக்கிய கூறுகளைக் கொண்டுள்ளன.

### உயிரெழுத்துக்கள்

| அரபு வடிவம் | குறியீடு | உச்சரிப்பு |
|---|---|---|
| **குறில்** | | |
| ـَـ | அ | அ - அப்பா |
| ـِـ | இ | இ - இஞ்சி |
| ـُـ | உ | உ - உள்ளம் |
| **நெடில்** | | |
| ـَا அல்லது ـَى | ஆ̄ | ஆ - ஆப்பம் |
| ـِي | ஈ | ஈ - ஈட்டி |
| ـُو | ஊ | ஊ - ஊட்டி |

| சந்தியெழுத்து | | | இரட்டையழுத்து | | | |
|---|---|---|---|---|---|---|
| ـَيـَي | ஐ | ஐ - ஐந்து | ـِيّـِيّ | அய்ய் | ـَيّـَيّ | அய் |
| ـَوـَو | ஔ | ஔ - ஔ | ـَوّـَوّ | அவ்வ் | | |

# சொற்களஞ்சியம்

| சொல் | அர்த்தம் |
|---|---|
| 'அக்ல் | அறிவாளி<br>தொடர்புடைய சொல்: 'ஆகில் - புத்திசுவாதீனம் உள்ளவர், அதாவது அறிவார்ந்த நபர் |
| 'ஔரா | ஆண் பெண் இருபாலரும் ஆடைகளால் மறைக்க வேண்டிய உடலின் பாகங்களைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் ஒரு சொல் |
| அடில் (ADIL) | பெரியவர்களுக்கான இஸ்லாமிய வகுப்புகள்<br>சிங்கப்பூரில் உள்ள பெரியவர்களுக்காக மூயிஸ்-ஆல் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட இஸ்லாமிய கல்வித்திட்டம் |
| ஆம்லா (AMLA) | முஸ்லிம் சட்டங்களை நிர்வகித்தல்<br>ஆம்லா-வின் கீழ், சிங்கப்பூரில் இஸ்லாம் தொடர்பான அனைத்திலும் சிங்கப்பூர் அதிபருக்கு மூயிஸ் ஆலோசனை வழங்கும். |
| அல்-மகாசித் அஷ்-ஷரிஆ (Al-Maqasid Ash-Shar'iyyah) | இஸ்லாமிய சட்டத்தின் குறிக்கோள்கள் |
| அல்ஹம்துலில்லாஹ் | எல்லா புகழும் அல்லாஹ்விற்கே |
| அலைவ் (aLIVE) | தினமும் இஸ்லாமிய விழுமியங்களைக் கற்பது (aLIVE)<br>இறையுணர்வு மற்றும் நல்ல பண்புகளுடன் (அக்லாக்) குழந்தைகள் வளர்வதை உறுதி செய்யும் நோக்கத்துடன் மூயிஸ்-ஆல் வடிவமைக்கப்பட்ட பாடத்திட்டத் திட்டம். |
| அகீதாஹ் | இஸ்லாமிய நம்பிக்கை |
| அர்கான் | "தூண்கள்" என பொருள்படும் இச்சொல் இஸ்லாமிய சட்டத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளது. ஒரு வழிபாட்டுச் செயல் அனுமதிக்கப்படுவதற்கு அல்லது ஏற்றுக்கொள்ளப்படுவதற்குத் தேவையான செயல்களைக் குறிக்கும். |
| ஏ.ஆர்.எஸ்.(ARS) | அசாதிசா அங்கீகாரத் திட்டம் (ARS) |
| அசாபாஹ் | முதன்மை வாரிசுகளின் (அஷாபுல் ஃபுரூத்) பங்குகளைப் பிரித்த பிறகு எஞ்சிய பங்குகளைப் பெறுபவர்கள் |
| அசாதிசா | மார்க்கம் கற்பிற்கும் ஆசிரியர்கள் ஆண் (உஸ்தாத்) மற்றும் பெண் (உஸ்தாதா) ஆகியோரைக் குறிக்கும் பன்மைச் சொல் |
| அஷாபுல் ஃபுரூத் | மனைகளின் நீதமான பங்கைப் பெறும் வாரிசுகள் |

| | |
|---|---|
| அஸ்னா:ப் | ஜகாத் நிதியைப் பெற தகுதியான பயனாளிகளின் பிரிவுகள் |
| பைத்துல் மால் | மூயிஸ் நிர்வகிக்கும் முஸ்லிம் அறக்கட்டளை நிதி. இது மாநில கருவூலம் என்றும் அழைக்கப்படும். |
| பாலி:க் | பருவ வயதை அடைந்த நபர் |
| பிஸ்மில்லாஹ் | அல்லாஹ்வின் திருப்பெயரைக்கொண்டு |
| தா'வா | ஓரிறைக் கொள்கையைப் பரப்புவதன் மூலம் மக்களை இஸ்லாத்தின்பால் அழைப்பது |
| தீன் | மார்க்கம் |
| ஈத் உல்-:பித்ரி | கட்டாய நோன்பு நோற்கும் மாதத்திற்கு (ரமழான்) பிறகு ஷவ்வால் மாதத்தின் முதல் நாளில் கொண்டாடப்படும் பண்டிகை |
| ஈதுல் அல்ஹா | துல்ஹிஜ்ஜா மாதத்தில் செம்மறி குர்பானி கொடுத்து கொண்டாடப்படும் கொண்டாட்டம் |
| :பராயிழ் | வாரிசுரிமை வழிகாட்டுதல்கள் விளக்கப்பட்டிருக்கும் இஸ்லாமிய சட்டங்கள் |
| :பர்த் கி:பாயாஹ் | சமூக மக்கள் அனைவரின் மீதும் கடமையாக்கப்பட்ட ஒரு சட்டம், ஆனால் அது சமூக மக்கள் ஒரு சிலர் நிறைவேற்றிவிட்ட நிலையில் மற்றவர்கள் மீது கடமையாகாது. |
| :பத்வா | இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள் மற்றும் தலைவர் (அதாவது சிங்கப்பூர் மு:ப்தி) அவர்களால் வழங்கப்பட்ட இஸ்லாமிய சட்ட ஆணை. |
| :பித்யா | நோய் அல்லது முதுமை காரணமாக கட்டாய நோன்பு நோற்க முடியாமல் போனால், அதனை ஈடுகட்ட அந்த முஸ்லிம் கொடுக்க வேண்டிய நன்கொடை. |
| :பிக் | இஸ்லாமிய சட்ட கோட்பாடுகள் மற்றும் கொள்கைகள் |
| :பித்னா | துன்பம் விளைவிக்கக்கூடிய செயல் |
| :பித்ரா | இயற்கையாக நிகழும் செயல் |
| ஹதீத் | குறிப்புகளாக பயன்படுத்தப்படும் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் கூற்றுகள் மற்றும் இஸ்லாமிய போதனைகள். |
| ஹஜ் | முஸ்லிம்கள் வாழ்நாளில் குறைந்தபட்சம் ஒரு முறையாவது நிறைவேற்ற வேண்டிய, மக்காஹ்வில் வருடந்தோறும் நடக்கும் புனித பயணம். |
| ஹகம் | நடுவர்கள் |

| | |
|---|---|
| ஹலால் (அல்லது ஹலாலன்) | அனுமதிக்கப்பட்டது |
| ஹராம் | அனுமதிக்கப்படாதது |
| ஹவுல் | ஒரு ஹிஜ்ரா ஆண்டு அல்லது 355 நாட்கள் |
| ஹிதாயாஹ் | வழிகாட்டல் |
| ஹிஜாப் | பெண்களின் தலைமுடி, காதுகள் மற்றும் கழுத்தை மறைக்கும் முக்காடு. அரேபிய மொழியில் இது ‘மறைத்தல்’ அல்லது ‘திரையிடுதல்’ என்று அர்த்தப்படும். |
| ஹிஜ்ராஹ் | மக்காவிலிருந்து மதீனாவிற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் அவர்களது தோழர்கள் செய்த இடம்பெயர்வு. இதுவே இஸ்லாமிய நாட்காட்டியின் தொடக்கமாக உள்ளது. |
| இ'திகாஃப் | பள்ளிவாசலில் இறைவழிபாட்டில் இருக்கும் நிலை |
| இபாதாஹ் | அல்லாஹ்வை வணங்குதல் அல்லது அவனுக்கு அடிபணிதல். |
| இத்தாஹ் | விவாகரத்துக்குப் பிறகு ஒரு பெண் கடைபிடிக்க வேண்டிய காலம். இக்காலத்தில் வேறொரு ஆணை திருமணம் செய்யக்கூடாது. |
| இஃப்தார் | ரமழான் காலத்தில் சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு நோன்பை முறிப்பதற்கான உணவு |
| இஜ்மா' | இஸ்லாமிய அறிஞர்களின் ஒருமித்த கருத்து |
| **இன்டெஸ்டேட்** | ஒரு மனிதன் உயில் எழுதாமல் மரணிக்கும் நிலை |
| ஜே.எம்.எஸ். | மதரஸாக்களின் கூட்டமைப்பு Joint Madrasah System (JMS) மதரஸா இர்ஷாத் ஸுஹ்ரி அல்-இஸ்லாமியா ஆரம்பப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகள், மதரஸா அல்ஜுனித் அல்-இஸ்லாமியா (மார்க்க கல்வி வழங்கும் பள்ளி), மற்றும் மதரஸா அல்-அரேபியா அல்-இஸ்லாமியா (தொடர்கல்வி வழங்கும் பள்ளி) ஆகியவற்றின் கூட்டமைப்பு. |
| காதி | மார்க்க நெறிமுறைகளை நிர்வகிப்பதற்கு பொறுப்பான மார்க்க அறிஞர் |
| கலீஃபாஹ் | நாட்டை ஆளும் அரசர் |
| குலியாஹ் | மார்க்கத்தைப் பற்றி பேசப்படும் குறுகிய பிரசங்கம் |
| மத்ஹப் | அல் குர்ஆன், அல் ஹதீஸ் ஆகியவைகளை அடிப்படையாக கொண்டு இஸ்லாமிய சட்ட பிரச்சினைகளுக்கு இஸ்லாமிய மார்க்க மேதைகளால் எழுதப்பட்ட மார்க்க சட்ட திட்டங்களை குறிக்கும். |
| மஹ்ர் | திருமணத்தின் பொழுது மணமகன் மணமகளுக்கு கொடுக்கும் கட்டாய அன்பளிப்பு |
| மஹ்ரம் | மார்க்க விதிகளுக்குள் திருமணம் செய்ய அனுமதிக்கப்படாதவர் |

| | |
|---|---|
| மூயிஸ் | இஸ்லாமிய சமய மன்றம் Majlis Ugama Islam Singapura (MUIS)<br>சிங்கப்பூரின் இஸ்லாமிய மார்க்க சபை என்றும் அழைக்கப்படும், மூயிஸ் நாட்டின் மார்க்க விவகாரங்களை மேற்பார்வையிட்டு நிர்வகிக்கும் முக்கிய அமைப்பாகும். |
| மக்ரூஹ் | தவிர்க்க வலியுறுத்தப்படுவது |
| மால் | செல்வம் |
| எம்.பி.எம்.எ•்ப். | பள்ளிவாசல் கட்டிடம் மற்றும் மெண்டகி நிதி Mosque Building and Mendaki Fund (MBMF)<br>மூயிஸ் நிர்வகிக்கும் இந்நிதி, சிங்கப்பூரில் உள்ள பள்ளிவாசல்களுக்கு தேவையான பராமரிப்பு மற்றும் மேம்படுத்துதல் பணிகளுக்கும், மார்க்க கல்வி பணிகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. |
| மூஃமின் | மார்க்கத்தின் மீது நம்பிக்கையுள்ளவர் |
| முபாஹ் | அனுமதிக்கப்பட்டது, ஆனால் இது பரிந்துரைக்கப்படவோ தவிர்ப்பதற்கு வலியுறுத்தப்படுவதோ இல்லை |
| எம்.சி.ஏ.எஸ். | புதிய முஸ்லிம்களின் சங்கம் Muslim Converts' Association of Singapore<br>தாருல் அர்காம் சிங்கப்பூர் என்றும் அழைக்கப்படும், எம்.சி.ஏ.எஸ். (MCAS) என்பது புதிய முஸ்லிம்களின் நலன் மற்றும் மார்க்க வழிகாட்டுதலைக் கையாள்வதற்கும் அடிப்படை இஸ்லாமிய வகுப்புகளை வழங்குவதற்கும் அமைக்கப்பட்ட அமைப்பாகும். |
| முசொல்லா | இறைவழிபாட்டிற்கான சிறிய இடம் |
| முத்'ஆஹ் | விவாகரத்தின் பொழுது மனைவிக்கு தரப்படும் ரொக்கம் |
| நஃப்ஸ் | சுயம் |
| நஸப் | வம்சம் |
| நஃபில் | பரிந்துக்கப்படும் கட்டாயமில்லாத கூடுதல் தொழுகைகள் |
| நிகாப் | பெண்களின் முகத்தை மறைக்க பயன்படுத்தப்படும், பொதுவாக கருப்பு நிறத்தில் இருக்கும், முக முக்காடு |
| நிஸாப் | ஜகாத் வழங்குவதைக் கட்டாயமாக்கும் செல்வத்தின் குறைந்தபட்ச தொகை |
| கியாமுல்லைல் | மிகவும் பரிந்துரைக்கப்படும் இரவு நேர தொழுகை |
| கியாஸ் | ஒருமித்த தர்க்கங்கள். திருக்குர்ஆன் மற்றும் சுன்னாஹ்வில் இருந்து தீர்மானிக்கப்பட்ட கருத்துகள். |
| குர்ஆன் | மக்களின் வழிகாட்டியான இஸ்லாத்தின் புனித நூல். வானவர் ஜிப்ரீல் (அலை) அவர்களின் மூலம் இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு அனுப்பப்பட்ட அல்லாஹ்வின் வார்த்தைகள். |

| | |
|---|---|
| குர்பான் | ஈதுல் அல்ஹா வின் பொழுது கால்நடைகளை அறுத்தல் |
| ரஹ்மாஹ் | இரக்கம் |
| ரிஸ்க் | அல்லாஹ் நமக்கு அருளிய வாழ்வாதாரம் |
| சப்ர் | பொறுமை |
| சக்ரோஷண்ட் | புனிதமானது மற்றும் அதிக முக்கியத்துவம் உடையது |
| ஷரிஆ | அல்லாஹ்விடமிருந்து இறை வெளிப்பாடு மூலம் முஹம்மது நபி(ஸல்) அவர்கள் மூலம் திருக்குர்ஆனில் பதிவு செய்யப்பட்ட மற்றும் அவரது (ஸல்) சுன்னாஹ்விலிருந்து அனுமானிக்கபட்ட இஸ்லாமிய சட்டம். |
| சிங்கப்பூர் முஸ்லிம் அடையாளம் (SMI) | சிங்கப்பூர் முஸ்லிம்களின் அடையாளத்தைத் தனித்துவமாக உருவாக்கும் பண்புகள் மற்றும் வழக்கங்கள் |
| சுன்னாஹ் (1) | நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கைமுறை, போதனைகள், செயல்கள், பண்புகள் மற்றும் அமைதியான ஒப்புதல் (தக்ரீர்) ஆகியவற்றைக் குறிக்கும் |
| சுன்னாஹ் (2) | பரிந்துரைக்கப்படுபவை |
| ஷரஹன் | மார்க்கம் தொடர்பான பேருரை |
| ஷுப்ஹா | சந்தேகத்திற்குரியது |
| தஹிய்யத்துல் மஸ்ஜித் | பள்ளிவாசலுள் நுழைந்ததும் தொழவதற்கு பரிந்துரைக்கப்படும் தொழுகை |
| தக்ரீர் | ஒரு செயல் அனுமதிக்கப்பதுவதற்கு மௌனத்தின் மூலம் தரப்படும் சம்மதம் |
| தக்வா | இறைநம்பிக்கை |
| தராவிஹ் | ரமழான் நோன்பு காலத்தில் செய்யப்படும் கூடுதலான சிறப்பு தொழுகைகள். |
| தௌஹீத் | ஓரிறை நம்பிக்கையை விளக்கும் இஸ்லாமிய கோட்பாடு |
| **தயம்மும்** | சுத்தமான தண்ணீர் கிடைக்காதபட்சத்தில் மணல் அல்லது தூசியைக் கொண்டு ஒழு செய்யும் மாற்று முறை |
| தொய்யிபன் | பாதுகாப்பானது மற்றும் நன்மையளிக்கக்கூடியது |
| உலுல் 'அஸ்மி | அவர்களின் அசைக்க முடியாத விடாமுயற்சி மற்றும் விதிவிலக்கான குணங்களுக்காக அவர்கள் மிக உயர்ந்த அந்தஸ்து அளிக்கப்படும் நூஹ் (அலை), ஈஸா (அலை), மூஸா (அலை), இப்ராஹிம் (அலை) மற்றும் முஹம்மது (ஸல்) ஆகிய ஐந்து நபிமார்களைக் குறிக்கும். |
| உர்ஃப் | ஒரு சமுதாயம் கொண்டுள்ள நகைகளின் அளவைக் குறிக்கும். இமாம் அந்-நவவியின் அல்-மஜ்முக் என்ற புத்தகத்தின் படி உர்ஃப் என்பது 860 கிராம் ஆகும். |
| வாஜிப் | கடமையானது மற்றும் கட்டாயமானது |

| | |
|---|---|
| வளி | ஆண் பாதுகாவலர், ஒரு பெண்ணின் இரத்த சொந்தம். (வரிசையில்: தந்தை, தந்தைவழி தாத்தா, மகன், உடன்பிறந்த சகோதரன், உடன்பிறந்த சகோதரனின் மகன், தந்தைவழி மாமா) |
| வகா:ப் | மார்க்கம் தொடர்பான பணிகள் புரிய சொத்துக்களைப் பயன்படுத்தும் அறக்கட்டளையைக் குறிக்கும் இஸ்லாமிய சொல்லாடல். |
| வஸாக் | பெரும்பாலான மார்க்க அறிஞர்களின் கூற்றுப்படி 130.56 கிலோவிற்கு சமமான எடை அளவீட்டு அலகு |
| **சபிஹா** | இஸ்லாமிய நெறிமுறைகளுக்கு உட்பட்டு விலங்குகளை உண்பதற்காக அறுத்தல் |
| ஜகாத் | ஜகாத் அல்லது தானம் வழங்குவது இஸ்லாத்தின் மூன்றாவது தூணாகும். சொத்தில் குறிப்பிட்ட அளவினை அல்லாஹ்வால் பரிந்துரைக்கப்பட்ட தகுதியுள்ள பயனாளிகளின் எட்டு குழுக்களுக்கு விநியோகிக்க வேண்டும். |
| ஜகாத் :பித்ரா | ரமழான் நோன்பு நோற்பவர் அறிந்தும் அறியாமலும் செய்த தவறுகளைச் சுத்திகரிப்பதற்காக ஏழைகளுக்கு வழங்க பரிந்துரைக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட தொகையிலான தானம். |
| ஜினா | விபச்சாரம் |

**புதிய முஸ்லிம்களின் வழிகாட்டி புத்தகம் - சிங்கப்பூர் முஸ்லிம் சமூகத்தைப் பற்றிய புரிதல்**, சிங்கப்பூரில் வசிக்கும் அனைத்து புதிய முஸ்லிம்களுக்கும் இஸ்லாமிய வழிமுறைகள் பற்றிய புரிதலை மேம்படுத்த சிறந்த ஆதாரத்தை வழங்குகிறது.

இஸ்லாத்தில் உள்ள நமது புதிய சகோதர சகோதரிகள் ஓரிறை நம்பிக்கைக்கான சாட்சியம் (ஷஹாதாஹ்) கூறி ஒரு முஸ்லிமாக தங்கள் வாழ்வைத் தொடங்கியபின் அவர்களின் அன்றாட செயல்களை வழிகாட்டுவதே இப்புத்தகத்தின் நோக்கமாகும்.

சிங்கப்பூரில் புதிய முஸ்லிம்களுக்கு உதவும் அமைப்பாக, அவர்கள் தங்கள் அன்றாட வாழ்வில் இஸ்லாமிய நெறிமுறைகளை எளிதாக அறிவதற்கு ஓர் அங்கீகரிக்கப்பட்ட ஆதாரம் தேவை என்பதை உணர்கின்றோம். அதற்கு ஏதுவாக இந்த வழிகாட்டி புத்தகம் தகவல்கள் மட்டுமின்றி குறிப்புகள் மற்றும் விளக்கப்படங்களுடன் எளிதாக முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

MCAS
Darul Arqam

ISBN 978-981-9414-29-1
9 789819 414291